உ

சிவமயம்

# அருள்மிகு
# மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,
# மதுரை.

# தல வரலாறு



வெளியீடு :

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.





மீனாட்சி திருக்கல்யாணம்



அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்

உ

சிவமயம்

# மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

# தலவரலாறு



ஆசிரியர் : முனைவர் சோ. குமரேசமூர்த்தி

திருக்கோயில் வெளியீடு 2015

கருமுத்து தி.கண்ணன்
தக்கார்

நா. நடராஜன், எம்.எஸ்சி., பி.எல்.,
இணை ஆணையர்/ செயல் அலுவலர்

# பொருளடக்கம்


1. காப்பு
2. நாட்டுப்படலம்
3. நகரப்படலம்
4. மூர்த்தி தலம் தீர்த்தம்
5. ஆலய அமைப்பு
6. வழிபடும் முறை
7. தினசரி பூசை முறைகள்
8. திருவிழாக்கள்
9. உபகோயில்கள்
10. அருளாளர்களும் ஆலவாயும்
11. தலக்குறிப்புகள்
    i) இலக்கியங்கள்
    ii) கல்வெட்டுகள்
    iii) ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள்
12. நிர்வாகம்
13. சிறப்புக் கட்டண விபரங்கள்
14. திருப்பணிகள்
15. தலப்பதிகங்கள்



முக்குறுணி விநாயகர்

## விண்ணளக்கும் இராஜகோபுரங்கள்



கிழக்கு



தெற்கு



மேற்கு



வடக்கு

# காப்பு

## விநாயகர் துதி

சக்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு நல்குவள்
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

– பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

## முருகக்கடவுள் வாழ்த்து

கறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப்பெருங்
கடலும் கலங்கக் கார்வந்து,
உறங்குசிகைப் பொருப்பும்சூர் உரப்பொருப்பும்
பிளப்பமறை உணர்ந்தோர் ஆற்றும்
அறம்குலவும் மகத்துஅழலும், அவுணமட
வார்வயிற்றின் அழலும் மூள,
மறம்குலவு வேல்எடுத்த குமரவேள்
சேவடிகள் வணக்கம் செய்வாம்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

## சொக்கநாதர்

பூவின் நாயகன் பூமகள் நாயகன்
காவின் நாயகன் னாதிக் கடவுளர்க்கு
ஆவி நாயகன் அங்கயற் கண்ணிமா
தேவி நாயகன் சேவடி யேத்துவாம்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

## மீனாட்சி அம்மை துதி

ஒளியா லுலகீன் றுயிரனைத்தும் மீன்போற் செவ்வி யுறநோக்கி
அளியால் வளர்க்கு மங்கயற்கணன்னே கன்னி யன்னமே
அளியா லிமவான் றிருமகளா யாவி யன்ன மயில்பூவை
தெளியாமழலைக் கிளிவளர்த்து விளையாட் டயருஞ் செயலென்னே !

– பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

## வெள்ளியம்பலவாணர் வாழ்த்து

பொரும்ஆறில் கிளர்தடந்தோள் ஒருமாறன் மனம்கிடந்த
புழுக்கம் மாற
வரும்ஆறில் கண்அருவி மாறாது களிப்பு அடைய
மண்ணும் விண்ணும்
உருமாறிப் பவக்கடல்வீழ்ந்து ஊசல்எனத் தடுமாறி
உழலும் மாக்கள்
கருமாறிக் கதி அடையக் கால்மாறி நடித்தவரைக்
கருத்துள் வைப்பாம்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

## தட்சிணாமூர்த்தி வாழ்த்து

கல்ஆலின் புடைஅமர்ந்து நான்மறைஆறு அங்கம்முதல்
கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்குஅப் பாலாய்
எல்லாமாய், அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி
இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து
பவத் தொடக்கை வெல்வாம்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

## தேவாரம்

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

– திருஞானசம்பந்தர்

## திருவாசகம்

காலமுண்டாகவே காதல் செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய

ஆலமுண்டானெங்கள் பாண்டிப்பிரான்றன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே.

– மாணிக்கவாசகர்

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்த தனவே.

– சேந்தனார்.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

– சேந்தனார்.

## பெரியபுராணம்

ஆலமே அமுதமாக வுண்டு வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண்டற்காக் காய்ந்தனை யடியேற்கின்று
ஞாலநின் புகழேயாக மிகவேண்டுநான் மறைகளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெருமானே என்றார்

– சேக்கிழார்

## வெள்ளியம்பலவாணர் வாழ்த்து

பொரும்ஆறில் கிளர்தடந்தோள் ஒருமாறன் மனம்கிடந்த
புழுக்கம் மாற
வரும்ஆறில் கண்அருவி மாறாது களிப்பு அடைய
மண்ணும் விண்ணும்
உருமாறிப் பவக்கடல்வீழ்ந்து ஊசல்எனத் தடுமாறி
உழலும் மாக்கள்
கருமாறிக் கதி அடையக் கால்மாறி நடித்தவரைக்
கருத்துள் வைப்பாம்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

## தட்சிணாமூர்த்தி வாழ்த்து

கல்ஆலின் புடைஅமர்ந்து நான்மறைஆறு அங்கம்முதல்
கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்குஅப் பாலாய்
எல்லாமாய், அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி
இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து
பவத் தொடக்கை வெல்வாம்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

## தேவாரம்

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

– திருஞானசம்பந்தர்

## திருவாசகம்

காலமுண்டாகவே காதல் செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய

ஆலமுண்டானெங்கள் பாண்டிப்பிரான்றன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே.

– மாணிக்கவாசகர்

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்த தனவே.

– சேந்தனார்.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

– சேந்தனார்.

## பெரியபுராணம்

ஆலமே அமுதமாக வுண்டு வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண்டற்காக் காய்ந்தனை யடியேற்கின்று
ஞாலநின் புகழேயாக மிகவேண்டுநான் மறைகளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெருமானே என்றார்

– சேக்கிழார்

## சண்டேசுரரும் – மற்றை அடியவர்களும்

தந்தைதா ளொடும்பிறவித் தாளெறிந்த நிருத்தரிரு
தாளைச் சேர்ந்த
மைந்தர்தாள் வேதநெறி சைவநெறி பத்திநெறி
வழாது வாய்மெய்
சிந்தைதான ரனடிக்கே செலுத்தினராய்ச்
சிவாநுபவச் செல்வ ராகிப்
பந்தமாந் தொடக்கறுத்ததிருத் தொண்டர் தாள்பரவிப்
பணிதல் செய்வாம்.

– சேக்கிழார்

உனக்குப் பணிசெய்ய உன்றனை எந்நாளும்
நினைக்க வரம்எனக்கு நீதா; மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே! எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநாதா.

– சொக்கநாத வெண்பா

## வாழ்த்து

மல்குக வேத வேள்வி, வழங்குக சுரந்து வானம்,
பல்குக வளங்கள் எங்கும், பரவுக அறங்கள் இன்பம்,
நல்குக உயிர்கட்கு எல்லாம், நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உலக மெல்லாம், புரவலன் செங்கோல் வாழ்க.

– பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

# நாட்டுப்படலம்

**தமிழகம் :**

ஒப்புயர்வற்ற நம் இந்திய நாட்டின் தென்பால் அமைந்துள்ள பகுதி, இந்நாளில் தமிழ்நாடு என்று வழங்கப்பெற்று வருகின்றது. இது பழங்காலத்தில் தமிழகம் என்று வழங்கப்பெற்று வந்தது. புற நானூறு, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணி மேகலை போன்ற சங்க இலக்கியங்களில் தமிழகம் என்னும் பெயர் அமைந்திருப்பதைக் காணுகின்றோம். இதனைத் தொல்காப்பியம்,

"வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகம்"

என்று போற்றுகின்றது.

இத்தமிழகம் பழங்காலத்தில் சேரநாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என முப்பெரும் பிரிவுகளாக இருந்து வந்தது. இப்பிரிவுகளை ஆட்சி புரிந்துவந்த மன்னர்கள் சேரர், சோழர், பாண்டியர் என்று பெயர் பெற்றனர். சேர சோழ பாண்டிய நாடுகள் பழங்காலத்திலேயே சிறப்புப் பெற்று விளங்கின.

**பாண்டிய நாடு :**

பழங்காலப் பாண்டிய நாடு இக்காலத்துள்ள மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களையும், புதுக்கோட்டையில் வெள்ளாற்றுக்குத் தெற்கிலுள்ள நிலப்பரப்பையும் கொண்டு விளங்கியது. எனவே, பாண்டிய நாட்டிற்குத் தென் வெள்ளாறு வட எல்லையாகவும், குமரிமுனை தென் எல்லையாகவும் அமைந்திருந்தன; வங்கக் கடல் கிழக்கெல்லையாகவும்; திருவாங்கூர், கொச்சியாகிய கேரள மாநிலப் பகுதி மேற்கு எல்லையாகவும் அமைந்திருந்தன. மதுரை மாநகரம் பாண்டிய நாட்டின் கோநகராகவும், கொற்கை துறைமுகப் பட்டினமாகவும் விளங்கின.

**பாண்டிய நாட்டின் தொன்மை :**

பாண்டிய நாடு படைப்புக் காலந்தொட்டே மேம்பட்டு வந்துள்ளது.

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரித லின்று"

என்னும்குறட்பாவிற்கு உரை வகுத்த பரிமேலழகர், பழங்குடி என்பதற்கு விளக்கங் கூறுகையில், "பழங்குடி என்பது தொன்று தொட்டு வருகின்ற குடி; சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருதல்" என்று உரைத்தருளினர். எனவே, பாண்டிய நாடு படைப்புக் காலந்தொட்டே மேம்பட்டு வந்த நாடு என்பது வெளிப்படை.

வடமொழியாளர்களால் ஆதி காவியம் எனப் பாராட்டப்படும் வால்மீகி இராமாயணத்தில், பாண்டி வேந்தனுடைய தலைநகர் பொன்னாலும் முத்தாலும் அணி செய்யப் பெற்றிருந்தது என்னும் குறிப்புக் காணக்கிடக்கின்றது. வியாச முனிவர் இயற்றிய மகாபாரதத்தில் பாண்டவருள் ஒருவனாகிய அருச்சுனன், பாண்டியர் குலப் பெண்மணியை மணந்த செய்தி காணப்படுகின்றது. இலங்கையின் பழங்கால வரலாற்றைக் கூறும் **மகாவமிசம்** என்னும் வரலாற்று நூல், இலங்கை வேந்தனாகிய விசயன், பாண்டிய மன்னன் மகளை மணந்த செய்தியை அறிவிக்கின்றது. சாணக்கியர் தமது பொருள் நூலில் பாண்டிய நாட்டு முத்தையும், மெல்லிய துகிலையும் பாராட்டிக் கூறியுள்ளார். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் சந்திரகுப்த மன்னனுடைய அரசவைக்கு வந்த கிரேக்க நாட்டுத் தூதராகிய மெகஸ்தனீஸ் என்பார், பாண்டிய நாட்டைப் பற்றிக் குறித்திருக்கின்றார். மகத நாட்டை ஆட்சி புரிந்த மௌரியப் பேரரசராகிய அசோகருடைய கல்வெட்டுக்களிலும் பாண்டிய நாட்டைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. உரோம நாட்டு வரலாற்று ஆசிரியராகிய **பிலைநி** என்பாரும் பாண்டிய நாட்டைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவற்றால் பாண்டிய நாட்டின் தொன்மை இனிது உணரப்படும்.

**பாண்டிய நாட்டின் பெருமை :**

பாண்டிய நாடு தொன்றுதொட்டே பெருமை பெற்று விளங்கிய நாடு. முத்தமிழ் மொழியை முறையாக வளர்த்த பெருமை பாண்டிய நாட்டிற்கே உரியது. செந்தமிழ் மொழியின் பிறப்பிடமாகிய பொதிகை மலை, இந்நாட்டிலேயே அமைந்துள்ளது. தமிழ் வையையும், வற்றாது வளங்கொழிக்கும் பொருநையும் இந்நாட்டிலே அமைந்துள்ளன. கொற்கை முத்துக்கள் உலகப் புகழ் பெற்று விளங்கின. அத்தகைய முத்துக்களை உலகிற்கு அளித்த பெருமை பொருந்திய கொற்கையம்பதியும், இந்நாட்டிலேயே அமைந்திருக்கிறது. இந்நாடு நக்கீரர், கபிலர் போன்றவர்களாகிய புலமைச் செல்வர்களையும், ஒக்கூர் மாசாத்தியார், மாறோக்கத்து நப்பசலையார், அள்ளூர் நன்முல்லையார் போன்ற புலமைச் செல்வியரையும் பெற்றிருந்த பெருமை உடையது.

**பாண்டியர் மரபு :**

பாண்டியர் குடி, படைப்புக் காலந்தொட்டே மேம்பட்டு வந்த குடி என்பது முன்பே கூறப்பெற்றது. எனவே, பாண்டிய நாட்டில் சங்க காலத்துக்கு முன்னரே பாண்டிய மன்னர்களின் ஆட்சி நிலைபெற்றிருந்தமை அறியத்தக்கது. சங்க காலத்துக்கு முன்னரும், சங்ககாலத்திலும் இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர் பலராவர். இந்நாட்டில் சோழ வேந்தர், களப்பிரர், முகமதிய மன்னர், விசயநகர வேந்தர், நாயக்க மன்னர் ஆகியோருடைய ஆட்சியும் சில காலங்களில் நிலவியிருந்தது.

உலகம் புகழும் கலைக்கோயில்களை எழுப்பித் தமிழகத்தே சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்த சோழர் மரபு, கி.பி. 13ஆம் நூற்றாண்டோடு மறைந்து விட்டது. செங்குட்டுவன் போன்ற பெருமன்னர்களைத் தோற்றுவித்த சேரர் பரம்பரையும், சங்க காலத்துக்குப் பின் அறிய முடியாது மறைந்து விட்டதாகவே கருத முடிகின்றது. திருவிதாங்கூர்த் தனியரசில் அண்மைக் காலம்வரை ஆட்சி புரிந்த மன்னர்கள், பண்டைச் சேரர் மரபினைச் சார்ந்தவர்கள் என்று

அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர். சிற்சில காலங்களில் வீழ்ச்சியுற்றும், தாழ்வு அடைந்தும் விளங்கிய பாண்டியர் மரபோ, கி.பி. 14ஆம் நூற்றாண்டுவரை விளங்கியிருந்தது போற்றுதற்குரியது.

**பாண்டியர் ஆட்சி :**

வடிவலம்ப நின்ற பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் இருவரும் சங்க காலத்துக்கு முன்னர் ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னர்களாக அறியப்படுகின்றனர். இவருள் வடிவலம்ப நின்ற பாண்டியன் நிலந்தரு திருவிற்பாண்டியன் எனவும், பாண்டியன் மாகீர்த்தி எனவும் வழங்கப்பெறுவன். இவன் குமரி நாட்டில் பஃறுளி என்னும் ஆற்றை வெட்டுவித்துக் கடல் தெய்வத்திற்கு விழா எடுத்த செய்தி, புறநானூற்றால் அறியக் கிடக்கின்றது.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் இயற்பெயர் குடுமி என்பது. இவன் பல வேள்விகள் செய்து சிறப்பு எய்தியவன். ஆதலின், பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் சிறப்பினைப் பெற்றுள்ளான். இம்மன்னன் மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனாரால் புகழப்பெற்றுள்ளான். வேள்விக்குடிச் செப்பேடுகளும் இவனைப் புகழ்ந்து கூறுகின்றன.

**கடைச் சங்க காலப் பாண்டியர் :**

பாண்டிய நாட்டின் கோநகராகத் திகழ்ந்த மதுரை மாநகரில், கடைச் சங்கம் நிலவி இருந்தது. இது கி.பி. 2ஆம் நூற்றாண்டோடு முடிவெய்தியது என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. எனவே, கி.பி. 2ஆம் நூற்றாண்டுவரை ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்கள் சங்க காலப் பாண்டியர் எனப்படுவர்.

நாற்பத்தொன்பது பாண்டிய மன்னர்கள் கடைச் சங்கத்தைப் புரந்து வந்ததாகக் களவியல் உரை அறிவிக்கின்றது. எனவே, கடைச்சங்க காலத்தில் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர் நாற்பத்தொன்பதின்மர் என்பது பெறப்படும். ஆயின், சில பாண்டிய மன்னர்களின் பெயர்கள் மட்டுமே சங்க

இலக்கியங்களால் அறியப்படுகின்றன. பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியாரும் இருபது பாண்டிய மன்னர்களின் பெயர்களையே அறிய முடிகின்றது என்று கூறுவர்.

கடைச் சங்ககாலப் பாண்டியருள் பாண்டியன் முடத்திருமாறன், மதிவாணன், பொற்கைப் பாண்டியன், கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி, பாண்டியன் அறிவுடைநம்பி, ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், கானப் பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி என்போர் குறிப்பிடத் தக்கவராவர்.

நாற்பத்தொன்பது பாண்டிய மன்னர்களும் ஆயிரத்து எண்ணூற்றைம்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர் என்பதும், அம்மன்னர்களுள் பாண்டியன் முடத்திருமாறன் என்பானே காலத்தாற் பழமை வாய்ந்தவன் என்பதும் களவியல் உரையால் அறியப்படும். கவியரங்கேறிய பாண்டிய மன்னர் மூவர் என்பதும் அவ்வுரையாலே அறியப்படும். ஆயின், கவியரங்கேறிய பாண்டியர் பலர் இருந்ததாக அறிய இயலுகின்றது. கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி, பாண்டியன் அறிவுடைநம்பி, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்போர் செந்தமிழ்ப் புலமை பெற்றுப் பைந்தமிழ்ப் பாக்கள் இயற்றும் வன்மை பெற்றவராய் விளங்கியிருந்தனர். கடைச்சங்க நாளில் தண்டமிழ்ப் புலமை சான்ற பாண்டியர் பன்னிருவர் இருந்ததாகத் தெரிகின்றது என்பர் டி.வி. சதாசிவபண்டாரத்தார்.

மதுரையம்பதியில் கடைச் சங்கத்தை நிறுவிய பெருமை சான்றவன் பாண்டியன் முடத்திருமாறன் என்பவன். இவன் கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். அங்கு இரண்டாம் தமிழ்ச் சங்கம் நிலவி இருந்தது. இவன் காலத்தில் நிகழ்ந்த ஒரு கடல் கோளால் பாண்டி நாட்டின் பெரும் பகுதியும், கபாடபுரமும்

அழிந்தொழிந்தன. அக்கடல் கோளுக்குத் தப்பிய பாண்டிய மன்னனும், செந்தமிழ்ப் புலவர்களும் சிறிது வடபால் வந்து, மணலூரில் தங்கி இருந்தனர். பின்னர் இம்மன்னன் மதுரைக்கு வந்து, அதனை வளப்படுத்தித் தனது தலைநகராக ஆக்கிக் கொண்டான்.

கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டிய மன்னனே, கடைச் சங்கத்தைப் புரந்து வந்த பாண்டியருள் இறுதியில் இருந்தவன். இவன் காலத்திற்குப் பின்பு கடைச்சங்கம் அழிவுற்றது என்னும் செய்தி, களவியல் உரையால் அறியப்படுகின்றது.

## களப்பிரர் ஆட்சி

கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டுவரை தமிழகத்தில் களப்பிரருடைய ஆட்சி நடைபெறலாயிற்று. களப்பிரர் ஆட்சிக் காலம் தமிழகத்தின் வரலாற்றில் ஓர் இருண்ட காலமாகும். களப்பிரரைக் குறித்துத் தெளிவாக அறிந்துகொள்வதற்கு உரிய குறிப்புக்கள் இதுகாறும் கிடைக்கப் பெற்றில. அன்னார் வட புலத்தினின்றும் போந்த அயலவர் என்று கருதப் படுகின்றனர் என குறிப்பார் T.V. சதாசிவ பண்டாரத்தார். அவர்கள் சேர சோழ பாண்டிய மன்னர்களை வென்று, தமிழகத்தைக் கைப்பற்றியுள்ளனர். அவர்களுடைய படையெடுப்பால் சேர மன்னர்களே மறைந்துவிட்டனர் எனலாம்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் களப்பிரர் மரபைச் சார்ந்த ஒரு மன்னன் பாண்டிய நாட்டின் மேல் படையெடுத்து வந்து, அதனை வென்று ஆட்சி புரியத் தொடங்கினான். பாண்டிய நாடு ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் களப்பிரர்களுடைய ஆட்சியில் இருந்தது. அக்காலத்தில் பாண்டியர் வலி குன்றி ஒடுங்கி இருந்திருத்தல் வேண்டும். ஆதலின், அவர்களைக் குறித்து அறிந்து கொள்வதற்கு உரிய தெளிவான குறிப்புக்கள் கிடைத்தில. பெரியபுராணமும் கல்லாடமும் கருநாடக வேந்தன் ஒருவன் பாண்டிய மண்டலத்தைக் கவர்ந்து ஆட்சி புரிந்து

வந்ததாகக் கூறுகின்றன. இக்கருநாடவேந்தன் களப்பிர மன்னனாக இருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

களப்பிரருடைய ஆட்சியால் பாண்டி நாட்டில் பல மாறுதல்கள் நிகழ்ந்தன. தமிழ்க்கலை, தமிழர் நாகரிகம் ஆகியனவெல்லாம் அழிந்து போயின. சைவநெறி வீழ்ச்சியுற்றது. சமணமும், பௌத்தமும் செழித்து ஓங்கின. தமிழ் மொழியோ போற்றுவாரற்று வீழ்ச்சி எய்தியது. சுருங்கக் கூறின் கடைச் சங்கமே அழிந்துபட்டமை ஈண்டு குறிக்கத்தக்கது.

கி.பி. 6, 7 ஆம் நூற்றாண்டுகளில் இருந்த பல்லவ மன்னர்களாகிய சிம்ம விஷ்ணு போன்றோர் களப்பிரரைப் போரில் புறங்கண்டனர். கடைச் சங்கப் பாண்டியர் குல வழித்தோன்றலாகிய கடுங்கோன் என்பான் தென்பாண்டி நாட்டில் களப்பிர அரசனைப் போரில் வென்று பாண்டி நாட்டைக் கைப்பற்றி மதுரை மாநகரில் வீற்றிருந்து ஆட்சி புரியத் தொடங்கினான். இது வேள்விக்குடிச் செப்பேடுகளால் அறியப்படுகின்றது. எனவே, பாண்டியருடைய ஆட்சி மீண்டும் மதுரை மாநகரில் தொடங்கப் பெற்ற காலம், ஏறத்தாழ கி.பி. 575ஆம் ஆண்டாக இருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

**பாண்டியர்கள் :**

கி.பி. 6ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கி.பி. 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை உள்ள காலம் (கி.பி. 755 முதல் கி.பி. 1310 வரை) முற்காலப்பிற்காலப் பாண்டியர்களுடைய காலமாகும். அக்காலத்தில் இரண்டு பாண்டியப் பேரரசுகள் தோன்றின. முதல் பாண்டியப் பேரரசு கி.பி. 6ஆம் நூற்றாண்டின் இறுதி முதல் கி.பி. 10ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை நிலைபெற்றிருந்தது. இப்பாண்டியப் பேரரசிற்கு அடிகோலியவனே கடுங்கோன் என்பான். இவன் மகனாகிய அவனிசூளாமணி இப்பேரரசை உருவாக்கிய பெருமை சான்றவன். இப்பேரரசு கி.பி. 985 இல் முடிவுற்றது. அதன் பின்னர்ப் பாண்டிய நாட்டு ஆட்சி, சோழருடைய ஆளுகையின் கீழ் வந்தது.

மூன்றாம் குலோத்துங்கனோடு சோழப் பேரரசு மறையவே, இரண்டாம் பாண்டியப் பேரரசு தொடக்கமாயிற்று. இப்பேரரசைத் தோற்றுவித்தவன் சடாவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1190) என்பவன். ஏனைய பாண்டிய மன்னர் இப்பேரரசை விரிவடையச் செய்து உருவாக்கினர். இப்பேரரசு கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் இறுதிவரைக்கும் நிலைபெற்று விளங்கிற்று. அதன் பின்னர்ப் பாண்டிய நாடு முகமதிய மன்னர்களின் ஆட்சியின் கீழ் வந்தது.

பாண்டிய மன்னர்களுள் கடுங்கோன், மாறவர்மன் அரிகேசரி, கோச்சடையன் ரணதீரன், வரகுண பாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் மாறவர்மன் குலசேகரன், என்போர் குறிப்பிடத்தக்கவராவர். மாறவர்மன் அரிகேசரியாகிய நின்ற சீர் நெடுமாறன் (கூன் பாண்டியன்) காலத்தில், பாண்டிய நாடு உயர்நிலையில் இருந்தது. இவன் காலத்தில் சீன நாட்டவராகிய யுவான் சுவாங் பல்லவ நாட்டிற்கு வந்து, அதனைக் குறித்துத் தாம் நேரில் கண்டவற்றை எழுதியுள்ளார். கோச்சடையன் ரணதீரன் சேர நாட்டையும், சோழ நாட்டையும், கொங்கு நாட்டையும் வென்றவனாக அறியப்படுகின்றான். மதுரையைச் சார்ந்து காணப்படும் கோச்சடை என்னும் ஊர், இம்மன்னன் பெயரால் ஏற்பட்டது என்று அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர்.

கி.பி. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் இரண்டாம் பாண்டியப் பேரரசு உயர்நிலையை அடைந்தது. மதுரையிலிருந்து ஆட்சி புரிந்த முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் இப்பேரரசை நிலைபெறச் செய்த பெருமை சான்றவன். முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் பாண்டி நாட்டை யாண்டும் பரப்பி உயர்நிலைக்குக் கொண்டு வந்தவன். முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியனுடைய காலத்தில் பாண்டிய நாடு வளம் பொருந்தி உயர் நிலையில் இருந்தது. இவன் காலத்தில் பாண்டிய நாட்டிற்கு வந்த வெளிநாட்டவராகிய **மார்க்கபோலோ, வாசுப்** ஆகிய இருவரும் இம்மன்னனுடைய ஆட்சியைப் புகழ்ந்து கூறியுள்ளனர்.

இதுகாறும் சீரிய நிலையிலிருந்து வந்த இரண்டாம் பாண்டியப் பேரரசு, கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீழ்ச்சி எய்தத் தொடங்கிற்று. டில்லி சுல்தானாக விளங்கிய அலாவுதீன் கில்ஜியின் படைத் தலைவனாகிய மாலிக்காபூர், பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து வந்து, பல நகரங்களைக் கொள்ளையிட்டுப் பெரும்பொருளைத் திரட்டிக்கொண்டு சென்றான். பாண்டிய வேந்தர்களின் பெருமையும் குறையலாயிற்று.

# முகமதியர் ஆட்சி

பாண்டிய நாட்டில் கி.பி. 1330 முதல் கி.பி. 1378 வரையில் முகமதியர் ஆட்சி நடைபெற்று வந்தது. பராக்கிரம பாண்டியனுடைய ஆட்சி காலத்தில், முகமதுபின் துக்ளக் என்பான், டில்லியில் சுல்தானாகயிருந்து ஆட்சி புரிந்து வந்தான். அவன் தென்னாட்டை வெல்லும் பொருட்டு **ஜலாலு தீன்** என்பானை அனுப்பினான். அவன் பாண்டிய வேந்தனை வென்று, அந்நாட்டையும் கைப்பற்றினான். அவன் டில்லி மன்னனுடைய அரசச் சார்பாளனாக மதுரையிலிருந்து அரசாளத் தொடங்கினான். நாளடைவில் அவன் டில்லி வேந்தனுடைய தொடர்பை ஒழித்துவிட்டு, மதுரையிலிருந்து தனியாட்சி புரியத் தொடங்கினான். இந்நிகழ்ச்சி கி.பி. 1330 இல் நிகழ்ந்தது. ஆயினும், கி.பி. 1325 முதல் கி.பி. 1368 வரை (பாண்டி நாடு நீங்கலாக) தமிழகம் முழுவதும் துக்ளக் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

**ஏழு முகமதிய மன்னர்கள் :**

ஜலாலுதீன் அசன்ஷாவிற்குப்பின், ஏழு முகமதிய மன்னர்கள், பாண்டிய நாட்டை மதுரையிலிருந்து ஆட்சி புரிந்து வந்தனர். அவர்களுடைய ஆளுகை 48 ஆண்டுகள் நடைபெற்றது. அம்மன்னர்களின் ஆட்சியினைக் குறித்து முகமதிய வரலாற்று ஆசிரியராகிய **இபின்படூடா** (Ibn Batuta) வின் குறிப்புக்களும் அறிவிக்கின்றன. முகமதியருடைய ஆட்சிக் காலத்தில் பாண்டி நாட்டில் பாண்டிய மன்னர் சிலரும் இருந்து வந்தமை, கல்வெட்டுக்களால் புலனாகின்றது என்பர் **K.A.** நீலகண்ட சாஸ்திரியார்.

# விசயநகர வேந்தர்களின் ஆட்சி

**முகமதியர் ஆட்சி நீங்கல் :**

பாண்டி நாட்டின் மீது விசயநகர வேந்தனாகிய **குமார கம்பண்ணன்** கி.பி. 1368 இல் படையெடுத்து வந்து பாண்டிய நாட்டை வென்றான். அவனுடைய படையெடுப்பால் முகமதியருடைய ஆட்சி நிலைகுலையலாயிற்று. அவன் பாண்டிய மன்னர்கட்கு உதவியாகச் சில தலைவர்களை ஆங்காங்கு அமர்த்திவிட்டுச் சென்றான். பின்னர் அத்தலைவர்கள் தாங்களே ஆட்சிபுரியத் தொடங்கினர்.

**தென்காசிப் பாண்டியர்கள் :**

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் மதுரையிலிருந்து ஆட்சி புரிந்தவர் வாணாதிராயர் என்பது நன்குவெளிப்படுகின்றது என்பர் என்று பாண்டியர் வரலாற்றில் குறிப்பார் T.V. சதாசிவபண்டாரத்தார். அக்காலத்தில் பாண்டியர் மதுரையினின்று நீங்கித் தென்பாண்டி நாட்டை அடைந்து, அங்கிருந்து ஆட்சி புரிந்து வந்தனர். கி.பி. 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து கி.பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை பாண்டியர் சிலர் தென்பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்து வரலாயினர். அவர்கள் கொற்கை, தென்காசி கரிவலம்வந்தநல்லூர் ஆகியவைகளைத் தங்கள் கோநகர்களாகக் கொண்டிந்தனர். அவர்களுள் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன், அதிவீரராம பாண்டியன், வரதுங்கராம பாண்டியன் என்போர் குறிப்பிடத்தக்கவராவர். பராக்கிர பாண்டியன் தென்காசித் திருக்கோயிலை எழுப்பிய பெருமை சான்றவன்; அதிவீரராம பாண்டியன் நைடதம் பாடிய பெருமைபெற்றவன்; வரதுங்கராம பாண்டியன் அந்தாதி நூல்கள் இயற்றிய பெருமைக்கு உரியவன்.

தென்பாண்டி நாட்டிலிருந்து ஆட்சி புரிந்து வந்த பாண்டியர் விசயநகர வேந்தர்கட்குத் திறை செலுத்தி வந்தவராவர். இங்ஙனம் குறுநில மன்னர்களாக வாழ்ந்துவந்த பாண்டியர் பின்னர் பெருநிலக்கிழார் நிலையினை எய்தினர். இவ்வாறு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்குமேல் பாண்டியநாடு விசயநகர வேந்தர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

## நாயக்க மன்னர்களின் ஆட்சி

பின்பு பாண்டி நாட்டில் நாயக்க மன்னர்களின் ஆட்சி ஏற்படலாயிற்று. கி.பி. 1529 இல் விசுவநாத நாயக்கர் மதுரை மாநகரிலிருந்து ஆட்சி புரியத் தொடங்கினார். தளவாய் அரியநாத முதலியார் அவருடைய அமைச்சராக இருந்தார். விசுவநாத நாயக்கருக்குப்பின் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர், இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர், முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் ஆகியோர் ஆட்சிபுரிந்தனர். இவர்களுக்குப் பின் வந்த முதலாம் முத்துவீரப்பர், விசயநகர வேந்தர்களுக்குக் கீழ்ப்படிந்து அரசாள விரும்பவில்லை. அவர் முழு உரிமையோடு ஆட்சிபுரியத் தொடங்கி, நாட்டுப் பாதுகாப்பின் பொருட்டு மதுரையிலிருந்த தலைநகரையும் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றினார்.

முத்துவீரப்ப நாயக்கருக்குப் பின் அவர்தம் இளவலாகிய திருமலை நாயக்கர் கி.பி. 1627 இல் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார். நாயக்க மன்னர்களுள் இவர் தலைசிறந்தவர். இவர் திருச்சிராப்பள்ளியிலிருந்த தலைநகரை மதுரைக்கு மாற்றினார்; பாதுகாப்புக் கோட்டைகளைக் கட்டுவித்தார்; விசயநகர வேந்தர்களின் தொடர்பை விட்டு விட்டுத் தனியாகச் செங்கோலோச்சினார். இவர் முப்பத்தாறு ஆண்டுகள் சிறப்பாக ஆட்சிபுரிந்தார். பிறகு நாயக்க மன்னர்களின் மரபிலே அரசி மங்கம்மாள் பதினேழு ஆண்டுகள் சிறப்போடு ஆட்சி புரிந்தார்.

நாயக்க மன்னர்களின் ஆட்சி கி.பி. 1736 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து நடைபெற்று வந்தது. இவ்வாறு ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகள்வரை நாயக்க மன்னர்களின் ஆட்சி பாண்டிய நாட்டில் நிலவியிருந்தது.

## மீண்டும் முகமதியர் ஆட்சி

பாண்டி நாட்டில் மீண்டும் முகமதியர் ஆட்சி தொடங்கிற்று. சந்தா சாகிபு மதுரை மாநகரைக் கைப்பற்றிப் பாண்டி நாட்டை ஆட்சி

புரியலானார். பாண்டி நாடு இரண்டு ஆண்டுகள் மாராத்தியர் ஆட்சியிலும் இருந்தது. அதன் பின்னர் ஆற்காட்டு நவாபுவின் ஆட்சியின்கீழ் வந்தது.

## ஆங்கிலேயர் ஆட்சி

அப்பால் கி.பி. 1790 இல் ஆங்கிலேயர் பாண்டி நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றினர்.அவர்கள் நாட்டைப் பல மாவட்டங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வோர் ஆட்சித் தலைவரை அமைத்தனர். இதுமுதல் இந்திய நாடு குடியாட்சி பெற்ற நாள்வரை, பாண்டியநாடு ஆங்கிலேயரது ஆளுகைக்கு உட்பட்டிருந்தது.

விடுதலை பெற்ற பின்பு மதுரையைத் தலை நகராகக் கொண்ட ஒரு மாவட்டமாக இது தமிழ்நாட்டில் விளங்கலாயிற்று.

# நகரப்படலம்

வரலாற்றுப் பெருமை, தமிழ்த் தொடர்பு, நாகரிகச் சிறப்பு, வாணிப வளம், சமய ஊற்றம் நிறைந்த மதுரை தமிழகத்தின் தலையாய நகரம். நகரமைப்பு என்று பார்க்கும் பொழுது காண்போர் வியக்கும் வண்ணம் தனித்தன்மை கொண்ட சீரிய அமைப்பைப் பெற்றது மதுரை.

இந்நகரமைப்பு பற்றிய செய்திகளை தோற்றுவாய், வளர்ச்சி, இன்றைய நிலை என மூன்றாகப் பகுக்கலாம்.

## தோற்றுவாய்

பாண்டி நாட்டிற்கு இயற்கைச் சீற்றத்தினால் அடுத்தடுத்து இரண்டு தலைநகரங்களை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு சங்ககாலப் பாண்டியரின் தலைநகராக முதலில் விளங்கியது **தென்மதுரை**. சிவபெருமானும், முருகப்பெருமானும், வீற்றிருந்து தமிழாய்ந்த முதல் தமிழ்ச்சங்கம் கூட்டப்பட்டது இங்கேதான். இது கடல்கோளால் அழிந்துபட அடுத்த தலைநகராக **கபாடபுரம்** கொள்ளப்பட்டது. இங்கு இரண்டாம் தமிழ்ச் சங்கம்கூட்டப்பட்டது. இதுவும் கடல் கோளால் அழிந்துபட **தற்பொழுதைய மதுரை**யைத் தலைநகராகக் கொண்டனர் பாண்டியர்.

ஆரம்ப காலத்திலிருந்தே மதுரை நகரின் சிறப்பம்சமாகப் பேசப்பட்டது அதன் நகரமைப்பு ஆகும்.

சங்ககால மதுரை கோயிலை மையமாக வைத்து அகன்ற வீதிகளும், தெருக்களும் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது. வானளாவிய மாடங்களும், கோட்டைகளும், மதில்களும், அகழிகளும் கொண்டதாகவும் மிகுந்த பாதுகாப்பு உடையதாகவும் அமைந்திருந்தது. பரிபாடலில் மதுரையின் நகர அமைப்பு ஒரு தாமரைப் பூவோடு ஒப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுதவிர மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, மணிமேகலை,

சிறுபாணாற்றுப் படை முதலிய இலக்கியங்களும் மதுரை நகரின் அமைப்பையும், சிறப்பையும் கூறுகின்றன.

## வளர்ச்சி

கி.பி. 6ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கி.பி. 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இடைக்காலப் பாண்டியர் காலமாகும். கி.பி. 1323 இல் டெல்லி சுல்தான் முகமதுபின் துக்ளக் பாண்டியரிடமிருந்து கைப்பற்றி தனது 33 மாநிலங்களோடு மதுரையையும் இணைத்தார்.

மசூதிகள் கட்டப்பட்டன. இஸ்லாமியர்கள் குடியமர்த்தப்பட்டனர். இம்மாற்றம் பிற்காலத்தில் இந்நகரின் விரிவாக்கத்திற்கு அடிகோலியது.

கி.பி. 1377 இல் டெல்லி சுல்தான்கள் ஆட்சி மதுரையில் முடிவுக்கு வந்தது. விசயநகரத்திற்கு உட்பட்ட அரசாக பாண்டிய அரசு மாறியது. விஜயநகரப் பேரரசர் நியமித்த ஆளுனர் நாகம நாயக்கர் முதல் அரசி மீனாட்சி (கி.பி. 1525 – 1736) காலம் வரையிலும் நாயக்க மன்னராட்சி நடைபெற்றது.

விசுவநாத நாயக்கர் மீனாட்சியம்மன் கோயில் மதிலையும், கோபுரங்களையும் புதிதாகக் கட்டுவித்து இஸ்லாமியர்களால் தடைபட்டிருந்த ஆலய வழிபாட்டைத் தொடங்கினார்.

மீனாட்சியம்மன் கோயிலை மையமாகக் கொண்டு அதனைச் சுற்றியிருந்த தெருக்களையும், வீதிகளையும் புதுப்பித்து கி.பி. 1568 இல் விசுவநாத நாயக்கர் புதிய அழகிய மதுரை நகரை உருவாக்கினார். இன்றைய மதுரை நகருக்கு அடிப்படைத்திட்டம் தீட்டியவர் விசுவநாத நாயக்கரே ஆவார்.

இந்நகர வளர்ச்சிக்கு பெரிதும் உதவிய மற்றொருவர் இராணிமங்கம்மாள். இவர்களது காலங்களில் வெளிமாநிலத்தவரும்

இங்கு வந்து குடியேறியதால் நகரின் விரிவாக்கம் அவசியமானது. பழமை மாறாமல் நகரம் விரிவு படுத்தப்பட்டது. மேலை நாட்டவர் தொடர்பால் மதுரை மேலும் வளர்ச்சி பெற்றது.

## இன்றைய நிலை

கி.பி. 1736ஆம் ஆண்டுடன் மதுரை நாயக்க அரசு முற்றுப்பெற்றது. ஆற்காட்டு நவாபு ஆட்சி தொடங்கியது. கி.பி. 1790 இல் தொடங்கி மதுரையில் ஆங்கிலேய ஆட்சி கி.பி. 1947 ஆகஸ்ட் 15 வரை நடைபெற்றது.

ஆங்கிலேயர் ஆட்சியில் மதுரை மாவட்ட நிர்வாகப் பொறுப்பை கலெக்டர் கவனித்து வந்தார். கி.பி. 1840 இல் கலெக்டராக இருந்த '**பிளாக்பர்ன்**' என்பவர்தான் பழைய மதுரையின் நகரமைப்பினின்று பிறழாது புதிய நகரை நிர்மாணித்தார்.

கோட்டைகளையும், அகழிகளையும் அகற்றி நகரை விரிவுபடுத்தினார். கோட்டைகள், அகழிகளை சமன்படுத்த பெரும்பொருள் தேவைப்பட்டதால் அவற்றை சமப்படுத்துபவருக்கு சமப்படுத்திய இடத்தை இலவசமாக அளிப்பதாக அறிவித்தார். சேதமுற்றிருந்த திருமலை நாயக்கர் அரண்மனையை சீர்படுத்தினார். மதுரை நகரின் பழமைச் சின்னங்களை பாதுகாக்க பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார். இன்றைய வெளிவீதிகள், மாரட்வீதிகள் போன்ற பல வீதிகள் ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்டனவாகும். வைகை ஆற்றின் குறுக்கே பாலங்கள் கட்டப்பட்டு மதுரையின் வடகரையும், தென்கரையும் இணைக்கப்பட்டன.

கி.பி. 1866 இல் மதுரை நகரசபையாக அறிவிக்கப்பட்டு தன்னாட்சி பெற்றது. கி.பி. 1873 இல் மாவட்ட நீதிமன்றம் தோற்றுவிக்கப்பட்டது. கி.பி. 1875இல் மதுரைக்கு ரயில்வே போக்குவரத்து அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. கி.பி. 1913–1914 இல் நகரில் பாதாளச் சாக்கடைதிட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இன்று ஏறத்தாழ முழுநகரமும் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் நகரின் கல்வி வளர்ச்சி, சுகாதார மேம்பாடு, குடிநீர் வசதி, சாலைவசதி, மின்வசதி போன்ற பல்வேறு நலத்திட்டங்களும் ஆங்கிலேயர் ஆட்சியில் மதுரையில் நடைபெற்றன.

ஆங்கிலேய அரசைத் தொடர்ந்து சுதந்திர இந்தியாவில் மதுரை மென்மேலும் வளர்ச்சி பெற்றே வருகிறது. மாநகராட்சி அந்தஸ்து பெற்ற மதுரையின் வளர்ச்சி எண்ணி வியக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்நகரில் மக்கள் குடியேற்றம் மிக அதிகமாகி உள்ளது. நகரமைப்பில் பல்வேறு முன்னேற்றம் காணப்பட்டாலும் பழமையான அந்த சீர்மிகு மதுரையின் அடிப்படை அமைப்பு மாற்றம் பெறவில்லை. வளர்ச்சியிலும், பரப்பிலும் மதுரை தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்த இரண்டாவது இடத்தில் உள்ளது.

## நினைவு கூறத்தக்கவை

### நகரமைப்பை வியந்த காமராசர்

காமராஜர் தமிழகத்தின் முதல்வராக இருந்த போது, சில அரசு உயரதிகாரிகள் மேலை நாடுகளுக்குச் சென்று அங்குள்ள நகரங்களின் அமைப்புகளை அறிந்து வர விரும்பினர். அதனை மறுத்த காமராசர் அவர்களை அழைத்து "மதுரைக்குச் சென்று பாருங்கள். அதைவிட சிறந்த நகரமைப்பு எங்கு உண்டு?" என்றாராம்.

### மதுரையை மாற்றிய நேரு

மதுரை என்பது ஆங்கிலத்தில் MADURA என்று எழுதப்பட்டு மெஜுரா என்று நீண்ட காலமாக உச்சரிக்கப்பட்டது. சுதந்திர இந்தியாவில் MADURA என்பது MADURAI என மாற்றப்பட்டது. இதில் ஒரு சிக்கல் உருவானது மதுரைக்கு வரும் தபால்கள் வடஇந்தியாவில் உள்ள மதுரா (MATHURA) நகருக்குத் தவறாக அனுப்பப்பட்டன. இதனால் பல விளைவுகள் ஏற்பட்டன.

இப்பிரச்சனை அப்பொழுது பாரதப் பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு அவர்களின் கவனத்திற்குச் சென்றது. இதுகுறித்து அப்போது மதுரை

நகரசபைத் தலைவராக இருந்த திருமதி. டி.கே. ரமாவுக்கு நேரு ஒரு கடிதம் எழுதினார். MATHURAI என்னும் பெயரை சிறிது மாற்றும்படி அக்கடிதத்தில் கோரியிருந்தார்.

கல்லூரி முதல்வர்கள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள், கல்வியாளர்கள், முக்கிய பிரமுகர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தை மதுரை நகர சபைத் தலைவர் கூட்டினார். அக்கூட்டத்தில் நேருவின் கோரிக்கை தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு MADHURAI மற்றும் MADURAI என இரண்டு பெயர்கள் தேர்வு செய்யப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. அரசினர் MADURAI என்பதைத் தேர்வு செய்தனர்.

# மூர்த்தி – தலம் – தீர்த்தம்

'பாண்டி நாடே பழம்பதி', 'தில்லைக் கூத்தனே தென்பாண்டி நாட்டானே' என மணிவாசகப் பெருந்தகையாலும் 'தண்ணார் தமிழினிக்கும் தண் பாண்டிநாடு' 'நீலமாமிடற்றால வாயிலான் பாலதாயினார் ஞாலம் ஆள்வரே' என திருஞான சம்பந்தராலும் 'சீரானைத் தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே' என்று திருநாவுக்கரசராலும் பாடப்பெற்ற சிறப்புடைய தொன்மைப் புகழ் பூண்டது பாண்டி நாடு.

மூர்த்திச் சிறப்பு, தலச்சிறப்பு, தீர்த்தச் சிறப்பு என்னும் முப்பெருஞ் சிறப்புக்களால் முதன்மை பெற்று விளங்கும் இத்தலம் நினைத்தாலே முக்தி தரும் தன்மையுடையது. இவ்வுண்மையை,

"திருவால வாய்க்கிணையாம் ஒருதலமும்
தெய்வமணம் செய்யப் பூத்த
மருவார் பொற் கமலநிகர் தீர்த்தமும் அத்
தீர்த்தத்தின் மருங்கே ஞான
உருவாகி யுறைசோம சுந்தரன் போல்
இகபரம் தந்து உலவா வீடு
தருவானும் முப்புவனத் தினும் இல்லை!
உண்மை இது சாற்றின் மன்னோ!"

என்னும் பாடல் உறுதி செய்யும்.

ஆதிகுமரகுருபர சுவாமிகள் 'உலகெல்லாம் ஈன்ற அன்னை தடாதகை பிராட்டியானதும், பிறப்பில் பெருமான் சோமசுந்தர பாண்டியன் ஆனதும், சண்முகக் கடவுள் உக்கிரப் பெருவழுதியானதும் தண்டமிழ் மதுரம் கொழிக்கும் மதுரையிலே என்று உரைக்கின்றார்.

"தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றாள்

தடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவும் தனிமுதல் ஒருநீ
சவுந்தர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் என்பேர்
கொண்டதும் தண்டமிழ் மதுரம்
கூட்டுணா வெழுந்த வேட்கையால் எனில்இக்
கெழுதமிழ்ப் பெருமையார் அறிவார்."

– மதுரைக் கலம்பகம்

**மூர்த்திகள்**

இறைவன் மானுடனுக்கும், யோகியருக்கும் ஞானியருக்கும் அவரவர் பக்குவநிலைக்கு ஏற்ப வடிவங்கள் எடுக்கின்றான் என்று சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது. அப்படி ஓர் உருவம் இல்லாத பெருமானே அருவம், உருவம், அருவாருவம் (அருவுருவம்) என்ற மூன்று நிலைகளில் விளங்கி உயிர்களுக்கு, வினை நீக்கம் செய்து அருளுகின்றான். இவ்வகையில் மதுரை எனும் இத்தலத்தில் உறைந்திருக்கும் சோமசுந்தரர் சொக்கலிங்கம், எல்லம் வல்ல சித்தர், கால்மாறியாடிய நடராசர், பிட்சாடனர், சோமாஸ்கந்தர் என்ற ஐவகை உருவங்களிலே அமைந்து அருள்பாலிக்கிறார். உயிர்களை உய்விக்கும் பொருட்டு இத்தலத்தில் தோன்றிய மீனாட்சியம்மையும் மிகவும் சக்தி வாய்ந்தவள்.

**மூர்த்திகளின் பெயர்கள்**

தலவிநாயகர் – சித்திவிநாயகர்
மூர்த்தி – அருள்மிகு சொக்கநாதர்
அம்பிகை – அருள்மிகு மீனாட்சி (அங்கயற்கண்ணி)
விமானம் – இந்திர விமானம்
மன்றம் – வெள்ளிமன்றம் (இரஜதசபை)
நடனம் – சொக்கத்தாண்டவம் (கால்மாறியாடியது)
தலமரம் – கடம்பமரம், வில்வமரம்
தீர்த்தங்கள் – பொற்றாமரைக்குளம்,
எழுகடல், கிருதமலை

கொண்டாழி, தெப்பகுளம்,
புறத்தொட்டி நின்மாலிய தீர்த்தம்
முக்கிய விழாக்கள் – சித்திரைத் திருவிழா
ஆவணி மூலத்திருவிழா
தெப்பத் திருவிழா
முருகன் – கூடற்குமாரர்

கோயில் தனிச்சிறப்பு–எங்கும் காணமுடியாத இரண்டு திருச்சந்நிதிகளை உடைய இரட்டைக் கோயில், ஒன்று இறைவன் திருச்சந்நிதி, மற்றது மீனாட்சி அம்மன் திருச்சந்நிதி

**இறைவன் திருப்பெயர்**

இறைவனுக்கு ஆதியில் **சொக்கர், சொக்கலிங்கர்** என்னும் பெயர்கள் விளங்கிவந்தன. (சொக்கு – அழகு, அழகை உடைய சொக்கர்)

இறைவனுக்கு இக்காலத்தில் **சுந்தரேசுவரர், மீனாட்சி சுந்தரர், சோமசுந்தரர், கலியாணசுந்தரர், சண்பக சுந்தரர்** முதலிய பெயர்கள் வழங்குகின்றன.

மேலும் இலக்கியங்களில் **அடியார்க்கு நல்லான், அபிடேகச்சொக்கர், கடம்பவனச் சொக்கர், கற்பூரச்சொக்கர், புழுகுநெய்ச் சொக்கர், கடம்பவனேசர், மதுரேசுவரர்** முதலிய பல பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

இத்தலத்தில் இறைவன் சங்கப்புலவராக வீற்றிருந்த பொழுது **இறையனார், பேராலவாயர்** எனும் பெயர்களைப் பெற்றிருந்தார்.

கல்வெட்டுக்களில் இறைவனுக்கு **அழகிய சொக்கநாதர், திருவாலவாயுடைய நாயனார், மதுரை உடையார், அதிர வீசி விளையாடுவார், சொக்க நாத ஈஸ்வர உடையார், மாதேவரழகிய சொக்கனார், சுந்தர பாண்டிய சோழக் கோனார்,**

**திருவாலவாயுடைய தம்பிரானார்** முதலிய பெயர்கள் காணப்படுகின்றன.

## இறைவியின் திருப்பெயர்

தலத்தில் இறைவியின் திருப்பெயர் **மீனாட்சி**, மீனாட்சி என்பது மீன் போன்ற அழகிய கண்களை உடையவள் எனப் பொருள்படும். இதன் தமிழ்ப்பெயர் **அங்கயற்கண்ணி.**

"அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய்"
– திருஞானசம்பந்தர்.

மீன் தன் பார்வையாலேயே முட்டைகளைப் பொரியச் செய்யும். அதுபோல உலகத்து மக்களுக்கு தன் அருட்பார்வையால் நலம் தருபவள் எனக் காரணப்பெயர் உண்டாயிற்று.

'திருநோக்கால் ஊழ்வினை போக்கி'

மீன் கண்ணுக்கு இமையில்லாமல் இரவும், பகலும் விழித்துக் கொண்டிருப்பது போலத் தேவியும், கண்ணிமையாமல் உயிர்களைக் காத்து வருகிறாள் என்று Rev. FR. H. ஹீராஸ் எனும் அறிஞர் கூறுகிறார்.

"இணைவிழி யிமையாநாட்ட மெய்திய தலரத்தோன்றும்
பணைநெடும் புனமிந்தப் பார்வைசற்றிமைக்கு மாயின்
துணையிழந்தழிவ தெண்ணித்துணிந்தன கருணை
கணையினுங் கொடிய தென்னவக்கடவதோ யென்றால் கடவுள் மாதே"
– சௌந்தரியலகரி

மேலும் இறைவி **தடாதகை பிராட்டி, அபிடேகவல்லி கர்ப்பூரவல்லி, மரகதவல்லி, சுந்தரவல்லி, அபிராமவல்லி, கயற்கண்குமாரி, குமரித்துறையவள், கோமகள், பாண்டி பிராட்டி, மாணிக்கவல்லி, மதுராபுரித் தலைவி, முதுமலைத் திருவழுதிகள்**

முதலிய பல பெயர்களிலும் வழங்கப் பெறுகின்றாள். கல்வெட்டில் **திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியார்** எனும் பெயரில் குறிக்கப்படுகின்றார்.

மீனாட்சிசுந்தரர் என்பதற்கு சொல்லும் பொருளுமாய் விளங்குபவர் என்ற பொருளும் உண்டு.

"மன்னிய சொல்உன்மாது மாசறுபொருள் நீஉண்மை
என்று நின்றரற்றும் வேதமாதலால்"

– பழைய திருவிளையாடல்

"என்னைஇகழ்ந் தனனோசொல் வடிவாய்நின்
இடம்பிரியா இமையப் பாவை
தன்னையும்சொற் பொருளான உன்னையுமே இகழ்ந்தனன்"

– பரஞ்சோதி முனிவர்

இவ்வடிகளில் சொல் தேவியையும், பொருள் பெருமானையும் குறிக்கின்றன.

"வாகர்த்தா விபஸம்ரிக்தெள வாகர்த்தப் பிரதிபத்தயே
ஜகத: பிதரெள வந்தே பார்வதிபரமேஸ்வரெள"

– காளிதாசர் குமாரசம்பவம்.

**தலத்தின் வேறுபெயர்கள்**

மதுரைத் தலத்திற்கு வேறுபல சிறப்புப் பெயர்களும் உள்ளன. அவை அனைத்துமே காரணப் பெயராக அமைந்திருப்பதே இதன் தனிச்சிறப்பாகும்.

**கடம்பவனம்**

இத்தலம் முற்காலத்தில் கடம்பமரங்கள் நிறைந்த வனமாக இருந்தது. பின்னர் இறைவன் கட்டளையின் பேரில் குலசேகர பாண்டியன் காட்டைத் திருத்தி நாடாக்கினான் என்பது வரலாறு. அதற்கு அடையாளமாக கடம்பமரம் இத்தலத்தின் தல விருட்சமாக

அமைந்திருப்பதையும், கோயிலின் வடக்கு சுற்றில் ஒரு கடம்பமரம் இருப்பதையும் காணலாம். மேலும், இத்தலம்இலக்கியங்களில் 'கடம்பவனம்' என்றே குறிக்கப் பெறுகின்றது.

**ஆலவாய்**

மதுரை நகரின் எல்லையை மன்னனுக்கு உணர்த்த இறைவன் தன் கங்கணமாயிருந்த பாம்பினை எடுத்து விட அது வட்ட வடிவமாகத் தன் வாலை வாயால் கௌவியது. அவ்வட்ட வடிவமே எல்லையாகக் கொள்ளப்பட்டது. இவ்வாறு நாகம் தன் வாயால் கௌவி எல்லையைக் காட்டியதால் இத்தலம் **ஆலவாய்** என்றழைக்கப்படுகிறது.

**மதுரை**

எல்லையைக் காட்ட வந்த பாம்பு உமிழ்ந்த விஷம் நகரிலே பட இறைவன் தமது சடைமுடியிற் சூடிய பிறையினிடத்துள்ள அமிர்தமாகிய மதுவைத் தெளித்து புனிதமாக்கியதால் இத்தலம் '**மதுரை**' எனப் பெயர் பெற்றது.

மதுரை என்ற சொல்லுக்கு 'இனிமை' என்பது பொருள். அமிழ்தினும் இனிய தமிழ் மொழியாலே மதுரை இனிமை பெற்று இப்பெயர் பெற்றது என்பாரும் உளர்.

மருத மரங்கள் இங்கே செழித்து வளர்ந்திருந்ததாலும், மருத நிலங்களால் சூழப்பெற்ற ஊர் என்பதாலும் '**மருதை**' எனப் பெயர்பெற்றது. பின்னர் அப்பெயர் மருவி **மதுரை** என்றாயிற்று என்ற கூற்றும் உள்ளது. இன்றும் கிராமமக்கள் மதுரையை மருதை என்றே வழங்கி வருகின்றனர். எனினும் இப்பெயர் இலக்கியங்களில் காணப் பெறவில்லை.

**நான் மாடக்கூடல்**

மதுரையை அழிக்க வருணன் ஏவிய ஏழுமேகங்களையும் தடுக்கும் பொருட்டுப் பெருமான் தன் சடையினின்றும் விடுத்த நான்கு மேகங்களும்

மலைபோல் உயர்ந்து நான்கு மாடங்களாக கூடிக் காத்ததால் '**நான்மாடக் கூடல்**' எனப் பெயர் பெற்றது.

"வாடுவோர் தம்மைப் போற்ற வயங்கொளி மாநகர்க்கண்
கூடரு மேகநான்கும் மாடமாக் கூடலாலே
நாடவ ரதிசயிப்ப நான்மாடக் கூடலென்று
பீடுடை நகர்க்குநாமம் எங்கணும் பிறங்கிற்றன்றே"

– பழைய திருவிளையாடல்

கன்னி, காரியமால், காளி, ஆலவாய் நான்கையும் நான்கு மாடங்களாகவும் கூறுவர்.

**சமட்டி விச்சாபுரம்**

'சமட்டி விச்சாபுரம்' என்பதற்கு 'முழுமையான சிவஞானப்பட் டணம்' என்பது பொருள். ஆன்மாக்களுக்கு சரியை, கிரியை; யோகம், ஞானம் என்னும் நான்கையும் அருளுவதால் இப்பெயர் பெற்றது.

அருவுருவ லிங்க அமைப்பில் வியட்டிலிங்கம், சமட்டி லிங்கம் என்ற இருவகை உண்டு. இவற்றில் சொக்கநாதர் சமட்டிலிங்கமாக இருப்பதால் இத்தலம் சமட்டி விச்சாபுரம் என்றழைக்கப்பட்டிருக்கலாம்.

**துவாத சாந்தத் தலம்**

விராட்புருடனுக்குச் சிரசின் தானமாகிய பிரமரந்திரத்திற்கு மேல் பன்னிரண்டு அங்குல அளவில் இருப்பதாலும், ஆதாரங்கடந்த 'நிராதரப் பராவளித் தலமாதலாலும் **துவாத சாந்தபுரம்** என்றும் **துவாத சாந்தத் தலம்** என்றும் அழைக்கப் பெறுகிறது.'

**சருவதீர்த்த புரம்**

திருக்கயிலையில் உள்ள நூற்று முப்பத்தாறு தீர்த்தங்களையும் உமாதேவி இங்கு புண்ணிய தீர்த்தமாகக் கொண்டு தாபித்தார். அதனால் 'சருவதீர்த்தபுரம்' எனப்பெயர் பெற்றது என்பதனை கீழ்கண்ட கடம்பவனப் புராண பாடல் அடிகளால் உணரலாம்.

“சறுவ தீர்த்தஞ் சிவஞான
தீர்த்தந் தரும தீர்த்தமெழில்
செந்நீர் முத்தி தீர்த்தந்தீர்த்
தவுத்த மந்தீர்த் தாசிரயம்
பொறிசேர் பாவ நாசமியல்
பொருள் தேவ தீர்த்தநெறி
யுறுசீர்ச் சிவப்பிரீ திகர
மோங்கு புகழ்மங் களதீர்த்தம்”

**பிற பெயர்கள்**

இவைதவிர இத்தலம் சிவபெருமானே சுந்தர பாண்டியனாக அரசாண்ட காரணத்தால் சிவராஜதானி, சிவநகரம், பூலோக கயிலாயம் எனவும், உமையம்மை தடாதகை பிராட்டி என்னும் பெயரில் கன்னியாக இருந்து அரசாண்டமையால் ‘கன்னிபுரீசம்’ எனவும் வரகுண பாண்டியனுக்கு சிவலோகங் காட்டியதால் ‘சிவலோகம்’ எனவும் பலபெயர்களில் வழங்கப் பெறும்.

சங்கப் புலவர்கள் இருந்து தமிழாராய்ந்த இடமாதலால் மதுரைக்கு **‘தமிழ்மதுரை’ ‘தமிழ்க் கூடல்’ ‘சங்கத்தமிழ்க் கூடல்’, ‘முச்சங்கம் வளர் கூடல்’, ‘விரிதமிழ்க் கூடல்’, ‘முத்தமிழ் மதுரை’**, முதலிய பெயர்களும் வழங்கும்.

**தலவரலாறு**

இத்தலத்தின் வரலாறு தனிப்பெருமை வாய்ந்ததாகும். தெய்வ மணங்கமழும் தேவாரத் திருப்பதிகங்களில் இடம் பெற்றுள்ள 274 தலங்களில் இதுவும் ஒன்று. முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் அருளுருக் கொண்டு அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்தருளிய பெருமை வாய்ந்த இத்தலத்தின் வரலாறு படிப்போர் இன்புறும் வண்ணம் அமைந்துள்ளது.

**தலம் – தோற்றம்**

முற்காலத்தில் மதுரையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் கடம்பமரங்கள் நிறைந்த காடாக இருந்தன. அக்காலத்தில் குலசேகரப் பாண்டியன் மணவூரில் இருந்து பாண்டி நாட்டை ஆண்டு வந்தான். அப்பொழுது மணவூரில் வாழ்ந்த தனஞ்செயன் என்னும் தனவணிகன் வாணிகத்தின் பொருட்டுப் பல ஊர்களுக்கும் சென்று கடம்பவனம் வழியாக தன் ஊருக்கு திரும்பி வந்து கொண்டிருந்தான். வரும் வழியில் இருட்டிவிட்டது. காட்டின் நடுவில் ஓரிடத்தில் தங்க நேரிட்டது.

அங்கே ஒரு பொய்கை இருந்தது. அதன் கரையில் தானாய்த் தோன்றிய ஒரு தனிச்சுடராகிய சுயம்புலிங்கம் (சிவலிங்கம்) காட்சியளித்தது. தனஞ்செயன் அப்பொய்கையில் நீராடி சிவலிங்கத்தை வணங்கிப் பின் ஓரிடத்தில் தங்கி இளைப்பாறினான். அன்றிரவு அங்கே ஓர் அதிசயம் நிகழக் கண்டான்.

வானுலகத் தேவர்கள் பலர் அங்கு வந்தனர். நான்கு யாமங்களிலும் அச்சிவலிங்கத்திற்கு முறையாக பூசைகள் செய்து வழிபட்டனர். ஆடலும், பாடலும் சிறப்பாக நடைபெற்றன. இவ்வதிசயக் காட்சியைக் கண்ட தனஞ்செயன் மறுநாள் காலை மணவூர் சென்றதும் குலசேகர பாண்டிய மன்னனிடம் தான் கண்டவற்றை எடுத்துரைத்தான்.

பாண்டியன் கனவில் சித்தர் வடிவில் அன்று இரவே சிவபெருமான் தோன்றி, 'பாண்டிய மன்னா' யாம் எழுந்தருளியிருக்கும் கடம்பவனத்தைத் திருத்தி நாடாக்குக' எனக் கூறி மறைந்தார். அக்கட்டளையை ஏற்று குலசேகரன் கடம்பவனத்தில் காட்சி தந்த சிவலிங்கத்திற்கு ஒரு மாபெரும் ஆலயத்தை எழுப்பினான். அதைச் சுற்றிலும் அகன்ற வீதிகளும், மணிமாடங்களும் நிறைந்த அழகிய திருநகர் ஒன்றை அமைத்தான்.

இவ்வரலாற்றின் அடையாளமாக இன்றும் திருக்கோயிலின் வடக்கு சுற்றில் கடம்பமரம் ஒன்று காட்சியளிக்கின்றது. மேலும் இத்தலம் இலக்கியங்களில் கடம்பவனம் என்றே குறிக்கப் பெறுகின்றது.

## தடாதகை பிராட்டியார் திருஅவதாரம்

மதுரையை ஆண்டு வந்த மலயத்துவச பாண்டியனும் அவன் மனைவி காஞ்சன மாலையும் மகப்பேறு வேண்டி இறைவனை வழிபட்டு வந்தனர். பல்வேறு யாகங்களைச் செய்தனர். பிறகு பிரமன் உபதேசித்ததன் பேரில் புத்திர காமேட்டி யாகம்' மேற்கொண்டனர்.

அப்போது அருளும் பொருட்டு இவ்வுலகையே ஈன்ற அன்னையான உமாதேவியார் அந்த யாகக் குண்டத்தில் மூன்று தனங்களை உடைய பெண்குழந்தையாகத் தோன்றினார். குழந்தை உருக் கண்டு பேரானந்தம் பெற்ற அரசனும், அரசியும் அக்குழந்தையின் உருவிலே இருக்கும் மாற்றம் கண்டு மனம் வருந்தினர். அப்பொழுது சிவபெருமான் அசரிரீயாக "மன்னா மனம் வருந்தாதே; இக்குழந்தைக்கு தடாதகை என்று பெயரிட்டு கல்வி கேள்விகளில் சிறப்பு பெறுமாறு அனைத்துக் கலைகளையும் கற்றுக் கொடு. தனக்கேற்ற கணவனை இக்குழந்தை காணும் போது மிகுதியாக உள்ள ஒருதனம் மறைந்துவிடும்" எனக் கூறினார். அரசனும் மன அமைதி பெற்றான். (ஒருவன் பிறக்கின்றபோது பரஞானம், அபரஞானம், தன்முனைப்பு என்ற ஆணவம் ஆகிய மூன்று தனங்களோடு பிறக்கின்றான். தடாதகைக்கு இறைவனை பார்த்தவுடன் மூன்றாவது தனம் மறைந்ததைப் போல மனிதன் இறைவனை நினைப்பதால் ஆணவம் என்ற மூன்றாவது தனம் மறையும் என்பது தத்துவம்)

தடாதகை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, கல்வி கேள்விகளில் சிறந்து, வீரம் மிக்கவளாக வளர்ந்தாள். பாண்டி நாட்டின் அரசியானாள். செங்கோல் வழுவாமல் சிறந்த முறையில் ஆட்சி செலுத்தினாள். பாண்டிநாடு பெருவளம் பெற்றுப் பொன்னாடாகப் பொலிவு பெற்றது.

தடாதகை தன் நாட்டின் எல்லையை விரிவுபடுத்த எண்ணி பல குறுநில மன்னர்களின் மீது படையெடுத்துச் சென்று வென்றாள். பிறகு பெரும்படையுடன் சென்று கயிலையம்பதியை அடைந்து போர் முரசு கொட்டினாள். அவளை எதிர்த்த பூதப்படைகளும், நந்திதேவரின்

படைகளும் தோல்வியைத் தழுவின. இதனை அறிந்த இறைவன் போர்க் கோலத்துடன் அங்கே எழுந்தருளினார். அப்பெருமானைத் தன்னெதிரேக் கண்டதும் தடாதகை பெண்ணுக்கே உரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நால்வகை நெறியில் நாணித்தலை குனிந்தாள். அவளது மூன்று தனங்களில் ஒன்று மறைந்தது. இறைவனே தனக்குரிய கணவன் என்பதை உணர்ந்தாள். இறைவன் "நீ மதுரைக்கு செல்; இன்றைக்கு எட்டாம் நாள் நாம் அங்கு வந்து உன்னை மணம் புரிவோம்" என்று கூறினார். அதன்படியே தடாதகை மதுரையை அடைந்து மகளிர் அட்டமங்கலத்தோடு எதிர்கொள்ள அரண்மனையுள் புகுந்தாள்.

### இறைவனோடு ஒன்றி இறைவியாதல்

இறைவனுக்கும், தடாதகைக்குமான திருமண நாள் குறித்துப்பல நாட்டு மன்னர்களுக்கும் ஓலை அனுப்பப்பட்டது. வீதிகளும், மாளிகைகளும் அலங்கரிக்கப்பட்டன. தேவர்களும், முனிவர்களும், திருமாலும் வந்திருந்தனர். மேலும் பல நாட்டு மன்னர்களும் திரண்டு வந்திருந்தனர்.

பங்குனி உத்திரப் பெருநாளில் திருமணத்திற்குரிய நல்ல வேளையில் இறைவன் தடாதகையை மணந்தார். சுந்தர பாண்டியன் எனும் பெயருடன் மதுரையை ஆண்டு வந்தார். அதன்பின்பு முருகனின் அவதாரமாக வந்து தோன்றிய உக்கிரகுமார பாண்டியனுக்கு முடிசூட்டி விட்டு மீனாட்சி சுந்தரேஸ்வரராக இறை வடிவமாயினார் என்பது இத்தலவரலாறு. மீனை ஒத்த கண்களை உடைய தடாதகை பிராட்டியே மீனாட்சியம்மை என்ற பெயருடன் கோயில் கொண்டு விளங்குகின்றார்.

### தலப் பெருமைகள்

"தேடிநான்முகன் செங்கண்மால் காண்கிலரன் திங்கள்
சூடினான் அடியார் மனத்தான் மறைத்தொகுதி
பாடினான் அருளா லறுபத்து நாலாடல்
ஆடினா னதிலெனின் அதன்பெருமை யாரறைவார்"

– சீகாளத்திப் புராணம்

எங்கும் நிரம்பிய செம்பொருளாகிய இறைவன் அருளுருக் கொண்டு 64 திருவிளையாடல்களைச் செய்தருளியதும், '**பூலோக கயிலாயம்**' என அழைக்கப்படுவதுமாகிய இம்மதுரை பல சிறப்புக்கள் அமையப் பெற்றது.

### முக்தித்தலம்

விசேஷமான சிவக்ஷேத்திரங்கள் 68, இவற்றில் கைலாசம் முதலான 16 சிவக்ஷேத்திரங்கள் மிகவும் சிறந்தவை. இப்பதினாறில் காசி, காளஹஸ்தி, சிதம்பரம், மதுரை ஆகிய நான்கும் மிகமிகச் சிறந்தவை. காசிக்குப் போக நினைத்து இறங்கினால் மோட்சமும், காளஹஸ்தியில் பூசை செய்தால் மோட்சமும், சிதம்பரத்தில் தரிசித்தால் மோட்சமும், மதுரையை நினைத்தாலோ, கேட்டாலோ எல்லா பாபமும் தீர்ந்து முக்தி கிடைக்கும் என்றும் ஹாலாஸ்ய மஹாத்மியம் விளக்குகிறது. இவ்வுண்மையை பரமசிவன் பார்வதி தேவிக்குக் கூறியதாகவும், அச்சமயம் அம்பிகையின் மடிமீதமர்ந்து கேட்ட முருகப்பெருமான் உலகமக்கள் உய்யும் பொருட்டு திருவுளங்கொண்டு இவ்வுண்மையை அகத்திய முனிவரின் வாயிலாகச் சங்கர சங்கிதையையும், பரஞ்சோதி முனிவர் வாயிலாகத் திருவிளையாடற் புராணத்தையும் வெளியிட அருள் புரிந்ததாகவும் கூறுவர்.

### பஞ்ச சபைகளில் ஒன்று

உலகத்து உயிர்களை இயக்குவிக்கும் பொருட்டு இறைவன் திருநடனம் புரியும் மணிமன்றங்களாகிய பொன் (சிதம்பரம்) வெள்ளி (மதுரை) இரத்தினம் (திருவாலங்காடு) தாமிரம் (திருநெல்வேலி) சித்திரம் (திருக்குற்றாலம்) என்ற திருச்சபைகள் ஐந்தனுள் இத்தலம் வெள்ளியம்பலத்தலம் (இரஜதசபை) என்று அழைக்கப்பெறும்.

### சைவமும் தமிழும் வளர்ந்த தலம்

இது கடைச்சங்கப் புலவர்கள் வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்த இடம். மூர்த்தி நாயனார், விபூதி, உருத்திராக்கம், சடைமுடி என்ற மூன்றையுந் துணையாகக் கொண்டு மும்மையால் உலகாண்ட நகரம். "திருவீற்றிருந்த

தீதுதீர் நியமத்து மாடம்மலி மறுதல் கூடல்" என்று நக்கீரரால் புகழப்பட்ட பதி.

இது இந்திரன், வருணன் முதலிய தேவர்கள் வழிபட்டுப் பேறுபெற்ற தலம், அரிமர்த்தன பாண்டியனிடத்தில் மாணிக்க வாசகர் 'தென்னவன் பிரமராயன்' என்னும் பெயருடன் மந்திரியாயிருந்த நகரம். திருஞானசம்பந்தர் அனல்வாதம், புனல்வாதம் செய்த பதி. திருநீற்றுப் பதிகம் பாடிப் பாண்டியனது வெப்பு நோயைத் தீர்த்தது. திருநள்ளாற்றுப் பதிக ஏடு தீயில் வேகாமல் வெளிவந்தது. "வாழ்க அந்தணர்" பதிகம் எழுதப் பெற்ற ஏடு வைகையாற்றில் எதிர்த்துச் சென்றது. நெய்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறனும், திருஞானசம்பந்தரின் வரலாறு கேட்டுப் பால்சுரக்கப்பெற்ற தலையன்பினராகிய மங்கையர்க்கரசியாரும், சைவந் தழைக்க அனுகூலராயிருந்த குலச்சிறையாரும் வாழ்ந்த திருப்பதி.

**பெருமான் பெருமாட்டி பெருமையுணர்த்தியதலம்**

சிவபூஜையின் மகிமையை உலகறிந்து உய்யும் பொருட்டு சோமசுந்தரர் தாமே தன்னை ஆன்மார்த்த மூர்த்தியாகப் பிரதிட்டை செய்து பூசித்த இம்மையே நன்மை தருவார் எழுந்தருளியிருக்கும் இடம். சிவபக்தி மிகுந்த வந்தியம்மையின் பிட்டருந்தி, மண்சுமந்து பாண்டியனால் பிரம்படியும்பட்ட பெருமான் வாழும் இடம். மாணிக்கவாசகர் பொருட்டுப் பல திருவிளையாடல்களைச் செய்த இடம். பாணபத்திரர்க்குப் பெருமான் திருமுகப்பாசுரம் எழுதிக் கொடுத்துச் சேரமான் பெருமாளால் நிதி கொடுப்பித்தது; மூல இலிங்கத்தை நாவுக்கரசர் "முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்று பாடியது; ஊமையாயிருந்து பேசிய குமரகுருபரர், திருமலை நாயக்கர் காலத்தில் 'மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்' பாடி அரங்கேற்றி அம்மையின் திருவருள் பெற்றது; தருமபுரம் ஆதீனம் ஆதிகுருமூர்த்தி ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஆன்மார்த்த வழிபாட்டிற்குச் சொக்கலிங்கப் பெருமானை பெற்றது; பாண்டிய, நாயக்க மன்னர்களால் பரிபாலிக்கப் பெற்றது ஆகிய திருவருட் செயல்கள் நடைபெற்ற இடம் மதுரை.

**ஒப்பற்ற தலம்**

மேலும் முக்திதரும் நகரங்களுள் ஒன்று. சக்திக்குப் பிரதான தலம். சக்தி பீடங்கள் அறுபத்திநான்கில் முதற்பீடமான மீனாட்சி பீடத்தை உடையது. இராமர், இலட்சுமணர் மற்றும் பிற தேவர்களும் முனிவர்களும் பூசித்துப் பேறு பெற்ற தலம். இத்தலத்துக்கு ஒப்பாக வேறொரு தலமும் பொற்றாமரை தீர்த்தத்துக்கு ஒப்பாக ஒரு தீர்த்தமும், மூல இலிங்கத்திற்கு ஒப்பாக வேறொரு இலிங்கமும் மூவுலகத்தும் இல்லை என்று சொல்லப்படுகிறது.

இக்கோயில் பல திருப்பணிகளையும், சிற்பங்களையும், மண்டபங்களையும், கல்வெட்டுகளையும் கொண்டது. நாத ஓசை எழுப்பும் சிற்பங்களும் அமையப்பெற்றது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் தேவாரம் பாடப்பெற்றது. வடமொழியிலும், தமிழிலும் பல புராணங்களையுடையது. அருணகிரியார் பாடிய திருப்புகழ்ப் பாடல்களையும், வேறு பலராலும் பாடப்பெற்ற பிரபந்தங்களையும் உடையது.

**விழாமலிந்த நகரம்**

வருடம் முழுவதும் பன்னிரண்டு மாதங்களிலும் திருவிழா நிகழப் பெறுவது. அதனால் 'விழாக்கள் மலிந்த நகரம்' என்ற சிறப்புப் பெயர் பெற்றது. அவற்றுள் சித்திரைத் திருவிழா, ஆவணி மூலத்திருவிழா, தெப்பத்திருவிழா ஆகியவை மிகச்சிறந்த திருவிழாக்களாகும்.

பல்வேறு சுற்றுக் கோயில்களை தன்னகத்தே உடையது. நாட்டின் பல இடங்களில் உள்ளவர்களும் வந்து தரிசிக்கும் பெருமை உடையது. எனவே மாண்புமிக்க மதுரைத் தலத்தின் பெருமைகளை அளவிட்டுக் கூற இயலாது.

**தீர்த்தங்கள்**

உயிர்கள் செய்த முன்வினைப் பயனின் பொருட்டு இவ்வுலகில் பிறப்பெடுக்கின்றன. அவை அறிந்தும், அறியாமலும் செய்கின்ற பாவங்கள் புனிதமான நீர்நிலைகளில் நீராடும்பொழுது கழுவப்படுகின்றன என்பது ஐதீகம்.

இவ்வகையில் இத்தலத்தில்
பொற்றாமரைத்தீர்த்தம்
வையை தீர்த்தம்
எழுகடல் தீர்த்தம்
கிருதமாலை தீர்த்தம்
கொண்டாழி தீர்த்தம்
தெப்பகுளம்
புறத்தொட்டி நின்மாலிய தீர்த்தம்
ஆகியவை அமைந்துள்ளன.

**பொற்றாமரைக் குளம்**

ஆலயத்திற்குள்ளேயே அமைந்துள்ள இத்தீர்த்தம் நந்திதேவரின் வேண்டுகோளின்படிப் பெருமான் தமது சூலத்தைப் பூமியில் ஊன்றி உண்டாக்கியது என்பர்.

இந்திரன் கடம்பவனத்தை அடைந்த பொழுது அங்கிருந்த இறைவனை பூசிப்பதற்காகப் பொன் தாமரைகளைப் பெற்ற தடாகம் ஒன்றை அமைத்தான். அதுவே பொற்றாமரைக் குளம் என வழங்குகிறது என்பர். இதன் அறிகுறியாக இப்போது இக்குளத்தில் ஒரு பொன்தாமரை மலர் மிதக்கவிடப் பட்டுள்ளது.

பொய்யில் புலவரான தெய்வத் திருவள்ளுவர் தம் அறநூலான திருக்குறளின் பெருமையை நிலைநாட்டி அரங்கேற்றிய இடம்; சங்கப்பலகை மிதந்த இடம்; நக்கீரர் இறைவனை எதிர்த்து வாதிட்ட இடம்; தருமபுர ஆதீன முதல் குருமூர்த்தியாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் அருளினால் ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கலிங்கம்

கிடைக்கப் பெற்ற இடம் பொற்றாமரைக் குளம். இத்தகைய பெருமைகளை உடைய இத்திருக்குளத்தில் மீன்களோ, நீர்வாழ் உயிர்களோ இல்லாமலிருப்பது வியக்கத்தக்க ஒன்றாகும்.

எல்லாத் தீர்த்தங்களிலும் முதலில் தோன்றியதால் 'ஆதிதீர்த்தம்' எனவும், நீராடியவர்க்கு ஞானத்தைக் கொடுப்பதால் 'ஞானதீர்த்தம்' எனவும், முத்தியைத் தருவதால் 'முத்தி தீர்த்தம்' எனவும், சிவபெருமான் சடையிலுள்ள கங்கை நீர் கலக்கப் பெற்றதால் 'சிவகங்கை தீர்த்தம்' எனவும், உத்தமமாய் விளங்குவதால் 'உத்தமதீர்த்தம்' எனவும் பல காரணப் பெயர்களில் வழங்கப் பெறுகின்றது.

அமாவாசை, மாதப்பிறப்பு, கிரகண காலங்கள், வியதிபாதம் முதலிய புண்ணிய காலங்களில் இத்தீர்த்தத்தில் நீராடிப் பெருமானை வழிபட்டால் வேண்டும் சித்திகளைப் பெறலாம். இதனைப் பரஞ்சோதியார்,

"தெய்வஇத் தீர்த்தம் தன்னை நினைவின்றித் தீண்டினாலும்
அவ்விய வினையின் நீங்கி அரும்பெறல் வீடு சேர்வர்
இவ்வுரை மெய்யே யாகும் என்னெனில் மனத்தாறன்றி
வெவ்வழல் தீண்டினாலும் சுடுமன்றி விடுமோ அம்மா!"

– திருவிளையாடற்புராணம்

என்று குறிப்பிடுகின்றார்.

**வையை நதி**

மீனாட்சியம்மை திருமணத்தில் குண்டோதரனின் நீர்வேட்கையைத் தணிக்கும் பொருட்டு இறைவன் கங்கையை வருவித்தார். அது வையை நதியாகப் பெருகிப் பாய்ந்தது என்பது புராணம்.

"வையை என்னும் பொய்யாக் குலக்கொடி" என்று சிலப்பதிகாரம் இந்நதியைப் பாடுகின்றது. பரிபாடலில் எட்டுபாடல்கள் இந்நதியின் பெருமையைக் கூறுகின்றன. பரஞ்சோதியார் இதனை,

"தீர்த்தன் இதழிச் சடை நின்றும் இழிந்து வரலால் சிவகங்கை

தீர்த்தன் உருவந் தெளிவோர்க்கு ஞானந்தரபொற் சிவஞான
தீர்த்தம் காலிற்கடு கிவரு செய்தியாலே வேகவதி
தீர்த்தம் கிருதமலை யெனவையை நாமஞ் செப்புவரால்"

என்று சிறப்பிக்கின்றார். மேலும்,

"தமிழருமை மதுரை மூதூர் நீரறியும் நெருப்பறியும் என்றபடி புனல்வாதத்தில் திருஞானசம்பந்தரின் 'வாழ்க அந்தணர்' எனும் பதிகஏடு வையையாற்றில்தான் இடப்பட்டு எதிரேறிச் சென்றது.

"வேகவதிக் கெதிர் ஏறவிட்ட தொருசிற்றேடு
காலநதி நினைக்கரவாக் காரணத்தின் அறிகுறியே"

என மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையும்

"தமிழ் கண்டதோர் வையை"

என பாரதியாரும்

"சங்கத்து இருப்பிலே இருந்து வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை"

என வரந்தருவாரும் பாடியிருப்பதன் மூலம் இந்நதியின் பெருமையை நாம் உணரலாம்.

இந்நதி சிவகங்கை, ஞானதீர்த்தம், வேகவதி, என்று பல பெயர்களைப் பெற்று விளங்குகிறது.

**கிருதமாலை**

இது வையை நதியின் கிளைநதி. கூடல் அழகர் கோயிலுக்கு மேற்கே உள்ளது. இதுவும் ஒரு சிறப்பான தீர்த்தம்.

**எழுகடல்**

இது மதுரையின் நிருதி மூலையில் கோயிலுக்கு கிழக்கே

அமைந்துள்ளது. சௌந்தர பாண்டியன் காஞ்சன மாலைக்காக வருவித்த ஏழுகடல்களும் இத்தடாகத்து அடங்கப் பெற்றமையால் இத்தடாகம் இப்பெயர் பெற்றது.

"தீதில் எழுகடல்களும் சேர்தலாற்றடம்
பூதலத் தெழுகடலெனப் பொலிந்ததே"
– பழைய திருவிளையாடல்

"தலையிலே ஆறிருக்க மாமிக் காகத்
தாங்குகடல் ஏழழைத்த திருக்குற் றாலர்"
– குற்றாலக் குறவஞ்சி

**கொண்டாழி தீர்த்தம்**

இது 'வலைவீசிய தெப்பக்குளம்' என அழைக்கப் படுகின்றது. புகைவண்டி நிலைய பாலத்தின் அருகில் உள்ளது. இத்தீர்த்தக் கரையில் திருவிழாக் காலத்தில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் மண்டகப்படி நிகழ்த்தி வலைவீசின படலச் செய்திகள் லீலைகளாக நிகழ்த்தப் பெறுகின்றன.

**தெப்பக்குளம்**

கோயிலுக்கும் கிழக்கில் நான்கு கிலோமீட்டர் தூரத்திலிருக்கிறது. திருமலை நாயக்கரால் 1645–இல் கட்டப்பெற்றது. 'திருமலை நாயக்கர் சமுத்திரம்' என்றும் 'மாரியம்மன் தெப்பக்குளம்' என்றும் பெயர் பெறும். தென்வடலில் 1000 அடியும், கீழ்மேலில் 950 அடியும் உள்ளது. நகரில் உள்ள மூன்று சிறந்த இடங்களில் ஒன்று.

வைகையிலிருந்து வரும் ஒரு கால்வாயின் மூலம் நீர் நிரப்பப்படுகிறது. குளத்தின் நடுவிடம் ஒரு தீவுபோல் உள்ளது. நடுவில் நீராழி மண்டபக் கோயிலும் சுற்றிலும் நந்தவனங்களும், நான்கு மூலைகளிலும் நான்கு சிறிய மண்டபங்களும் உள்ளன. இவை சிற்ப

அமைப்புகளுடன் அழகாகக் கட்டப்பெற்றுள்ளன. படகுகள் மூலம் மைய மண்டபத்திற்குச் சென்று வரலாம்.

திருமலை நாயக்கர் மகால் கட்டுமானத்திற்குத் தேவையான கற்கள் இவ்விடத்தில் தயார் செய்யப் பெற்றதாகவும், சுவாமி கோயில் பிரகாரத்திலுள்ள 'முக்குறுணி பிள்ளையார்' இக்குளத்திலிருந்து கிடைத்ததாகவும் சொல்லப்படுகிறது.

ஆண்டுதோறும் தைப்பூசநாளில் தெப்பத் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். அன்றைக்குப் பலவகை விளக்குகளால் அழகாய் அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் அருள்மிகு மீனாட்சியம்மையும், அருள்மிகு சுந்தரேசுவரரும் எழுந்தருளிச் சுற்றி வருவர். திருமலை நாயக்கரின் பிறந்த நாளின் நினைவாக இது நடைபெறுகிறது.

மதுரைக் கோயிலில் நடைபெறும் மூன்று முக்கியத் திருவிழாக்களில் தெப்பத்திருவிழாவும் ஒன்று. பிறவிக்கடலில் பக்தி என்னும் தெப்பத்தைக் கொண்டு பரமனை அடைய வேண்டும் என்பது குறிப்பாகும்.

"கத்தித் திரிபிறவிச் சாகரத்துள் ஆழாமே
பத்தித் தனித்தெப்பம் பார்வாழத் தந்தபிரான்"

– நம்பியாண்டார் நம்பி

"புகலரிய சத்தசா கரமுமத னடுவிலே
புவனநவ கண்டங்களும்
பொன்மேரு நிகர்மேவு மண்டபமும் மதுரேசர்
புகழநவ மாய்ப்புதுக்கித்
திகழ்செய்திரு மலை நாயகர்சமுத் திரமெனும்
தெப்பக் குளங்கண்டனன்
சிகரபுய பலவிசய சுமுகமுந் துக்கிருஷ்ண
திருமலை மகீபாலனே"

– திருப்பணி மாலை

## புறத்தொட்டி நின்மாலிய தீர்த்தம்

இது சுவாமி கோயிலின் இரண்டாம் பிரகாரத்தில் அமைந்துள்ளது. பசுவிற்கு ஒரு பிடியளவு உணவு கொடுத்து இத்தீர்த்தத்தில் விடியற் காலையில் நீராடி அம்மையப்பரை அங்கப் பிரதட்சணம் செய்து வேண்டினால் நினைத்தது நினைத்தபடி நடக்கும் என்பது மக்கள் நம்பிக்கை. புராணமும் இதனையே விளம்புகிறது.

மதுரை மாநகரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மீனாட்சிஉடனுறை சோமசுந்தரப் பெருமான் உலக உயிர்கள் உய்யும் பொருட்டு மானுட வடிவம் தாங்கி உயிர்களுக்கு ஞானத்தை உணர்த்தி அருள்பாலிக்கின்றார். இத்தலம் மூர்த்திச் சிறப்பாலும் மேலும் தீர்த்தச்சிறப்பாலும் சிறந்துள்ளது. மதுரையில் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள தீர்த்தங்கள் அனைத்தும் ஒவ்வொன்றும் தனிச்சிறப்பைபெற்று தம்மிடம் நீராடி வழிபடுபவர்களின் பாவங்களைத் துடைக்கின்றன. ஆனால் இவை எல்லா தீர்த்தங்களிலும் சிறப்புடையது பொற்றாமரைத் தீர்த்தமே. இதில் நீராடினால் நாம் செய்த முன்வினைகள் நீங்கும் ஆகவே இத்தீர்த்தத்தில் நீராடி இகபர சுகத்தை எய்துவோமாக!



# ஆலய அமைப்பு

ஆலயம் என்பதற்கு ஆ+லயம் (ஆ–ஆன்மாக்கள், லயம்–லயிக்கும்) எனப்பிரித்து ஆன்மாக்கள் லயிக்கும் இடம் எனப் பொருள் கூறுவர். கோயிலுக்குச் சென்று வந்தால் நமது மனதில் ஒரு விதமான நிம்மதி பரவுவதை நம்மால் உணரமுடியும். அதற்குக் காரணம் ஆன்மாக்கள் அங்கே லயிப்பதேயாம். கோயிலுக்குச் சென்று வருவதால் உடலும், மனமும் ஒருங்கே ஆரோக்யம் பெறும் என்பது விஞ்ஞான பூர்வமான உண்மை. இதற்கு கோயில் அமைக்கப்பட்டுள்ள விதம் ஒரு முக்கியமான காரணமாகும். அவ்வாறு நோக்குங்கால் 'ஆலய அமைப்பு முறை' மிகச் சிறப்பாக அமைந்துள்ள ஆலயங்களில் 'ஆலவாய் அண்ணல் ஆலயம் குறிப்பிடத்தக்கதாம்.

இன்றைய மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிற் கருவறைகள் கி.பி. 16–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. பிறபகுதிகள் பெரும்பான்மையாக 17, 18 –ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டவை. பிற்கால பாண்டியரது காலத்தில் (கி.பி. 12, 13ஆம் நூற்றாண்டுகள்) கட்டப்பட்டிருந்த பெரும்பான்மையான பகுதிகளில் சுந்தரபாண்டியன் கோபுரம், பராக்கிரம பாண்டியன் கோபுரம் எனச்சில பகுதிகளைத் தவிர எஞ்சிய பகுதிகள் கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் நடந்த முகமதியர்களின் படையெடுப்பின் போது அழிக்கப்பட்டுவிட்டன.

இன்றைய மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் குலசேகர பாண்டியனால் கட்டப்பட்டதாக புராணவரலாறு. எனினும் எந்த ஒரு கோயிலும் ஒரே அரசனால் கட்டப்பட்டதாகக் கூறமுடியாது. இக்கோயில் பல நூற்றாண்டுகளாகப் பல மன்னர்களால் கட்டப்பட்டு இன்றைய அமைப்பைப் பெற்றுத் திகழ்கின்றது.

**தனித்தன்மை :**

மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் மிகவிரிந்த பரப்புடையதாகவும் பல்வேறு மண்டபங்களைக் கொண்டதாகவும் வியக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது. தமிழர் நாகரிகத்தினையும், பண்பாட்டினையும் கட்டிக்

காப்பதற்காக நமது முன்னோரால் வேதவிதியின் அடிப்படையில் ஆலய நன்னூல்களின் முறைப்படி எழுப்பப்பட்டுள்ளது.

ஒருகோயிலின் முக்கியமான பகுதி அக்கோயிலின் விமானமே ஆகும். ஏனெனில் விமானத்தின்கீழ்தான் இறைவன் குடிகொண்டிருக்கும் கருவறை இடம் பெற்றுள்ளது. விமானம் என்பது கருவறை பகுதியின் அடித்தளம் முதல் கலசம் வரை உள்ள பகுதியாகும். இத்திருக்கோயிலில் ஆலவாய் அண்ணலின் இலிங்கமான அளவைக் கொண்டு உபபீடம், அதிஷ்டானங்களும், நாகர, திராவிட, வேசரபேதத்துடன் கைலாசம் என்ற முறையில் விமானம் அமைந்துள்ளது. இதே அமைப்பை விமான இலட்சத்தில்,

"சதுஸ்சாலா சதுஷ்கட யுக்தை; கைலாச ஏவஹி"
என்று காமிகாகமம் கூறுகிறது.

சைவ, ஆகம முறைகளில் இருந்து சிறிதும் வழுவாமல் அமைக்கப்பெற்ற திருக்கோயில் இதுவேயாகும்.

"ஆகமம் ஆகிநின்ற அண்ணிப்பான் தாள் வாழ்க"
– தண்டமிழ் வாசகம்

சைவ, ஆகமங்களில் அன்றி வேறு எந்த நூலிலும் காணப்பெறாத 100 கால் மண்டபங்கள், 1000 கால் மண்டபங்கள் முதலிய மண்டபங்களும், சிவாகமங்களில் காணப்படும் 25 மூர்த்திகளும், தியான வடிவ அமைப்புகளும், ஐந்துவிதமான நிருத்த மூர்த்திகளின் ஸ்தானங்களும் தங்கம், வெள்ளி, செம்பு, சிலை, சுதையாக ஐந்து முறைகளில் அமைக்கப்பெற்ற திருவுருவப் படிவங்களும் ஒரு சேரக்காணும் வாய்ப்பு மதுரைத் திருக்கோயிலில்தான் காணக்கிடைக்கின்றது.

மேலும் சைவாகமம் சிற்ப சாத்திரங்களில் காணுகின்ற பாதபந்தம், பத்மபந்தம், பிரதி அந்தரம் முதலிய வர்க்கபேதமான உபபீட அமைப்புகளும்

விமானங்களில் கைலாசம், மேரு, மந்தரம் முதலிய சித்ர, விசித்ர பேதங்களும் காணமுடிகிறது. இவ்விதம் மதுரைத் திருக்கோயில் உலகிற்கே ஒரு கலைக்கூடமாகத் திகழ்கின்றது.

ஒரு கோயிலைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால் கோபுரம் தொடங்கி கருவறை வரை படிப்படியாக அறியலாம் அல்லது விமானத்திலிருந்து படிப்படியாகக் கோபுரம் வரை ஒவ்வொரு மண்டபமாக அறியலாம். இந்நூலில் நாம் கோபுரங்கள் தொடங்கி கருவறை வரையிலும் கோயில் அமைந்துள்ள விதம் பற்றி காணலாம்.

**கோபுரங்கள் :**

கோபுரங்கள் கோயிலின் நுழைவு வாயில்களாகும். தூரத்தில் இருந்தே கோயிலை அடையாளங்காணவும் தொலைவிலிருந்தபடியே கோயிலை நோக்கித் தொழவும் இக்கோபுரங்கள் பயன்படுகின்றன.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பார்கள். மீனாட்சியம்மன் கோயில் கோபுரங்களில் சிவமகாபுராணம், திருவிளையாடற்புராணம், இலிங்கபுராணம், தேவி மகாத்மியம் முதலிய புராணங்கள் தொடர்பான சிற்பங்கள் இடம் பெற்றிருக்கின்றன. இக் கோயிலில் மொத்தம் 12 கோபுரங்கள் உள்ளன.

மீனாட்சிஅம்மன் கோயில் கோபுரங்களை பெரியபுராணம் பாடியசேக்கிழார்,

"மின்பொலி விசும்பை அளக்கும்
நீள் கொடி சூழ் வியன் நெடும் கோபுரம்"

என்றும்

"நீடுயர் செல்வ கோபுரம்"

என்றும் பாடுகிறார்.

**வெளிக்கோபுரங்கள் :**

கோயிலின் வெளி மதிலில் நான்கு திசைகளிலும் நான்கு கோபுரங்கள் உள்ளன. இவை வெளிக்கோபுரங்கள் என்றழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு கோபுரமும் 60 அடி உயரமுள்ள ஒரே கல்லினால் செய்யப்பட்ட வாயிற் தூணோடு தொடங்கிப் படிப்படியாக பல அடுக்குகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. நான்கு வாயில்களும் உயர்ந்த உறுதியான கதவுகளைக் கொண்டுள்ளன.

இக்கோபுரங்களின் அடிப்பகுதி கருங்கல்லினால் ஆனது. இவற்றின் உபபீடம், அதிட்டானம், பாதம் ஆகிய பகுதிகளில் காணப்படும் சிற்ப வேலைப்பாடுகள் அழகுற அமைந்துள்ளன. கருங்கல் பகுதிக்கு மேலுள்ள சிகரப்பகுதி பல நிலைகளைக் கொண்டுள்ளது. இப்பகுதி செங்கல், சாந்து இவற்றால் ஆனது. மேல்நிலைகளில் சுதைச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வெளிக்கோபுரங்கள் நான்கும் அவை அமைந்துள்ள திசைகளைக் கொண்டே கிழக்குக் கோபுரம், மேற்குக் கோபுரம், தெற்குக்கோபுரம், வடக்குக்கோபுரம் என்று அழைக்கப்படுகின்றன.

**கிழக்குக் கோபுரம் :**

சுவாமி சந்நதிக்கு நேர் எதிரே கிழக்கு ஆடி வீதியைச் சார்ந்து அமைந்துள்ள கிழக்கு வாயிலின் மேல் அமையப் பெற்றுள்ளது. நான்கு கோபுரங்களிலும் இதுவே மிகவும் பழமையானதாகும். இதற்கு சுந்தர பாண்டியன் கோபுரம் என்ற மற்றொரு பெயரும் உண்டு.

இது கி.பி. 1216 முதல் 1238 வரை ஆட்சி செய்த மாறவர்மன் சுந்தரபாண்டியனால் கட்டப்பட்டது என்றும் கி.பி. 1251 முதல் 1278 வரை அரசாண்ட சடையவர்மன் சுந்தர பாண்டியனால் கட்டப்பட்டது என்றும் இருவேறு கருத்துக்கள் உள்ளன.

இது 153 அடி உயரம் கொண்டது. இதன் அடித்தள நீளம் 111 அடி, அகலம் 65 அடி. கிழக்குக் கோபுரம் 1011 சுதைகளுடன் ஒன்பது நிலைகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

**தெற்குக் கோபுரம் :**

விசுவநாத நாயக்கர் காலத்தில் கி.பி. 1559 – இல் இக்கோபுரம் திருச்சி நகரைச் சேர்ந்த சிராமலை செவ்வந்தி மூர்த்திச் செட்டியார் என்பவரால் கட்டப்பட்டது. நான்கு கோபுரங்களிலும் மிக உயரமானது. இக்கோபுரத்தின் உயரம் 160 அடி. அடித்தளத்தின் நீளம் 108 அடி, அகலம் 67 அடி.

ஒன்பது நிலைகளைக் கொண்டு அமைந்துள்ள இதில் புராணக்கதைகளை விளக்கும் 1511 சுதைச் சிற்பங்கள் உள்ளன. கட்டுமானத்தின் போது இவை அமைக்கப்படவில்லை. பிற்காலத்தில்தான் அமைக்கப்பட்டது என்ற செய்தியை கி.பி. 1798 ஆம் ஆண்டு கல்வெட்டு எடுத்தியம்புகிறது.

**மேற்குக்கோபுரம் :**

கி.பி. 1315 முதல் 1347 வரை மதுரையை ஆண்ட சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் என்ற மன்னன் இதனைக் கட்டினான். கி.பி. 1323 இல் கட்டி முடிக்கப்பெற்றது. ஒன்பது நிலைகளைக் கொண்டது. இதன் உயரம் 154.6 அடி, அடித்தள நீளம் 101 அடி அகலம் 63.6 அடி. இதில் 1124 சுதைச்சிற்பங்கள் உள்ளன. சித்திரை வீதியிலிருந்து வாகனங்களில் பொருட்களைக் கோயிலுக்குள் கொண்டு வர ஏதுவாக படிகள் இல்லாதபடி இக்கோபுரவாயில் அமைக்கப்பட்டுள்ளது.

**வடக்குக் கோபுரம் :**

இக்கோபுரத்தின் கட்டுமானப் பணியை முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி. 1564–72) தொடங்கினார். இதனை கி.பி. 1878 இல் வயிநாகரம் செட்டியார் நிறைவு செய்தார். ஒன்பது நிலைகளைக் கொண்டு

அமைந்துள்ளது இதன் உயரம் 152 அடி அடித்தளத்தின் நீளம் 111.6 அடி, அகலம் 66.6 அடி.

வடக்குக் கோபுரத்திற்கு 'மொட்டைக்கோபுரம்' என்ற மற்றொரு பெயரும் உண்டு. இதற்கு இரண்டு காரணங்கள் கூறுவர். அவையாவன:

1. மற்றைய கோபுரங்களோடு ஒப்பிடுகையில் இதில் மிகக்குறைந்த அளவே சுதைச் சிற்பங்கள் (404 சிற்பங்கள்) உள்ளன.

2. இக்கோபுரத்தின் கட்டுமானப்பணி நீண்டகாலமாக முற்றுப் பெறாமல் இருந்திருக்கிறது.

இக்கோபுர வாயிலின் மேற்குப் பக்கம் முனியாண்டி கோயில் உள்ளது. இது ஒரு நாட்டுப்புறக் காவல் தெய்வமாகும்.

இக்கோபுரத்தைக் கட்டிய கிருஷ்ணப்ப நாயக்கர் மீனாட்சியம்மன் கோயிலில் மேலும் பல திருப்பணிகளைச் செய்துள்ளார். சுந்தரேசுவரர் சன்னதி முன்னுள்ள கம்பத்தடி மண்டபம், இதனருகில் அமைந்துள்ள திருஞானசம்பந்தர் மண்டபம், இரண்டாம் பிரகாரச் சுற்று மண்டபம், அம்மன் கோயில் நடுப்பிரகார மண்டபம் ஆகியவை இம்மன்னர் கட்டுவித்ததேயாம், இவரது ஆட்சிகாலத்தில் தான் அரியநாத முதலியார் கி.பி. 1570 இல் ஆயிரங்கால் மண்டபத்தைக் கட்டினார்.

**இராய கோபுரம் :**

மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் நான்கு புறக் கோபுரங்கள் தவிர இத்துடன் தொடர்புடைய கோபுரம் புதுமண்டபத்திற்குக் கிழக்கே ஒன்றுண்டு. இக்கோபுரம் திருமலைநாயக்கரால் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு கட்டத் துவங்கப்பட்டது. இதன் அடித்தளம் 174 அடி நீளமும் 117 அடி அகலமும் கொண்டது. மற்றைய நான்கு கோபுரங்களின் அடித்தளங்களோடு ஒப்பிடும்போது இக்கோபுரத்தின் அடித்தளம் மிக நீளமாகவும் அகலமாகவும் உள்ளது. இக்கோபுரம் 'இராய கோபுரம்' என்று

அழைக்கப்படுகிறது. ஏதோ சில காரணங்களால் இக்கோபுரம் முதல் தளத்துடன் நின்றுவிட்டது. முதல்தளத்தின் உயரம் 57 அடியாகும். இது கட்டி முடிக்கப்பட்டிருந்தால் ஏனைய நான்கு கோபுரங்களை விட உயர்ந்த கோபுரமாக திகழ்ந்திருக்கும்.

வெளிக்கோபுரங்கள் தவிர சுவாமி கோயிலில் 5 சிறிய கோபுரங்களும், அம்மன் கோயிலில் 3 சிறிய கோபுரங்களும், அம்மனுக்கும், சுவாமிக்கும் தனித்தனியாக இரண்டு தங்க விமானங்களும் உள்ளன.

## சுவாமிகோயில் கோபுரங்கள்

**சந்நிதிக்கோபுரம் (கிழக்கு) :**

இக்கோபுரத்தை கி.பி. 1168 இல் குலசேகர பாண்டியன் கட்டினான். இது மூன்று நிலைகளைக் கொண்டது. சந்நிதி கோபுரம் கம்பத்தடி மண்டபத்திலிருந்து முதற் பிரகாரத்திற்குள் நுழையும் இடத்தில் அமைந்துள்ளது. இது 41 அடி உயரமும் அடித்தளத்தில் 31 அடி நீளமும் 18 அடி அகலமும் கொண்டு விளங்குகிறது. இதில் 36 சுதைச்சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

**நாயக்க கோபுரம் (கிழக்கு) :**

கம்பத்தடி மண்டபத்திலிருந்து கிழக்குப் பக்கம் வரும்பொழுது அங்கே ஐந்து நிலைக்கோபுரம் உள்ளது. இது கோயிலின் நேர்கிழக்கே உள்ள சுந்தரபாண்டியன் கோபுரத்திற்கு நேரே உள்ளதாகும். இக்கோபுரம் 66 அடி உயரம் கொண்டது. இதன் அடித்தளம் 42 அடி நீளமும் 33 அடி அகலமும் கொண்டது. இதில் 280 சுதைச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இது 14 ஆம் நூற்றாண்டிட வசுவப்பர் என்பவரால் கி.பி. 1372 இல் கட்டப்பட்டதாகும்.

**நடுக்கட்டு கோபுரம் :**

திருச்சி சிராமலை செவ்வந்தி மூர்த்திச் செட்டியாரால் கி.பி. 1559



அம்மன் தங்க விமானம்




சுவாமி தங்க விமானம்

இல் கட்டப்பட்டது இக்கோபுரம். இதன் உயரம் 69 அடி, அடித்தள நீளம் 44 அடி, அகலம் 33 அடி, இதில் 112 சுதைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. (சித்திரை வீதியில் உள்ள தெற்கு கோபுரத்தையும் சிராமலை செவ்வந்தி மூர்த்திச் செட்டியார்தான் கட்டினார்) இக்கோபுரம் முக்குறுணி விநாயகர் சந்நிதிக்கு எதிரே சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரத்தையும் அம்மன் கோயில் இரண்டாம் பிரகாரத்தையும் இணைக்கும் விதமாக அமைந்துள்ளது.

**பலகைக் கோபுரம் :**

இக்கோபுரத்தை கி.பி. 1374 இல் மல்லப்பன் என்பவர் கட்டினார். இது சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரத்தின் மேற்குப்பக்கம் அமைந்துள்ள ஐந்து நிலை கொண்ட கோபுரம். இதன் உயரம் 72 அடி, இதன் அடித்தளம் 48 அடி நீளமும், 31 அடி அகலமும் கொண்டது. இதில் 340 சுதை சிற்பங்கள் உள்ளன.

**இடபக்குறி கோபுரம் :**

இது இடபக்குறி இலச்சினையுடன் கட்டப்பட்டுள்ளதால் இப்பெயர் பெற்றுள்ளது. இது ஐந்து நிலைகளை உடையது. வடக்கு பிரகாரத்தில் உள்ளது. இது 71 அடி உயரமும், அடித்தளம் 40 அடி நீளமும் 34 அடி அகலமும் கொண்டுள்ளது. இது 184 சுதைச் சிற்பங்களைக் கொண்டுள்ளது.

இதனை செவ்வந்தி மூர்த்தி செட்டியாரின் மகன் செவ்வந்தி வேலப்பச் செட்டியார் கி.பி. 1560 இல் கட்டினார்.

**கருவறை விமானம் : (சுவாமி)**

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் குலசேகர பாண்டியன் கருவறை, அர்த்த மண்டபம் முதலிய பகுதிகளைக் கட்டினான் என்றாலும் அவை நமக்குக் கிடைக்கவில்லை. இன்றைக்கு காணப்படும் கருவறை, அர்த்த மண்டபம் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டவை. கட்டியவர் யார் எனத் தெரியவில்லை.

கருவறையின் நான்கு புறமும், பக்கத்திற்கு இரண்டு என எட்டு யானைகள் இவ்விமானத்தைக் தாங்குவதாகவும் இவ்விமானம் இந்திரனால் தேவலோகத்திலிருந்து கொண்டு வரப்பட்டது என்றும் திருவிளையாடற்புராணம் கூறுகிறது. எனவே இவ்விமானம் 'இந்திரவிமானம்' என்றழைக்கப்படுகிறது. இவ்விமானத்திற்கு பொன் பூசியவர் கி.பி. 1671 ஆம் ஆண்டில் மதுரையை ஆண்ட விசுவநாத நாயக்கராவார். கருவறையின் கூரையின் மேற்பகுதியில் திரிதள விமானம் அமைந்துள்ளது. இம்மேற்பகுதி முழுவதும் தங்கத்தினாலான தகடு பரவப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. கலசம் தொடங்கி மேலிருந்து கீழாக முதல் நிலைத்தளம் வரையில் மட்டுமே பொன் வேயப்பட்டுள்ளது.

## அம்மன் கோயில் கோபுரங்கள்

**சித்திரக்கோபுரம் :**

இக்கோபுரம் கி.பி. 1569 இல் அரியநாத முதலியாரின் மகன் காளத்தியப்ப முதலியாரால் கட்டப்பட்டது. ஏழுநிலைகளையுடையது. இது மீனாட்சி நாயக்கர் மண்டபத்தினின்றும் கோயிலுக்குள் நுழையும் வாயிலில் அமைந்துள்ளது. அம்மன் கோயில் கோபுரங்களில் மிக உயரமானது. இதன் உயரம் 117 அடி, இது 38 அடி அகலமும், 78 அடி நீளமும் கொண்ட அடித்தளத்தினைக் கொண்டது. இக்கோபுரத்தில் 730 சுதையிலான சிற்பங்கள் இடம் பெற்றிருப்பதால் சித்திரகோபுரம் எனப் பெயர் பெற்றது.

**சந்நிதிக் கோபுரம் (கிழக்கு) :**

இக்கோபுரம் 40 அடி உயரம் கொண்டு மூன்று அடுக்குகளாக உள்ளது. கிளிக்கூண்டு மண்டபத்தில் இருந்து அம்மன் கோயிலுக்குள் செல்லும் வாயிலில் அமைந்துள்ள இக்கோபுரத்தினை கி.பி. 1227 இல் வேம்பத்தூர் ஆனந்த தாண்டவநம்பி கட்டினார். எனவே இது 'வேம்பத்தூரார் கோபுரம்' என்றும் அழைக்கப்படுகின்றது. இதில் 496 சுதைச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அடிமட்டம் 27 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்டது.

**கடகக்கோபுரம் :**

வீரத்தும்மசி என்பவர் கி.பி. 1570 இல் இதனைக் கட்டினார். இதன் உயரம் 64 அடி அடிமட்டம் 50 அடி நீளமும் 28 அடி அகலமும் கொண்டது. 228 சுதைச்சிற்பங்கள் உள்ளன. இது ஐந்து நிலைகளைக் கொண்டது. இக்கோபுர வாயிலானது கி.பி. 1963 வரை பாதுகாப்பு கருதி சுவர் எழுப்பப்பெற்று மூடப்பட்டிருந்தது. 1960-63 இல் நடைபெற்ற திருப்பணியின் போது இச்சுவர் அகற்றப்பட்டு புதிதாக கதவுகளும் அமைக்கப்பட்டன.

**கருவறை விமானம் : (அம்மன்)**

மீனாட்சியம்மன் எழுந்தருளி உள்ள கருவறை சதுரக் கருவறையாக அமைந்துள்ளது. தூண்களின் மேற்பகுதியில் இடம் பெற்றுள்ள வாழைப்பூப் போதிகை நாயக்கர் காலத்துக் கலை அமைப்பில் அமைந்து இவ்விமானம் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதை உணர்த்தி நிற்கின்றது. இவ்வம்மன் கோயில் விமானம் திரிதள விமானமாக அமைந்துள்ளது. இதன் சிகரப்பகுதியில் தங்கம் போர்த்தப்பட்டு இருந்தது. தற்பொழுது 2009 ம் ஆண்டு கும்பாபிஷேக திருப்பணி நடைபெற்றபொழுது முதல்நிலை தளம் முழுவதும் தங்கத்தகடு போர்த்தப்பட்டுள்ளது.

**மூன்றாம் சுற்று பிரகாரங்கள் :**

இஸ்லாமியர் ஆட்சிகாலத்தில் மீனாட்சியம்மன் கோயில் சிதைக்கப்பட்டது. ஆலயவழிபாடு நிறுத்தப்பட்டது. தமது ஆட்சியில் சில திருப்பணிகளைச் செய்து கோயிலைத் திறந்து வைத்தார் விசுவநாத நாயக்கர். (கி.பி. 1529–1564) இவர் காலத்தில்தான் கோயிலின் இன்றைய அமைப்பு உருவாக்கப்பட்டது என்பர். மேலும் கோபுர வாயில்களை இணைத்து மிகப் பெரிய மதில்களும் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் மூன்று பிரகாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முதல் இரு சுற்றுகள் கோயிலுக்குள் சுந்தரேசுவரருக்கும், மீனாட்சியம்மைக்கும் தனித்தனியாக

அமைந்துள்ளன. மூன்றாவது திருச்சுற்று 847 அடி நீளமும் 792 அடி அகலமும் கொண்ட மதிலின் உட்புறம் அமைந்துள்ளது. இதனை ஆடிவீதி என்றழைப்பர். மதிலுக்கு வெளிப்புறமுள்ள பகுதி சித்திரை வீதி என்றழைக்கப்படுகிறது. ஆடிவீதி, சுவாமிகோயில், அம்மன் கோயில் இரண்டையும் ஒருங்கே வலம் வருவதற்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது. கற்கள் பதிக்கப்பட்ட இவ்வீதியில் பக்தர்கள் ஆடிக் கொண்டே வந்தனர் என்பதால் இப்பெயர் பெற்றதாகவும் கூறுவர். இப்பிரகாரத்தில் தங்கத்தேர் சுற்றிவருவது வழக்கம்.

### தெற்கு ஆடி வீதி :

இவ்வீதியில் கோயில் நூல் நிலையம், தேவாரப் பாடசாலை, திருப்புகழ்சபை, கோயில் ஊழியர் சங்கம், தெய்வநெறிக்கழகம், பன்னிரு திருமுறை மன்றம், தண்டபாணித் திருப்புகழ்சபை, கோயில் இறைபணியாளர் அலுவலகம், கோயில் நிர்வாக அலுவலகம் ஆகியன செயல்பட்டு வருகின்றன.

### மேற்கு ஆடி வீதி :

இவ்வீதியில் கோசாலை உள்ளது. இங்கு மக்களால் தானமாக வழங்கப்பட்ட பசுக்கள் பராமரிக்கப்படுகின்றன. சிவகங்கை தேவஸ்தான அலுவலகமும் இதன் வடபகுதியில் இயங்கி வருகின்றது.

### வடக்கு ஆடி வீதி :

வடமேற்கு மூலையில் இவ்வீதியில் திருப்புகழ் மண்டபம் உள்ளது. வடக்கு கோபுரத்தை ஒட்டி இரண்டு பக்கங்களிலும் இசைத்தூண்கள் உள்ளன. இதில் ஒவ்வொரு தூணும் தட்டும்போது ஒவ்வொரு இசையை வெளிப்படுத்தும். ஆயிரங்கால் மண்டபத்திலும் இது போன்ற தூண்கள் உள்ளன. திருவள்ளுவர் கழகம், யஜூர் வேதபாடசாலை, சிருங்கேரி சங்கரமடம், சமரசசன்மார்க்க சபை, (வாரியார் சுவாமிகளால் 9–6–1987 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது), மதுரை மாவட்ட நாதஸ்வரதவில் சங்கம், ஆதிசிவாச்சாரியார் நலச்சங்கம், ஆகியவை இங்குதான் உள்ளது.

இதனருகே வலம்வரும் விதமாக நர்த்தனவினாயகர், நாகதம்பிரான், காளிங்கர், சிற்பங்கள் அரசு, வேம்பு மரத்தடியில் அமைந்துள்ளன

**கிழக்கு ஆடி வீதி :**

இவ்வீதியின் தென் பகுதியில் வன்னிமரத்தடி விநாயகர் கோயில் உள்ளது. இங்கே விநாயகர் முருகன், சொக்கநாதருடன் அமர்ந்த நிலையில் உள்ளார். இங்கே ஒன்பது விருட்சங்கள் உள்ளன. இவற்றை சுற்றி வந்தால் நவக்கிரகங்களைச் சுற்றி வந்தபலன் உண்டு என்று நம்பப்படுகிறது. (நாவல் மரம், அரசமரம், வேப்பமரம், வன்னிமரம், வில்வமரம், நெல்லிமரம், மந்தாரைமரம், அத்திமரம், பூவரசு மரம்)

இவ்வீதியின் வடபக்கத்தில் தான் 16 கால் மண்டபம் உள்ளது. இதனை 'தட்டுச்சுற்று மண்டபம்' என்று கூறுவர். இது கி.பி. 1772 ஆம் ஆண்டு வேங்கடேசுவர முதலியாரால் கட்டப்பெற்றது. இம்மண்டபத்தின் விதானத்தில் நரிபரியாக்கிய கதை, பரி நரியானகதை முதலிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

**முகப்பு வாயில் :**

அம்மன் கோயிலுக்கு நேரே முகப்பு வாசல் அமைக்கப்பட்டுள்ளது. இது 25 அடி உயரமும் 18 அடி அகலமும் கொண்டுள்ளது. இதில் மேற்குப்பகுதியில் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணக் காட்சியும் வலதுபுறம் விநாயகர், இடதுபுறம் சுப்ரமணியர் ஆகியோரது சிற்பங்களும் உள்ளன. இந்நுழைவு வாயில் 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டதாகும். இதன் வழியாக நுழைந்தவுடன் காணப்படுவது அட்டசக்தி மண்டபம் ஆகும்.

**அட்டசக்தி மண்டபம் :**

இம்மண்டபத்தில் எட்டு சக்திகளின் திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளன. தென்புறத்தில்

கௌமாரி

ரௌத்ரி

வைஷ்ணவி

மகாலெட்சுமி

வடிவங்களும்

வடபுறத்தில்

எக்ஞூநூரணி

சாமளை

மகேசுவரி

மனோன்மணி

உருவங்களும் தனித்தனித் துண்களில் அழகுற அமைக்கப் பெற்றுள்ளன.

மேலும் இம்மண்டபத்தில் மீனாட்சியம்மையின் வரலாற்றைச் சித்தரிக்கும் சுதைச் சிற்பங்கள் ஓவியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் ஓர் ஒவியம் மகாத்மா காந்தி மீனாட்சியம்மையை வணங்குவது போல வரையப்பட்டுள்ளது. மண்டபத்தின் உள்ளே நுழைவு வாயிலின் இருபுறமும் வல்லப கணபதியும், சண்முகரும் எழுந்தருளி உள்ளனர். மேலும் மீனாட்சியம்மையின் கருவறையை நோக்கி சைவசமயக் குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் உருவங்களும், மீனாட்சியம்மையின் உருவமும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இரண்டு துவார பாலகியர் சிற்பங்களும், இரண்டு சாமரதாரிகளது சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன.

அரைவட்ட வடிவ வளைவு முகடு போன்ற மேற்கூரை கொண்ட இதன் நீளம் 46 அடி, அகலம் 18 அடி, இதனை கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் (1623–1659) திருமலை நாயக்கரின் பட்டத்து தேவியரான உருத்ரபதியம்மையும், தோளியம்மையும் கட்டினார்கள்.

**வேடமண்டபம் :**

அட்டசக்தி மண்டபத்தை அடுத்து வேட மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் இருபுறமும் 6 அடி உயரம் கொண்ட வேடுவச்சி மற்றும்

வேடுவர் சிலைகள் உள்ளன. இவ்விரண்டும் ஒரு அந்தணனுக்கு மாபாதகம் தீர்த்தருளிய அடையாளங்களாம்.

**மீனாட்சி நாயக்கர் மண்டபம் :**

வேட மண்டபத்தை அடுத்து மீனாட்சி நாயக்கர் மண்டபம் உள்ளது. இதனைக் கட்டியவர் மீனாட்சி நாயக்கர் (விசயரங்க சொக்கநாத நாயக்கரின் பிரதானி) இவர் பெயராலேயே இது வழங்கப்படுகிறது. இது 160 அடி நீளமும் 110 அடி அகலமும் கொண்டது. இம்மண்டபத்தில் ஆறுவரிசைகளில் 110 தூண்கள் 22 அடி உயரத்துடன் இடம்பெற்றுள்ளன. இவை நாயக்கர்கால கலைப்பாணியில் மேற்பகுதியில் சிம்மங்களுடன் அமைந்துள்ளன. இதில் பூக்கடைகளும், வேறுபல கடைகளும் உள்ளன.

இம்மண்டபத்தை அடுத்து சித்திரக் கோபுரம் அமைந்துள்ளது. இதன் வாயிலில் திருவாட்சி அமைக்கப்பட்டுள்ளது. இத்திருவாட்சி 25 அடி உயரத்துடன் 1008 எண்ணெய் விளக்குகளைக் கொண்டு விளங்குகிறது. இதனை மருது சகோதரர்கள் இக்கோயிலுக்கு வழங்கி உள்ளனர். இன்றும் சிவகங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்களால் கட்டளைகள் நிறுவி அதன்படி இவ்விளக்குகள் ஏற்றப்பட்டு வருகின்றன.

**இருட்டு மண்டபம் :**

சித்திரக் கோபுரத்தின் வழியே உள்ளே சென்றால் இருட்டு மண்டபம் உள்ளது. இது கி.பி. 1613 இல் கடந்தை முதலியார் என்பவரால் கட்டப்பட்டது. எனவே இது அவர் பெயராலேயே முதலிப்பிள்ளை மண்டபம் என்றும் அழைக்கப்படுவதுண்டு. கி.பி. 1960 – 63 ஆம் ஆண்டுகளில் நடந்த திருப்பணியின் போது இதன் வடப்பக்கச் சுவரை இடித்து சன்னல்கள் அமைக்கப்பெற்றன. அதுவரை இம்மண்டபம் இருட்டாகவே இருந்ததால் இருட்டுமண்டபம் எனப் பெயர் பெற்றது.

பிட்சாடனர் கதையைச் சித்தரிக்கும் சிற்பங்கள் இங்கு இடம் பெற்றுள்ளன. மேலும் நான்கு யாளிகளும் இரண்டு தாருகாவனத்து ரிசிகளும் ஒரு தூணில் சிவபெருமானுக்கு பிச்சையிட்ட ரிசிபத்தினி

அன்னக்கரண்டியுடனும் அதற்கு எதிர்பக்கத் தூணில் மோகினியின் சிற்பமும் அடுத்ததாகப் பிட்சாடனர் உருவமும் அமைக்கப் பட்டுள்ளன. மோகினியின் அழகில் மயங்கிய ரிசிகள் அருகே காட்டப்பட்டுள்ளனர். இவையன்றி இம்மண்டபத்தில் நர்த்தன கணபதியும், சுப்ரமண்யர் சிற்பங்களும் மண்டபத்தைக் கட்டிய கடந்தை முதலியாரின் சிற்பமும் இடம்பெற்றுள்ளன.

**பொற்றாமரைக்குளம் :**

இருட்டு மண்டபம் கடந்து உள்ளே சென்றால் மிகச் சிறப்பு வாய்ந்த தீர்த்தமாகச் சொல்லப்படுகின்ற பொற்றாமரைக் குளம் உள்ளது. இதன் நான்கு புறமும் தூண்களுடன் கூடிய பிரகாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குளத்தின் வடக்குப்புறம் அம்மன் சந்நிதியை நோக்கியுள்ள பிரகாரத்தையும் படிக்கட்டுகளையும் விசுவநாத நாயக்கர் ஆட்சியில் கி.பி. 1562 – ஆம் ஆண்டில் பெருமாள் என்பவர் கட்டினார்.

கிழக்குப்பக்கம் உள்ள பிரகாரமும் படிக்கட்டுகளும் வீரப்பநாயக்கரது ஆட்சிகாலத்தில் கி.பி. 1573 ஆம் ஆண்டில் குப்பையாண்டி என்பவரால் கட்டப்பட்டது. இப்பிரகாரத்தின் தென்பகுதி நோக்கி செல்லும்போது அங்குள்ளத் தூண்களில் 10 ஆவது தூணின் அருகில் சதுரவடிவில் மலர் போன்ற கல் ஒன்று பதிக்கப்பட்டுள்ளது. இக்கல்லில் நின்று மேற்கு நோக்கிப் பார்த்தால் தங்கத்தினால் ஆன அம்பிகையின் விமானமும் வடமேற்கே பார்த்தால் சொக்க நாத பெருமானின் தங்க விமானமும் கண்டு தரிசனம் செய்யலாம்.

தெற்குப்பக்கம் உள்ள பிரகாரமும் படிக்கட்டுகளும் வீரப்ப நாயக்கரது ஆட்சியில் 1578 ஆம் ஆண்டு 'அப்பன்பிள்ளை' என்பவரால் கட்டப்பட்டது. இப்பிரகார சுவற்றில் திருவள்ளுவர் இயற்றிய 1330 குறட்பாக்களும், சிவஞான போதம், அபிராமி அந்தாதி, மதுரைக் கோயிலைப் பற்றிய தேவாரப்பதிகங்கள் ஆகியன சலவைக்கற்களில் பதிக்கப்பட்டுள்ளன. இது 22–4–1956 இல் ஸ்ரீலஸ்ரீகாசிவாசி அருள்நந்தித்

தம்பிரான் சுவாமிகள், அதிபர் காசித்திருமடம் திருப்பனந்தாள் அவர்களின் பொருளுதவியுடன் மதுரை சைவசித்தாந்த சபையினரால் பதிக்கப் பெற்றுள்ளது.

இப்பொற்றாமரைக் குளம் இந்திரன் பழிதீர்த்தது, வெள்ளை யானையின் சாபம் தீர்த்தது, நாரைக்கு முக்தி கொடுத்தது, தருமிக்கு பொற்கிழி அளித்தது. நக்கீரரைக் கரை ஏற்றியது, நக்கீரருக்கு இலக்கணம் உபதேசித்தது ஆகிய திருவிளையாடற் புராண நிகழ்ச்சிகள் நடந்தேறிய சிறப்புடையதாகும். மேலும் இக்குளக்கரையில்தான் இறைவன் சங்கப்பலகை தந்தது, சங்கத்தார் கலகம் தீர்த்தது, ஆகிய செயல்களை நிகழ்த்தினார்.

இக்குளத்தின் வடக்குப் பிரகாரத்தில் உள்ள தூண்களில் ஒரு சில சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இறைவனுடன் சேர்ந்து கடைச் சங்கப்புலவர்கள் 49 பேரில் இங்கு சில புலவர்களின் உருவங்களே செதுக்கப்பட்டுள்ளன. இவர்களது எழுத்தாணியும், ஏடும் காணப்படுகின்றது. இவை, “சங்கப்பலகை தந்தது”, “சங்கத்தார் கலகம் தீர்த்தது” எனும் திருவிளையாடற் புராணக் கதைகளை நினைவூட்டுகின்றன.

இப்பிரகாரத் தூண்களில் 6 அடி உயரத்தில் இரண்டு சிற்பங்கள் உள்ளன. இவை மதுரை நகரையும் கோயிலையும் அமைத்ததாகக் கருதப்படும் **குலசேகர பாண்டியனாகவும்** கடம்பவனத்தில் சிவலிங்கத்தைக் கண்டு பாண்டியனுக்குரைத்த **தனஞ்செயன்னாகவும்** இருக்கலாம் என கருதப்படுகின்றது.

பொற்றாமரைக் குளத்தின் வடக்குப் பிரகாரத்திலும், கிழக்குப்பிரகாரத்திலும் திருவிளையாடற்புராணக் கதைகளை சித்தரிக்கும் ஓவியங்கள் நாயக்கர் காலப்பாணியில் தீட்டப்பட்டிருந்தன. இவற்றில் பெரும்பாலானவை அழிந்து விட்டன. எஞ்சிய ஒரே ஒரு ஓவியத்தில் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணத்தை இராணி மங்கம்மாள் கண்டு களிப்பதாக அமைந்துள்ளது.

இக்குளத்தின் தெற்குப் பிரகாரத்தின் மேற்கு முனையில் விபூதிப் பிள்ளையார் எழுந்தருளியுள்ளார். இவ்விநாயகரை மக்கள் தாங்களே விபூதியால் அபிஷேகம் செய்து வழிபடுகின்றனர். மேற்குப் பிரகாரத்தின் மேற்குப் பகுதியில் காசிவிசுவநாதர் விசாலாட்சி சந்நிதியும், செவ்வந்தீசுவரர் சந்நிதியும், ஸ்தலத்திற்குரிய சித்திவிநாயகர் கூடற்குமாரர் சந்நிதிகளும் அமைந்துள்ளன. மேலும் இப்பிரகாரத்தில்தான் ஊஞ்சல் மண்டபம், கிளிக்கூட்டு மண்டபம் ஆகிய இரு மண்டபங்களும் உள்ளன.

**ஊஞ்சல் மண்டபம் :**

இது ஆறு தூண்களைக் கொண்ட ஒரு சிறு மண்டபம். இது கி.பி. 1562 ஆம் ஆண்டு விசுவநாத நாயக்கர் காலத்தில் அம்பலச்செட்டி என்பவரால் கட்டப்பட்டது. வெள்ளிக்கிழமை தோறும் இம்மண்டபத்தில் உள்ள ஊஞ்சலில் மீனாட்சி சுந்தரேசுவரரின் உற்சவ மூர்த்திகளை அமர்த்தி ஊஞ்சலாட்டுவர். இந்த ஊஞ்சல் மேடை கண்ணாடி பதிக்கப்பட்டு 1985 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக இருந்த இராம வீரப்பன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இம்மண்டபத்திற்கு அருகில் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் மாதிரி அமைப்பு வைக்கப்பட்டுள்ளது. ஊஞ்சல் மண்டபத்தின் விதானத்தில் இராணி மங்கம்மாள் ஓவியம் இடம் பெற்றுள்ளது.

இம்மண்டபத்தின் எதிரில் பொற்றாமரைக் குளத்தில் சற்றே கீழ்நோக்கிச் சென்றால் அங்கு ஒரு சிறு மண்டபம் இடம்பெற்றுள்ளது. இதனை கி.பி. 1563 இல் விசுவநாத நாயக்கர் காலத்தில் செட்டியப்ப நாயக்கர் என்பவர் கட்டுவித்தார்.

இங்குதான் சங்கப்பலகை தந்தது, நக்கீரர் மயக்கம் தெளிந்தது போன்ற திருவிளையாடல் நிகழ்ச்சிகள் இடம் பெற்றது என்பது கர்ணப்பரம்பரை செய்தியாகும்.

**கிளிக்கூட்டு மண்டபம் :**

இது ஊஞ்சல் மண்டபத்திற்கு வடக்கே அமைந்துள்ளது. மீனாட்சியம்மையின் திருக்கரத்தில் இடம் பெற்றிருப்பதால் அம்மனுக்குப் பிடித்த கிளிகள் இம்மண்டபத்தில் வளர்க்கப்பட்டன. தற்பொழுது கிளிக்கூண்டு அகற்றப்பட்டாலும் இன்றும் கிளிக்கூட்டு மண்டபம் என்றே வழங்கப்பெறுகிறது.

'சங்கிலி மண்டபம்' என்ற மற்றொரு பெயரும் இதற்கு உண்டு. முன்பெல்லாம் திருவிழாக் காலங்களில் இங்கே கோலாட்டம் நடைபெறும். அப்போது பெண்கள் வண்ணக்கயிறுகளைத் தொங்கவிட்டு அக்கயிறுகளை பிடித்துக் கொண்டு பின்னிப்பின்னி ஆடும்பொழுது பார்ப்பதற்கு சங்கிலி போல் காணப்படும். எனவே இம்மண்டபம் சங்கிலி மண்டபம் என்று பெயர் பெற்றது.

இம்மண்டபத்தில் 28 தூண்கள் உள்ளன. இவை அனைத்திலும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சில தூண்களில் 7 அடி உயரத்துடன் சிற்பங்கள் அமைந்துள்ளன. இத்தூண்களில் பஞ்ச பாண்டவர்களான தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோரது உருவங்களும் வாலி, சுக்ரீவன், வேடன் மற்றும் பெண் உருவங்களும் இடம்பெற்றுள்ளன. சிற்பத்தூண்களுக்கு இடையே யாளித் தூண்களும் உள்ளன. மேலும் இம்மண்டபத்தின் விதானத்திற்கு கீழ் உள்ள சுற்றுவிட்டத்தில் (நாடகச்சட்டம்) அறுபத்தி நான்கு திருவிளையாடல்களும் சிறுஅளவில் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இங்கு மடப்பள்ளிக்குச் செல்லும் நுழைவுவாயில் அமைந்துள்ளது. மடப்பள்ளி நுழைவு வாயிலுக்கருகில் பூக்கட்டும் இடம் உள்ளது. அதனருகில் 63 நாயன்மார்களில் ஒருவரான மூர்த்தி நாயனார் உரைத்த சந்தனக் கல் உள்ளது. இவர் இறைவனுக்கு சந்தனம் அரைத்துக் கொடுக்கும் திருப்பணி செய்து வந்தார். ஒரு சமயம் சந்தனக்கட்டை கிடைக்கவில்லை. இவர் தன் கைகளையே சந்தனக்கல்லில் உரைத்தார்.

இறைவன் தோன்றி இவருக்கு நாட்டின் மன்னனாகும் வரத்தை அருளினார்.

கிளிக்கூண்டு மண்டபம் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கரின் மூத்தமகனும் மன்னர் திருமலை நாயக்கரின் அண்ணனுமான முதலாம் முத்துவீரப்பர் ஆட்சிகாலத்தில் (கி.பி. 1609–1623) அபிசேக பண்டாரம் என்பவரால் கி.பி. 1623 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இவரது சிற்பம் சிறிய அளவில் சுவாமி சந்நிதிக்கருகில் உள்ள அனுக்ஞை விநாயகரின் முன் உள்ள தூணில் உள்ளது.

இங்கிருந்து அம்மன் சந்நிதிக்குள் செல்லும் நுழைவுவாயிலின் அருகில் சித்திவிநாயகர் சந்நிதியும் முருகனது சந்நிதியும் இடம்பெற்றுள்ளன. அம்மன் கோயிலுக்கு இங்கிருந்து வேம்பத்தூரார் கோபுரம் வழியாக செல்லவேண்டும்.

**இரண்டாம் சுற்றுப்பிரகாரம் (அம்மன்) :**

கிளிக்கட்டு மண்டபத்திலிருந்து வேம்பத்தூரார் கோபுரம் வழியாக உள்ளே சென்றால் அம்மன் கோயில் இரண்டாம் பிரகாரம் அமைந்துள்ளது. இப்பிரகாரம் கி.பி. 1563 ஆம் ஆண்டு செட்டியப்ப நாயக்கரால் கட்டப்பட்டது. இப்பிரகாரத்தில் திருமலை விநாயகர் சன்னதி, திருமலை சுப்ரமண்யர் சன்னதி, கொடிமரம், திருமலை நாயக்கர்சிலை, கொலுமண்டபம், விநாயகர் சன்னதி, அம்மன்கோயில் மேற்கு கோபுரம், கூடலிங்கர் சன்னதி, கூடற்குமாரர் சன்னதி, ஆறுகால் பீட மண்டபம் ஆகியன இடம் பெற்றுள்ளன.

**கொடிமரம் :**

அம்மன் சன்னதிக்கு நேர் எதிரே இரண்டாம் பிரகாரத்தில் இக்கொடிமரம் இடம்பெற்றுள்ளது. பெரும்பாலான கோயில்களில் பலிபீடமும், கொடிக் கம்பமும் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இங்கு கொடிக்கம்பம் இரண்டாம் பிரகாரத்திலும் பலிபீடம் கிளிக்கூட்டு மண்டபத்திலும் அமைந்துள்ளன. கி.பி. 1374–ஆம் ஆண்டில்

மல்லப்பன் என்பவரால் இக்கொடிமரம் நிறுவப்பட்டது. இதற்கு கிருஷ்ண வீரப்ப நாயக்கர் (கி.பி. 1564 – 1572) தங்கம் பூசினார். அடுத்ததாக திருமலை நாயக்கர் (கி.பி. 1623–1659) கோயிலுக்கு திருப்பணி செய்த போது அம்மன் கோவில் சுவாமி கோவில் இரண்டிலும் உள்ள கொடிக்கம்பத்திற்கு தங்கம் பூசினார்.

இப்பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் திருமலை நாயக்கரது சிலை அவரது இரு பட்டத்து ராணிகள் உருத்திராபதி அம்மை, தோளியம்மை ஆகியோரது சிலைகளுடன் அமைந்துள்ளது.

பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் இரண்டு பிள்ளையார் சிற்பங்கள் உள்ளன. ஒருவர் உச்சிஷ்ட பிள்ளையார், மற்றொருவர் கூத்தப்பிள்ளையார். இப்பிள்ளையார்களுக்கு முன்பு உள்ள இடம் கொலு மண்டபம்.

**கொலு மண்டபம்**

இந்த இரண்டாம் பிரகாரத்தின் தெற்குப்புற மண்டபத்தைத் தீத்தியப்பசெட்டி என்பவர் கி.பி. 1565 ஆம் ஆண்டு கட்டினார். புரட்டாசி மாதம் நடைபெறும் நவராத்திரி திருவிழாவின்போது ஒன்பது நாட்களும் இம்மண்டபத்தில்தான் அம்மன் கொலுவீற்றிருப்பாள். அதனால்தான் இதனை கொலுமண்டபம் என்று அழைக்கிறோம்.

**கூடற்குமாரர் கோயில்**

பிரகாரத்தின் மேற்குப்பக்கம் ஐந்துநிலைக் கோபுரம் (கடகக்கோபுரம்) உள்ளது. இப்பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் கூடலிங்கர் சன்னதியும் கிழக்கு முகமாகக் கூடற்குமாரரான முருகப்பெருமான் சன்னதியும் உள்ளது. இக்கோயிலில் அருணகிரிநாதர் இத்தலத்தில் பாடிய திருப்புகழ் பாக்கள் கல்வெட்டில் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலை இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி. 1595 – 1601) கட்டுவித்து அதில் குமாரக் கடவுளையும் பிரதிட்டை செய்தார்.

இங்கு முருகன் ஆறுமுகங்களும் பனிரெண்டு கரங்களும் கொண்டு வள்ளி, தெய்வானையுடன் காட்சியளிக்கிறார். இச்சந்நிதிக்கு முன் உள்ள தூண்களில் துவாரபாலகியர் சிற்பங்கள் உள்ளன. எனவே இங்கு ஏற்கனவே பெண் தெய்வம் இருந்து பிறகு கூடற்குமாரர் சந்நிதியாக மாற்றம் பெற்றிருக்கலாம். அருணகிரி நாதரின் திருவுருவச் சிலையும் இங்கே அமைந்துள்ளது.

அம்மன் சந்நிதியிலிருந்து சுவாமி சந்நிதிக்கு செல்வதானால் கிளிக்கூட்டு மண்டபத்திலிருந்து ஐந்து நிலை கோபுரத்தின் வழியாக மட்டுமே சுவாமி சந்நிதியின் இரண்டாம் பிரகாரத்தை அடையமுடியும். ஆனால் கி.பி. 1956 ஆம் ஆண்டில் அம்மன் சந்நிதி இரண்டாம் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் புதிய வாயில் ஒன்றை அன்றைய அறநிலையத்துறை ஆணையர் உத்தண்டராம பிள்ளை அவர்களது முயற்சியால் திறக்கப்பட்ட பின் அம்மன் சந்நிதியிலிருந்து சுவாமி சந்நிதிக்கு செல்ல இரண்டு வழிகள் ஏற்பட்டுள்ளன.

### முகப்பு மண்டபம்

அம்மன் கோயிலின் இரண்டாம் பிரகாரத்தைச் சுற்றி இந்த ஆறுகால்பீட மண்டபம் என்று சொல்லப்படும் முகப்பு மண்டபத்தின் வழியாகத்தான் அம்மன் கோயில் முதற்சுற்று பிரகாரத்திற்கு செல்லமுடியும். முகப்பு மண்டபம் சுவாமி சந்நிதியின் முன்பும் உள்ளது. நாயக்கர் ஆட்சி காலத்தில் பெரும்பாலான கோயில்களில் இத்தகு முகமண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மண்டபம் வரலாற்று சிறப்பு பெற்றது. கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் திருமலை நாயக்கர் முன்னிலையில் குமரகுருபரர் தான் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை அரங்கேற்றம் செய்தது இங்கேதான்.

ஆண்டுதோறும் சித்திரை மாதம் மீனாட்சியம்மனுக்கு நிகழ்த்தப்படும் முடிசூட்டுவிழா நிகழ்ச்சி இம்மண்டபத்தில்தான்

நடைபெறும். நாயக்க மன்னர்கள் திருச்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட காலத்திலும் கூட இம்மண்டபத்தில் தான் செங்கோல் வாங்கி ஆட்சி செலுத்தினர் என்பர்.

இம்மண்டபத்திலிருந்து உட்பிரகாரம் செல்லும் நுழைவுவாயிலில் இரண்டு துவார பாலகியர் உருவம் இடம்பெற்றுள்ளன. இவ்விரண்டு சிற்பங்களும் திருமலை நாயக்கரால் அளிக்கப்பட்டது. நுழைவுவாயிலின் இருபுறச் சுவர்களிலும் குமரகுருபரர் இயற்றிய மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் பாடல்கள் சலவைக் கற்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

**முதற்சுற்று பிரகாரம்**

அம்மன் கோயில் இரண்டாம் பிரகாரத்தின் முகப்பு மண்டபம் வழியே உள்ளே சென்றால் வருவது மகாமண்டபமாகும். அம்மன் கோயில் முதல்பிரகாரம் இம்மண்டபத்தில் தொடங்கி இதிலேயே முற்று பெறுகிறது. இம்மண்டபத்தையும், முதல் பிரகாரத்தையும் கட்டியவர் மாவலிவாணாதிராயர் என்பவராவார். கி.பி. 1452 இல் இதனைக் கட்டினார்.

மகா மண்டபத்தின் மேற்குப்புறம் அர்த்தமண்டபமும், அன்னை மீனாட்சியின் கருவறையும் அமைந்துள்ளன. முதலில் அமைக்கப்பட்டது கருவறையும், அர்த்தமண்டபமும்தான். அதன் பின்னர் அமைக்கப்பட்டதே மகாமண்டபம். இதனை அமைக்கும் போதே கருவறை மற்றும் அர்த்தமண்டபத்தின் பக்கவாட்டிலும், பின்புறமும் இடம்விட்டு அதில் பிரகாரம் இடம்பெறுவது போல் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பிரகாரத்தில் மகாமண்டபத்தின் இடப்புறம் ஒரு விநாயகரும், கருவறைக்கு செல்லும் வழியில் இரண்டு விநாயகர் உருவங்களும் தென்மேற்கு மூலையில் சிறிய இரட்டை விநாயகர் கோயிலும் வடமேற்கு மூலையில் முருகன் கோயிலும் உள்ளது மேலும் இப்பிரகாரத்தில் சண்டிகேசுவரியும் எழுந்தருளியுள்ளார். பள்ளியறையும் இப்பிரகாரத்தில்தான் உள்ளது.

அம்மன் சந்நிதியில் மக்கள் இரண்டு பக்கமாக நின்று வழிபடுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. வலது பக்கத்தில் பொது தரிசனமும் (தர்மதரிசனம்) இடது பக்கத்தில் சிறப்பு தரிசனமும் (சிறப்புக்கட்டணம்) செய்யத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இறைவன் முன் அனைவரும் சமம் என்ற தத்துவத்தை உணரும் விதத்தில் பொது மற்றும் சிறப்பு தரிசனம் செய்யும் அனைவரும் ஒரே இடத்தில் நின்று வழிபடுகின்றனர்.

**அர்த்தமண்டபம்**

இம்மண்டபம் மூலஸ்தானத்துடன் (கருவறை) சேர்ந்து முன் உள்ள மண்டபம். இங்கே பூசை நிகழ்த்தும் பட்டர்கள் வேதபாராயணம் செய்து வழிபடும் இடம். தற்போது திருக்கோயில் கும்பாபிஷேகத்திற்கு நிதி வழங்குபவர்கள், அன்னதானத்திட்டம், சிறப்பு அபிஷேகத்திற்கான கட்டணம் செலுத்துபவர்கள் இவ்விடத்தில் நின்று வழிபட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இங்கிருந்து கருவறை செல்லும் நுழைவு வாயிலில் இரண்டு பக்கமும் விநாயகர், முருகன் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

**கருவறை மண்டபம்**

இம்மண்டபத்தில் தீபாராதனை நேரங்களில் ஓதுவாமூர்த்திகள் நின்று தேவார, திருமுறைப் பாடல்கள் பாடுவார்.

**கருவறை**

மண்டபத்தின் வழியே உள்ளே நுழைந்தால் அங்கே மீனாட்சி அம்பிகையின் மூலவிக்ரகம் (மூலஸ்தான மூர்த்தி) எழில்மிகு தோற்றத்துடன் கருணையே வடிவாக சிரித்த முகத்துடன் எழுந்தருளி உள்ள கருவறை உள்ளது.

மீனாட்சியம்மை எழுந்தருளியுள்ள கருவறை சதுரக் கருவறையாக அமைந்துள்ளது. இக்கருவறையைச் சுற்றி இடம்பெறும் பிரகாரத்தின் நடைமேடை உயர்த்தப்பட்டுள்ளது. எனவே கருவறைக்கும் பிரகாரத்திற்கும் இடையே பள்ளம் காணப்படுகிறது. இப்பள்ளம் நாயக்கர்

காலத்து வசந்த மண்டபங்களில் இடம்பெறும் அமைப்பைப் போல் தோன்றுகிறது.

பிரகாரத்தின் சுவற்றில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்ப் பாக்கள் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அருகருகே மீனாட்சியம்மை வாழ்க்கைத் தொடர்பான சிற்பங்களைச் சிறிய அளவில் இடம்பெறச் செய்துள்ளனர். கருவறைப் பகுதியில் உபபீடத்துடன் கூடிய அதிட்டானம் இடம் பெற்றுள்ளது. உபபீடம் உபானம் (மறைந்துள்ளது) அலங்கரிக்கப்படாத ஜகதி கண்டம், கபோதம் எனும் உறுப்புக்களுடன் அமைந்துள்ளது. அதிட்டானம் பத்மஜகதி சலங்கையில் அலங்கரிக்கப்பட்ட விருத்த குமுதம், கண்டம், கபோதம், வேதி எனும் உறுப்புகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

சுவர்ப்பகுதியில் தூண்களின் சதுரப்பகுதி மாமல்லன் பாணியில் அமர்ந்த நிலையிலான சிம்மங்களுடன் அமைந்துள்ளன. தூண்களின் மேல்பகுதியில் இடம் பெற்றுள்ள வாழைப்பூப் போதிகை நாயக்கர் காலத்துக் கலையமைப்பில் அமைந்து இவ்விமானம் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதை உணர்த்தி நிற்கிறது. பக்கத்திற்கு ஒரு தேவகோட்டத்துடன் இரண்டு கோட்ட பஞ்சரங்கள் இடம் பெற்றுள்ளன. தேவ கோட்டங்களில் மட்டும் அம்மனது திருவுருவம் மூன்று பக்கங்களிலும் இடம் பெற்றுள்ளது. இம்மூன்று அம்மனையும் இச்சா சக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்பர். பிரஸ்தர பகுதியில் அமைந்துள்ள கபோதம், கொடுங்கை அமைப்பில் அமையாது வளைந்த கட்டை அமைப்புடன் கூடிய தாழ்வார அமைப்பில் அமைந்துள்ளது. கருவறை பத்ரம், அகாரை, கர்ணம் எனும் அமைப்பில் காணப்படுகிறது. அம்மன் கோவில் விமானம் திரிதள விமானமாக அமைந்துள்ளது. இதன் சிகரப் பகுதிக்கு தங்கமுலாம் பூசப்பட்டுள்ளது.

**மீனாட்சியம்மை திருவுருவம்**

பொதுவாக ஆண் இறையுருவங்கள் திருக்கரங்களில் அபய, வரத முத்திரைகள் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும். அவ்இறைவனுக்கு அருகே இடம் பெறும் இறைவியரது உருவங்கள் வலக்கையில்

மலர்ச்செண்டினை ஏந்தியபடியும் இடது கையைத் தொங்கவிட்ட நிலையிலும் (லோலவரஹஸ்தம்) அமைப்பர்.

தனியாக இடம் பெறும் அம்மன் கோயில்களில் இறைவியின் திருவுருவம் நின்ற நிலையிலோ, அமர்ந்த நிலையிலோ அபயவரத முத்திரை காட்டி அமைக்கப்படும். மீனாட்சியம்மையின் திருவுருவம் நின்ற கோலத்தில் இடம்பெறுகிறது. வலது திருக்கரத்தில் மலரை ஏந்தியபடியும் இடது திருக்கரம் தொங்கவிடப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன. அம்மனது வலது தோளில் பச்சைக்கிளி அமர்ந்துள்ளது. அம்மனது முடி அல்லது கிரீட அலங்காரம் நாயக்கர் காலத்துச் சிற்ப அமைப்பை ஒட்டி இடதுபக்கம் கொண்டையிட்ட நிலையில் காட்டப்பட்டுள்ளது. பச்சை நிற மரகதக்கல்லினால் ஆன அம்மனது திருவுருவம் வழக்கமான அளவை விடச் சற்று குறைந்த அளவில் குழந்தை முகத்தோடும் அருள்பொழியும் கண்களோடும் காட்சிதருகிறது. அம்மையின் அருட்கோலத்தினை

“பொங்குருச் செல்வம் கல்வி
பொருவிலா வாய்மை தூய்மை
இங்கெமக் கருள வல்ல
இணையிலா வெம்பி ராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடல்
பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை
அடிக்கம லங்கள் போற்றி”

எனப் பழைய திருவிளையாடல் குறிக்கின்றது.

**பள்ளியறை**

முதல் பிரகாரத்தின் வடக்குப் பக்கம் பள்ளியறை உள்ளது. கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் மகாமண்டபம் மற்றும் முதற்பிரகாரம் அமைத்தபோது பள்ளியறையும் அமைத்தவர் மாவலி வாணாதிராயர். இது 1960–63 இல் நடைபெற்ற திருப்பணியின் போது செப்பனிடப்பட்டு உட்புறம் சலவைக் கல் பதிக்கப்பட்டது.

இப்பள்ளியறையை ஒட்டி முதல் பிரகாரத்திலிருந்து இரண்டாம் பிரகாரம் செல்வதற்கான ஒருநுழைவுவாயில் 1960–63 இல் திறக்கப்பட்டது. பள்ளியறைச் சுவர் தங்கநிறத் தகடால் அழகு படுத்தப்பட்டுள்ளது.

**இரண்டாம் சுற்றுப் பிரகாரம் : (சுவாமி)**

அம்மன் கோயில் கிளிக்கூட்டு மண்டபத்திலிருந்து சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரத்தை அடையலாம். இதன் தென்பகுதியில் நடுக்கட்டு கோபுரத்திற்கு அருகில் சுமார் 8 அடி உயரமுள்ள முக்குறுணி விநாயகர் கோயில் உள்ளது. தெப்பக்குளத்தில் கிடைத்ததாகக் கூறப்படும் இவ்விநாயகர் அமர்ந்த நிலையில் உள்ளார். இவரை ஆண்டவிநாயகர் என்றும் அழைப்பர்.

இரண்டாம் பிரகாரத்தின் மேற்கில் பல இலிங்கங்கள் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன. இவற்றை ஏகாதச லிங்கங்கள் என வழங்குகின்றனர். இப்பிரகாரத்தின் வடமேற்கில் சங்கப்புலவர் திருக்கோயில் உள்ளது. இதில் தலைவரான நக்கீரர் முதலாக நாற்பத்தொன்பது கடைச்சங்கப் புலவர்களின் உருவச்சிலைகள் அமைந்துள்ளன.

வடக்குப் பிரகாரத்தில் சங்கப்புலவர் உலா மண்டபம் உள்ளது. மேலும் இரண்டாம் பிரகாரத்தில் மட்டும் எட்டுக் கொடிமரங்கள் உள்ளன. இவைதவிர இப்பிரகாரத்தில் மேற்கு கோபுரம், இடபக்குறி கோபுரம், மண்டபநாயகம் எனப்படும் நூற்றுக்கால் மண்டபம் ஞானசம்பந்தர் கோயில் ஆகியவை அமைந்துள்ளன.

**கல்யாண சுந்தரேசுவரர் கோயில்**

இரண்டாம் பிரகாரத்தில் வடக்குப் பிரகாரத்தை ஒட்டிக் கல்யாண சுந்தரேசுவரர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் கருவறை அர்த்தமண்டபம் மகாமண்டபம் ஆகியவற்றோடு விளங்குகிறது. கருவறையில் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாண கோலம் சிறப்பமாக இடம் பெற்றுள்ளது.

மகாமண்டபத் தூண்களில் அட்டலெட்சுமி, நரசிம்மர், சரபர், அர்த்தநாரீஸ்வரர், சங்கரநாராயணர், சொக்கர் மீனாட்சி திக்விஜயம் முதலான உருவங்கள் சுதையினால் சமீப காலத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

**நூற்றுக்கால் மண்டபம்**

இது இரண்டாம் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இம்மண்டபம் சுமார் 6 அடி உயர மேடையுடன் கட்டப்பட்டுள்ளது. இதனை கி.பி. 1526 இல் சின்னப்ப நாயக்கர் கட்டினார். இம்மண்டபத்தில் நடராசர் திருவுருவச் சிலை அமைந்துள்ளது.

தென்கிழக்கு மூலையில் நால்வர் கோயில் உள்ளது. இது கிருஷ்ண வீரப்பநாயக்கர் (கி.பி. 1564–1572) என்பவரால் கட்டப்பட்டது. இக்கோயிலில் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், கூன்பாண்டியன், ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், மூர்த்திநாயனார் ஆகியோரது சிலைகள் அமைந்துள்ளன.

**கம்பத்தடி மண்டபம்**

இரண்டாம் பிரகாரத்தின் கிழக்குப் பக்கத்தில் பிரகாரம் விரிவாக்கப்பட்டு பெரிய மண்டபமாக அமைக்கப்பட்டுள்ளது. இது கம்பத்தடி மண்டபம் என்று அழைக்கப்படுகிறது.

இம்மண்டபத்தின் தூண்களில் சிவபெருமானது 25 வடிவங்களுடன் அக்னி வீரபத்திரர், அகோர வீரபத்திரர், ஊர்த்துவ தாண்டவர், காளி ஆகிய சிற்பங்கள் உள்ளன. மேலும் நவக்கிரகக் கோயிலும் இங்குதான் அமைந்துள்ளது. முதற்பிரகாரம் செல்லும் நுழைவு வாயிலின் இருபுறத்திலும் அனுக்ஞை விநாயகரும், பழனியாண்டவரும் தணிகைக்குமாரரும், சுவாமி மலை குமரரும் இடம் பெற்றுள்ளனர்.

**நந்தி மண்டபம்**

இம்மண்டபம் கம்பத்தடி மண்டபத்தூண் சிற்பங்களுக்கு இடையே சுவாமி சந்நிதிக்கு நேர் எதிரே அமைந்துள்ளது. இந்நந்தி மண்டபம்

மிகுந்த கலை நுட்பத்துடன் செதுக்கப்பட்டுள்ளது. இதன் விதானத்திற்கு மேல் சுதைச்சிற்பங்கள் காணப்படுகின்றன.

கி.பி. 1564–ல் கிருஷ்ணவீரப்ப நாயக்கர் இம்மண்டபத்தை அமைத்தார். இம்மண்டபத்தின் நடுவே கொடிக்கம்பமும், பலி பீடமும் உள்ளன. இம்மண்டபம் நாற்கால் மண்டபம் என்றும் கிருஷ்ணவீரப்ப நாயக்கர் கட்டியதால் வீரப்பமண்டபம் என்றும் அழைக்கப்பெறுகிறது.

கி.பி. 1877 ஆம் ஆண்டு நகரத்தார் எனும் வகுப்பினர் கோயில் திருப்பணியை மேற்கொண்ட பொழுது இம்மண்டபத்தைப் புதுப்பித்துப் புதிய தூண்களை நந்தி மண்டபத்தைச் சுற்றி அமைத்து அதில் கண்ணையும் கருத்தையும் கவரும் சிவபெருமானின் வடிவங்களை வைத்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

சிவபெருமானது வடிவங்களில் சிறப்பான வடிவங்கள் 64 ஆகும். அதனுள்ளும் மிகச்சிறந்த வடிவங்கள் 25 என்பர் சிவபெருமானது 25 வடிவங்களைப் பற்றி சிவபராக்கிரமம், சிவமகாபுராணம், லிங்கபுராணம், முதலான நூல்களில் விளக்கப்பட்டுள்ளன. இந்த 25 வடிவங்கள் என்பது சதாசிவம் எனப்படும் ஐந்து (5) முகசிவபெருமானது முகங்களில் இருந்து விரிவுபட்டதாகக் கொள்ளப்படுகின்றன.

அவை,

1) ஈசானம்
2) தத்புருஷம்
3) அகோரம்
4) வாமதேவம்
5) சத்யோஜாதம்

1. **ஈசானம்** – இம்முகத்தில் இருந்து தோன்றிய ஐந்து மூர்த்தங்கள்.

1) சோமாஸ்கந்தர்
2) இடபாரூடர்

3) சந்திரசேகரர்

4) கல்யாணசுந்தரர்

5) நடராசர்

2. **தத்புருஷம்** – இம்முகத்தில் இருந்து தோன்றிய ஐந்து மூர்த்தங்கள்.

1) பிச்சாடனர்

2) காமாரி (காமதகன மூர்த்தி)

3) காலாரி (காலாந்தகர்)

4) ஜலந்திராரி

5) திரிபுராரி

3. **அகோரம்** – இம்முகத்தில் இருந்து தோன்றிய ஐந்து மூர்த்தங்கள்.

1) கஜசம்காரர்

2) வீரபத்ரர்

3) தட்சிணாமூர்த்தி

4) கிராதர்

5) நீலகண்டர்

4. **வாமதேவம்** – இம்முகத்தில் இருந்து தோன்றிய ஐந்து மூர்த்தங்கள்.

1) கங்காளர்

2) சக்ரதானர்

3) கஜமுகானுக்கிரகர்

4) சண்டேச அனுக்கிரகர்

5) ஏகபாதர்

5. **சத்யோஜாதம்** – இம்முகத்தில்இருந்து தோன்றிய ஐந்து மூர்த்தங்கள்.

1) லிங்கோத்பவர்

2) சுகாசனர்

3) உமாமகேசுவரர்

4) அரி அர்த்தர்

5) அர்த்தநாரீ

கம்பத்தடி மண்டபத்தில் மேலே சொல்லப்பட்ட 25 சிற்பங்களும் இடம் பெற்றுள்ள தூண்களில் விஷ்ணுவின் தசாவதாரச் சிற்பங்களும், இரண்டு தூண்களின் கீழ்ப் பகுதிகளில் இடம் பெற்றுள்ளன.

**ஏகபாத மூர்த்தி (4–5)**

இச்சிற்பம் நான்கு கரங்களுடன் ஒரே பாதம் கொண்டு காணப்படுகிறது. அடியவர் இருவர் பாதத்தினருகே வணங்கிய கோலத்தில் இடம் பெற்றுள்ளனர். கைகள் மழு, மான் மற்றும் அபய, வரதத்தில் இடம் பெற்றுள்ளன. இந்த உலகம் மட்டுமல்ல அண்ட சராசரங்களும் சிவபெருமானின் திருவடியின் கீழ் உள்ளன என்ற கருத்தை உணர்த்துவதே ஏகபாத மூர்த்திசிற்பமாகும்.

**இடபாரூடர் (1–2)**

ஏகபாத மூர்த்தி சிற்பத்திற்கு அடுத்ததாக இடம் பெற்றிருப்பது இடபாரூடர் சிற்பம். இடபாரூடர் என்பது சிவபெருமான் பார்வதியுடன் தனது வாகனமான இடபம் என்னும் எருதின் மேல் ஒரு காலை மடக்கி ஒருகாலைத் தொங்கவிட்டு அபய வரத முத்திரை காட்டி அமர்ந்த கோலத்தில் அருள்பாலிப்பதாகும். இந்த இடபத்தை தர்மதேவதை என்றும் திருமால் என்றும் இருவிதமாக அழைப்பர்.

**அர்த்தநாரீசுவரர் (5–5)**

இடபாரூடர் சிற்பத்திற்கு அடுத்து அர்த்த நாரீசுவரர் சிற்பம் அமைந்துள்ளது. இச்சிற்பம் சிவபெருமானும், பார்வதியும் இணைந்த உருவமாகும். வலப்பக்கத்தில் சிவபெருமானது பாதி உருவமும்

இடப்பக்கத்தில் பார்வதி தேவியின் பாதி உருவமும் காட்டப்பட்டுள்ளது. ஆணின்றி பெண்ணில்லை பெண்ணின்றி ஆணில்லை என்பதால் ஆண், பெண் பேதமற்று வாழ வேண்டும் என்ற வாழ்வியல் கருத்தை உணர்த்துவதே இவ்வுருவம்.

**அரிஹரன் (5–4)**

அர்த்தநாரீசுவரர் சிற்பத்திற்கு அருகே அரிஹரன் சிற்பம் இடம்பெற்றுள்ளது. இது சிவபெருமான் மற்றும் திருமால் ஆகிய இரு உருவங்களின் இணைந்த உருவமாகும். சைவ வைணவசமய ஒற்றுமைக்குச் சான்றாய் இச்சிற்பம் அமைந்துள்ளது.

**சக்கரதானமூர்த்தி (4–2)**

இத்தூணின் உள்பக்கத்தில் இடம் பெற்றிருப்பது சக்கரதானமூர்த்தி சிற்பமாகும். இது சிவபெருமான் திருமாலுக்குச் சக்கராயுதத்தைத் தானம் கொடுப்பதாகச் செதுக்கப்பட்டுள்ளது. இந்திரன் ததீசி முனிவருடன் போர்புரிய தினமும் ஆயிரம் தாமரை மலர்களால் அர்ச்சித்து சக்கராயுதத்தை பெற்றான் என்பது புராணக்கதை.

**ஜலந்திரவதை மூர்த்தி (2–4)**

இச்சிற்பத்தில் சிவபெருமான் நின்றகோலத்தில் இருக்கிறார். அவரது வலக்கை கீழே எதையோ காட்டி நிற்கிறது. அக்கை காட்டும் இடத்தில் தூணின் பக்கவாட்டில் கையில் சக்கரம் போன்ற ஒன்றை ஏந்தியது போல் ஒருவன் செதுக்கப்பட்டுள்ளான். அவன் தலைக்குப் பின் அக்னிசேகம் காட்டப்பட்டுள்ளது. சிவபெருமான் தனது மைந்தனான ஜலந்திரன் கொண்ட ஆணவம் காரணமாக அவனை அழித்தார் என்ற கதையை இச்சிற்பம் உணர்த்தி நிற்கிறது.

**தட்சிணாமூர்த்தி (3–3)**

ஜலந்திர வதை மூர்த்தி சிற்பம் இடம் பெற்றுள்ள தூணின் உட்பக்கம் தட்சிணாமூர்த்தி சிற்பம் உள்ளது. இங்கு இடம் பெற்றுள்ள தட்சிணாமூர்த்தி சின்முத்திரை காட்டிக் காட்சியளிக்கிறார்.

**கஜசம்ஹாரமூர்த்தி (3–1)**

மூன்றாம் தூணின் வடக்குப் பக்கம் இச்சிற்பம் இடம் பெற்றுள்ளது. கஜமுகாசுரன் என்னும் அசுரனை வதம் செய்த கோலம் இது. அட்ட வீரட்ட தலங்களில் ஒன்றான வழுவூர் எனும் தலத்தில் மாசிமகத்தன்று இன்றும் இவ்வைபவம் நிகழ்த்தப்பெறுகின்றது. இச்சிற்பம் 8 கரங்களுடன் யானையைத் தூக்கிச் சுழற்றி அதன் தோலை அசுர வேகமாகச் சுழன்று உரிப்பதாகவும் அருகே தூணின் பக்கவாட்டுப் பகுதியில் பார்வதி தேவி இடுப்பில் முருகனை ஏந்தியபடி அக்காட்சியைக் கண்டு அஞ்சுவதாகவும் காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பம் புதுமண்டபத்திலும் மேலும் கோயில் தூண்களில் சிறு அளவில் பல இடங்களில் காணப்படுகின்றது.

**சண்டேச அனுக்கிரக மூர்த்தி (4–4)**

கஜசம் ஹார மூர்த்தி இடம் பெற்றுள்ள தூணின் உட்புறம் சண்டேச அனுக்கிரக மூர்த்தி சிற்பம் இடம் பெற்றுள்ளது. இதில் சிவபெருமான் உமாதேவியோடு இடப வாகனத்தில் தோன்றித் தன் சடையில் உள்ள கொன்றை மாலையை அவருக்குச் சூட்டிச் சண்டேச பதவி அளிக்கிறார்.

**பிட்சாடனர் (2–1)**

நான்காம் தூணின் வடக்குப்பக்கம் வீரபத்ரரது சிற்பமும், பிட்சாடனர் சிற்பமும் அருகருகே அமைந்துள்ளன. இப்பிட்சாடனர் சிற்பம் நான்கு கரங்களுடன் இடம் பெற்றுள்ளது. பின்பக்கம் தோளில் சூலம் தாங்கி, பின்னிருகரங்களில் மழுவும், மானும் கொண்டு காணப்படுகிறார். முன்னிரு கைகளில் வலக்கை மான்குட்டிக்கு அபயம் அளிப்பதாயும், இடது கையில் பிரம்ம கபாலத்தை பிச்சைப் பாத்திரமாக ஏந்தியும் அமைக்கப்பட்டுள்ளார். இடப்பக்கம் பூதகணம் ஒன்று தலையில் பாத்திரம் ஏந்தியுள்ளது.

**வீரபத்ரமூர்த்தி (3–2)**

பிட்சாடன மூர்த்திக்கு அருகில் வீரபத்திரர் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. எட்டு கரங்களும் அவற்றில் பல ஆயுதங்கள் ஏந்தியும் உள்ளார். இவ்வீரபத்திரர் சிற்பம் முறுக்கிய மீசையுடனும்

காலுக்கடியில் கிடக்கும் அசுரனைக் கையில் உள்ள சூலத்தால் குத்திக் கொல்வதாகவும் அமைந்துள்ளது.

**கிராதமூர்த்தி (3–4)**

நான்காம் தூணின் கிழக்குப் பக்கம் கிராதமூர்த்தி (கிராதார்ச்சுன மூர்த்தி) சிற்பம் இடம்பெற்றுள்ளது. அர்ச்சுனன் சிவபெருமானை நோக்கி தவம் இருந்து எல்லாம் வல்ல பாசுபதம் எனும் அஸ்திரம் பெற்றதை இச்சிற்பம் உணர்த்தி நிற்கின்றது.

**ரிஷபாந்திகமூர்த்தி (1–2)**

சிவபெருமான் தனது வாகனமான ரிஷபத்தில் சாய்ந்தபடி உமையுடன் காட்டப் பட்டுள்ளார். இச்சிற்பத்தின் அருகில் விஷ்ணு தன் கண்ணைத் தோண்டுவது போன்ற சிற்பமும் இடம் பெற்றுள்ளது.

**சோமாஸ்கந்தர் (1–1)**

இத்தூணின் உள்பக்கம் சோமாஸ்கந்தர் சிற்பம் இடம்பெற்றுள்ளது. சோமாஸ்கந்தர் என்பது சிவபெருமானும், பார்வதிதேவியும் அமர்ந்திருக்க இருவருக்கும் இடையில் முருகப்பெருமான் சிறுகுழந்தை வடிவில் இடம்பெறுவதாகும். இச்சிற்பத்தின் கீழ் நரியைப் பரியாக்கி கயிறு மாறி கொடுத்த சிற்பம் இடம் பெற்றுள்ளது.

**சுகாசனர் (5–2)**

5 ஆவது தூணின் உள்பக்கம் சுகாசனமூர்த்தி சிற்பம் உள்ளது. இது கைலாய மலையில் சிவபெருமான் நான்கு கரங்களுடன் மானும், மழுவும் ஏந்தியவராய் ஒரு காலை மடக்கியும், ஒரு காலைத் தொங்கவிட்டும் அமர்ந்த நிலையில் உமாதேவிக்கு ஆகமத்தின் பொருளுரைத்த நிகழ்ச்சியைக் குறிப்பதாகும்..

**கல்யாணசுந்தரர் (1–4)**

இச்சிற்பம் மீனாட்சி அம்மைக்கும் சுந்தரேசுவரருக்கும்

திருக்கல்யாணம் நடப்பதையும் அப்பொழுது திருமால் மீனாட்சியின் அருகில் நின்று மணமக்களது இணைந்த கைகளுக்குப் புனிதநீர் ஊற்றுவதையும் சித்தரிக்கும் காட்சியை காட்டுகின்றது. இச்சிற்பம் உலகப்புகழ் பெற்றதாகும். இச்சிற்பத்தில் பிரமன் திருமண வேள்வி நிகழ்த்தும் காட்சியும் இடம்பெற்றுள்ளது.

**திரிபுராந்தகமூர்த்தி (2–5)**

இத்தூணின் தென்பகுதியில் இடம் பெற்றுள்ளது திரிபுராந்தக மூர்த்தியாகும். இதில் சிவபெருமான் மும்மலங்களை (ஆணவம், கன்மம், மாயை) அழிக்க நான்கு கரங்களுடன் கையில் வில்லும், அம்பும் ஏந்திச் சிரித்த முகத்துடன் காணப்படுகிறார். தேரில் நின்ற நிலையில் இடம் பெற்றுள்ள இச்சிற்பத்தில் பிரமன் தேர் ஓட்டுவதாக அமைக்கப்பட்டுள்ளது. இத்தூணின் எதிரே உள்ள தூணில் மூன்று அசுரர்கள் (தாரகாசுரனின் மூன்று மகன்களான தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி) எதிர்த்து நிற்பது போல் அமைக்கப்பட்டுள்ளது.

**காலசம்ஹாரமூர்த்தி (காலாரி) (2–3)**

ஆறாவது தூணின் தெற்குப் பக்கம் காலசம் ஹாரமூர்த்தி சிற்பம் இடம்பெற்றுள்ளது. காலன் என்பது எமன் ஆவான். எமனை சிவபெருமான் வதைக்கும் கதையை (மார்கண்டேயனுக்காக) அடிப்படையாகக் கொண்டு இச்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி திருக்கடையூர் எனும் தலத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. ஆயுள் விருத்தி வேண்டுவோர் அங்கு சென்று வழிபடலாம். மேலும் சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் போன்ற வைபவங்கள் இத்தலத்தில் நிகழ்த்தப்படுவது சிறப்பு.

**பாசுபத மூர்த்தி**

இத்தூணின் உள்பக்கம் அமைந்திருப்பது பாசுபத மூர்த்தி எனப்படும் சிற்பமாகும். இது சிவபெருமானால் அர்ச்சுனனுக்கு எல்லாம் வல்ல பாசுபதம் என்ற அஸ்திரம் இரண்டாம் முறையாக வழங்கப்பட்ட கதையை அடிப்படையாகக் கொண்டு செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் பக்கவாட்டில் அர்ச்சுனன் சிற்பம் வில்லுடன் காணப்படுகிறது.

**சதாநிருத்த மூர்த்தி (ஆடல்வல்லான்) (1–5)**

ஏழாவது தூணில் தெற்குப்பக்கம் அமைந்துள்ள சிற்பம் இது. இவரை நடராசர் என்றும் நிருத்த மூர்த்தி என்றும் கூத்தபிரான் என்றும் அம்பலத்தரசு என்றும் அழைப்பர். சிவகாம சுந்தரி பக்கத்திலேயே நின்று இவ்வினிய நடனத்தை ரசிப்பது, போல அமைக்கப்பட்டுள்ளது.

**காமதகனமூர்த்தி (காமாரி) (2–2)**

நடராசர் இடம் பெற்றுள்ள தூணின் உட்பக்கம் அமைந்துள்ள சிற்பமே காமதகன மூர்த்தியாகும். தட்சனுக்கு மகளாகப் பிறந்த பார்வதி தேவியை நினைத்து சிவபெருமான் யோக நிலையில் அமர, உலகில் உயிர்களின் உற்பத்தி நின்று போக, மன்மதனை, தேவர்கள் அவரது நிஷ்டையைக் கலைக்க அனுப்பினர். மன்மதனைச் சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்து கொன்றார் என்ற புராணச் செய்தியை விளக்குவதே இச்சிற்பமாகும். இச்சிற்பம் தட்சிணாமூர்த்தி சிற்பம் போன்றே மலைமேல் ஒருகாலைத் தொங்கவிட்டு மறுகாலை மடக்கி அமர்ந்து தியான கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**சந்திரசேகரமூர்த்தி (1–3)**

எட்டாவது தூணின் தென் பகுதியில் நின்ற கோலத்தில் சிவபெருமான் உமையுடன் உள்ள காட்சியே சந்திரசேகரமூர்த்தி சிற்பமாகும். இதில் சிவபெருமானது முடியில் பிறைச்சந்திரன் இடம் பெற்றுள்ளது. இச்சிற்பமானது நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் மேற்கரங்களில் மழுவும் மானும் தாங்கியும் கீழ்க்கரங்களில் அபயவரத முத்திரை காட்டியும் உமையம்மையோடு காட்சி தருவதாக உள்ளது.

**உமாமகேசுவர மூர்த்தி (5–3)**

எட்டாவது தூணின் மேற்குப்பக்கம் இச்சிற்பம் உள்ளது. உமையம்மை சிவபெருமானுடன் சேர்ந்து இருக்கும் காட்சியே உமாமகேசுவர மூர்த்தியாகும்.

**இலிங்கோத்பவர் (5–1)**

உமாமகேசுவர மூர்த்தியின் அருகிலேயே இலிங்கோத்பவ மூர்த்தியின் சிற்பம் இடம்பெற்றுள்ளது. இச்சிற்பத்திற்குக் கீழ்

அதிகாரநந்தி நான்கு கரங்களுடன் வணங்கிய நிலையில் காணப்படுகிறார். இதேபோன்ற சிற்பம் புது மண்டபத்திலும் இடம் பெற்றுள்ளது.

**கணேச இராவண அனுக்கிரஹ மூர்த்தி (4–3)**

தூணின் உள்பகுதியில் அமைந்துள்ள சிற்பமே அனுக்கிரஹமூர்த்தி சிற்பம். இங்கு இரண்டு அனுக்ரஹ மூர்த்திகளின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. ஒன்று இராவணஅனுக்கிரஹமூர்த்தி. மற்றொன்று கணேச அனுக்ரஹமூர்த்தி இரண்டு பேருக்கும் அனுக்கிரஹம் செய்வதை ஒரே சிற்பத்தில் செதுக்கியிருப்பது அற்புதம்.

இராவண அனுக்ரஹமூர்த்தி சிற்பத்தில் கைலாய மலையை இராவணன் பெயர்க்கும் காட்சியில் மலைக்கு மேலே சிவபெருமான் உமையோடு எழுந்தருளி இராவணனது ஆணவத்தை அழித்து அவனுக்கு அனுக்கிரஹம் செய்யும் காட்சி காணப்படுகிறது. ஆனால் அக்காட்சிக்குக் கீழே கணேசருக்கு அனுக்கிரஹம் செய்யும் காட்சியில் சிவபெருமானும் உமையம்மையும் இடம் பெறவில்லை மாறாக இராவண அனுக்கிரஹமூர்த்தி சிற்பத்தில் உள்ள இறைவனே கணேசருக்கும் அனுக்கிரஹம் செய்வதால் ஓரிடத்தில் மட்டும் இறையுருவை அமைத்துள்ளான் சிற்பி.

கம்பத்தடி மண்டபத்தில் இந்த சிற்பங்கள் அமைந்துள்ள பகுதி கம்பியால் அடைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்திலிருந்து கிழக்கே கோபுரத்தை நோக்கிச் செல்லும் வழியில் வடக்குப்பக்கம் அக்னிவீரபத்திரர் சிற்பமும், அகோர வீரபத்திரர் சிற்பமும் தென்பக்கம் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியும், அதனையடுத்து காளியின் சிற்பமும் இடம் பெற்றுள்ளன. இச்சிற்பங்கள் விசயநகர நாயக்கர் காலத்தில் அமைக்கப்பட்டன.

**நீலகண்டர் (3-5)**

திருப்பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடைந்த போது வெளிப்பட்ட நஞ்சினை இறைவன் கண்டத்திலே ஏற்ற வரலாற்றை உணர்த்தும் சிற்பம்.

**கங்காளர் (4-1)**

பகீரதனின் வேண்டுகோளை ஏற்று அருள்செய்ய சிவபெருமான் ஊழிக்காலத்து வெள்ளம் போல இறங்கி வந்த ஆகாச கங்கையை தனது ஜடாமுடியில் ஏற்று ஒரு சடை அளவு நீரை பூலோகத்திலே பாயவிட்டு பகீரதனின் அச்சம் நீக்கி அருளியது. இதனையே கங்காளர் என்று வழங்குகின்றோம்.

**அக்னி வீரபத்ரர்**

அக்னி வீரபத்திரரது சிற்பம் 8 கரங்களுடன் தன் கையில் உள்ள திரிசூலத்தால் அசுரனை வதம் செய்வதாக அமைந்துள்ளது. முகம் உக்ரமாக இருக்கின்றது இவரது தலையில் ஜ்வாலா மகுடம் உள்ளது. அதனால்தான் இவர் அக்னிவீரபத்திரர் என அழைக்கப்படுகிறார்.

அக்னி வீரபத்திரர் தூணின் கீழ்ப்பகுதியில் பைரவர் அசிதாங்க பைரவர், குருபைரவர், சண்டபைரவர், குரோதபைரவர், உன்மத்த பைரவர், கபாலபைரவர், பீஷண பைரவர், சம்ஹார பைரவர் என்ற எட்டுவிதமான தோற்றங்களில் அமைக்கப்பட்டுள்ளார்.

**அகோர வீரபத்ரர்**

இச்சிற்பம் 10 கரங்களுடன் செதுக்கப்பட்டுள்ளது. சூலத்தால் அசுரனை வதம் செய்வது கோபமான முகத்துடன் காட்டப்பட்டுள்ளது. தலையில் ஜடாமகுடம் இடம்பெற்றுள்ளது. பல்வேறு அணிகலன்களுடனும், ஆயுதங்களுடனும் கோரமாக அமைக்கப்பட்டுள்ள இச்சிற்பம் அகோர வீரபத்ரர் என்றழைக்கப்படுகிறது.

**ஊர்த்துவ தாண்டவரும், காளியும்**

சிவபெருமானுக்கும் காளி உருவிலிருந்த உமையம்மைக்கும் ஒரு சமயம் நடனப்போட்டி நிகழ இறைவன் காலை தூக்கி ஆடியதால் பெண்ணான காளி தேவி இவ்வாறு ஆடஇயலாது தோல்வியுற்றாள். இத்தகைய சிவபெருமானது உருவம் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி எனப்படுகிறது. ஊர்த்துவ தாண்டவர் சிற்பத்திற்குக் கீழ் காரைக்காலம்மையார் உருவம் இடம்பெற்றுள்ளது. அருகே குடமுழா எனும்

இசைக்கருவியை மீட்டிக் கொண்டிருக்கும் நந்திதேவரின் சிலையும், அவரது காலுக்கடியில் முயலகன் சிற்பமும் இடம் பெற்றுள்ளன. காளியின் சிற்பம் நடனக்கோலத்தில் இடது காலை ஊன்றியம் வலது கால் பாதத்தின் பின்பகுதியை இலேசாக தூக்கியபடியும் செதுக்கப்பட்டுள்ளது.

கம்பத்தடி மண்டபத்தில் இடம்பெறும் தூண்களில் சிறுசிறு அளவிலான சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. அவைகளில் அனுமனது சிற்பமும் தாயுமானவர் சிற்பமும் வழிபாட்டில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. மேலும் திருவிளையாடற் புராண சிற்பங்கள் பிட்டுக்கு மண் சுமந்தது, நாரைக்கு முக்தி கொடுத்தது போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

**நவக்கிரகங்கள்**

கம்பத்தடி மண்டபத்தில் வடக்குப்பக்கம் அமைந்திருப்பது நவக்கிரகக் கோயில். இங்கு பக்தர்கள் நாளும் தீபமேற்றி வழிபாடு செய்து வருகின்றனர். அடுத்து சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரத்தில் நடுக்கட்டு கோபுரம், ஐந்துநிலைக் கோபுரம், இடபக்குறிகோபுரம், மற்றும் இரண்டாம் பிரகாரத்திலிருந்து முதல் பிரகாரத்திற்கு செல்லும் நுழைவு வாயிலில் மூன்று நிலைக் கோபுரம் ஆகியவை அமைந்துள்ளன.

கம்பத்தடி மண்டபத்திலிருந்து முதற்பிரகாரத்திற்குள் நுழையும் இடத்தில் மூன்று நிலைகளுடைய கோபுரம் அமைந்துள்ளது. இக்கோபுர வாயிலில் அதிகார நந்தியும், சாமுண்டியும் உள்ளனர். வெளிப்பகுதியில் இரண்டு வாயிற் காவலர் சிற்பங்கள் 12 அடி உயரத்தில் 4 அடி உயரமுள்ள பீடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாயிற் காவலர்கள் உய்யக்கொண்டார், ஆட்கொண்டார் எனப்பெயர்பெறுவர்.

வாயிற்காவலர்களுக்கு அருகிலுள்ள இருபக்கத் தூண்களில் ஐந்து தலைகளையுடைய சதாசிவமூர்த்தியும் ஐந்து தலைகளையுடைய (காயத்திரி தேவி) பஞ்சசக்தி வீற்றிருக்கும் காட்சியைக் காணலாம். இச்சிற்பங்கள் மலைமேல் அமர்ந்திருப்பதைப் போல செதுக்கப்பட்டு

உள்ளன. நுழையும் இடத்தில் சமயக்குரவர் நால்வருடைய சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

**முதற்பிரகாரம்**

முதற்பிரகாரத்தின் கிழக்கு புறத்தில் இலிங்கமும், சூரியன் தேவிகளுடனும் (உஷா, பிரதியுக்ஷா) வந்தியம்மையும் காட்சி தருகின்றனர். இவர்களைக் கடந்து தென்புறம் வந்தால் அறுபத்து மூன்று நாயன்மார்களைக் காணலாம். அதனையடுத்து சந்தானாச்சாரியார்களது சிலைகளும் சகஸ்ர லிங்கம், கலைமகள் சிலைகளும் சப்தமாதர் சிலைகளும், விநாயகர் சிலையும் காட்சி தருகின்றன.

இப்பிரகாரத்தின் தென் மேற்கு மூலையில் சோமாஸ்கந்தர் மண்டபம் உள்ளது. இதில் மீனாட்சி சுந்தேரேசுவரரின் உற்சவமூர்த்திகள் உள்ளனர். இம்மண்டபத்தின் வலப்பக்கம் இரண்டு விநாயகர் சிலைகள் உள்ளன.

மேற்கு வரிசையில் முருகனது உற்சவமூர்த்தியும் சோடசலிங்கம், முருகன், ஜ்வரதேவர் ஜ்வரலிங்கம், பஞ்சமுகலிங்கம், அடுத்து பிட்சாடனர் காட்சி தருகின்றனர். பிட்சாடனரின் இருபுறங்களிலும் முனிபத்தினிகள் உருவச்சிலைகள் அமைந்துள்ளன. வடக்கு மூலையில் காசிவிஸ்வநாதர் சந்நிதியும், மேதா தட்சிணாமூர்த்தி சந்நிதியும் உள்ளது.

இப்பிரகாரத்தின் வடக்கு பக்கத்தில் எல்லாம் வல்ல சித்தர் கோயிலும் சண்டிகேசுவரர் கோயிலும் அமைந்துள்ளன. அதனருகில் மதுரையின் தல விருட்சமான கடம்பமரம் உள்ளது. இது வெள்ளித் தகட்டால் போர்த்தப்பட்டு இரும்புக் கம்பி கொண்டு அடைக்கப்பட்டுள்ளது. இதற்கருகில் கல்யாண சுந்தரேசுவரர் கோயிலுக்குச் செல்ல நுழைவு வாயில் உள்ளது.

கடம்ப மரத்தினருகில் குமரகுருபரர் பாடிய மதுரைக் கலம்பகத்தில் உள்ள "புழுகுநெய்ச் சொக்கர் அபிடேகச் சொக்கர்" எனத்தொடங்கும்



மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணக்கோலம்
(கல்யாண சுந்தரர் - கம்பத்தடி மண்டபம்)

கம்பத்தடிமண்டபச் சிற்பங்கள்



லிங்கோத்பவர்



ரிஷபாந்திகர்



நடராஜர்



சந்திரசேகரர்



திரிபுராந்தகர்



காலசம்ஹாரர்

## கம்பத்தடிமண்டபச் சிற்பங்கள்



உமாசகிதர்



கிராத அர்ச்சுனர், பாசுபதமூர்த்தி



ஏகபாதர்



ருத்ரர், கங்காளர்



சங்கரநாராயணர், அர்த்தநாரீஸ்வரர்



கஜ சம்ஹாரர்



ஜலந்தர அனுக்கிரகர்



ரிஷபாரூடர்



மீனாட்சி அம்மன் திருக்கல்யாணம்

பாடல் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து திருஞானசம்பந்தரின் மந்திரமாவது நீறு எனத் தொடங்கும் திருநீற்றுப்பதிகம் பொறிக்கப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் சிவபெருமானது நடனக் கோலத்திற்கு அருகில் பார்வதிதேவியுடன் உள்ள மூன்று செப்புப்படிமங்களாக உள்ளது. இதில் கனகசபை இடம் பெற்றுள்ளது. இச்சபையை அடுத்து ஐம்பத்தொரு அட்சரலிங்கமும் மகாலட்சுமி சந்நிதியும் அமைந்துள்ளன.

இலக்குமியை அடுத்து பொற்படியான் சந்நிதியும், சிவபெருமான் நடராசராக நடனக் கோலத்திலும் அருகே சிவகாமியும் படிமங்களாக காட்சி தருகின்ற இரத்தினசபையும் உள்ளன.

இவ்விடத்தில் மூடப்பட்ட சிறுகிணறு உள்ளது. கல்லினால் ஆன வன்னிமரமும், இலிங்கமும் உண்டு. பிரகாரத்தின் கீழ்ப்புறம் பைரவர், பூவலிங்கம், சந்திரனுடன் அவரது மனைவியரான கார்த்திகை, ரோகிணி சந்நிதிகள் அமைந்துள்ளன.

**சுரங்கப்பாதை**

இப்பிரகாரத்தில் அமைந்துள்ள கிணறு சுரங்கப்பாதை என்று நம்பப்படுகிறது. இப்பாதை திருமலை நாயக்கர் மகால் வரை செல்வதாகவும் மன்னன் கோயிலுக்கு வழிபாட்டிற்கு இப்பாதையில்தான் வந்தார் என்றும் கூறப்படுகிறது. இச்சுரங்கப்பாதை சமீபத்தில் தோண்டிப் பார்க்கப்பட்டது. படிகள் கீழே இறங்கிச் செல்கின்றன. ஆனால் பாதை சற்று தூரம்தான் சென்றது. பின்னர் இடிபாடுகள் இருந்ததால் மீண்டும் மூடப்பட்டது.

இதேபோல் புதுமண்டபத்தின் கிழக்கே மொட்டை கோபுரத்திற்கும், புதுமண்டபத்திற்கும் இடையில் ஒரு அறுபக்கத் தொட்டியுள்ளது. அதை ஒருநாள் தோண்டியபோது அதனிலும் ஒரு சுரங்கப்பாதை சென்றது. ஆனால் உள்ளே இடிபாடுகள் காணப்பட்டதால் மூடிவைத்துள்ளனர்.

மதுரை கூடலழகர் கோயிலின் மகாமண்டபப் பகுதியின் கீழே மிகப்பெரிய நிலவறை ஒன்று உள்ளதாம். இதற்கு கருவறையின் உள்ளிருந்து வழி உள்ளதாம். (தகவல் பேரா அரங்கராசன்) தஞ்சைப் பிரகதீசுவரர் கோயிலிலும் இத்தகு சுரங்கப்பாதை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

## ஆறுகால் மண்டபம் (அறுகால் பீடம்)

முதற்பிரகாரம் முடிந்து சுவாமி கருவறையை நோக்கிச் செல்லும்போது இந்த ஆறுகால்பீட மண்டபம் என்று வழங்கப்படும் முகமண்டபத்தின் வழியாகவே செல்லவேண்டும். இம்முகமண்டபத்தில்தான் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம் அரங்கேற்றப்பட்டது.

இம்மண்டபத்தைக் குலசேகரபாண்டியன் (கி.பி. 1166–1175) கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் கட்டினார். ஆனால் தற்பொழுதுள்ள இம்முகமண்டபம் நாயக்கர் காலத்துக் கட்டிடக்கலை பாணியில் அமைந்துள்ளது. எனவே குலசேகர பாண்டியன் காலத்தில் கட்டப்பட்ட மண்டபம் பின்னர் புதுப்பிக்கப்பட்டிருக்கலாம். இம்மண்டபத்திலிருந்து மகாமண்டபம் செல்லும் நுழைவுவாயிலின் இருபுறமும் செம்பினாலான இரண்டு துவாரபாலகரது சிற்பங்கள் நிறுவப்பட்டுள்ளன. மன்னர் திருமலை நாயக்கர் இதனை அமைத்துள்ளார்.

## மகாமண்டபம்

இம்மகாமண்டபத்தைக் கட்டியவர் குலசேகர பாண்டியன் (கி.பி. 1166–1175). இன்றைய மகாமண்டபம் நாயக்கர் கால கட்டிடக்கலை அமைப்பில் உள்ளது. இம்மண்டபத்திலிருந்து பக்தர்கள் சொக்கேசப் பெருமானை தரிசித்து விட்டு தெற்கே இருக்கும்படிகளின் வழியாக இறங்கிக் கருவறை மற்றும் அர்த்த மண்டபத்தை வலம் வரலாம். இப்படிகளைக் கட்டியவர் வீரப்ப நாயக்கர் (கி.பி. 1572–1595).

இம்மகா மண்டபத்தில் 63 நாயன்மார்களின் செப்புத் திருமேனிகள் இடம்பெற்றுள்ளன. இம்மண்டபத்தின் தெற்கு மற்றும் வடக்குச் சுவர்களில்

சுதையாலான சிவபெருமானது 64 திருவிளையாடற் புராணச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இச்சிற்பங்களின் கீழ் அக்கதை பற்றிய தலைப்புகளும் இடம் பெற்றுள்ளன.

**வெள்ளியம்பலம்**

வெள்ளியம்பல நடராசர் பத்து கரங்களுடன் நடனக்கோலத்தில் காட்சியளிக்கிறார். இச்சிற்பத்திற்கு அருகே உமாதேவி சிற்பம் அவரது நடனத்தைக் கண்டு களிப்பதாக அமைந்துள்ளது.

சிவபெருமான் ஆடுகின்ற அம்பலங்கள் ஐந்து ஆகும். அவை பஞ்சசபைகள் எனப்படுகின்றன. அவை

1. இரத்தின சபை – திருவாலங்காடு
2. கனகசபை – சிதம்பரம் (பொன்னம்பலம்)
3. இரஜதசபை – மதுரை (வெள்ளியம்பலம்)[1]
4. தாமிரசபை – திருநெல்வேலி (தேவசபை)
5. சித்திரசபை – திருக்குற்றாலம்

இவற்றில் மதுரையில் உள்ள சபைக்கும் திருவிளையாடற் புராணத்திற்கும் தொடர்பு உண்டு. மேலும் இந்த ஆனந்த தாண்டவகோலத்தில் வழக்கத்திற்கு மாறாக வலதுகாலைத் தூக்கி இடது காலை ஊன்றி ஆடுகின்றார். இறைவன் கால்மாறி ஆடிய தலம் எனும் சிறப்பு மதுரைக்கு உரியதாகும். இக்கோயிலில் நடராசருடைய பஞ்சசபைகளும் உள்ளன. முதற்பிரகாரத்தில் கனகசபையும், இரத்தின சபையும், (மகா மண்டபத்தில்) வெள்ளியம்பலத்தில் இரஜதசபையும் நூற்றுக்கால் மண்டபத்தில் தேவசபையும் ஆயிரங்கால் மண்டபத்தில் சித்திர சபையும் உள்ளன.

**அர்த்தமண்டபம்**

இம்மண்டபம் மூலஸ்தானத்துடன் (கருவறை) இணைந்து முன் உள்ள மண்டபம். இது பூசை செய்யும் பட்டர்கள் வேதபாராயணம் செய்து

வழிபடும் இடம். பூஜை நேரங்களில் ஓதுவா மூர்த்திகள் இம்மண்டபத்தில் நின்றுதான் தேவாரம் பாடுவார். கால பூஜை செய்யும் பொழுது பட்டர்களும் கூட இங்கு நின்றுதான் இறைவனுக்கு தீப, தூப ஆராதனைகள் செய்கின்றனர்.

தற்போது திருக்கோயில் கும்பாபிஷேகத்திற்கு நிதி வழங்கியவர்கள், அன்னதானத்திட்டம், சிறப்பு அபிஷேகத் திற்கான கட்டணம் செலுத்துபவர்கள் இவ்விடத்தில் நின்று வழிபட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இங்கிருந்து கருவறை செல்லும் நுழைவுவாயிலின் இருபுறமும் இரண்டு யானைச் சிற்பங்களும், திருவாட்சியும் அமைக்கப்பட்டுள்ளன.

மகா மண்டபத்திற்குள் செல்வதற்கும் அங்கிருந்து வெளியே செல்வதற்கும் முகப்பு வாயில் அல்லாமல் மூன்று வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெள்ளியம்பலத்திற்கு நேராக ஒரு வாயில் முதற்சுற்றுப் பிரகாரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மகா மண்டபத்திற்கு செல்லாமல் இங்கிருந்து கூட வெள்ளியம்பலத்தானை தரிசிக்கலாம். மகாமண்டபத்திலிருந்து அர்த்த மண்டபம் செல்லும் நுழைவு வாயிலின் இருபுறமும் துவாரபாலகர் சிற்பங்களும், விநாயகர், முருகன் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன.

**கருவறை**

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் கருவறை அர்த்தமண்டபம் முதலியவை குலசேகர பாண்டியனால் கட்டப்பட்டது. அவை நமக்குக் கிடைக்கவில்லை இன்றைய நிலையில் காணப்படும் கருவறை, அர்த்தமண்டபம் நாயக்கர் காலப்பாணியில் அமைந்துள்ளன. கட்டியவர் யார் எனத் தெரியவில்லை. கருவறையின் நான்குபுறமும், பக்கத்திற்கு இரண்டு என எட்டு யானைகள் இவ்விமானத்தைத் தாங்குவதாகவும், இவ்விமானம் இந்திரனால் தேவலோகத்திலிருந்து கொண்டு வரப்பட்டதாகவும் திருவிளையாடற்புராணம் குறிப்பிடுகிறது. கருவறை விமானம் பற்றிய பிறசெய்திகள் கோபுரங்கள் என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளன.

சுவாமி கோயில் கருவறை உபபீடத்துடன் அமைந்துள்ளது. இந்த உபபீடமானது உபானம், பத்மஜகதி, கண்டம், கபோதம் என்ற உறுப்புகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அதிட்டானம் ஜகதி, சலங்கையில் அலங்கரிக்கப்பட்ட விருத்த குமுதம், கண்டம், கபோதம் எனும் உறுப்புகளுடன் திகழ்கிறது.

தேவகோட்டங்கள் மூன்றிலும் முறையே தெற்கே தட்சிணாமூர்த்தி, மேற்கே இலிங்கோத்பவர், வடக்கே துர்க்கை எனும் அமைப்பு காணப்படுகிறது. சுவர்பகுதியில் தூண்களின் சதுரப் பகுதிகளில் இராஜசிம்மன் பாணியில் பாயும் நிலையிலான சிம்மங்கள் இடம் பெற்றுள்ளன. கபோதம் வளைந்த கட்டை அமைப்பில் இடம் பெற்றுள்ளது. கருவறை பத்ரம், அகாரை, கர்ணம் என ஒவ்வொரு பக்கமும் கொண்டு சதுர கருவறையாக அமைந்துள்ளது. சுவாமி கோயில் கருவறையைச் சுற்றி அம்மன் கோயில் கருவறையைச் சுற்றிப் பள்ளம் அமைந்து இருப்பதுபோல் அமைக்கப்படவில்லை.

**சுந்தரேசுவரரின் சிற்ப அமைப்பு**

மதுரையில் கடம்ப மரத்தடியில் சுயம்புவாய் எழுந்தருளியுள்ள அருட்குறியாகிய சிவலிங்கம் மேருமலை, வெள்ளிமலை, மந்தரமலை, திருக்கேதாரம், வாரணாசி போன்ற எண்ணற்ற தலங்களில் உள்ள சிவலிங்கங்களுக்கெல்லாம் முன்னே தோன்றியது. இக்காரணத்தால் இது 'மூலலிங்கம்' எனப் பெயர் பெற்றது. இதனைத் திருநாவுக்கரசர்,

"முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி"
என சிறப்பித்துப் பாடியுள்ளார்.

சிவலிங்கத்தின் அமைப்பை இரண்டு வகையால் கூறலாம் 1. வியட்டிலிங்கம் 2. சமட்டிலிங்கம் இதில் வியட்டிலிங்கம் என்பது தனித்தனி ஒன்றான அமைப்புடையது சமட்டிலிங்கம் எல்லாம் ஒருங்கு திரண்டு அமைந்த ஆற்றலுடையது.

மற்ற தலங்களில் உள்ள சிவலிங்கங்கள் வியட்டிலிங்க அமைப்பைப் பெற்றிருக்கின்றன. மதுரைத் தலத்து லிங்கம் சமட்டிலிங்க

அமைப்புடையது. இத்தலத்தின் பெருமானான சோமசுந்தரக் கடவுளை நாம் எல்லோரும் ஒருமுறையாவது தரிசித்து வழிபட்டு நமது தீவினைகளைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

## திருத்தேர்கள்

கி.பி. 16ம் நூற்றாண்டில் திருமலை நாயக்கரால் சுவாமி சுந்தரேசுவரருக்கு பெரியதாகவும், மீனாட்சி அம்மனுக்கு சிறியதாகவும் தேர்கள் வடிவமைக்கப்பட்டன.

சித்திரை திருவிழாவின்போது தேர்களில் சுவாமி, அம்மன் உற்சவர்களாக கோயிலைச் சுற்றி மாசி வீதிகளில் உலா வருவர். தேர்களை நிறுத்துவதற்காக கீழமாசி வீதியில் இரு கட்டடங்கள் கட்டப்பட்டன. தேர்களைச் சுற்றி 64 திருவிளையாடல் புராணங்கள் மரச்சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டிருப்பதை ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே பார்க்கமுடியும்.

அதேசமயம் சின்னப்பா, பாப்பு, சின்னசெவ்வந்தி, ஞானப்பிரகாச பண்டாரம், விஜயரகுநாதன் ஆகியோர் இந்த தேர்களை ஒவ்வொரு காலகட்டத்திலும் சீரமைத்ததாகவும் சிலர் கூறுவது உண்டு. 2 ஆண்டுகளுக்கு முன்பு ரசாயண முறையில் தேர் சிற்பங்கள் பொலிவூட்டப் பட்டன.

## தேரோட்டம்

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணத்திற்கு மறுநாள் தேரோட்டம் நடக்கும். முதலில் தேர் சக்கரங்களுக்கு பூசணிக்காய் பலி கொடுக்கப்படும்.

தேர்களைப் பாதுகாக்கும் தேரடி கருப்பண்ணஸ் சுவாமியிடம் அனுமதி பெற்று, சுவாமியும், பிரியாவிடையும் அமர்ந்திருக்கும் பெரிய தேர் முதலில் புறப்பட்டு விளக்குத் தூண் சந்திப்பில் வந்து நிற்கும். அடுத்து மீனாட்சி அம்மன் தேர் புறப்படும். பொதுவாக தோரோட்டம் நடக்கும் போது சுவாமிக்கும், அம்மனுக்கும் தங்க, வைர ஆபரணங்கள் அணிவிக்கப்படுவதில்லை. கோயிலுக்கு திரும்பும்வரை மூலஸ்தானம் அடைக்கப்பட்டிருக்கும்.

மாலை 4 மணிக்கு கோயிலில் இருந்து தங்க, வைர ஆபரணங்கள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டும், தேர்களில் வீற்றிருக்கும் சுவாமிகளுக்கு பரிவட்டம் சூட்டி ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டு கோயிலுக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

பக்தர்கள் ஒரே நேரத்தில் அம்மனையும், சுவாமி, பிரியா விடையையும் காண வேண்டும் என்பதற்காகவும், தேர் ஓடிய பாதையை பார்ப்பதற்காகவும் சப்தவர்ணச் சப்பரத்தில் 'தடம் பார்க்கும் நிகழ்ச்சியும்' நடக்கும்.

**மண்டபங்கள்**

ஆலய அமைப்பு என்னும் தலைப்பில் அட்டசக்திமண்டபம், வேடமண்டபம், முதலிப்பிள்ளைமண்டபம், ஊஞ்சல்மண்டபம். கிளிக்கூட்டுமண்டபம், சங்கிலிமண்டம், கொலுமண்டபம், முகப்புமண்டபம், மகாமண்டபம், கம்பத்தடிமண்டபம், ஆகிய மண்டபங்கள் பற்றிய குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இவைதவிர மேலும் பல மண்டபங்கள் இக்கோயிலில் உள்ளன. அவை; நூற்றுக்கால் மண்டபம், வீரவசந்தராயர் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், மங்கையற்கரசி மண்டபம், நால்வர்மண்டபம், சேர்வைக்காரன்மண்டபம், திருக்கல்யாண மண்டபம், முத்துராமையர் மண்டபம், யானைக்கட்டுமண்டபம், பதினாறுகால் மண்டபம், பேச்சிக்காள்மண்டபம், திருநாள் மண்டபம், திருப்புகழ் மண்டபம், திருக்கோயிலுக்கு வெளியில் உள்ள புதுமண்டபம், நகராமண்டபம், தேரடி மண்டபம், வைகை ஆற்றில் உள்ள மையமண்டபம், பிட்டுத்தோப்பு மண்டபம், செட்டியார்மண்டபம், பாவக்காய்மண்டபம், வலைவீசி தெப்பக்குளமண்டபம் இம்மண்டபங்கள் அனைத்துமே மிகுந்த கலைநயத்துடன் நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் புதுமண்டபம், ஆயிரங்கால் மண்டபம் இரண்டும் குறிப்பிட்டு சொல்லத்தக்கவை. ஆயிரங்கால் மண்டபத்தில் நினைவு கூரத்தக்க பழங்காலச் சிற்பங்கள், செப்புத்திருமேனிகள்

கைவினைப்பொருட்கள் முதலியன தொகுத்தமைத்து கவின் கலைக்கூடமாக ஆலய அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. புதுமண்டபத்தில் பிரம்மாண்டமான, புதுமையான சிற்பங்கள் ஏராளமாக உள்ளன.

போழகும் பிரமாண்டமுமாய் விளங்குகின்ற இந்த ஆலயத்திற்கு வந்து மீனாட்சி சுந்தரேசுவரரின் அருளைப் பெற்று உய்வோமாக! ஆகமமுறைப்படி கட்டப்பட்ட இவ்வாலயத்தை வழிபாடு செய்வதற்கு சில விதிமுறைகள் உள்ளன. அவற்றை அறிந்து அதன் வழி வழிபட்டு சிறந்த பயனைப் பெறுவோமாக!



# வழிபடும் முறை

இன்றளவும் மேல்நாட்டினர் நமது கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் வியந்து நோக்குகின்றனர். ஆன்மீகத்துடன் இணைந்த ஒரு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை நமது முன்னோர் நமக்கு விட்டுச் சென்றிருப்பதே இதற்குக் காரணம்.

இன்றைய நாகரிக உணவுமுறை, உடலுழைப்பின்மை ஆகிய காரணங்களால் உடல் ஆரோக்கியம் கெட்டு கணிணி, தொலைக்காட்சி போன்ற அறிவியல் சாதனங்களால் மன ஆரோக்கியமும் கெட்டு அவதியுறுகின்ற நமக்கு முன்னோர் வகுத்து வைத்த வாழ்க்கை முறையில் கோயில் முக்கியமான இடத்தை வகிக்கின்றது.

உடற்பயிற்சி மையம், தியான வகுப்பு என்று தனித்தனியே தேடிப்போக வேண்டிய அவசியமில்லாமல் கோயில் வழிபாடு உடல், மன அமைதியை ஒருங்கே கொடுக்கின்றது.

'ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே' என்பது ஆன்றோர் வாக்கு. இத்தகு வழிபாட்டை விதிமுறைகளால் செய்ய வேண்டுவது மிகவும் அவசியம்.

**ஆலயம்**

அந்தகரணங்கள் நான்கினுள் ஒன்று மனம். இது ஒருமைப்படுதல் அரிதான செயல். ஆன்றோர்க்கும் முனிவர்க்குமே இது எளிது. இல்லற வாழ்விலே இன்னல் பட்டு உழலும் நமக்கு இது அரிது. 'உள்ளம் வசமானால் உலகம் வசமாகும்'. ஆகவே மனத்தை அடக்கி நல்ல வழியில் செலுத்துவதற்கு பூஜையும், ஆலய வழிபாடும் நற்சாதனங்களாகின்றன.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற பழமொழிக்கேற்ப ஆலயத்திற்கு வரும் பக்தர்களைக் காணும்போதும், மணி, சங்கு, மேளதாளம் போன்ற மங்கல ஓசைகளைக் கேட்கும் போதும் மனம்

ஒருமைப்பட்டு இறைவனை வணங்கும். எனவே ஆலயம் சென்று வழிபடுவதால் மனம் அங்குள்ள இனிய சூழ்நிலையில் நின்று அமைதியுறும். இதன் காரணமாகவே நம் முன்னோர்கள் பல ஆலயங்களை அமைத்தார்கள்.

'மூர்த்தி தலம் (விருட்சம்) தீர்த்தம் என – முறையால்
தொடங்கினார்க்கோர்
வார்த்தை சொல் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'
– தாயுமானவர்

**உடல்**

நவீன கால மருத்துவர்கள் நமது ஆரோக்கிய வாழ்விற்கு வலியுறுத்துகின்ற விஷயம் உடற்பயிற்சி. வீரத்திற்கு இலக்கணமாய் நின்ற தமிழர்கள் இன்று நாற்பது வயதிற்குள்ளேயே பலவீனமானவர்களாய் இரத்தக்கொதிப்பு, சர்க்கரை நோய் என்று பல்வேறு நோய்களால் அவதியுறுகின்றனர். அவசர யுகத்தில் உடற்பயிற்சிக்கென்று நேரம் ஒதுக்க முடியாதபடி காலை நேரம் என்பது வீடுகளில் ஒரு பதற்றமான சூழ்நிலையை உருவாக்கி வைத்திருக்கிறது.

மனம் அமைதியாயிருந்து உடல் ஆரோக்கியம் இருந்தால் நாம் எண்ணிய எண்ணியாங்கு எய்தலாம். இதையடைய மிக எளிய வழி ஆலய வழிபாடு. காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்து, குளித்து வெறும் வயிற்றோடு கோயிலுக்குச் செல்வதென்பது நமது வாழ்க்கைக்கொரு வரப்பிரசாதம்.

**தரிசன விதி (சிவாலய தரிசனம்) :**

நாள்தோறும் கோவிலுக்குச் செல்வது நல்லது. அப்படிச் செல்ல இயலாதவர்கள் புண்ணிய காலங்களிலேனும் தவறாமல் செல்ல வேண்டும்.

நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தமெம் பிரானுடைய கோயில் புக்குப்

புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தே த்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி
சங்கரா சய போற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி யென்றும்
ஆரூரா என்றென்றே அலறானில்லேன்

– திருநாவுக்கரசர்

சிவாலயத்திற்கு செல்ல விரும்புபவர்கள் அவ்வாலயத்துக்கு அருகிலுள்ள புண்ணிய தீர்த்தங்களிலே நீராடி தூய்மையான உலர்ந்த ஆடைகளை அணிந்து சமய அனுட்டானம் முடித்துக் கொண்டு ஆலயத்துக்குள் செல்ல வேண்டும்.

தேங்காய், பழம், பூ, வெற்றிலை பாக்கு, கற்பூரம் வைத்து அரைக்குக் கீழ்படாது மேலே உயர்த்தப்பட்ட கைகளில் ஏந்திக் கொண்டு செல்ல வேண்டும். இதற்கு வசதிபடாதவர்கள் பூவாவது கொண்டு செல்ல வேண்டும். அதற்கும் வசதிபடாதவர்கள் இறைவன்முன் நின்று அவன் புகழை வாயார பாடவாவது வேண்டும்.

இந்துமதத் தத்துவத்தின் தனித்தன்மையே இதுதான். கடுமையான விதிமுறைகள் என்பதே இல்லாமல் நம்மால் இயன்றதை இயன்றபடி செய்யலாம் என்பதே இந்துத்தத்துவம். நம்மால் இயலாததை செய்ய முடியவில்லையே என்ற ஏக்கமில்லை இயன்றதைச் செய்தோம் என்ற நிறைவோடு அமைதியாக இருக்கலாம். இதைத் திருமூலரின் ஒரு பாடல் அழகாக எடுத்துரைக்கின்றது. இதனை

"யாவர்க்குமாம் இறைவர்க்கு ஓர் பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஓர் வாயுரை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறருக்கு இன்னுரைதானே."

இந்து மதத்தின் இந்த நெகிழும் தன்மை வேறு எந்த மதத்திலும் இல்லை எனலாம்.

எல்லாக் கோயில்களிலுமே இராஜகோபுரம் எனப்படுகின்ற வானுயர்ந்த கோபுரங்களே வாயிலாக அமைந்திருக்கும். இது, ஸ்தூல லிங்கம் எனப்படும்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பார்கள். காலையில் எழுந்தவுடன் பார்க்கத் தகுந்தவைகளில் கோபுரமே தலையாயது. இறைவனை வழிபடும் எண்ணத்தோடு இதனுள் நுழைகின்ற பொழுது உலக விவகாரங்களிலுள்ள மனதை அடக்கி இறைவனை நாடிச்செல்ல வேண்டும்.

கோபுரத்தின் மேல் அடுக்குப் பொதுவாக ஒற்றைப் படை எண்ணில் அமைந்திருக்கும். இவ்விதம் அமைக்கப்பட்டிருக்கும் எழுவாயில்கள் ஐம்பொறிகள், மனம், புத்தி ஆகிய ஏழு தத்துவங்களுக்கு சின்னங்களாக அமைந்திருக்கின்றன.

கோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றதும் பலிபீடம் முன்பு விழுந்து வணங்க வேண்டும். அப்போது விலங்கு மனிதன் விழுந்து விட்டான். மனிதமனிதன் எழுகிறான் என்ற எண்ணம் வலிவு பெற வேண்டும்.

அதற்கு அடுத்து இருப்பது கொடிமரம் (சூட்சுமலிங்கம்) இறைவனை நோக்கி நேராக நிமிர்ந்து உயர்ந்து அமைந்திருக்கும் இக்கொடிமரம் நம் சிந்தனையை ஒரு முகமாகக் கொண்டு உயர்ந்த எண்ணத்தோடு வழிபட வேண்டுமென்பதை உணர்த்தி நிற்கின்றது.

கொடிமரம் ஒவ்வொரு ஆலயத்திலும் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. எல்லாத் திருவிழாக்களுமே கொடியேற்றத்துடன்தான் தொடங்கும். அதேபோல் கொடியிறக்கத்துடன்தான் திருவிழா நிறைவுபெறும். கொடிமரம் – சிவபெருமான்; கொடிக்கயிறு – பாசம்;

பாசத்தால் கட்டுண்ட உயிர் இறைவனுடைய திருவருளால் அவனுடைய திருவடியை அடைதல் என்ற தத்துவத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது.

கொடிமரத்திற்கு அடுத்து வருவது வாகனம். சிவபெருமானுக்கு நந்தி, முருகனுக்கு மயில், திருமாலுக்கு கருடன், அம்பிகைக்கு சிங்கம் வாகனங்களாக அமைந்திருக்கும். வாகனம் எதுவாயினும் அது ஆன்மாவைக் குறிக்கிறது. கடவுளைச் சென்றடைய சதாசர்வ காலமும் மனது கடவுள் நாட்டத்திலேயே இருக்க வேண்டும் என்ற விதியை வாகனம் விளக்கிக் கொண்டிருக்கிறது.

இவ்வாகனத்தைக் கடந்து சென்றால் துவார பாலகர்சிற்பங்கள் இருக்கும். வாயிலின் இருபக்கமும் வீற்றிருக்கின்ற விநாயகர், சுப்ரமண்யர் இருவரையும் வணங்கிவிட்டு சிவபெருமான் சந்நிதிக்குள் செல்ல வேண்டும். அர்ச்சனை சாமான்கள் கொண்டு சென்றால் அதனை அர்ச்சகர் இடத்திலே கொடுத்து சங்கல்பம் செய்ய வேண்டும். பிறகு இறைவனது புகழைக் குறிப்பிடும்படியான பாடல்களைப்பாடி மனமுருகக் கடவுளை வணங்க வேண்டும். பிறகு அர்ச்சகர் கொடுக்கும் பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டு திருநீறும் வாங்கிக் கொள்ளவேண்டும்.

விபூதியை இடதுகைக்கு மாற்றாமல் வலது கை மோதிர விரலாலேயே எடுத்து நெற்றியில் இட்டுக் கொள்ள வேண்டும். வி என்றால் மேலான (உயர்ந்த) பூதி என்றால் செல்வம் அதாவது விபூதி என்றால் மேலான செல்வம் என்பது பொருள்.

பூஜைக்குரிய நேரங்களில் நாம் சென்றால் மூலஸ்தானத்தில் இறைவனுக்குச் செய்யப்படும் அபிஷேக அலங்கார, நைவேத்ய மற்றும் சோடச உபசாரங்களை அங்கு காணலாம். பின் தீபாராதனை நடைபெறும். நமது ஆலயங்களில் செய்யப்படும் கிரியைகள் தத்துவங்களுக்கு விளக்கமாக அமைந்துள்ளன. தீபாராதனையை அதற்குச் சான்றாக

எடுத்துக் கொள்ளலாம். இறைவனுக்கு முன் இடப்பட்ட அஞ்ஞானமாகிய திரை நீங்கியவுடன் ஜோதிப் பிழம்பாக பல விளக்குகள் கொண்ட அடுக்கு தீபம் ஒன்று காட்டப்படுகிறது. அஞ்ஞான இருளினின்று ஞான பூமிக்குள் பிரவேசிக்கின்ற ஆன்மா ஒரே ஒளிப்பிழம்பைக் காண்கிறது. அந்த ஒளிப்பிழம்பில் சிறிது நேரம் ஒன்றி விடுகிறது. பரம்பொருள் என்றைக்கும் அணையாத ஆத்மப் பிரகாசமாய் இருக்கிறார். அதில் கணக்கற்ற விளக்குகள் இருக்கின்றன. இது ஜோதி ரூபத்தில் பல உயிர்கள் உண்டு என்பதை விளக்குகிறது. அதன்பின் காட்டப்படும் தீபங்கள் ஒவ்வொன்றாக எண்ணிக்கையில் குறைந்து வருகின்றன. கடைசியில் ஒரு தீபத்தில் வந்து ஆராதனை முற்றுப்பெறுகிறது. இதன் தத்துவம் ஒன்றாக உள்ள இறைவனே எண்ணிறந்த ஜீவாத்மாக்களாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறார் என்பதாம்.

ஐம்புலன்களாலும் நாம் இறைவனை உணரும் வகையில் பஞ்சேந்திரியங்களும் கடவுள் வழிபாட்டில் இடம்பெறுகின்றன. தீபாராதனை மூலம் காண்பது ஜோதி ரூபமான பரம்பொருள். இதையே, 'சோதியே சுடரே' என்றார் மாணிக்கவாசகர். அப்போது காதால் கேட்பது மணிஓசை, சங்கு, வாத்தியம், திருச்சின்னம் போன்ற மங்கல ஒலிகள். இவற்றைக் கேட்கும் போது பல சிந்தனைகளில் சிதறிக் கிடக்கின்ற மனம் இறைவனிடத்திலே ஒருமுகப்படுகின்றது. மூக்கால் நுகர தூப நறுமணம் கமழ்கின்றது. நாம் ஸ்பரிசித்து மகிழ இறைவனுக்கு சாத்திய மாலை தரப்படுகின்றது. நாவால் சுவைத்து ருசிக்க அவருடைய பிரசாதம் வழங்கப்படுகின்றது. இவ்வாறு ஐம்பொறிகளாலும் இறைவன் உணரப்படுகிறார். உலகை அறிவதற்காக அமைந்த பொறிகளை இறைவனை அறிவதற்கு பயன்படுத்தும்பொழுது அது நல்ல பழக்கமாகிறது. மறுபடி அவருக்கு புறங்காட்டாது வெளியே உள்ள பிரகாரத்துக்கு வரவேண்டும். சிவபெருமானை மூன்று அல்லது ஐந்து முறை வலம் வரலாம். பின்பு சமயக்குரவர் நால்வரை வணங்க வேண்டும்.

அடுத்ததாக தட்சிணாமூர்த்தியை வணங்க வேண்டும். சிவனின் இந்த கோலம் பிரம்ம நிலையைக் காட்டுகிறது. அங்கு செயலே இல்லை;

ஒரே மௌனம்தான். வெளியிலே சகல காரியமும் செய்யும் ஈஸ்வரன் எப்போதும் உள்ளே அடங்கி பிரம்மமாக இருக்கிறான். பேசாமல் புரியவைக்கும் குரு தட்சிணாமூர்த்தி அவருக்குக்கீழே அமர்ந்துள்ள முனிவர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வரும் மௌன உபதேசம் பெறுகிறார்கள்.

"குரு பார்க்க கோடி நன்மை" என்பார்கள். ஒருவருடைய ஜாதகத்தில் குரு நல்ல இடத்தில் இருந்தால் அவர் மிகச்சிறந்த வாழ்வைப் பெறுவார் என்பது சாத்திரம். அவ்வளவு சக்தி வாய்ந்த குருவை நாம் நேருக்கு நேராக நின்று வழிபட வேண்டும்.

அடுத்து சோமாஸ்கந்தர், இறைவன் குடும்பசமேதராக அம்மையாயும், அப்பனாயும் இடையில் முருகனோடு வீற்றிருப்பார். இம்மூர்த்தி உருவிலேயே விழாக் காலங்களில் எழுந்தருளி நமக்கு அருள்செய்வார்.

இறைவனை அன்பினால் அன்றி ஆற்றலால் காணமுடியாது என்பதை உலருக்கு உணர்த்திய லிங்கோத்பவரை அடுத்து வணங்க வேண்டும்.

அடுத்து முருக பெருமானை வணங்க வேண்டும். ஐந்தொழில்களான படைத்தல். காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் மேற்கொள்பவர் நடராஜர். தூக்கிய திருவடியுடன் சிவகாமியம்மைக்கு எதிரே நடம் புரியும் நடராஜரை அடுத்து வணங்க வேண்டும்.

பின்பு ஆலயத்தில் எழுந்தருளியுள்ள பிட்சாடனர், துர்க்கை, சந்திரசேகரர், பைரவர், சூரிய மூர்த்தி, நவக்கிரகங்கள் எல்லோரையும் வழிபட வேண்டும்.

சண்டேசுவரர் இவர் இறைவனின் நிர்மால்யத்தை தமக்கே உரிமையாகக் கொண்டவர். மூலஸ்தானத்தில் விபூதியோடு, கொடுக்கப்படும் மாலை, போன்ற பிரசாதங்களை இவரிடம் சமர்ப்பித்துவிட வேண்டும். இவர் எப்போதும் இறைவனை நினைத்து

யோகத்திலேயே அமர்ந்திருப்பார். இவரிடம் கையைத் தட்டி சிவதரிசன பலனைப் பெற்று கொண்ட பிறகு சென்ற வழியே திரும்ப வேண்டும்.

'இறைவனின் புகழே அல்லாமல்
வேறொன்றும் பேசற்க ஆலயத்துள்'

என்ற வாக்கிற் கிணங்க ஆலயத்தை வலம்வரும்போது ஒருவருடனும் பேசாமல் மனதிற்குள்ளேயே அஞ்செழுத்தை உச்சரித்துக் கொண்டு வருவது சிறந்த முறை. இலிங்கத்துக்கும் திருநந்திதேவருக்கும் இடையில் பிரவேசிக்கக் கூடாது. மேலும் சிவபெருமான் சன்னதிக்கு செல்லும் முன் நந்திதேவரிடம் பஞ்சாட்சர மந்திரத்தை, **(நமசிவாய)** ஓதி நன்முறையில் தரிசனம் கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து உள்ளே செல்ல வேண்டும். திரும்பி வரும்போதும் பஞ்சாட்சர மந்திரம் சொல்லி நல்ல முறையில் தரிசனம் கிடைத்ததற்கு நன்றி கூறித் திரும்ப வேண்டும்.

பிறகு அம்பாள் சன்னதிக்குச் சென்று தோத்திரங்கள் சொல்லித் துதிக்க வேண்டும். அம்பாள் பிரகாரத்தை இரட்டைப் படை எண்ணில் வலம் வரவேண்டும். (குறைந்தது **4** முறை)

விநாயகரை ஒரு முறையும், சூரியனை இரண்டு முறையும், பார்வதிதேவி, திருமால் இவர்களை நான்கு முறையும் வலம் வரவேண்டும். அபிஷேக காலத்தில் உட்பிரகாரத்தில் வலம் வருதலோ, நமஸ்கரித்தலோ கூடாது. சுவாமியும், அம்பாளும் சேர்ந்து ஒரே கோயிலில் இருந்தால் அக்கோயிலை மூன்று முறை வலம் வரலாம்.

அம்பாள் அருளைப் பெற்று மீண்டும் ஒருமுறை நந்திதேவரை வணங்கி பலிபீடத்துக்கு இப்பால் வந்து மூன்று தரம் நமஸ்கரித்து எழுந்து வடக்கு நோக்கி அமர்ந்து கடவுளை தியானித்துக் கொண்டு அவருடைய பஞ்சாட்சரத்தை இயன்ற வரை கூறி வணங்கி வீடு திரும்ப வேண்டும்.

கோயிலில் உள்ள மூலவரையும், அம்பாளையும் தவிர வேறு அங்குள்ள பிற தெய்வங்களை அந்தந்த சந்நிதிகளில் விழுந்து வணங்குதல் கூடாது.

நமஸ்காரம் செய்வதிலும் மூன்று முறை இருக்கின்றது. அவை (1) அட்டாங்க நமஸ்காரம் (2) பஞ்சாங்க நமஸ்காரம் (3) திரயாங்க நமஸ்காரம்.

## அட்டாங்க நமஸ்காரம்

வடக்கே தலையை வைத்து மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முதலிலும் இடக்கையை பிறகும் நேரே நீட்டிப் பின் வலப்புயமும், இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்கி நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதை பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்து நமஸ்காரம் செய்தல் வேண்டும். பொதுவாக தலை, கை இரண்டு, செவி இரண்டு, புயம் இரண்டு, முகவாய் ஆக எட்டு உறுப்புகளும், நிலத்திலே படும்படி வணங்குதல் முறை. அப்படி வணங்கும்போது நம் பாவங்கள் நிலத்திலே படிந்துவிடும்.

இது ஆண்கள் நமஸ்கரிக்க வேண்டிய முறை.

## பஞ்சாங்க நமஸ்காரம்

தலை, கை இரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புகளும், நிலத்திலே படும்படி வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம். வடக்கு நோக்கி நமஸ்கரிக்க வேண்டும்.

இது பெண்கள் நமஸ்கரிக்க வேண்டிய முறை.

## திரயாங்க நமஸ்காரம்

மூன்று உறுப்புகள் நிலத்திலே படும்படி விழுந்து வணங்குதல் திரயங்க நமஸ்காரம். இது ஆண், பெண் இருவருக்கும் பொதுவான முறை.

சிவாலயங்களில் நமஸ்கரித்த பிறகு சிறிது நேரம் அமரவேண்டும். நாம் கோயிலை வலம் வரும்பொழுது நம்முடனேயே பூதகணங்களும் வலம் வருவதாக ஐதீகம். நாம் அமர்ந்தவுடன் பூதகணங்கள் மீண்டும் இறைவனையே சென்றடைகின்றனவாம். எனவே சிவாலய தரிசனம்

முடித்து ஒருசில நிமிடங்களாவது அமர்ந்திருந்த பின்னரே வீடு திரும்ப வேண்டும்.

பெருமாள் கோயிலில் வலம் வந்த பிறகு சிறிதுநேரம் அமர்ந்து பிறகு நமஸ்கரித்து உடனே வீடு திரும்ப வேண்டும் ஏனெனில் மகாலட்சுமி நம்முடனேயே வருவதாக ஐதீகம்.

கோயிலுக்குச் சென்றுவிட்டு நேராக நம் வீட்டிற்கு தான் வர வேண்டும். மற்றவர் இல்லங்களுக்குச் செல்லக் கூடாது. அதேபோல் கோயிலுக்குச் சென்று வந்தவுடன் சிறிது நேரம் உட்கார்ந்த பிறகே கை, கால், முகம் கழுவ வேண்டும்.

**ஆலவாய் திருக்கோயிலில் வழிபடும் முறை**

துவாத சாந்தத் தலமாகிய திருவாலவாய் 64 சக்தி பீடங்களுள் முதல் பீடத்தைப் பெற்றுள்ளதால் எல்லாப் பூசைமுறைகளும் மீனாட்சி அம்பிகைக்கு முடிந்த பிறகே சுந்தரேசுவரர்க்கு நடைபெறுகின்றது. ஒவ்வொரு தலத்திற்கும் கோயிலில் சென்று வழிபட ப்ரத்யேக முறை ஒன்று உண்டு. மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலை வழிபட வேண்டிய முறை இன்னதென்பதை பக்தர்கள் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். இம்முறை தொன்று தொட்டு பின்பற்றப்பட்டு வருகிறது.

பக்தர்கள் மீனாட்சியம்மன் கோயிலின் கிழக்குக் கோபுரத்தை முதலில் கண்டு கைகூப்பித் தொழுத வண்ணம் உள்ளே புக வேண்டும். அட்டசக்தி மண்டபம், மீனாட்சி நாயக்கர் மண்டபம், அம்மன் முன் கோபுரவாயிலில் உள்ள திருவாசி விளக்குகள் முதலிப்பிள்ளை மண்டபம் ஆகியவற்றைக் கடந்து செல்ல வேண்டும்.

பின்பு பொற்றாமரைக் குளத்தில் நீராடி தூய ஆடை அணிந்து தென் மேற்குக் கரையிலுள்ள விபூதி விநாயகரை வணங்கி

“மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு

தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே"

என்று கூறி விபூதி தரித்துச் செல்ல வேண்டும். திருக்கோயில் வந்து நாம் குளத்திலே இறங்கி தீர்த்தத்தினை சிரசிலே தெளித்துக் கொள்ளலாம். தென்கிழக்குக் கரையிலிருந்து அம்மன்–சுவாமி கோயில்களின் தங்கவிமானங்களைக் கண்டு தரிசித்து கிளிக்கூட்டு மண்டபத்தில் உள்ள சித்திவிநாயகர், முருகர் முதலிய மூர்த்திகளை வணங்கி, அம்மன் திருச்சந்நிதியின் முன்உள்ள பலிபீடத்தைச் சுற்றித் திரும்பிவந்து மீனாட்சியம்மன் பிரதான வாயில் வழியாக நுழைந்து – இரண்டாம் பிரகாரம் வலமாக வரும்போது கிழக்கில் உள் திருமலை நாயக்கர் சிலையையும், மேற்கில் கொலுமண்டபம் சென்று கண்டு பின் வடமேற்கு பக்கம் உள்ள கூடல் குமாரர் சந்நிதியையும் வணங்க வேண்டும். அதன் பின்னர் கொடிமரத்தடி வழியே குமரகுருபரர் மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழை அரங்கேற்றம் செய்த ஆறுகால் பீடத்தின் விழியே உள்ளே நுழைந்து முதற்பிரகாரத்தை அடைந்து அதனை வலம் வரும்போது மூலஸ்தானத்திற்கு தென்பகுதியில் உள்ள இரட்டை வினாயகரையும் வழிபட்டு, தென்மேற்கில் உள்ள ஐராவதவிநாயகரையும் வல்லபை விநாயகரையும் நிருத்த கணபதியையும் வடமேற்கில் உள்ள முத்துக்குமார சுவாமியையும் வழிபட்டு கருவறை வெளிச்சுற்று மாடங்களில் எழுந்தருளியுள்ள மூன்று சக்திகளையும் முறையே வழிபட்டு வலமாக வந்து. மீனாட்சிஅம்மையை வணங்கியபின் வடபுரம் உள்ள சண்டிகேஸ்வரியையும் பள்ளியறையையும் தரிசித்து அதனருகில் உள்ள வாயில் வழியாக சுவாமி சன்னதி இரண்டாம் பிரகாரத்தை அடையவேண்டும்.

முக்குறுணி விநாயகரைத் தொழுது நடுக்கட்டு கோபுரமாடத்தில் மடைப்பள்ளி சாம்பல் வைக்கப்பட்டுள்ளது. அதனை திருநீறாக அணிந்து நம்முடைய முன் வினைகளை நீக்கவேண்டி இவரை வணங்கிய பின்பு பஞ்சலிங்கங்களையும் வடமேற்கு மூலையில் உள்ள 49 சங்கப்புலவர்களையும் தரிசித்துக் கொண்டு வடபுறம் உள்ள

திருக்கல்யாண சுந்தரரையும் வணங்கி பின் நவக்கிரகங்களைச் சுற்றி வந்து சட்ட நாதரையும் வழிபாடு செய்து நந்தி மண்டபத்தை அடையவேண்டும். நந்தியம் பெருமானிடம் நமசிவாய எனும் திருவைந்தெழுத்தைக் கூறி நன்முறையில் தரிசனம் கிடைக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.

அதன்பின் அனுக்ஞை விநாயகரைத் தரிசிக்க வேண்டும். பின்பு சுவாமி கோயிலில் பிரதான வாசலில் அமர்ந்திருக்கும் அதிகாரநந்தியை வணங்க வேண்டும். அதனைத் தொடர்ந்து முதற்பிரகாரத்தை அடைந்து வலம் வரும்போது வந்தியம்மை சிவலிங்கம். சூரியன், கலைமகள், தென்முகக்கடவுள், நாயன்மார்கள், சோமாஸ்கந்தர், பலவகை இலிங்கங்கள், பிட்சாடனர், சுந்தரமகாலிங்கர், காசிவிசுவநாதர், எல்லாம் வல்ல சித்தர், துர்க்கை, ஸ்தல விருட்சமான கடம்பமரம், கனகசபைநடராசர், அட்சரலிங்கம் 51, மகாலெட்சுமி, இரத்தின சபை நடராசர், பொற்படியான், வன்னியும் கிணறும் இலிங்கமும், பைரவர், சந்திரன் என்னும் மூர்த்தங்களை இங்குக் கூறியவரிசை முறைப்படி கண்டு தொழுது பின்பு ஆறுகால் பீடத்தின் வழியாகச் சென்று சந்திரசேகரர் முதலியவர்களைத் தொழுது வெள்ளியம்பலத்தில் கால்மாறியாடிய நடராசரை வணங்க வேண்டும். அதன்பிறகு மூலவரைத் தரிசித்து வணங்கவேண்டும். பின் சண்டிகேஸ்வரரை தரிசித்து நம் வழிபாட்டின் பலனை நல்குமாறு வேண்டுதல் செய்ய வேண்டும்.

பிறகு, நந்தியம்பெருமானை மீண்டும் தரிசித்து நன்றி கூறி பின்னர் நந்தி மண்டபம் சென்று அங்கு கிழக்குத் தூண்களில் உள்ள அக்கினி வீரபத்திரர், அகோர வீரபத்திரர், ஊர்த்துவதாண்டவர், காளி மற்றும் கம்பத்தடி மண்டபத்தில் உள்ள சிவபெருமானின் 25 மூர்த்தங்களையும் வணங்கி தென்புரத்தூணில் உள்ள ஆஞ்சநேயரையும் வணங்கியபடி கொடிக்கம்பத்தை அடையவேண்டும். அதனடியில்,

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை

கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்

பெண்ணில் நல்லாளோடும் பெருந்தகை இருந்ததே"

என்றபாடலை பாடிபின் இறைவனை ஆண்களும், பெண்களும் முறையாக வடக்கே தலையும் தெற்கில் கால்பகுதியும் இருக்கும்படி விதிகளில் கூறியவாறு விழுந்து வணங்கி அங்கு சிறிது நேரம் அமர்ந்து இறைவனைத் தியானிக்க வேண்டும். பின்னர் எழுந்து கிழக்குக் கோபுர வாசல் வழியே ஆயிரங்கால் மண்டபத்தைக் கடந்து வெளியே வரவேண்டும். இங்க கூறிய முறையில் சிரத்தையுடன் ஆலயத்தை வழிபட்டுத் திரும்பும் பொழுது நமது மனம் நம் வசப்படும் என்பது திண்ணம்.

# தினசரி பூசை முறைகள்

'சீவன்முத்திபுரம்' என்ற சிறப்புடைய மதுரைச் சொக்கநாதர் கோயிலில் நிகழும் நித்திய வழிபாட்டு முறைகள் காரணஆகமம், காமிகஆகமம் இவற்றின் வழி இயங்குவனவாகும். நித்திய வழிபாடு எட்டு காலங்களில் நிகழ்வது உத்தமமாகும். அவ்வாறே மதுரையில் திருவனந்தல், விளாபூசை, காலசந்தி, திரிகால சந்தி, உச்சிகாலம், சாயரட்சை, அர்த்தசாமம், பள்ளியறை என எட்டு காலங்களில் நித்திய வழிபாடுகள் நிகழ்கின்றன. இவ்வெட்டு கால பூசை நேரங்களில் மீனாட்சி அம்மை வெவ்வேறு கோலங்களில் விளங்குவது இத்தலத்தின் தனிச்சிறப்பு.

**திருவனந்தல்**

காலை 5 மணி அளவில் நிகழும் முதற்பூசை திருவனந்தலாகும். சித்தி விநாயகருக்கு வழிபாடு செய்து தொடங்கப்பெறும். பள்ளியறையில் உள்ள சோமசுந்தரப் பெருமானின் திருவடிகளைச் சுவாமி கோயிலுக்கு எழுந்தருளச் செய்வர். பின்னர் மீனாட்சி அம்மைக்கு வழிபாடு செய்து தொடங்கப் பெறும். இவ்வழிபாட்டின் போது மீனாட்சி அம்மை '**மகாசோடசி ரூபமாக**' விளங்குவதாக மரபு.

இறைவனைத் துயில் எழுப்பி வழிபாடு செய்யும் திருப்பள்ளி எழுச்சியாகும் இக்காலம். இப்பூசையின் முடிவில் அன்பர்களுக்கு ஞானப்பால் வழங்கப்பெறும்.

**விளாபூசை**

இக்காலத்தில் விநாயகர், சுப்பிரமணியர், அம்பாள், சுவாமி முதலிய மூர்த்திகளுக்கு நீராட்டல் செய்விக்கப்பெறும். ஸ்நபனம், புண்யாகவாசனம், அக்கினிகாரியம் முதலிய வைதீகச் சடங்குகளுடன் இவ்வழிபாடு தொடங்கப்பெறும்.

இவ்வழிபாட்டின் போது மீனாட்சி அம்மை '**பாலை**' வடிவில் காட்சி தருகிறாள். இவ்வழிபாடு காலை 6 மணி முதல் 7 மணிக்குள் நிகழ்வதாகும்.

**காலசந்தி**

இது காலைப்பூசை எனப்படும். இவ்வழிபாட்டில் நித்தியாக்கினி காரியமும், நித்திய பலியும் நிகழ்கின்றன. வைகை ஆற்றிலிருந்து திருமஞ்சனம் கொண்டு வரப்பெறும். பின்னர், அத்தீர்த்தம் பத்ரலிங்கம் எனப்படும் பலிபீடத்தில் அபிஷேகம் செய்யப்படும். பரிவார மூர்த்திகளுக்கு அபிஷேகம் நிகழ்த்தப் பெறும். இவ்வழிபாட்டின் போது அம்மை '**புவனை**' என்னும் சக்தி அம்சமாகத் திகழ்கின்றாள். இப்பூசைமுறை காலை 7.30 மணிமுதல் 8.30 மணிக்குள் நடைபெறுவதாகும்.

**திரிகாலசந்தி**

உச்சிகால வழிபாட்டிற்கு முன்னர் காலை 10.30 மணிமுதல் 10.45 மணிக்குள் இது நிகழ்த்தப்பெறுவதாகும். இக்காலத்தில் '**கௌரி**' என்னும் தேவி அம்சமாக மீனாட்சி விளங்குகிறாள்.

**உச்சிக்காலம்**

இது நடுப்பகலில் நிகழ்வதாகும். பகல்போதில் காலை 10.45 மணிமுதல் 11.15 மணிக்குள் நிகழும் வழிபாடுகளில் இவ்வழிபாடு சிறப்புடையதாகும். ஸ்நபனம், ஆவரண பூசை முதலியவற்றுடன் நிகழ்வது. இக்கால வழிபாட்டின் போது '**யாமளை (அ) ஷியாமளை**' வடிவில் மீனாட்சி விளங்குகின்றாள்.

மீனாட்சி அம்மை பசு வடிவாகச் சொக்கநாதப் பெருமானை வழிபாடு செய்தல் கோபூசையாகும். எல்லா உயிர்களுக்கும் இருப்பிடம் பசு. அவ்வடிவைக் கொண்டு அம்மை இறைவனை வழிபடுவதால் எல்லா உயிர்களும் இறைவனை வழிபட்ட பலன் இக்காலத்தில் கிடைக்கின்றது. பிள்ளையின் நோய்க்குத் தாய் மருந்துண்பது போல் மக்களாகிய உயிர் இனங்களின் உயர்வுக்கு அம்மை தானே பசு வடிவில் இறைவனை வழிபடுகிறாள்.

இவ்வழிபாடு முடிந்த பிறகு பகல் 12.30க்கு கோயில் நடை அடைக்கப்பெறும். மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்படும்.

**சாயரட்சை**

இது சாயங்காலம் 4.30 மணி முதல் 5 மணிக்குள் நிகழ்வதாகும். பிரதோச கால பூசை எனவும் வழங்கப்பெறும். இவ்வழிபாட்டின் போதும் ஆவாகனம், அபிஷேகம் முதலியன நிகழும். இப்பூசையின் போது **பஞ்சதசி** வடிவில் (சுகசியாமளையாக) மீனாட்சி அம்மை காட்சி தருகின்றாள். சாயரட்சை வழிபாட்டில் சோடசோபசாரத்துடன் தீபாராதனை நிகழும்.

**அர்த்தசாமம்**

இது இரவு 7.30 மணிமுதல் 8.15 மணிக்குள் நடைபெறும். இப்பூசை மதுரைக் கோயிலில் மிகச்சிறப்புடையது. இவ்வழிபாட்டில் மீனாட்சி அம்மை **'மாதங்கி'** கோலத்தில் வெண்ணிறத் துகில் உடுத்து, வெண்ணிற மலர்கள் அணிந்து சாந்த வடிவுடன் காட்சி தருகின்றாள். இக்கால வழிபாட்டிலும் அபிடேகம் முதலியன நிகழும்.

**பள்ளியறை**

இப்பூசையின்போது, பள்ளியறைக்குவரும் சிவபெருமானின் ஜடாமுடியிலிருந்து கங்கை இறங்கி எல்லா நீர்நிலைகளிலும் நிறைந்திருக்கிறாள். பின் காலையில் திருமஞ்சனக்குடநீரின் வழியாக சிவபெருமானின் ஜடாமுடியில் சேர்ப்பிக்கப்படுகிறாள். இது அர்த்தசாம வழிபாட்டை அடுத்து இரவு 9.15 மணிமுதல் 10 மணிக்குள் நிகழும். **'சோடசி'** என்னும் நிலையில் மீனாட்சி இக்காலத்தில் அருள் வழங்குகின்றாள்.

சோமசுந்தரப் பெருமானுக்குப் பள்ளியறை வழிபாடு நிகழ்த்திய பின்னர், அவருடைய திருவடிகளைப் பல்லக்கில் எழுந்தருளச் செய்து வேத, திருமுறை கோசங்களுடன் (திருமுறைபாராயணத்துடன்) மேளவாத்தியம் முழங்க அம்மையின் திருக்கோயிலுக்குக் கொண்டு வருவர்.

இக்காலத்தில் கோயிலின் வரவு செலவுக் கணக்குகள் பெருமான் முன்னர்ப் படிக்கும் வழக்கம் நடை பெறுகின்றது. மீனாட்சி சந்நிதியின் முன்பு பல்லக்கு வந்தவுடன் அர்ச்சகர், அம்மன் சந்நிதி சென்று,

அம்மனுக்கு பூஜையுடன், சப்தமுக கற்பூரஆரத்தி (மூக்குத்தி பூசை செய்து, பின் தீபாராதனை) காண்பித்து அம்மையே வந்து பாதபூசை செய்து அழைத்துச் செல்லும் பாவனையில் வழிபாடு செய்யப்பெறும். பின்னர் பள்ளியறையில் சுவாமியை எழுந்தருளச் செய்து பள்ளியறைப் பூசை நடைபெறும்.

இப்பூசையில் குழம்புப்பால், அப்பம் முதலியன நிவேதிக்கப்பெறும். இறைவனைப் பற்றிய பாடல்கள் பாடப்பெறும். அப்பாடலை நாதஸ்வரக் கலைஞர் வாசிப்பார். அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கி இப்பூசையை முடிப்பர்.

இக்காலத்தில் எல்லாச் சிவாலய மூர்த்திகளும் சொக்கநாதர் உருவில் ஒடுங்குவதாக மரபு. எனவே இவ்வழிபாட்டின் போது தரிசிப்பதால் எல்லாச் சிவாலயங்களையும் வழிபட்ட பலன் கிடைக்கும் என்பது துணிவு.

வெள்ளிக்கிழமைகளில் அர்த்தசாமம், பள்ளியறைப் பூசைகள் ஒரு மணிநேரம் கழித்து நடைபெறும். திருவிழாக்காலங்களில் சுவாமி, அம்மன் ஒருநாள் முழுவதும் (அ) மாலைவரை வெளி மண்டபங்கள் செல்வதாயிருந்தால் மாலைக் கால பூசை முடிந்து புறப்பாடாகும். சுவாமி திரும்பி வந்த பிறகு அர்த்தசாமம், பள்ளியறைப் பூசைகள் நடைபெறும்.

இவ்வாறு மதுரைக் கோயிலில் காலை 5 மணி முதல் இரவு 10 மணிவரை நாள்தோறும் நித்திய வழிபாடுகள் நிகழ்கின்றன. இவ்வழிபாடுகளை நிகழ்த்த மன்னர்களும், செல்வந்தர்களும் பல்வேறு காலங்களில் திட்டங்கள் செய்துள்ளனர். மதுரைக் கோயிலில் நித்திய வழிபாடுகளும், நைமித்திய வழிபாடுகளும் பிற கோயில்களுக்கு முன்னுதாரணமாகச் சிறந்த முறையில் திட்டம் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தந்த காலங்களில் ஆலயம் சென்று வழிபட்டால் மிக்க புண்ணியம் உண்டு. இதனை,

“காலை தொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம் – மாலையினில்

வந்து சிவன் தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயர மெல்லாம் விடும்."

என்று சிவதரிசன மகத்துவம் எடுத்துரைக்கின்றது.

மேலும் பிரதோஷ நாளில் மாலை பிரதோஷ நேரத்தில் சென்று தரிசனம் செய்வது மிகவும் சிறப்பு. பிரதோஷமானது வளர்பிறையிலும், தேய்பிறையிலும் வரும். திரயோதசி திதி நாளில் சூரியன் மறைவதற்கு முன்னுள்ள மூன்றே முக்கால் நாழிகையும் பின்னுள்ள மூன்றேமுக்கால் நாழிகையும் சேர்த்து பிரதோஷ காலம் என்பர்.

"வாழிய இருபக்கத்தும் வளர்திரயோ தசிக்கண்
ஆழியிற் கதிரோன் வீழும் அதற்குமுன் மூன்றேமுக்கால்
நாழிகை பின்னுமந்த நாழிகை இணையகாலம்
பாழியங் கடல்சூழ் வைப்போர் பகர்பிரதோடம் என்பார்."

"இன்ன புண்ணியகாலத்தில் எய்து தரிசிப்போர்கள்
முன்னர் வெம்பாவத் தாயமுருக்குவன் பிணிநிரப்போடு
என்ன பொல்லாங்குந்தீர்வர் இன்பமும் திருவும் பெற்று
பின்னர்நம் பெருமான் பாதம் பிரிவறக்கலந்து வாழ்வார்."

– மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

என்ற பாடல்களின் வழி பிரதோஷ காலத்தையும், அக்கால வழிபாட்டின் பயன்களையும் நன்குணரலாம்.

ஒவ்வொரு கால வழிபாட்டிற்கும் உரிய பலன்கள் இவை எனத் திருவிளையாடற்புராணம் பல நலன்களைக் கூறுகிறது. அப்பலன்களைப் பெறும் வகையில் நாமும் மீனாட்சி அம்மையையும், சொக்க நாதப்பெருமானையும் நித்திய வழிபாடுகளில் தரிசித்து நன்மைகள் பெறுவோமாக!

## திருவிழாக்கள்

திருவிழா என்று தென்மொழியிலும், உற்சவம் என்று வடமொழியிலும் வழங்கப்பெறும் தெய்வத் திருஉலாவானது, பாசச்

சேர்க்கையால் மயக்கமுறும் மக்களை பாசமயக்கத்தில் இருந்து விடுபடச் செய்யும் சாம்பவீ தீட்சையாக ஆகமங்கள் கூறுகின்றன.

முன்செய்வினை காரணமாக, அங்கம் நலிவுற்று, நோயுற்றுக் கோவில் சென்று வழிபட இயலாதோர்க்கும், மற்ற எல்லா வகையினருக்கும் ஆண்டவனின் அருள் நோக்கையும், ஆண்டவன் மூலமான ஆசார்யனின் அருள் நோக்கையும் அடையச் செய்வதே **சாம்பவீ தீட்சையான** உற்சவங்களாகும் இதையே,

"மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப்பொலிவுகண்டார்த்தல்
உண்மையாமென உலகர்முன் வருகென உரைப்பாம்"

எனச் சேக்கிழார்பெருமான், விழாக்களின் இன்றியமையாமை பற்றியும் அவற்றின் புண்ணியம் பற்றியும் கூறியுள்ளார்.

ஞானசம்பந்தரும் பூம்பாவைப் பதிகத்தில் உற்சவத்தின் பெருமையை

"உற்சவ விளக்கந் தன்னை யுரைத் திடினுயிர தற்கு
முற்சன னங்கள் விட்ட முகிழ்த்ததோர் கருணை யாலே
தற்பரந் தரும மாகித் தனிக்கொடி கட்டி உண்மைச்
சிற்பரத் துயிர்க்கண் முத்தி சேர்த்திடச் செய்வார் மன்னோ"

என 'பணிமாசாத்திரம்' எனும் நூலில் பாடியுள்ளார்.

பாண்டி நாட்டுப் பதினான்கு தலங்களில், சிறப்புற்ற மதுரைத் தலத்தினைப் பழைய இலக்கியங்கள் 'விழவுமலிமூதூர்' என அழைக்கின்றன. இதற்கு விழாக்கள் நிறைந்த தொன்மையான நகரம் என்பது பொருள். இப்பெயருக்கேற்றாற் போல் இத்தலத்தில் ஒரு வருடத்தில் 13 விழாக்கள் ஏற்படுத்தப்பட்டுப் பல நூற்றாண்டுகளாக

நடைபெற்று வருகின்றன. ஆண்டிற்கான **365** நாட்களில் **294** நாட்கள் இங்கு திருவிழாக்கள் நடைபெறுகின்றன. நாள்தோறும் நல்விழா; திங்கள்தோறும் திருவீதி உலா; ஆண்டு முழுவதும் மகிழ்ச்சி.

## முப்பெரும் விழா

தமிழ் நாட்டின் பண்டைய தலைநகரங்களில் மூன்று விழாக்கள் நடைபெற்று வந்தன. மதுரையில் மாதந்தோறும் திருவிழாக்கள் நடைபெற்றாலும் அவற்றுள் குறிப்பிட்டு சொல்லத் தக்க பெரிய விழாக்கள் மூன்று அவையாவன;

1. சித்திரைத் திருவிழா
2. ஆவணி மூலத் திருவிழா
3. தெப்பத் திருவிழா

என்பனவாம்.

## திருக்கல்யாண விழா

ஒவ்வொரு திருவிழாவும் தீர்த்தம் என்று சொல்லக்கூடிய திருவிழாவின் நிறைவு நாளை முடிவு செய்து கொண்டு உற்சவத்தை தொடங்க வேண்டும். அதன்படி சித்திரை நட்சத்திரத்தில் தீர்த்தத்தை முடிவு செய்து கொண்டு திருவிழா தொடங்கி நடத்தப்பெறுகின்றது. சித்திரை மாதத்தில் நடைபெறும் திருக்கல்யாண விழாவாகும் இது. இவ்விழா பனிரெண்டு நாட்கள் நடைபெறும்.

❖ சித்திரை மாதம் அமாவாசை கழிந்த இரண்டொரு நாளில் கார்த்திகை நட்சத்திரத்தில் கொடியேற்றத்துடன் தொடங்கும். அன்று மீனாட்சி அம்மையும், சுந்தரேசுவரரும் கற்பகவிருட்சம், சிம்ம வாகனங்களில் நகர்வலம் வருவர். நகர் சோதனைக்காக இவ்வாறு வலம் வருவதாக மரபு.

❖ இரண்டாம் நாள் சுந்தரேசுவரர் பூத வாகனத்திலும் அம்மன் அன்ன வாகனத்திலும் வீதி உலா வருவார். இவ்வாகனம் வெள்ளித்தகடு போர்த்தப் பெற்றிருக்கும். இறைவன் ஐம்பூதங்களையும் அடக்கி தன்

ஆணைவழி செலுத்துபவன் என்பதை இவ்வாகனம் உலகஉயிர்களுக்கு உணர்த்துகின்றது.

❖ மூன்றாம் நாள் இரவில் சுவாமி கைலாசபர்வத வாகனத்திலும் அம்பாள் காமதேனு வாகனத்திலும் உலாவருவர். அடியார்கள் வேண்டுவோர் வேண்டுவனவற்றை வழங்கவே மீனாட்சி அம்மை காமதேனு வாகனத்தில் எழுந்தருளுகின்றாள்.

❖ நான்காம் நாள் காலையில் சோமசுந்தரப் பெருமானும் மீனாட்சி அம்மனும் கோயிலினின்று புறப்பட்டு வில்லாபுரத்தில் உள்ள பாவக்காய் மண்டபத்தில் சென்று தங்குவர். இரவில் தங்கப்பல்லக்கில் ஊர்வலமாக திருக்கோயிலை வந்தடைவர்.

❖ ஐந்தாம் நாள் சுவாமியும், அம்பாளும் குதிரை வாகனத்தில் வலம் வருவது கண்கொள்ளாக் காட்சி. அடியவர்களின் குறைகளை விரைவாக களைவதற்காக வேகமாக செல்லக்கூடிய குதிரையில் எழுந்தருளுவதாக ஐதீகம்.

❖ ஆறாம் நாள் ஞானசம்பந்தர் சமணர்களுடன் வாதிட்டு வென்ற நிகழ்ச்சி விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டு, பாடல்கள் பாடி லீலை நிகழ்த்தப்பெறும். பிறகு சுவாமி, அம்பாள் ரிஷப வாகனத்தில் வீதிஉலா நடைபெறும்.

❖ ஏழாம் நாள் இறைவன் அதிகார நந்தி மீதும், இறைவி யாளி வாகனம் மீதும் பவனி வருவர். இறைவன் பிரதோச வழிபாட்டை மக்களுக்கு உணர்த்தும் பொருட்டு இவ்வாகனத்தில் எழுந்தருளுவதாக ஐதீகம்.

❖ எட்டாம் நாள் அருள்மிகு மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம். இவ்விழாவில் திருக்கோயில் நிர்வாகத் தலைமை அதிகாரி பாண்டிய மன்னனாகவும், தலைமைக் கணக்கர் பாண்டிய அமைச்சராகவும் வேடம்

புனைந்து செங்கோலை மீனாட்சிஅம்மனிடம் கொடுக்கும் சடங்கு நடைபெறும். அன்று முதல் (சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி) நான்கு மாதங்களுக்கு மீனாட்சி ஆட்சி நடைபெறுவதாக மரபு.

❖ ஒன்பதாம் நாள் மீனாட்சி அம்மன் திக்கு விஜயம். அரசர்கள் பலரையும் வென்று அட்டதிக்கு பாலகர்களை முறியடித்த காட்சி நிகழ்த்தப்பெறும்.

அதன்படி கீழமாசி வீதியில் இந்திரனையும், கீழக்கு, தெற்கு மாசி வீதிகளின் சந்திப்பில் அக்னியையும், தெற்கு மாசி வீதியில் எமனையும், தெற்கு மேலமாசி வீதிகளின் சந்திப்பில் நிருதியையும், மேலமாசி வீதியில் வருணனையும், மேற்கு வடக்கு மாசி வீதிகளின் சந்திப்பில் வாயுவையும், வடக்கு மாசி வீதியில் குபேரனையும், வடக்கு, கிழக்கு மாசி வீதிகளின் சந்திப்பில் ஈசானனையும் வெற்றி கொண்டு, பின் நந்தி தேவரையும் மீனாட்சி வெற்றி கொள்கிறாள். பின் சொக்க நாதரே போருக்கு வர அவரைக் கண்டவுடன் தடாதகைப்பிராட்டியான மீனாட்சி நாணம் கொள்ள அவளது மூன்றாவது தனம் மறைவதாக ஐதீகம். இந்நிகழ்ச்சியை விளக்கும் ஓவியங்களை ஊஞ்சல் மண்டபத்தில் காணலாம்.

❖ பத்தாம் நாள் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாண வைபவம் நடைபெறும். இது மேற்கு ஆடி வீதி, வடக்கு ஆடிவீதி சந்திப்பில் அமைந்துள்ள திருப்புகழ் மண்டபத்தின் அருகில் நிகழ்த்தப் பெறும். இவ்விழாவில் திருப்பரங்குன்றம் சுப்ரமணியரும், பவளகனிவாய்ப் பெருமாளும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்ச்சியில் குலசேகர பட்டர் வழி சிவாச்சாரியார் சுந்தரேசுவரராகவும், உக்கிர பாண்டிய பட்டர் வழி சிவாச்சாரியார் மீனாட்சியாகவும் வேடமேற்று மாலை மாற்றித் திருக்கல்யாண காட்சியை நிகழ்த்துகின்றனர். பிறகு மீனாட்சி அம்மனுக்கு மங்கல நாண் அணிவிக்கப்பெறும். பிரியாவிடை அம்மனுக்குப் பொட்டும், மாங்கல்யமும் அணிவிக்கப்பெறும் தொடர்ந்து திருமணச் சடங்குகள் நடைபெறும்.

இத்திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பக்தர்கள் மணமக்களுக்குத் திருமாங்கல்யம், பட்டுத்துணிகள், பணம் முதலியவற்றை மொய் செய்கின்றனர். இந்நிகழ்ச்சிக்குப் பின் குண்டோதரனுக்கு அன்னமிடல் எனும் திருவிளையாடற்புராண நிகழ்ச்சி நடைபெறும்.

❖ பதினோராம் நாள் தேர்த்திருவிழா நடைபெறும். ஊர்வலம் முடிந்தபின் இருவருக்கும் கிரீடம் அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

❖ பனிரெண்டாம் நாள் இந்திரன் சாப விமோசனம் பெற்ற திருவிளையாடற்புராண நிகழ்ச்சி நிகழ்த்தப்பெறும். அதன்பின்னர் கொடியிறக்கித் தீர்த்தத்திருவிழாவுடன் இச்சித்திரைத் திருவிழா இனிதே நிறைவுறுகிறது.

விழா நிறைவு நாளான சித்திராப் பௌர்ணமியன்று கள்ளழகர் தமது திருக்கோயிலிலிருந்து புறப்பட்டு வந்து வையை ஆற்றங்கரையில் உள்ள மண்டபத்தில் எழுந்தருளுவார். 5 நாட்கள் தங்குவார். அவற்றுள் ஒரு நாள் 'தசாவதார விழா' நடைபெறும். அன்று இரவு முழுவதும் விடியும்வரை அழகர் பத்து அவதாரத் திருமேனிகளாக அலங்கரிக்கப்படுவார். இக்காரணத்தால் இதனை 'அழகர் விழா' என்றும் கூறுவர். அழகர் ஆற்றில் இறங்கும் வைபவமும் நடைபெறும்.

வைகையாற்றின் வடகரையில் அழகர் விழா கொண்டாடும் வைணவ மக்களும் தென்கரையில் சித்திரைத் திருவிழாக் கொண்டாடும் சைவ மக்களும் திரண்டிருப்பது சைவமும், வைணவமும் சமயத்தின் இருகரைகள் என்பதை உணர்த்தும் வகையில் அமைந்திருக்கும்.

நாயக்கர் காலத்திற்கு முன்னதாக இவ்விரு விழாக்களும் தை மாதம் மக நட்சத்திரத்தில் தொடங்கி நடந்து வரும், மாசிமண்டல உற்சவத்தில் தான் நடந்து வந்தனவாம். சித்திராப் பௌர்ணமியன்று மதுரையில் எழுந்தருளிக் காட்சி தரும் அருள்மிகு கள்ளழகர் பெருமான்,

மதுரைக்கு மேற்கில் இருக்கும் 'தேனூர்' எனும் சிறு கிராமத்தில் வையை கரையில் காட்சி தந்து வந்தாராம்.

மாசிமாதத்தில் அறுவடைகள் பூர்த்தி பெறாத நிலையில் திருவிழாவைக் காணவர இயலாத வேளாண்குடி மக்களின் குறையை தீர்க்கவேண்டும் என்று எண்ணிய நாயக்கரது எண்ணத்தின் பூர்த்திதான் நாம் இன்று அருள்மிகு மீனாட்சி அம்மை திருக்கல்யாண விழாவும், கள்ளழகர் வைகைக் காட்சியும் ஆகிய எல்லா விழாக்களையும் ஒருங்கே காணும் பாக்கியம் பெற்றுள்ளோம். இந்த சித்திரைத் திருவிழாவின் பனிரெண்டு நாட்களும் மாசிவீதிகளிலேயே மீனாட்சி சொக்கேசபெருமான் எழுந்தருளுவார்கள்.

**வசந்த உற்சவம்**

வைகாசி மாதம் திருவாதிரை நட்சத்திரம் தொடங்கி விசாக நட்சத்திரம் வரை 10 நாட்கள் வசந்த உற்சவமாகக் கொண்டாடப்படுகிறது.

திருக்கல்யாண விழாக் கொண்டாடிய மீனாட்சி சொக்கேசருக்கு வைகாசி வசந்தவிழா எடுக்க எண்ணினார் திருமலை நாயக்கர் அந்த விழா முழுவதும் தம்செலவிலேயே, முழுவதும் தன்னுடையதான மண்டபத்திலேயே நடத்த எண்ணினார்.

எனவே சுவாமி சந்நிதித் தெருவில் கோயிலுக்கு மிக அருகில் குடியிருந்த அர்ச்சகர்களை சந்தித்துப் பேசி அவர்களுக்கு வடக்கு வாயிலில் வீடுகள் கட்டிக் கொடுத்தார். சந்நதித்தெருவில் தற்போது புதுமண்டபம் என்று வழங்கப்பெறும் வசந்த மண்டபமும், அதன் இருபுறத்தே நீராழி மண்டபமும், கிழக்கே வசந்த விழா நீர்த்தொட்டியும் அமைத்தார். அன்று முதல் வைகாசி விழா சிறப்புற அங்கே நடைபெற்று வருகின்றது. சித்திரை வீதி வலம் வந்து சுவாமி அம்மன் இரவு புதுமண்டபத்தில் பத்தி உலாத்தி பின்பு தீபாராதனையும் நடைபெற்று திருமலை நாயக்கர் சிலைக்கு பத்து நாட்களும் பரிவட்ட மரியாதை செய்யப்பெறுகிறது.



அம்மன் பட்டாபிஷேகம்



சுவாமி பட்டாபிஷேகம்

### ஊஞ்சல் உற்சவம்

ஆனி மாதம் மக நட்சத்திரம் முதல் மூல நட்சத்திரம் ஈறாக 10 நாட்கள் ஊஞ்சல் உற்சவம் நடைபெறும். அதுசமயம் சுவாமி அம்பாள் சமேதராக ஊஞ்சல் மண்டபத்தில் எழுந்தருளி அருள் பாலிப்பார்.

### முளைக்கொட்டு விழா

ஆடி ஆயில்ய நட்சத்திரம் முதல் கேட்டை நட்சத்திரத்தோடு முடிவடையும் 10 நாள் விழாவான 'முளைக் கொட்டு விழா' முழுவதும் மீனாட்சிக்கேதான். பண்டை நாட்களில் இந்த விழாவை முடித்த பின்தான் விவசாயப் பெருமக்கள் விவசாய வேலைகளைத் தொடங்குவார்களாம். இந்த விழா கோயில் ஆடி வீதிப் பிரகாரத்திலேயே கொண்டாடப்படுகிறது. இந்த விழாவில் நடைபெறும் குதிரை வாகனக் காட்சியும், புஷ்ப விமானக் காட்சியும், சைத்யோபசாரக் காட்சியும் மிகச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சிகளாகும்.

### பிட்டு உற்சவம்

அடுத்து வரும் 'பிட்டு உற்சவம்' அவிட்ட நட்சத்திரத்தோடு பூர்த்தியாகும் 18 நாள் விழாவாகும். இது ஐந்து கொடிகள் ஏற்றிச் சிறப்பாகத் துவங்கப்படும். துவக்கத்தில் ஆறுநாட்கள் சந்திரசேகரர் உற்சவமாகும். தொடர்ந்து மீனாட்சி சொக்கேசர் ஆவணி மூலவீதியில் எழுந்தருளுவர். ஆவணி மூலப் பெருவிழா என்றும் இதைச் சொல்வார்கள்.

| | திருவிளையாடல் | சுவாமி வாகனங்கள் | அம்மன் வாகனங்கள் |
|---|---|---|---|
| முதல் நாள் | கரிக்குருவிக்கு உபதேசித்தது | கற்பகத்தரு | சிம்ம வாகனம் |
| இரண்டாம் நாள் | நாரைக்கு முத்தி கொடுத்தது | பூதவாகனம் | அன்னவாகனம் |
| மூன்றாம் நாள் | மாணிக்கம் விற்றருளியது | கைலாசவாகனம் | காமதேனு வாகனம் |
| நான்காம் நாள் | தருமிக்கு பொற்கிழியளித்தது | தங்கச்சப்பரம் | யானைவாகனம் |
| ஐந்தாம் நாள் | உலவாக்கோட்டை அருளியது | அதிகாரநந்தி | யாளி வாகனம் |
| ஆறாம் நாள் | பாணனுக்குஅங்கம் வெட்டியது | இடபவாகனம் | இடபவாகனம் |
| ஏழாம் நாள் | வளையல் விற்றது | தங்கப்பல்லக்கு | தங்கப்பல்லக்கு |
| | சொக்கநாதர் பட்டாபிஷேகம் | | |

| | | | |
|---|---|---|---|
| எட்டாம் நாள் | குதிரை கயிறு மாற்றுதல் | | |
| | நரிபரியாக அருளியது | | |
| ஒன்பதாம் நாள் | பிட்டுக்கு மண்சுமந்தது | இடபவாகனம் | இடபவாகனம் |
| பத்தாம் நாள் | விறகு விற்றது | சப்பரம் | சப்பரம் |

பதினோராம் நாள் தேர்த்திருவிழா நடைபெறும். பனிரெண்டாம் நாள் தீர்த்தவாரியோடு விழா இனிதே நிறைவுறும்.

# புராணக் கதைகள்

## கரிக்குருவிக்கு உபதேசித்தது

முற்பிறவியில் எவ்வளவோ புண்ணிய காரியங்கள் செய்திருந்தாலும் சிறிது பாவமும் செய்தமையால் ஒருவன் மறுபிறப்பில் கரிக்குருவியாக பிறந்தான். அந்த கரிக்குருவியைக் காகங்கள் மிகவும் துன்புறுத்தின. அவற்றிற்கு பயந்து கரிக்குருவி நெடுதூரம் பறந்து சென்று ஒரு மரத்தின் கிளையில் தன் நிலையை எண்ணி வருந்தியபடியே அமர்ந்திருந்தது.

அச்சமயம் அம்மரத்தின் கீழே ஒருசிலர் மதுரையைப் பற்றியும் பொற்றாமரைக் குளத்திலே நீராடி சோமசுந்தரரை வழிபட்டால் எண்ணியது நடக்கும் என்றும் உரையாடினர். கரிக்குருவி அங்கிருந்து நேரே மதுரைக்கு வந்தது. பொற்றாமரைக் குளத்திலே நீராடி இறைவனை வணங்கியது. இறைவனும் அக்கருவியின் பக்திக்கு இரங்கி மிருத்யுஞ்சய மந்திரத்தை உபதேசித்தார். மேலும் கரிக்குருவியின் இனத்தையே 'எளியான்' என்னும் பெயர் மாற்றி 'வலியான்' என வழங்கும்படி செய்தார்.

## நாரைக்கு முக்தி கொடுத்தது

மதுரைக்குத் தெற்கே ஒரு தடாகத்தில் ஒரு நாரை வாழ்ந்து வந்தது. அக்குளம் நீர் வற்றியதால் மற்றொரு குளத்திற்குச் சென்றது. அக்குளத்திலே முனிவர்கள் நீராடினர். அவர்கள் மேலே புரண்டு

விளையாடிய மீன்களை உண்ணலாகாது எனக் கருதி உண்ணாமலே இருந்தது.

அம்முனிவர்களின் உரையாடலால் மதுரையைப் பற்றி அறிந்த நாரை மதுரைக்கு வந்து பொற்றாமரைக் குளத்திலே நீராடி இறைவனை வணங்கி முக்திப் பேறு பெற்றது. மேலும் அந்த நாரை இறைவனிடம், "பொற்றாமரைக் குளத்திலே நீர்வாழ் உயிர்கள் எதுவும் இருக்கக்கூடாது. இருந்தால் மற்ற பறவைகள் அதனை உண்ணக் கூடும்" என வேண்டிக் கொண்டது. இன்றுவரை அக்குளத்தில் நீர்வாழ் உயிரினங்கள் எதுவும் இல்லை என்பது கருதற்குரியது.

## மாணிக்கம் விற்றருளியது

வீரபாண்டியன் நீதியுடன் ஆட்சி புரிந்தான். அவனுக்கு ஒரு ஆண்மகவு பிறந்தது. பல காமக்கிழத்திகளை வைத்திருந்தான். அவர்களுக்கும் நிறைய பிள்ளைகள் பிறந்தனர். ஒரு சமயம் வேட்டையாடச் சென்ற அரசன் புலிக்கு இரையாகி இறந்தான்.

அவ்வமயம் அரசனது காமக்கிழத்தியரின் மக்கள் அரண்மனைக்குள் புகுந்து சகல செல்வங்களையும், மணிமகுடத்தையும் கவர்ந்து சென்றனர். இளவரசனுக்கு முடிசூடலாம் என்று அமைச்சர்கள் முடிவு செய்தனர். மணிமகுடம் முதலானவை களவு போனதை அறிந்து சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட எண்ணினர்.

அப்போது சோமசுந்தரப் பெருமானே ஒரு நவரத்தின வியாபாரியாகத் தோன்றி அங்கு வந்து நடந்ததைக் கேட்டறிந்து புதிய மணிமகுடம் செய்ய விலையுயர்ந்த நவமணிகளைக் கொடுத்து, அம்மணிகளின் வரலாறு, குணம், குற்றங்கள், யார் எந்த மணியை அணிய வேண்டும் போன்ற செய்திகளையும் கூறினார். புதிய மகுடத்தை சூட்டி இந்த குமாரனை 'அபிடேகபாண்டியன்' என்று அழையுங்கள் என்று கூறி மறைந்தார்.

கவர்ந்து செல்லப்பட்ட செல்வங்களும், மணிமகுடமும் மீண்டும் கிடைக்கப் பெற்று நலமுடன் வாழ்ந்தார்கள். அபிடேகப் பாண்டியனும் செங்கோல் வழுவாமல் ஆட்சி புரிந்தான்.

## தருமிக்கு பொற்கிழியளித்தது

வங்கிய சூடாமணி பாண்டியன் இறைவனுக்குப் பூசை செய்ய நறுமணமிக்க செண்பக மரங்களை தன் நந்தவனத்தில் வளர்த்து வந்தான். இளவேனிற் காலத்தில் அரசியும் அருகிலிருக்க நந்தவனத்திலே உன்னதமான ஒரு புதிய வாசனையை உணர்ந்தான் மன்னன். அது தன் தேவியின் கூந்தலில் இருந்து வருவதாக உணர்ந்த அவன் பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உள்ளதோ? என்று சந்தேகம் கொண்டான்.

தன் ஐயத்தை நீக்குபவருக்குக் கொடுப்பதாகக் கூறி ஆயிரம் செம்பபொன் கொண்ட ஒரு கிழியை சங்க மண்டபத்திலே தொங்க விட்டான். பல புலவர்கள் தங்கள் மனதில் தோன்றியதைப் பாடினார்கள். அரசனின் ஐயம் தீரவில்லை.

தருமி என்ற ஆதிசைவ பிரம்மசாரி ஒருவன் சொக்கநாதரை பூசிக்க விரும்பினான். மணமான பிறகே பூசிக்கலாம் என்பதால் தனக்கு அந்த பரிசை கிடைக்கும்படி செய்தால் அப்பொருளைக் கொண்டு தானும் மணம்புரிந்து இறைவனைப் பூசிக்கலாம் என்று எண்ணி இறைவனிடம் வேண்டினான். இறைவனும்

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழிஇய நட்பின் பயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளதோ நீ அறியும் பூவே"

என்ற செய்யுள் எழுதப்பட்ட ஓலையினை அவனுக்கு வழங்கினார்.

தருமியும் சங்கத்திற்குச் சென்று அச்செய்யுளினைப் படித்துக் காட்ட, அரசன்தன் சந்தேகம் தீர்ந்ததாகக் கூறி அப்பொற் கிழியை தருமிக்கு அளிக்க உத்தரவிட்டான். நக்கீரர் அதனைத் தடுத்தார். தருமி இறைவனிடம் "ஐயனே! உன் பாட்டில் குற்றம் கூறினால் யார் உன்னை மதிக்க வல்லவர்?" என்று புலம்பி வருந்தினான்.

இறைவன் ஒரு புலவர் வடிவத்தில் சங்க மண்டபத்திற்கு வந்தார். தன் செய்யுளில் என்னகுற்றம் என்று வினவ நக்கீரரும் பொருட்குற்றம் உள்ளது எனக் கூறினார். இருவருக்குமிடையே வாதம் தொடர இறுதியாக இறைவன் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டினார். இறைவனே வந்திருக்கிறார் என்று அறிந்த பின்னரும் நக்கீரர் பொருட்குற்றம் உள்ளது என வாதாட நெற்றிக் கண் வெப்பம் தாளாமல் பொற்றாமரைக் குளத்தில் விழுந்தார். இறைவனும் மறைந்தார்.

இவ்வாறு நக்கீரரின் தமிழ்ப்புலமையை உலகுக்கு உணர்த்திய இறைவன் மற்ற புலவர்களின் வேண்டுதலுக்கிறங்கி பொற்றாமரைக் குளத்திலிருந்து நக்கீரனை உயிர்ப்பித்துக் கொடுத்தார். நக்கீரரும் பொற்கிழியை தருமிக்கே கொடுக்கும் படிச் செய்தார்.

## உலவாக் கோட்டை அருளியது

அடியார்க்கு நல்லார் என்ற ஒரு அடியார் மதுரையில் தினமும் சிவனடியார்களுக்கு உணவளித்த பிறகே உண்பது என்ற கொள்கை உடையவராக இருந்தார். அவரது செல்வம் வற்றிய போதும் கடன் பெற்றாவது தனது கடமையை ஆற்றி வந்தார். கடனும் கிடைக்காத நிலையில் அவர் தனது மனைவியுடன் சோமசுந்தரரை தரிசித்துப் பின் உயிர் நீப்பதென்றெண்ணி கோயிலுக்குச் சென்றார்.

அவரது தருமநெறியின் உண்மை நிலை கண்ட இறைவன் அசரீரியாகத் தோன்றி "வீட்டிற்குச் செல்! அங்கே உனக்காக அள்ள அள்ளக் குறையாத நெல்மணிகளைக் கொண்ட உலவாக் கோட்டை ஒன்றை அளித்துள்ளோம்" என்று கூறினார். அதன்படியே இருவரும் வீடு

திரும்பி உலவாக் கோட்டை மூலம் கிடைத்த நெல்மணிகளைக் கொண்டு கடைசி காலம் வரை சிவனடியார்க்கு உணவளித்து வாழ்ந்தனர்.

### பாணனுக்கு அங்கம் வெட்டியது

குலோத்துங்க பாண்டியன் காலத்தில் பாணன் என்ற ஒரு வயது முதிர்ந்தவர் வாள்வித்தை ஆசிரியராகப் பணியாற்றி வாழ்ந்து வந்தார். அவரது சிஷ்யர்களில் சித்தன் என்னும் ஒருவன் மிகவும் தீய குணங்கள் கொண்டவன். பயிற்சி முடித்து சென்ற அவன் தானும் ஒரு பள்ளி அமைத்து ஆசிரியரின் மாணவர்களையெல்லாம் அங்கு அழைத்துக் கொண்டான். அத்தோடு ஆசிரியரின் மனைவியிடமும் தவறாக நடக்க முயற்சித்தான், இதனை அவள் சோகசுந்தரரிடம் முறையிட்டாள்.

இறைவனும் ஆசிரியர் வேடம் தாங்கிச் சென்று சித்தனை வாட்போருக்கு அழைத்து, ஆசான் மனைவியை நினைத்த நெஞ்சையும், பேசிய நாக்கையும், அந்தம்மாளைத் தொட்ட கைகளையும் கண்ட கண்களையும் காத்துக் கொள் என்று கூறி ஒவ்வொரு அங்கமாக வெட்டி இறுதியாக அவன் தலையையும் வெட்டிக் கொன்றார். இச்செய்திகளை அறிந்த குலோத்துங்க பாண்டியன் ஆசிரியருக்குத் தக்க மரியாதைகள் செய்து கௌரவித்தார்.

### வளையல் விற்றது

தாருகாவனத்து ரிஷிகள் தங்கள் மனைவியரே கற்பில் சிறந்தவர்கள் என்று செருக்குற்றிருந்தனர். அச்செருக்கை அடக்க எண்ணிய சொக்கநாதர் பிட்சாடனர் கோலத்தில் தாருகாவனத்திற்குச் சென்றார். பிச்சையிட வந்த அத்தனை ரிஷிபத்தினிகளும் அவரது அழகிலே மயங்கி நின்றனர். கோபமுற்ற ரிஷிகள் அப்பெண்களை மதுரையிலே சாதாரண வணிகர் குலப் பெண்களாக பிறக்கும்படி சபித்தனர். தங்கள் தவறையுணர்ந்து சாபவிமோசனம் கேட்ட பத்தினிகளுக்கு "இறைவனே வந்து உங்கள் கைகளிலே வளையல்

சூடுவார் அப்பொழுது உங்கள் சாபம் தீர்ந்து எங்களை வந்தடைவீர்கள்" என்றுரைத்தனர்.

அவ்வாறே ரிஷிபத்தினிகளும் செட்டிப் பெண்களாக மதுரையிலே பிறந்து வளர்ந்தனர். இறைவனும் வளையல் வியாபாரியாக அத்தெருவிலே வந்த அவர்கள் கைகளைத் தொட்டு வளையல் அணிவிக்க அவர்களும் சாபம் தீர்ந்து சிவலோகம் சென்றனர்.

### நரியை பரியாக்கியது

மாணிக்க வாசகர் அரிமர்த்தன பாண்டியனிடம் 'தென்னவன் பிரமராயன்' என்ற பட்டத்துடன் அமைச்சராக பணியாற்றி வந்தார். மன்னன் படைக்குக் குதிரைகள் வாங்குவதற்காக பெரும்பொருளுடன் மாணிக்க வாசகரை அனுப்பினார். திருப்பெருந்துறை என்னும் தலத்தை அடைந்தவுடன் இறைவனைக் குருவாகப்பெற்ற மணிவாசகர் அங்கே சிவாலய திருப்பணி, சிவனடியார் திருப்பணி என முழுப் பொருளையும் செலவிட்டார்.

அரசனிடமிருந்து அழைப்பு வரவும் வெறுங்கையாக இருந்த மணிவாசகர் செய்வதறியாது இறைவனைத் தொழுதார். இறைவனும் ஆவணி மூலத்தன்று குதிரைகள் வந்து சேரும் என்று கூறும்படி பணித்தார். ஆவணி மூலத் திருநாளும் வந்தது. குதிரைகள் வராதது கண்டு மன்னன் மாணிக்கவாசகரை சிறையில் அடைத்துத் துன்புறுத்தினான். மணிவாசகர் இறைவனிடம் முறையிட இறைவன் காட்டிலுள்ள நரிகளை எல்லாம் குதிரைகளாக்கி, சிவகணங்களைக் குதிரை பாகர்களாக்கி, தானே தலைவனாக ஒரு குதிரையின் மீதேறி மதுரை வந்தடைந்தார். அரசனும் மகிழ்ந்து மாணிக்க வாசகரைப் பாராட்டினான். ஆனால் அன்றிரவே அந்த குதிரைகள் மீண்டும் நரிகளாக மாறி அங்கிருந்த குதிரைகளைக் கொன்றுவிட்டு காடுநோக்கி ஓடின.

மணிவாசகரை தண்டிக்கப் புகுந்த அரசன் அவரைக் கட்டி சுடுமணலில் கிடத்தச் செய்தான். இறைவன் அவரைக் காக்கும் பொருட்டு வையையாற்றில் வெள்ளப் பெருக்கெடுக்கச் செய்தார்.

## பிட்டுக்கு மண் சுமந்தது

வையையாற்றில் பெருக்கெடுத்த வெள்ளத்தை அடைக்க வீட்டிற்கொருவர் வர வேண்டும் என்று அரசர் ஆணையிட்டார். வந்தி என்னும் பிட்டு விற்கும் கிழவிக்கு ஒருவருமில்லை. இறைவனே கூலியாளாக வடிவெடுத்து வந்தி தந்த பிட்டுக்காக மண் சுமக்கிறேன் என்று கூறினார். ஆனால் தன் பங்கு கரையை அடைக்காமல் பிட்டருந்தி, ஆடிப்பாடி, ஆழ்ந்த துயில் கொண்டார். பார்வையிட வந்த மன்னன் தன் கையிலிருந்த பிரம்பால் அவர் முதுகில் அடிக்க அனைத்து உலக உயிர்கள் முதுகிலும் அவ்வடி பட்டது. அரசன் உண்மை உணர்ந்தான். இறைவன் அசரீரியாக மணிவாசகர் பெருமையை மன்னனுக்கு உணர்த்தவே தாம் இவ்வாறு செய்ததாகக் கூறினார்.

## விறகு விற்றது

வரகுண பாண்டியன் ஆட்சி காலத்தில் ஏமநாதன் என்னும் புலவன் பாண்டி நாட்டிற்கு வந்தான். யாழ் வாசிப்பதில் வல்லவனான அவன் அரசன்முன் யாழ் மீட்டினான். யாழிசையில் மயங்கிய அரசன் ஏமநாதனை பாராட்டினான். ஏமநாதனும், அவனது சீடர்களும் மிகவும் செருக்கடைந்தார்கள்.

அரசவை ஆஸ்தான வித்துவானான பாணபத்திரனை அழைத்து அரசர் ஏமநாதனுடன் போட்டியிட பணித்தார். தெருவெங்கும் ஏமநாதன் சீடர்களின் யாழிசையைக் கேட்ட பாணபத்திரன் ஏமநாதனை வெல்லும் வழியறியாமல் சோமசுந்தரரை வேண்டி நின்றார்.

இறைவனும் ஒரு முதியவர் உருவம் கொண்டு விறகு விற்பவராக ஒரு யாழை எடுத்துக் கொண்டு ஏமநாதன் தங்கியிருந்த வீட்டுத் திண்ணையில் அமர்ந்து வாசித்துக் கொண்டே பாடினார். அந்த தெய்வ கானத்தைக் கேட்ட ஏமநாதன் வெளியே வந்து விறகு விற்பவரை "நீயார்?" என்று வினவ அவரும் பாணபத்திரரால் வயோதிகர் என்று ஒதுக்கப்பட்ட ஆள் என்று கூறினார். ஒதுக்கப்பட்ட ஆளுக்கே இவ்வளவு திறமை என்றால் தன்னால் பாணபத்திரரை வெல்ல முடியாது என அஞ்சிய ஏமநாதன் இரவோடு இரவாக அவ்வூரை விட்டே சென்றான்.

சுவாமி திருக்கோலங்கள்













# அம்மன் திருக்கோலங்கள்













ஆவணி மூலத்திருவிழா



கரிக்குருவிக்கு உபதேசம்



நாரைக்கு முக்தி கொடுத்தது



மாணிக்கம் விற்றது



தருமிக்குப் பொற்கிழி அளித்தது



பாணனுக்கு அங்கம் வெட்டியது



வளையல் விற்றது

## திருஉலாக்களில் சுவாமி, அம்மன்



கற்பகதரு வாகனம்



சிம்ம வாகனம்



பூத வாகனம்



அன்ன வாகனம்



கைலாச பர்வத வாகனம்



காமதேனு வாகனம்

## திருஉலாக்களில் சுவாமி, அம்மன்



நந்திகேசுவரர் வாகனம்



யாளி வாகனம்



தங்கக்குதிரை வாகனம்



தங்கக்குதிரை வாகனம்



தங்கச்சப்பரம்



தங்கச்சப்பரம்



தங்கப்பல்லக்கு



தங்கப்பல்லக்கு

# திருவிளையாடல் திருஆபரணங்கள்



சடாமகுட குவளை
(சிவலிங்கம்)



வில்வதழையுடன் கூடிய
வைர நெற்றிப்பட்டை



பொற்கிழி செம்பு



உலவாக்கோட்டை



தங்க மண்வெட்டி, கூடை



தங்க மண்வெட்டி, கூடை மற்றும்
விறகுக்கட்டு

திருஆபரணங்கள்



நீலக்கல் பதக்கம்



பச்சைக்கல் தாலிப்பதக்கம்



கல்லிழைத்த பதக்கம்



நீலநாயகப்பதக்கம்



கல்லிழைத்த மகர குண்டலம்



தங்க மகர குண்டலம்



பொன்னிழைத்த சங்கு



வெள்ளிபோர்த்த சங்கு

# அம்மன், சுவாமி முடியணிகள்



கல்யாண கிரீடம்





முத்து உச்சிக்கொண்டைக் கிரீடம்



முகலாயக் கிரீடம்



முத்து மாம்பழக்கொண்டைக் கிரீடம்



மாம்பழக்கொண்டைக் கிரீடம்



தங்க மாம்பழக்கொண்டைக் கிரீடம்



திலகக் கிரீடம்



சும்மாடு கிரீடம்

## திருஆபரணங்கள்



உற்சவர் சுவாமி முத்தங்கி



முத்துமேற்கட்டி



உற்சவர் அம்மன் முத்தங்கி



உற்சவர் அம்மன் முத்தங்கி



கல்லிழைத்த பாடக சீர்பாதம்



வைரநெற்றிப்பட்டை



பவள முத்துமாலை



தங்கச்சடை சிங்காரம்

# திருஆபரணங்கள்



யாளிமுகத்தோடா



யாளிமுகத்தோடா



பவளக்கைக்காப்புகள்



பொன் மணிலா கைக்காப்பு



கல்லிழைத்த தங்க அங்கவடி (கலெக்டர் ரோஸ்பீட்டர் வழங்கியது)

ஒவ்வொரு நாள் விழாவிலும், மதுரையம்பதியில், பக்தர்கள் பொருட்டுச் சொக்கநாதப் பெருமானால் நிகழ்த்தப்பட்ட திருவிளையாடல்களின் பெருமையை விளக்கும் முறையில் ஓதுவார் மூர்த்திகளாலும், அர்ச்சகர் பெருமக்களாலும், மற்ற எல்லா சமூக ஊழியர்களாலும், பாவனாரூபமாக நடித்துக் காட்டவும். பாடலாக பாடவும், உரையாக நிகழ்த்தவும் செய்து அவர்களுக்கு யானை ஏற்றம், பல்லக்கு ஏற்றம் முதலான சகல மரியாதைகளும் கொடுத்து ஆண்டவனின் திருவிளையாடல் தத்துவங்களைப் புரிய வைப்பதோடு, வேற்றுமையற்று எல்லா நிலை ஊழியர்களுக்கும், கௌரவம் அளிக்கப்படும் ஒருமைப்பாட்டு உணர்வை உலகத்தார்க்கு அளிக்கும் உயர்உணர்வு விழாவாக இது திகழ்கிறது.

மேற்கூறிய திருவிளையாடற் புராணத் தொடர்பான உற்சவங்களில், கோயில் பணியில் ஈடுபட்டுள்ள அந்தந்த இனஅர்ச்சகர்களின் பிரதிநிதிகளைத் தக்கமரியாதையுடனும் மேளதாளங்களுடனும் அழைத்து வரச் செய்து சொக்கநாதப் பெருமான் திருவுலாவோடு உடன் வரச்செய்து குறிப்பிட்ட திருவிளையாடல் பற்றி விவரிக்கப்பட்டபின் யானை, குதிரை, பல்லக்கு ஆகியவற்றில் இருக்கச் செய்து அவரவர் இல்லங்களில் மரியாதையுடன் விட்டு வருவது பாண்டிய மன்னர்கள் காலந்தொட்டு நடந்துவரும் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

**நவராத்திரி விழா**

புரட்டாசி மாதம் பூர்வபட்சம் பிரதமை முதல் நவமி ஈறாக 9 நாட்கள் நவராத்திரி விழா மிக விமர்சையாகக் கொண்டாடப்படும். ஒவ்வொரு நாளும் மீனாட்சி அம்பிகை பிரகாரத்தில் உள்ள கொலு மண்டபத்தில் வெவ்வேறு அலங்காரங்களில் கொலுவீற்றிருப்பாள். மூலஸ்தானத்தில் ஒன்பது நாளும் சிறப்பு அலங்காரங்களும் கல்ப பூசையும் நடைபெறும்.

**சிறப்பான கொலு அலங்காரங்கள்**

இராஜராஜேஸ்வரி

மாணிக்க வாசகருக்கு உபதேசித்தது

வேதத்திற்கு பொருள் உரைத்தது
தடாதகைப் பிராட்டியார் திருஅவதாரம்
தடாதகை ப்பிராட்டியார் திருமணம்
குண்டோதரனுக்கு அன்னமிடல்
முருகனுக்கு வேல் வழங்குதல்
மஹிஷாசுர மர்த்தினி
சிவபூஜை

போன்ற கொலு அலங்காரங்கள் செய்யப்படும். இந்த அலங்காரங்கள் வருடத்திற்கு வருடம் மாறுதலுக்குட்பட்ட வையாகும்.

**கோலாட்டத் திருவிழா**

ஐப்பசி மாதம் பூர்வபட்சம் பிரதமை முதல் சஷ்டி ஈறாக 6 நாட்கள் கோலாட்டத் திருவிழா நடைபெறும். புதுமண்டபத்தில் நடைபெற்று வரும் இந்த விழாவில் மீனாட்சி அம்மை உலாவரும் பொழுது உடன் இசையோடு கோலாட்ட ஒலி முழக்கிவரும் கன்னிப் பெண்கள் எல்லோருக்கும் மீனாட்சி அம்மையின் பிரசாதம் அன்பர்களுக்கு விநியோகம் நடைபெறும்.

**பவித்ர உற்சவம்**

மேலும் இந்த மாதத்தில் பௌர்ணமி அன்றோடு முடிவு பெறும் ஐந்து நாள் 'பவித்ர உற்சவம்' மிகப் புனிதமிக்கது. சுவாமியின் விழாவிலும் பூஜா காரியங்களிலும் ஏற்படும் குறைகளை நீக்கக் கூடியதாகவே இந்த விழாக் கொண்டாடப்படுகிறது.

இவ்வாறு ஐப்பசி மாத்தில் இருவிழாக்கள் தனித்தனியே நடைபெறுகின்றன.

**தீபத் திருவிழா**

கார்த்திகை மாததீப உற்சவம் சதய நட்சத்திரத்தில் கொடியேற்றத்துடன் (துவஜாரோகணத்துடன்) தொடங்கி திருவாதிரை

நட்சத்திரத்தோடு முடிவடையும் 10 நாள் விழாவாகும். ஆறாம் நாள் விழாவன்று ஓர் இடபவாகனக் காட்சியும் ஏழாம் நாள் திருக்கார்த்திகை அன்று ஓர் இடப வாகனக் காட்சியும் பத்தாம் நாள் விழா அன்று ஓர் இடப வாகனக் காட்சியும் காணக் கூடியது இந்த விழாவின் சிறப்பு அம்சமாகும். கார்த்திகைத் திருநாளன்று கோயில் மதில்கள், மேல்மண்டபங்கள், கோபுரங்கள், பொற்றாமரைக் குளக்கரை பிரகாரங்கள், சந்நிதிகள் என எங்கும் தீபம் ஏற்றி வழிபாடு செய்வர். வீதிகளில் 'சொக்கர் பனை' (பனை ஓலையை) எரிக்கும் நிகழ்ச்சியும் நடைபெறும்.

**எண்ணெய்க்காப்பு விழா**

மார்கழி மாதம் முழுவதுமே விழாக் கோலம்தான். ஏறத்தாழ 15 ஏக்கர் அளவில் கட்டப்பட்டுள்ள இந்தக் கோயிலையே சிறியதாக ஆக்கும் அளவிற்குக் காலை 4 மணிக்கே தினம் பக்தர்கள் கூட்டம் பெருகுகிறது. சதய நட்சத்திரம் தொடங்கி திருவாதிரை அன்றோடு நிறைவு பெறும் 10 நாள் எண்ணெய்க் காப்பு விழாவும், அதே நாள் காலையில் மாணிக்க வாசகப் பெருமானை எழுந்தருள்வித்து ஓதுவார் மூர்த்திகளால் திருவெம்பாவை இன்னிசை முழங்கச் செய்விக்கும் விழாவும் நடைபெறுகின்றன. இந்த மாத அஷ்டமியன்று இடபவாகனத்தோடு திருத்தேரில் மீனாட்சி சொக்கேசப்பெருமான் எழுந்தருள்வதும் பக்தர்கள் கூட்டமும் காணக் கண் கொள்ளாக் காட்சியாகும்.

**அஷ்டமிச்சப்பரம்**

ஒரு சமயம் உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் படியளப்பதற்காக சிவபெருமான் புறப்பட்டார். அவரை சோதிக்க நினைத்த அம்மன், பாத்திரத்தில் எறும்பு ஒன்றை அடைத்து வைத்தார். எல்லா உயிர்களுக்கும் படி அளந்த திருப்தியில் திரும்பிய சிவ பெருமானிடம், 'ஒரு உயிருக்கு மட்டும் நீங்கள் படியளக்கவில்லை' என்றார் அம்மன். பாத்திரத்தை திறந்து பார்த்த போது அந்த எறும்புக்கு அருகிலும் ஒரு அரிசி இருந்தது.

ஒவ்வொரு ஆண்டும் மார்கழி தேய்பிறை அஷ்டமி நன்நாளில் சுவாமியும், அம்மனும் மதுரை நகர் வீதிகளின் வழியாக அனைத்து உயிர்களுக்கும் படி அளக்கும் வகையில் உலா வருவது வழக்கம்.

வரும் வழியில் ஜீவராசிகளுக்கு படியளப்பதற்காக பக்தர்கள் ரோட்டின் இரு புறமும் அரிசியை தூவுவர். அம்மன் சப்பரத்தை பெண்களே இழுத்து வருவர்.

**தெப்பத் திருவிழா**

தை மாதம் திருவாதிரை நட்சத்திரத்தைத் தீர்த்தமாகக் கொண்டு 12 தினங்கள் நடைபெறும் திருவிழா இது. பின் புனர்பூசத்தன்று கதிரறுப்புத் திருவிழாவும், பூச நட்சத்திரத்தன்று நடைபெறும் தெப்ப உற்சவமும் ராஜ உற்சவமாகும். இதனைத் தெப்பத்திருவிழா என்று அழைப்பர்.

★ கொடியேற்றத்துடன் துவங்கும் முதலாம் திருநாளன்று காலையில் சுவாமியும் அம்மனும் சிம்மாசனத்தில் அமர்ந்து திருக்கோயிலுக்குள் இருக்கும் குலாலர் மண்டபத்தில் எழுந்தருள்வர். இரவு சுவாமி கற்பக விருட்ச வாகனத்திலும் அம்மன் சிம்ம வாகனத்திலும் பவனி வருவர்.

★ இரண்டாம் திருநாளன்று காலையில் குஞ்சான் செட்டியார் மண்டபத்திற்கு சுவாமி, அம்மன் தங்கச்சப்பரத்தில் எழுந்தருளுவர். இரவு சுவாமி பூத வாகனத்திலும், அம்மன் அன்ன வாகனத்திலும் காட்சி தருவர்.

★ மூன்றாம் திருநாள் காலை சுவாமியும், அம்மனும் தங்கச்சப்பரத்தில் திருக்கல்யாண மண்டபத்திற்கு எழுந்தருள்வர். இரவு சுவாமி கைலாசபர்வத வாகனத்திலும் அம்மன் காமதேனு வாகனத்திலும் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

★ ஆட்டுமந்தை பதினெட்டாம் கோட்டை பரதேசி மண்டபத்திற்கு நான்காம் திருநாளன்று காலையில் இறைவனும் இறைவியும் தங்கச்

சப்பரத்தில் எழுந்தருள்வர். மாலையில் வெள்ளி சிம்மவாகனத்தில் பவனி நடைபெறும்.

★ ஐந்தாம் திருநாள் காலையில் மீனாட்சியம்மையும், சொக்கேசரும் முதலில் திருக்கல்யாண மண்டபத்தில் ஆதிமூலம் பிள்ளை மண்டபத்திற்கும் பின் சுப்பராய ஆச்சாரியன் மண்டபத்திற்கும் தங்கச் சப்பரத்தில் எழுந்தருள்வது வழக்கம். இரவில் தங்கக் குதிரை வாகனம்.

★ ஆறாம் திருநாள் காலையில் சுவாமியும், அம்மனும் தங்கச்சப்பரத்தில் பவனி வந்து திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருள்வர். மாலையில் தெற்கு ஆடி வீதி யானை மகாலுக்கு முன்பாக அருள்மிகு திருஞானசம்பந்தர் சுவாமிகள் சைவசமய ஸ்தாபித வரலாற்று லீலை முடித்து ரிஷப வாகனத்தில் இறைவனும், இறைவியும் நான்கு மாசிவீதிகளிலும் வலம் வருவர்.

★ ஏழாம் நிருநாளன்று காலையில் திருக்கல்யாண மண்டபத்தில் இறைவனும், இறைவியும் சிறப்பலங்கார ரூபத்தில் காட்சி தருவர். இரவில் சுவாமி நந்திகேசுவரர் வாகனத்திலும் அம்மன் யாளி வாகனத்திலும் எழுந்தருளி வலம் வருவர்.

★ எட்டாம் நாள் வலைவீசியருளிய லீலையும் மச்சஹந்தி விவாஹமும் நடைபெறும். காலையில் சுவாமியும், அம்மனும் தங்கப்பல்லக்கில் எழுந்தருளி திருமதி அழகம்மாள் செட்டிச்சி அறக்கட்டளை மண்டபத்திற்கு எழுந்தருளி வலை வீசியருளிய லீலை முடித்து, நான்கு சித்திரை வீதிகளிலும் வலம் வந்து பின் திருக்கல்யாண மண்டபத்திற்கு எழுந்தருளுவர். அங்கே மச்சஹந்தி விவாஹம் நடைபெறும். மாலையில் சுவாமி தங்கக் குதிரை வாகனத்திலும் அம்மன் தங்கப்பல்லக்கிலும் உலாவருவர்.

★ ஒன்பதாம் திருநாளன்று காலையில் சுவாமியும், அம்மனும் எடுப்புத் தேரில் எழுந்தருளி திருக்கல்யாண மண்டபத்தில் காட்சியளிப்பர். இரவு சப்தாவர்ண சப்பரத்தில் தம்பதி சமேதராய் உலா வருவர்.

★ பத்தாம் நாளன்று காலையில் சொக்கேஸ்வரரும், மீனாட்சியும் தங்கப்பல்லக்கில் புறப்பட்டு அருள்மிகு முத்தீஸ்வரர் கோயிலைச் சென்றடைவர். மாலையில் அங்கிருந்து ரிஷபவாகனத்தில் புறப்பட்டு. தெப்பக்குளத்தை அடைந்து காட்சி தருவர். அங்கே தீர்த்தவாரியும், தெப்பம் முட்டுத் தள்ளுதல் என்ற வைபவமும் நடைபெறும்.

★ பதினோராம் திருநாள் காலையில் சுவாமியும், அம்மனும் தங்கப்பல்லக்கில் உலாவந்து சிந்தாமணி கிராமத்திற்கு எழுந்தருளுவர். வழியில் அயனாபுரம் ஸ்ரீ ரங்கத்தம்மாள் மண்டபத்தில், தங்கிப்புறப்படுவர். சிந்தாமணி கிராமத்தில் கதிர றுப்பு விழா நடைபெறும். பிற்பகலில் புறப்பட்டு ஆலவாய் ஆலயம் வந்தடைவர்.

★ திருவிழா நிறைவு நாளான பனிரெண்டாம் திருநாளன்று அதிகாலையிலேயே சுவாமியும், அம்மனும் வெள்ளி சிம்மாசனத்தில் புறப்பட்டு முக்தீஸ்வரர் கோயில் சென்று பின் தெப்பம் சுற்றியதன் மேல் திருமலை நாயக்கர் மகாராஜாவின் மைய மண்டபத்திற்கு எழுந்தருள்வர். இரவு அம்மன், சுவாமி முறையே வெள்ளி சிம்மாசனத்திலும், தங்கக் குதிரை வாகனத்திலும் மீண்டும் தெப்பத்திற்கு எழுந்தருளி தெப்ப உற்சவம் நடைபெறும்.

பௌர்ணமி சந்திரன் வானிலே வலம்வர வாண வேடிக்கைகளுடன் தொடங்கும் தெப்ப உற்சவம் காணக் கண்கோடி வேண்டும்.

திருமலை மன்னரின் மந்திரியார் நீலகண்ட தீட்சதர் புதுமண்டபம் சிற்ப வேலைப்பாடு நடக்கும் போது கூறப்பட்ட யோசனையின் போது ஏற்பட்ட ஐயத்தால் நடந்த நிகழ்ச்சி வரலாற்றில் உருவகப்படுத்தப்பட்டுள்ளது இது. நீலகண்ட தீட்சதர் திருமலை மன்னரிடம் வேண்டிக் கொண்டபடியே திருமலை மன்னர் மதுரையின் கிழக்கே தெப்பக்குளம் எடுப்பித்துத் தம் பிறந்தநாளில் பெருமானைத் தெப்ப உற்சவம் கொள்ளச் செய்து பரிகாரம் செய்தார்.

## மாசிமக விழா

தை மாதம் மகநட்சத்திரத்தில் கொடியேற்றத்துடன் தொடங்கி 'மாசிமகவிழா' ஒரு மண்டலம் (48 நாட்கள்) நடைபெறும். எட்டுக் கொடிகள் ஏற்றப்படும். விநாயகருக்கு 6 நாட்களும் முருகனுக்கு 6 நாட்களும் அப்பர், சம்பந்தர், சுந்தரர், ஆகிய முதல் மூவருக்கும் 3 நாட்களும் சந்திரசேகரருக்கு 6 நாட்களும் விழா நிகழும். பஞ்ச மூர்த்திகள் உற்சவம் 10 நாட்கள் நடைபெறும். மூர்த்திகள் சித்திரை வீதியில் உலாவருவர். மக நட்சத்திரத்தன்று தீர்த்தவாரி நிகழும். மௌன உற்சவம் 9 நாட்கள் நிகழும். சந்திர சேகரருக்கு 3 நாட்களும், சுவாமிக்கு 3 நாட்களும் சண்டிகேஸ்வரருக்கு 3 நாட்களும் நிகழும் 10 ஆம் நாள் கொடியிறக்கி கணக்கு வாசிக்கப் பெறும். இத்துடன் இவ்விழா நிறைவு பெறும்.

(திருமலை மன்னர் காலத்திற்கு முன்பு வரை இந்த விழாவின் போதுதான் திருக்கல்யாணம், திருத்தேர் உலா ஆகியன நிகழ்ந்தன.)

## கோடை வசந்த விழா

பங்குனி உத்திரத்தோடு முடிவடையும் 'கோடை வசந்த விழா' 10 நாட்கள் நடைபெறும். தெற்குச் சித்திரை வீதியிலுள்ள வெள்ளியம்பல மண்டபத்திற்கு எழுந்தருளி விசேட சைத்யோபசாரங்களுடன் உலா நடைபெறும். 10 ஆம் நாள் விழாவன்று திருவாப்புடையார் கோயிலுக்கு மீனாட்சி சொக்கேசர் எழுந்தருளுவார். அங்கு பக்தியில் சிறந்த பொன்னனையாளுக்குக் காட்சி நல்கும் லீலை நடைபெறும்.

பாண்டிய மன்னர்கள் காலத்தில் இந்த பங்குனி உத்திரப் பெருநாளில் சொக்கநாதப் பெருமான் மதுரையின் கிழக்கில் 12 மைல் தூரத்தில் உள்ள திருப்பூவணம் சென்று வருவாராம். (எந்த ஊருக்கு மீனாட்சி சுந்தரேசுவரர் எழுந்தருளினாலும் சுவாமிக்கு வேண்டிய அபிஷேக சாமான்கள், திருமஞ்சனம், நிவேதனம், புஷ்பங்கள் எல்லாமே மதுரையிலிருந்து தான் செல்லும். தற்போது திருப்பரங்குன்றத்தில் நடைபெறும் சுப்ரமண்யர் திருக்கல்யாண விழாவுக்கு செல்லும் போதும் இந்த முறையே நடந்து வருகின்றது)

தினமும் அருள்மிகு மீனாட்சி கோயில் அர்த்தயாம பூசை ஒலி கேட்ட பின்பே உணவருந்தி படுக்கச் செல்வதை வழக்கமாக கொண்டிருந்தார் திருமலை மன்னர். ஒரு பங்குனி உத்திரத்தன்று மீனாட்சி சுந்தரேசுவரர் திருப்பூவணம் எழுந்தருளிய பின் வைகையில் இருகரையும் புரள வெள்ளம் பெருக்கெடுத்தது. "சொக்கர் இராத்தங்கார்" என்ற பழமொழியை நாம் காப்பாற்ற வேண்டுமே என நாயக்கர் எண்ணினார். மதுரையிலும் சுற்றுப்புற கிராமங்களிலும் பங்குனி உத்திர நன்னாளுக்காகத் திருப்பூவணம் எழுந்தருளி இருக்கும் மீனாட்சி சொக்கநாதப் பெருமானை இன்று வைகையில் பெருகி ஓடும் வெள்ளத்தினால் எந்தக் குறையும் நேர்ந்துவிடாது இக்கரை கொண்டு வந்து சேர்க்கும் தீரர்களுக்குத் தக்க சன்மானம் வழங்கப்படும் என பறையறிவிக்கப் பட்டது.

வீரர்கள் புறப்பட்டார்கள். பொங்கிப் பாய்ந்துவரும் வெள்ளத்தைப் பொருட்படுத்தாது எதிர்க்கரை சென்று மீனாட்சி சொக்கேசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் வாகனங்களைத் தோளில் சுமந்து இக்கரைகொண்டு வந்து சேர்த்தார்கள். தக்க சமயத்தில் சொக்கநாதர் அர்த்தயாம பூஜை நடைபெறத்துணிந்து உதவிய தீரர்களின் குடும்பங்களுக்கென்றே 'சாமநத்தம்' என்ற கிராமமே அளிக்கப்பட்டது. இதுபோன்று ஓரிரு முறை நடைபெற்றதால் திருமலை மன்னர் ஆட்சிக்குப் பின், திருப்பூவணம் செல்லாமல் – பங்குனி உத்திர நன்னாளில் மதுரை வைகை நதிக்கு எதிர்க் கரையிலிருக்கும் திருவாப்புடையார் கோயிலுக்கு மீனாட்சி சொக்கேசரை எழுந்தருளச் செய்து திருவிழா கொண்டாடப்படுகிறது.

இங்கு கொடியேற்றம் நடந்து சொக்கநாதப் பெருமானுக்கும் மீனாட்சியம்மனுக்கும் காலை, மாலை நடக்கும் விழாக்கள் ஐந்து

அருள்மிகு அம்பிகை மீனாட்சிக்கு மட்டும் கொடியேற்றம் செய்து காலை, மாலை நடைபெறும் விழா ஒன்று.



திருத்தேரோட்டம்

தெப்பத்திருவிழா





## ஓவியங்கள்



ராணி மங்கம்மாள் காலத்து திருக்கல்யாண ஓவியம்



மீனாட்சி பட்டாபிஷேகம் (தஞ்சாவூர் பலகை ஓவியம்)



மீனாட்சி திருக்கல்யாணம் (தஞ்சாவூர் பலகை ஓவியம்)



திருவிளையாடற்புராண மூலிகை ஓவியம்

அட்டசக்தி மண்டப சுதைச்சிற்பங்கள்



மீனாட்சி திருஅவதாரம்



மீனாட்சி பட்டாபிஷேகம்



சுந்தரேசுவரர் பட்டாபிஷேகம்



உக்கிரகுமாரபாண்டியர் திருஅவதாரம்

கொடியேற்றம் இன்றி இரட்சா பந்தனத்துடன் மாலை மட்டும் நடத்துவன அருள்மிகு மீனாட்சிக்கும் சொக்கநாதருக்குமாக மூன்று விழா (வைகாசி – ஆனி – பங்குனி)

தனியாக மீனாட்சியம்மனுக்கு மட்டும் நடத்தப்பெறும் திருவிழாக்கள் நான்கு (புரட்டாசி – ஐப்பசி – மார்கழி – ஆடி)

சந்திரசேகரர் புறப்பாட்டுடன் நடைபெறும் பவித்ரோஸ்சவம் ஒன்று.

இதைத்தவிர, ஆனி உத்திரத்தன்று நடராஜப்பெருமான் வீதியுலா, திருவாதிரையன்று நடராசப்பெருமான் வீதியுலா, நாயன்மார்கள் அறுபத்து மூவர்க்கும் அவரவர்கள் திருநட்சத்திரத்தன்று திருவுலா நடைபெற்று ஓதுவார் மூர்த்திகளால் அந்தந்த நாயன்மாரின் திருச்சரித்திரத்தைப் பாடலாக நிகழ்த்துவது ஆக என்றுமே திருவிழாவாக நடைபெறும் பதி, மதுரையம்பதி ஒன்றே. திருவிழாக்கள் அனைத்தும் அன்று தொடங்கி இன்று வரை முறையாக ஆகம விதிப்படி நடைபெற்று வருகின்றன. மேலும் இவை சமய ஒற்றுமைக்கு வழிவகுப்பனவாகவும் அமைந்துள்ளன.

பிறகோயில்களைப் போல் இங்கு இறைவனுக்கு 'முடி காணிக்கை' போன்ற நேர்த்திக் கடன்கள் செய்வது வழக்கில் இல்லை. காரணம் இக்கோயிலுக்குவந்து இறைவனை வழிபட்டாலே நாம் செய்த பாவங்கள் நீங்கிஅம்மை, அப்பரின் அருளைப் பெறுவது திண்ணம்.



# உபகோயில்கள்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலைச் சேர்ந்தனவாகப் பல கோயில்கள் உள்ளன.

**1. திருவாப்புடையார் கோயில் (திருவாப்பனூர்) :**

தேவாரப் பாடல் பெற்ற பாண்டி நாட்டுத் தலங்களில் ஒன்று 'திருவாப்பனூர்' இது வைகை நதிக்கு வடகரையில் உள்ளது. சிவபெருமான் ஓர் ஆப்பினிடத்தில் தோன்றிய தலம். திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல் பெற்ற சிறப்புடைய தலம்.

**2. ஆதிசொக்கநாதர் கோயில் :**

இடைக்காடருடைய பிணக்கைத் தீர்க்கும் பொருட்டுச் சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளிய இடம். பெரிய கோயிலுக்கு வடக்கில் வெளி வீதியில் உள்ளது. வட திருவாலவாய் கோயில் என்றும் இது அழைக்கப்படும்.

**3. காஞ்சனமாலை கோயில் :**

காஞ்சனமாலை தடாதகைப் பிராட்டியின் தாயார். பெரிய கோயிலுக்குக் கிழக்கிலுள்ள எழுகடல் தெருவில், எழுகடல் தீர்த்தத்தின் மேற்குக் கரையில் இக்கோயில் அமைந்து உள்ளது.

**4. தென் திருவாலவாய்க் கோயில் :**

தெற்குமாசி வீதியில் உள்ளது. எமன் பூசித்த திருக்கோயில் என்றும் கூறுவதுண்டு.

**5. காலபைரவர் கோவில் :**

கீழாவணி மூல வீதியில் உள்ளது. அஷ்டமி திதி அன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றது.

**6. பைரவசுவாமி கோயில் :**

தெப்பக்குளம் மாரியம்மன் கோயில் அருகில் அமைந்துள்ளது.

**7. செல்லத்தம்மன் கோயில் :**

வக்கீல் புதுத் தெருவுக்கும் வடக்கு மாசி வீதிக்கும் நடுவில் உள்ளது. இதில் கண்ணகி சிலையும் உள்ளது. இங்குதான் கண்ணகியானவள் வந்து புரஞ்சேரியில் தங்கியதாக கர்ணபரம்பரை செய்தி வழி அறியமுடிகிறது. குலசேகரபாண்டியன் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் நகர் அமைத்து விரிவுபடுத்திய போது வடதிசைக்குரிய காவல் தெய்வக்கோயில் இது என்றும் கூறுவர்.

**8. சப்தமாதா – வீரபத்திரர் கோயில் :**

கோயிலுக்குத் தெற்கில் தெற்கு மாசி வீதியில் உள்ளது. சப்தமாதா கோயில் சுவாமிசன்னதி முதற்பிரகாரத்திலும் அமைந்துள்ளது. தென்திசை காவல் தெய்வமாகவும் கருதுவர்.

**9. மாரியம்மன் கோயில் :**

கீழ்த்திசையில் தெப்பக்குளத்துக்குப் பக்கத்தில் உள்ளது. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பெருங்கூட்டம் செல்லும்.

**10. முத்தீஸ்வரர் கோயில் :**

தெப்பக்குளத்துக்கு மேல்கரையில் உள்ளது. தெப்ப உற்சவத்தில் சுவாமி அம்பிகை இங்கே வந்து தங்குவர்.

**11. கருப்பணசுவாமி கோயில் :**

கீழமாசி வீதியில் தேரடிமண்டபத்திற்கு அருகில் அமைந்துள்ளது.

**12. வடக்குவாசல் அனுமார் கோயில் :**

வடக்கு மாரட் வீதியில் அமைந்துள்ளது.

**13. எழுகடல் விநாயகர் கோயில் :**

எழுகடல் வீதியில் அமைந்துள்ளது. காஞ்சனமாலை அம்மன் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ளது.

**14. காசி விசுவநாதர் கோயில்** (குருசாமி சாஸ்திரிகள் மண்டபம்) **:**

பேச்சியம்மன் படித்துறை வீதியில் அமைந்துள்ளது.

**15. பரிபூரண விநாயகர் கோயில் :**

மணிநகரம் ராஜாமில் அருகில் சுடுதண்ணீர் வாய்க்கால் தெருவில் அமைந்துள்ளது.

**16. கடம்பவனேஸ்வரர் கோயில் :**

மணிநகரம் சுடுதண்ணீர் வாய்க்கால் தெருவில் அமைந்துள்ளது.

**17. தெய்வநாயகப் பெருமாள் கோயில் :**

குந்திநகர் என்னும் கொந்தகையில் அமைந்துள்ளது.

**18. சித்தி விநாயகர் கோயில் :**

நாகமலை புதுக்கோட்டையில் அமைந்துள்ளது.

**19. செல்வ விநாயகர் கோயில் :**

செக்கானூரணியில் அமைந்துள்ளது.

**20. பிடாரி அம்மன் கோயில் :**

திருவாதவூர் திருமறைநாதர் கோயிலின் அருகில் அமைந்துள்ளது. காவல் தெய்வமாக வணங்கப்படுகிறது.

**21. ஆமூர் அய்யம் பொழில் ஈசுவரர் கோயில் :**

மதுரையிலிருந்து திருவாதவூர் தலத்திற்கு செல்லும் வழியில் அமைந்துள்ள ஆமூர் என்னும் ஊரில் அமைந்துள்ளது. மயில்கள் வணங்கி போற்றும் தலமாக இது விளங்குவதால் மயில் வணங்கி ஈஸ்வரர் கோயில் என்றும் அழைப்பர்.

**22. சுண்ணாம்பூர் மகாகணபதி கோயில் :**

திருவாதவூர் தலத்திற்கு அருகில் சுண்ணாம்பூரில் அமைந்துள்ளது.

**23. திருவாதவூர்க் கோயில் :**

திருமறைநாதர் எழுந்தருளியது. மாணிக்கவாசகர் அவதரித்த இடம். வைப்புத்தலத்தில் ஒன்று.

## திருவாதவூர்க் கோயில் பூஜை, உற்சவ விவரம்

திருவாதவூர் அருள்மிகு திருமறைநாதசுவாமி கோயிலில் தினந்தோறும் நிகழும் பூஜையின் விவரமும் காலமும் :

| | | |
|---|---|---|
| திருவனந்தல் | – அதிகாலை | 5 மணி |
| காலசந்தி | – காலை | 9 மணி |
| உச்சிக்காலம் | – நடுப்பகல் | 12 மணி |
| மாலைபூசை | – மாலை | 5.30 மணி |
| அர்த்தஜாமம் | – இரவு | 8 மணி |
| பள்ளியறை | | |

மேற்படி கோயிலில் நடைபெறும் உற்சவங்களின் விவரம் வருமாறு :

1. சித்திரை : பிடாரி அம்மன் உற்சவம் 10 நாட்கள் 9ஆம் திருநாள் சட்டத்தேர்.
2. வைகாசி : பிரமோற்சவம் 10 நாட்கள் 8ஆம் திருநாள் திருக்கல்யாணம் 9ஆம் திருநாள் தேர்.
3. ஆனி : ஆனி மகம்.
4. ஆடி : ஆடிப்பூரம், 1ஆம் நாள் அம்மன் புறப்பாடு.
5. ஆவணி : ஆவணிமூல உற்சவம். 12 நாட்கள் அருளாளர் மாணிக்கவாசகர் மதுரைக்கு எழுந்தருளல்.
6. புரட்டாசி : நவராத்திரி உற்சவம் 10ஆம் நாள் அருளாளர் மாணிக்கவாசகர் குதிரை வாகனத்தில் எழுந்தருளி அம்பு போடுதல்
8. மார்கழி : திருவெம்பாவை உற்சவம். டோலோ உற்சவம். 10 நாட்கள், 9ஆம் திருநாள் அருளாளர் மாணிக்கவாசகருக்கு சட்டத்தேர். 10ஆம் திருநாள் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு.
9. மாசி : சிவராத்திரி

# அருளாளர்களும் ஆலவாயும்

**மூர்த்தி நாயனார்**

மதுரையில் வணிகர் குலத்தில் அவதரித்தவர் மூர்த்தி நாயனார். அவர் அகப்பற்று புறப்பற்றை அறவே விடுத்தவர். சிவபெருமானது திருவடி ஒன்றையே பற்றியவர். அன்பே வடிவானவர். இறைவனுக்குச் சந்தனக்காப்பு அணிவிக்கும் பணியை இடையீடு படாமல் இயற்றிவந்தவர். அக்காலத்து வடுகனாகிய கருநாட மன்னன் நாட்டை பிடித்து ஆண்டான். சமணர் பக்கஞ் சார்ந்து அரனடி யார்க்கு அல்லல் ஆற்றினான். அதனால் இவர் தொண்டுக்கு இடையீடு ஏற்பட்டது.

அதனால் மூர்த்தியார் மிகவருந்தி எங்கும் தேடிச் சந்தனக்கட்டை கிடைக்காமையினால் மனம் ஓய்ந்து கோயிலை யடைந்தார். ‘சந்தனக்கட்டை கிடைக்காவிட்டாலும் சந்தனக் கட்டையைத் தேய்த்தகை கிடையாமற் போகாது’ என்றெண்ணிச் சந்தனக்கல்லில் கையை வைத்துத்தேய்த்தார். எலும்பு வரையில் தேய்ந்தது. கல்லின் நாற்புறமும் இரத்தம் வழிந்தோடியது. இறைவன் இதைக்கண்டு பொறுக்கவில்லை; கனவிடை எழுந்தருளி ‘அன்ப! அன்பின் துணிவால் செய்யாதே. உனக்குத் துன்பம் விளை வித்தவன் அரசாட்சியெல்லாம் நீயேயடைந்து உன் பணியை விடாமற் செய்து பின்பு நம் உலகத்தையடைக’ என்று அருளிச்செய்தார். அந்நாள் இரவிலேயே வடுக அரசனுடைய வாழ்வு முடிந்தது. பொழுதும் புலர்ந்தது. நாட்டுக்கு அரசன் இல்லாத குறையை அறிந்த அமைச்சர்கள் யானையின் கையில் பூமாலையொன்றைக் கொடுத்து கண்ணைக்கட்டி விட்டார்கள். யானை விரைந்தோடிவந்து கோயிலின் வாயிலில் நின்றுகொண்டிருந்த மூர்த்தி யாரைத் தனது பிடரியில் தாங்கிச்சென்று அரண்மனையை அடைந்தது. அமைச்சர்கள் ஓடிவந்து அழைத்துச்சென்று அபிஷேகம் செய்து ‘இந்த அவனியைத்தாங்கவேண்டும்’ என்று வேண்டிக்கொண்டார்கள், மூர்த்தியார்.

“வையம் முறைசெய் குவனாகில் வயங்கு நீறே
செய்யும் அபிடே கமுமாக செழுங்க லன்கள்

ஐயன் அடையா எமுமாக அணிந்து தாங்கும்
மொய்புன் சடைமா முடியேமுடி யாவது"

என்றார். மந்திரியாரும் அவ்வாறே செய்ய, அரசை ஏற்று உலகெங்கும் நிரம்பிய சைவம் உயர்ந்து மன்னர் திருநீறு, கண்டிகை சடைமுடியாகிய மும்மையினால் உலகினை ஆண்டார். இறைவன் பணியை இடையீடின்றியே செய்துவந்தார். இறைவன் ஆணையின்படி திருவடிநீழலை யடைந்தார்.

**திருஞானசம்பந்தர்**

சிவம்பெருக்கும் திருஞானசம்பந்தப்பெருமான் அப்பரடிகளோடு திருமறைக்காட்டில் எழுந்தருளி இருக்கின்றார். அப்பொழுது பாண்டிய நாட்டிலே சமணப்புதர்மூடி, சைவப்பயிரை மறைத்தது. கூன்பாண்டியனும் உடற் கூனைப்போல அறிவிலும் கூன்பட்டுச் சமணமதத்தைச் சார்ந்தான். மதுரை முழுவதும் தலைபறிந்தவர்களும் பாயுடுத்தியவர்களும் பீலிவிரித்தவர்களுமாக அலையத் தலைப்பட்டுவிட்டார்கள். அதனைக்கண்ட பாண்டிமாதேவியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் மிகவும் கவலைப்பட்டார்கள். சோழநாட்டில் உலகு உய்ய அவதரித்த ஆளுடைய பிள்ளையார் திருமறைக்காட்டில் தங்கி இருக்கின்றார் என்று கேள்வியுற்றார்கள். பரிசனங்களை ஏவி அழைத்துவரச் செய்தார்கள். சென்ற பரிசனங்கள் பிள்ளையாரிடம் விண்ணப்பித்துக்கொள்ள, பிள்ளையார் அப்பரிடம் சென்று மதுரை நிகழ்ச்சியை அறிவித்தார். கேட்ட அரசு "அந்த அமண்கையர் வஞ்சனைகோர் அவதியில்லையே; இப்போது நாளும் கோளும் நல்லனவாக இல்லையே; செல்லுதல் வேண்டாம்" என்றார். பிள்ளையார் 'பரசுவது நம்பெருமாள் கழல்களென்றால் பழுதடையாது' எனப் பகர்ந்தனர். "வேயுறு தோளி" என்றெடுத்துத் திருப்பதிகம் பாடினார்; மதுரையை அடைந்தார்.

திருஞானசம்பந்தப்பெருமான் எழுந்தருளிய உடனேயே அமணர்களுக்குத் துர்ச்சகுனங்கள் பல தோன்றின. தீக்கனவுகள் கண்டனர். இந்நிலையில் மங்கையர்க்கரசி யாருக்கும்

குலச்சிறையாருக்கும் நன்னிமித்தங்கள் காணப்பெற்றன. ஏவலாளர்கள் ஓடிவந்து. 'திருஞானசம்பந்தப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கிறார்' என்று அமைச்சருக்கும் அரசிக்கும் தெரிவித்தார்கள். அமைச்சர் அரசியின் உத்தரவுபெற்று, மதுரையின் புறத்தேசென்று, தமிழ்மறை தந்தருளிய தண்ணளியந்தணரை எதிர்கொண்டு அழைத்து வந்தார். அரசியார், தாமும் சென்று வரவேற்றார்; வணங்கினார். பிள்ளையார், திருந்திய சிந்தையீர்! "செம்பியர்பெருமான்குலமகளார்க்கும் நுமக்கும் பெருமான் திருவருளால் நலமோ? என்று வினவினார். அமைச்சரும்,

"சென்றகாலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்றெழுந்தருளப் பெற்றபேறிதனால்
ஏற்றைக்கும் திருவருளுடையேம்
நன்றிவில் நெறியில் அழுந்தியநாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம்"

என்று மறுமொழிபகர்ந்தனர். ஆலவாயண்ணலைத் தரிசிக்கும் ஆதரவினால் திருஆலவாய் எங்குள்ளதென்று ஆளுடையபிள்ளையார் வினவ, 'இதோ' என்று அமைச்சர் சுட்டிக்காட்ட "ஆலவாயாவதும் இதுவே" என்ற இறுதி யையுடைய திருப்பாடல்களை அருளிசெய்துகொண்டே கோயிலுட் புகுந்தார். பெருமானைக் கண்டார். அவர் ஏத்திய முறையை அறிவிப்பது இத்திருப்பாடல்.

"அங்கம் எட்டினும் ஐந்தினும் அளவின்றி வணங்கிப்
பொங்கு காதலின் மெய்ம்மயிர்ப் புளகமும் பொழியும்
செங்கண் நீர்தரும் அருவியும் திகழ்தருமேனி
எங்குமாகிநின் றேத்தினார் புகலியர் இறைவர்"

பின்னர் 'நீலமாமிடற்று' என்னும் திருஇருக்குறளை ஓதி வழிபட்டு அமைச்சர் காட்டிய திருமடத்தில் பரிசனங்களோடு அமர்ந்தார்.

அமைச்சர் எதிர்கொண்டு அழைத்ததையும் அரசியார் ஆலயத்துட்சென்று வணங்கியதையும் கேள்வியுற்றும். ஆங்காங்குத்திரிகின்ற சைவப்பெருமக்களைக் கண்ணாற் கண்டும், பதைத்துப் புழுங்கிய அமணர்கள் ஒன்றுகூடி ஆலோசித்தார்கள். 'நம் மந்திரத்தால் மடத்தில் தீ வைத்துவிடுவோம். பின் அச்சிறுவர் இங்கு இருக்கமாட்டார்; போய்விடுவார்' என்று மனக்கோட்டை கட்டினார்கள்; எண்ணியதை நிறைவேற்றினார்கள். ஆனால் ஐந்தெழுத்தோதும் அன்பர் இருக்கும் திசையில் ஏனைய மந்திரங்கள் பலிக்குமா? ஆதலால் தங்கள் மந்திரம் பலியாது போகவே திருமடத்தில் நெருப்பு வைத்தனர். திருமடம் தீப்பற்றியதைக் கண்ட ஞானசம்பந்தப்பிள்ளையார் **"செய்யனே திருவாலவாய்"** என்று தொடங்கிப் "பையவே சென்று பாண்டியர்க்காக" என்று ஆட்சி முறை பிழைத்த அரசனுக்கு ஆக்கினார். அரசன் வெப்புநோயால் வாடினான். மருத்துவர்கள் தங்களால் ஆனவரை பார்த்து ஓய்ந்தனர். சமணர்கள் **"நமோ அருகந்தாணம்"** என்று சொல்லி நாப்புலர்ந்தனர். அவர்கள் மந்திரம் உரு ஏற ஏற அரசனுக்கும் வெப்பு ஏறிக்கொண்டே இருந்தது. நடுங்கிய அரசியார் அமைச்சரை நோக்கி, அமணர் செய்த தீங்கு இவ்வாறு முடிந்ததென உணர்த்த, உணர்ந்த அமைச்சர் குலச்சிறையார், அரசன் முன் விழுந்து '**இந்தப் பிழை இவர்கள் செய்தகொடுமையால் விளைந்ததாதலால் ஞானசம்பந்தப்பிள்ளையாரை அழைத்தால் நோய்தீரும்**' என்றார். '**ஞானசம்பந்தர்**' என்னும் நாமமந்திரம் செவியில் நுழைந்தபோதே அரசன் அறிவு தெளிந்து சமணர்களைப் பார்த்து, 'சம்பந்தர்' வருவதால் இந்தநோய் தீருமானால் பார்ப்பேன்; வென்றவர் பக்கத்தில் விரைந்து சேர்வேன்; அழையுங்கள்" என்று ஆணையிட்டான். அவ்வாறே அழைக்கச்சென்ற அரசியாரும், அமைச்சரும்,

"ஞானத்தின் திருஉருவை நான்மறையின் தனித்துணையை"
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்ப"

கண்டு வணங்க, "திருவுடையீர்! உங்கள்பால் தீங்குஉளதோ" என பிள்ளையார் வினவ, அவர்கள் "ஆளுடையீர், வஞ்சகர் செய்த தீத்தொழில்போய் அரசனுக்குத் தீங்காய் முடிந்தது; காத்தருளவேண்டும்" என்று வேண்டி நிகழ்ந்ததை அறிவித்தனர். பிள்ளையார் கோயிலுக்குச்சென்று 'வாதுசெய்யத் திருவுள்ளமே' என்ற பதிகம்பாடி வேண்டிக்கொண்டு அரண்மனை அடைந்தார்; உட்சென்றார். அரசனும், நிலத்திடை வானினின்று நீளிருள் நீக்கவந்த கலைச்செழுந்திங்கள் போலும் கவுணியச் செல்வரைக்கண்டான்; குறையிரந்தான். கருணைவெள்ளமாகிய பிள்ளையார் **ஆலவாயண்ணல் திருநீறே மந்திரமும் மருந்துமாய்த் தீர்ப்பது**' என்று திருநீற்றுத் திருப்பதிகம் பாடித் திருநீறுகொண்டு வலப்பக்கத்தில் பூசினார். வெப்பந்தணிந்தது. அரசனுடைய இடப்பாகத்தில் மிகுந்தது. அரசன் அவதிப்பட்டு மீண்டும் வேண்டிக்கொள்ள, அப்பக்கத்தையும் பிள்ளையார் ஒருதடவை நீறுகொண்டு தடவ, அரசனுடைய வெப்பம் முழுவதும் தணிந்தது; ஞான சம்பந்தர் பாதம் நண்ணி, நான் உய்ந்தேன் என்றான் அரசன்.

தமது சமயம் தோற்றமைக்காகப் பெரிதும் வருந்திய அமணர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து 'இவனைத் தர்க்க வாதத்தால் வெல்ல முடியாது. **அனல்வாத புனல்வாதங்களில்** வெல்லலாம்' என்று முடிவுகட்டினார்கள். அரசனிடம் தெரிவித்தார்கள். அரசனும் பிள்ளையார் அனுமதிபெற்று அவை முன்னர் அழலமைக்க ஆணையிட்டான். பிள்ளையார், திருப்பதிக ஏட்டை 'எங்கள் நாதனே பரம்பொருள்' என்று தொழுது அவிழ்த்துப் பிரித்தார். **"போகமார்த்த பூண் முலையாள்"** என்ற பச்சைத்திருப்பதிகம் (திருநள்ளாற்றுப் பதிகம்) வந்தது. '**தளிரிள வளரொளி**' என்னும் பதிகத்தைப்பாடித் தீயிலிட்டார். ஏடு, அட்டமூர்த்தியைப் பொருளென உடைமையால் அமர்ந்து, பட்டதீயிடைப் பச்சையாய் விளங்கியது. அமணர் ஏடு வெந்து சாம்பலாகியது. அரசன் அமணரைப் பார்த்து "நீங்கள் தோற்றுவிட்டீர்கள் எம்மைவிட்டு அகலும்" என்றான். அவர்கள் மற்றொரு முறையும் 'கருணை காட்ட வேண்டும். புனல் வாதம் செய்து பார்க்க வேண்டும். அதிலும் தோற்றுப்போனால் இவ்வேந்தன் கழுவேற்றுவான்' என்று வாய் சோர்ந்து கூறினார்கள்.

அரசன் சம்மதிக்க அவர்கள் 'அத்தி நாத்தி' என்றெழுதி வையை யாற்றில் விட்டார்கள். அவ்வேடு கடலையடைந்தது. பிள்ளையார் **'வாழ்க அந்தணர்'** என்னும் திருப்பாசுரத்தை அருளிச் செய்து ஏட்டில் எழுதி வையையில் இட்டனர். ஏடு எதிரேறிச் சென்று திருஏடகத்தில் கரையேறியது. சமணர்கள் தோற்றார்கள். **கூன் பாண்டியன் நின்றசீர் நெடுமாறனாயினான்.** சைவம் தழைத்தது. சிவம் பெருகிற்று. ஆக, மதுரைத் தலமனாது சைவத்தின் தனிப் பெருமையைக் காட்டிய தலமாகும்.

## திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்

காழிக்கண்ணுதல் கருணை வெள்ளத்திடைத்தோய்ந்து அம்மையார் அருளமுதம் ஊட்ட உண்டு, தெய்வத் தமிழைத் தேக்கெறிந்து திருவாய் மலர்ந்தருளிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாண்டிய நாட்டையும் பாண்டியனையும் உய்விக்கவேண்டி, ஆலவாயரன் முன்னிற்க எழுந்தருளிய காலத்து அமைச்சர் குலச்சிறையாரும், அரசி மங்கையர்க் கரசியாரும் ஆளுடைய பிள்ளையார் பரிவாரங்களுடன் எழுந்தருளக் குறிப்பித்த திருமடமே ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன மடாலயமாகும். நாடு புறச் சமயத்திலே சென்று வேத வேள்விகளை நிந்தனை செய்துழல்கின்ற தொருகாலத்தே, சைவத்தைத் தழைத்தோங்கச் செய்த நிலையமே இவ்வாதீனம் என்றால் இதன் மகிமை எவ்வளவு சிறந்தது! ஞானசம்பந்தப் பிள்ளை அவதரித்திராவிட்டால் நீறெங்கே! மணியெங்கே! சைவம்தானெங்கே?

திருஞானசம்பந்தப் பெருமான் எழுந்தருளியிருந்த காலத்து, சமணர்களால் இம்மடத்தில் தீ வைக்கப் பட்டது; ஆயினும் **அத்தீயை ஞானசம்பந்தப் பிள்ளையார். பையவே சென்று பாண்டியர்க்காகவே"** என்று ஏவிக் காத்தருளியது இத்திருமடம் எனின் இதன் பெருமை எத்துணை மேலானது! ஆசாரியப் பெருமக்கட்கு அமையவேண்டிய ஒறுத்தலும் பொறுத்தலுமாகிய இந்த இரண்டையும் ஞானசம்பந்தப் பிள்ளையாருடைய வாய் மொழியில் இத்திருமடம் காட்டியிருக்கிறது. இம்மடம் ஞானசம்பந்தப் பிள்ளையார் காலம் முதல் இன்றுவரை விளங்கி வருகிறது.

**அப்பர்**

அப்பர் பெருமான் தமக்கு இறைவன் அருளிச்செய்தபடி கயிலைக் காட்சியைத் திருவையாற்றிலே கண்டு மகிழ்ந்த பின் திருப்பூந்துருத்தியை அடைந்து அங்குப் பொய்யிலி யாகிய பெருமானைக் கண்டு வணங்கி, அப்பெருமான் அடி நிழலிலேயே இருக்க எண்ணித் திங்களும், ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்றை அமைத்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

திருமறைக்காட்டில் அவரிடம் விடைபெற்றுச் சென்ற திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டில் சமண் இருள் போக்கித் திருநீற்றொளி பரப்பி, மீண்டு அப்பரைத் திருப்பூந்துத்தியில் சந்தித்தபொழுது மதுரையில் நிகழ்ந்தவற்றையும், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் இவரது சிவபத்திச் சிறப்பையும் உரைத்தருளினார்.

அதனால், அப்பர் ஆலவாய் முதலிய தலங்களை வணங்க அவாவுற்றுச் சில நாட்களில் பாண்டி நாட்டு யாத்திரையை மேற்கொண்டார். ஞானசம்பந்தரும் நாவுக்கரசர் அருளிச்செய்த வண்ணம் தொண்டை நாட்டுயாத்திரையை மேற்கொள்ளும் திருவுளத்துடன், சீகாழி நோக்கிப் புறப்பட்டார்.

அப்பர் பாண்டி நாட்டில் திருப்புத்தூரை வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்து, அப்பால் மதுரையை அடைந்து, தலைச் சங்கத்தில் இருந்து தமிழ் ஆராய்ந்த பெருமானாகிய ஆலவாய் அவிர்சடைக் கடவுளை **"முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி"** என்னும் திருத்தாண்டகப் பதிகத்தை அருளிச்செய்து வணங்கிப் பெருமகிழ்வுற்றார். இதனை யறிந்த நெடுமாறரும், மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் வாகீசரை வந்து வணங்கித் திருமடத்திற்கு எழுந்தருள்வித்து ஆவன பலவும் செய்வித்துப் போற்றினார்கள். அப்பர் சிலநாள் அங்கே எழுந்தருளியிருந்து, **"ஆலவாயில் அப்பனே அருள் செயாயே"** எனவரும் திருநேரிசை முதலிய திருப்பதிகங்களால் இறைவனைப் போற்றி இன்புற்றுப் பின்

திருப்பூவணம், திருவிராமேச்சரம், திருநெல்வேலி, திருக்கானப்பேர் முதலிய தலங்களை வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்து மீளச் சோழநாட்டில் திருப்புகலூரை அடைந்து அங்கே பல நாள் இருந்து பொதுத் திருப்பதிகங்கள் பல அருளிச் செய்ததுடன், உழவாரப் பணியும் செய்திருந்து, இறைவன் திருவடியை அடைந்தார்.

**சுந்தரர்**

ஆளுடைய நம்பிகளாகிய ஆலால சுந்தரர் இறைவனது அருளின்வழித் தம்மை வணங்க வந்த சேரமான் பெருமாளை, திருநாகைக்காரோணப் பெருமான் அளித்த பலவகைப் பொருள்களால் அவர் நிலைக்கு ஏற்பச் சிறப்புற வரவேற்று ஆரூரில் அளவளாவியிருக்கும் நாட்களில் பாண்டி நாட்டுத் தலங்களை வணங்கத் திருவுளங் கொண்டார். சேரர்பெருமானும் தமக்குத் திருமுகம் விடுத்த திருவாலவாய்ப் பெருமானைக் கண்டு மகிழவேண்டும் என்னும் காதல் உடையவராகவே அவரும் உடன்வர நம்பியாரூரர் பாண்டிநாட்டு யாத்திரையை மேற்கொண்டு திருப்புத்தூரை வணங்கி, மதுரையை அடைந்தார்.

அவ்வமயம் மதுரையை அப்பொழுது ஆட்சிசெய்து வந்த பாண்டியரது மகளை மணம் செய்துகொண்ட சோழமன்னரும் மதுரையில் இருந்ததனால், அவரும் உடன்வரப் பாண்டிய மன்னர் மதுரை நகரை நன்கு அலங்கரித்துச் சுந்தரரைச் சேரமான் பெருமாளுடன் வரவேற்று வணங்கினார். சுந்தரர்க்குத் திருமுனைப்பாடி நாட்டு அரசுரிமையும் உண்டு. அதனால், 'அரசர்இருவர் அடியவர் இரு வரை வரவேற்றனர்' என்பதே யன்றி, 'அரசர் இருவரை வரவேற்றனர்' என்றலும் பொருத்தமே. இத்தகைய பெருஞ்சிறப்புடன் யாவரும் ஆலவாய்ப் பெருமான் ஆலயத்திற்குச் சென்றனர். சுந்தரர் இறைவரை வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்தார். அத்திருப்பதிகத்தைப் பெறும் பேறு இன்று நாம் பெறவில்லை. சேரர் பிரானும், அடியேனை ஒரு பொருளாகக்கருதித் திருமுகம் விடுத்த கருணைப்பெருக்கு என்னே' என்று சொல்லிக்

கசிந்துருகி வணங்கினார். இவ்வாறு மூவேந்தரும் உடன் பணிந்து வர, இறைவரைப் பணிந்த சிறப்பு ஆலால சுந்தரருக்கே உரியது.

வந்த இருவரையும் வரவேற்ற பாண்டியர், பின்பு அவர்களை அரண்மனைக்கு எழுந்தருள்வித்து, திருவமுது முதலியவற்றால் சிறக்க உபசரித்தார். பின்னை நாட்களிலும் சுந்தரர் மூவேந்தரும் உடன்வரப் பல தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடியபொழுது திருப்பரங்குன்றத் திருப்பதிகத்தில் **"முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்த – ஆறும் ஓர் நான்கும் ஓர் ஒன்றினையும்"** என்று சுந்தரரே அருளிசெய்திருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

திருப்பரங்குன்றத்தை வணங்கியபின் ஏனைய தலங்களையும் வழிபட விரும்பிய சுந்தரருக்கும், சேரமான் பெருமாளுக்கும் பாண்டிநாட்டு யாத்திரை முழுவதிலும் ஆவன செய்யுமாறு தக்கவர்களை உடன் அனுப்பிவிட்டுப் பாண்டியரும், சோழரும் மதுரைக்கு மீண்டனர். ஆரூரர், சேரருடன் பாண்டியநாட்டு யாத்திரையை முடித்துத் திருவாரூருக்கு எழுந்தருளினார். சேரர்பெருமான் விண்ணப்பித்துக் கொண்டவண்ணம் சுந்தரர் கொங்குநாடு மலைநாடுகட்குச் சென்று மீண்டருளியது முதலிய பலவும் பின்னே நிகழ்ந்தன.

**மாணிக்கவாசகர்**

சமயாசாரியர் நால்வரோடும் மதுரைக்குத் தொடர்பு உள்ளதாயினும், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய இரு வரோடு மதுரைக்கு உள்ள தொடர்பே மிகுதி. சோழநாட்டில் அவதரித்தருளியசம்பந்தர் மதுரையில் மன்னனைப் புறச்சமயத்தினின்றும் மீட்டு, பாண்டிநாடு முழுவதும் சைவம் தழைக்கச் செய்தார். மாணிக்கவாசகர் பாண்டி நாட்டிலே திருவாதவூரில் அவதரித்துப் பாண்டிய மன்னனுக்கு அமைச்சராய் தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்துடன் பாண்டிய நாட்டின் அரசியலை நடத்திப் பின், அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவிக்கும் முறையில் சிவபெருமான் மதுரைத் திருவீதியிலும், வையைக் கரையிலும் குதிரைச்

சேவகனாயும், கூலியாளாயும் வந்து, பாண்டியன் தந்த பரிசிலை ஏற்றதுடன், பிரம்பால் அடித்த அடியையும் பெற்று அருட்பெருக்கைப் புலப்படுத்திய திருவிளையாடல்கட்கு உரியவராய் விளங்கினார். அவரது பெருமையை அறியாது அவரைத் துன்புறுத்திய பாண்டியன் பின்பு இறைவன் அருளால் உண்மையை உணர்ந்து வணங்க, அமைச்சுரிமையை விடுத்து யாத்திரையை மேற்கொண்டு தமிழ்நாட்டுத் தலங்கள் பலவற்றையும் வணங்கிக் கொண்டு இறைவர் ஆணையின் வண்ணம் தில்லைக்கு சென்று பலநாள் திருவாசகம், திருக்கோவையார்பாடல்களை அருளிச்செய்திருந்து, புத்தரையும் வாதில் வென்று கூத்தப்பெருமான் குரைகழலில் இரண்டறக் கலந்தார். கருங்கல் மனமும் கரைந்துருகச் செய்யும் பக்திப் பனுவலாகிய திருவாசகத்தை, உலகிற்கு வழங்கியது மதுரையே என்றால், அது சிறிதும் மிகையாகாது.

**"பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி**
**ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி**
**வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி**
**ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி."**

## குருஞானசம்பந்தர்

**ஞானக்குழந்தை :**

தமிழகத்தில் – தென்பாண்டி நாட்டில் – ஸ்ரீவில்லிபுத்தூரில் சைவ வேளாளர் மரபில் சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்ற நல்லறவப் பெரியோர்கட்கு அருந்தவமகவாகப் பதினாறாம் நூற்றாண்டில் அவதரித்தவர் தருமையாதீன முதற்குருமூர்த்தியாகிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள். இவருக்குப் பெற்றோர், திருஞானசம்பந்தரைப்போல் தமது குழந்தையும் சிவஞானம் பெற்றுச் சைவம் வளர்க்கும் ஞானசூரியனாகத் திகழவேண்டும் என்று எண்ணி 'ஞானசம்பந்தன்' என்ற நற்பெயரைச் சூட்டி வளர்த்து வருகையில், தமது குல தெய்வமாகிய சொக்கநாதரையும் மீனாட்சியம்மையையும் தரிசிப்பதற்கு ஞானசம்பந்தருடன் மதுரை சென்று, பொற்றாமரைத்

தடாகத்தில் நீராடி வழிபட்டனர். பெற்றோர் ஊருக்குப் புறப்படுங்கால், ஞானசம்பந்தர் தொடர்ந்து நின்றதாயும் தந்தையுமாகிய சொக்கநாதரைப் பிரிய மனமின்றி, உடலுக்குத் தாய் தந்தையர்களாகிய பெற்றோர்க்கு விடைகொடுத்தனுப்பிச் சொக்கநாதர் வழிபாட்டிலே ஈடுபாடு கொண்டவரானார்.

**கண்ணுக்கினிய பொருள் :**

நாள்தோறும் பொற்றாமரைக் குளக்கரையில் அடியார்கள் சிவபூசை புரிவதைக் கண்டார் ஞானசம்பந்தர். தாமும் அவ்வாறு சிவபூசை புரிய எண்ணினார் : சொக்கநாதரை வேண்டினார். கருத்தறிந்து முடிக்கும் கண்ணுதற்கடவுளும் அன்றிரவு கனவில் தோன்றி, '**நாம் பொற்றாமரைக் தடாகத்தின் ஈசான்ய பாகத்தில் கங்கைக்குள் இருக்கிறோம் நம்மை எடுத்துப் பூசிப்பாயாக**' என அருளினார். அவ்வண்ணமே மறுநாள் காலையில் பெருமானின் கருணையை வியந்து போற்றிப் பொற்றாமரைத் தடாகத்தில் மூழ்கினார். அருள்மிகு சொக்கநாதப்பெருமான் கண்ணுக்கினிய பொருளாக தமது கரத்தில் வரப்பெற்றார். ஆசாரியன் மூலமாகத் தீக்ஷைபெற்றுத் தானே சிவபூசை புரிதல் வேண்டும் ஆசாரியன் வேண்டுமே; சிவஞானோபதேசம் பெற வேண்டுமே; எப்படிப் பூசனைப் புரிவேன்' என்ற எண்ணம் தோன்றவே, அதுபற்றி இறைவனிடமே முறையிட்டார்.

**ஞானாசிரியனை அடைதல் :**

வேண்டத்தக்கது அறிந்து வேண்ட முழுதுந் தரு வோனாகிய சொக்கநாதப்பெருமான், மறுநாள் கனவில் எழுந்தருளி 'திருக்கயிலாய பரம்பரை – திருநந்திமரபு' மெய்கண்ட சந்தான வழியில் திருவாரூரில் விளங்கும் கமலை ஞானப்பிரகாசர் என்ற ஆசாரியாரிடத்தில், வருகிற சோமவாரத்தில் ஞானோபதேசம் பெற்று நம்மைப் பூசிப்பாயாக என அருளினார். அன்றிரவே கமலை ஞானப் பிரகாசர் கனவிலும் எழுந்தருளி, 'ஞானசம்பந்தன், வருகிற சோமவாரத்தன்று வருவான்; அவனுக்கு ஞானோபதேசம் செய்து சிவபூசையும் எழுந்தருளுவிப்பாயாக' என்று

அருளினான். ஞானசம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூர் சென்று, பூங்கோயிலில் உள்ள சித் தீச்சரம், தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் அமர்ந்திருந்த கமலை ஞானப்பிரகாசரைக் கண்டார்; காந்தம் கண்ட இரும்பு போல் ஆசாரியரால் ஈர்க்கப்பட்டார்; சமய விசேட நிர்வாண தீக்ஷைகளால் பாசஞானம் பசுஞானங்கள் நீங்கிப் பதிஞானம் கைவரப்பெற்றார். சொக்கநாதப்பெருமானை ஆன்மார்த்த பூஜாமூர்த்தியாகப் பூசிக்கப்பெறும் பேற்றையும், ஞான அனுபூதியையும் அடைந்தார்.

**தருமபுரத்தில் ஆதீனம் கண்டார் :**

தருமபுர ஆதீன மடாலயத்தை நிறுவியருளினார். **சிவபோகசாரம், சொக்க நாதவெண்பா, முத்தி நிச்சயம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், சோடசகலாப் பிராசாத ஷட்கம், சொக்க நாதக் கலித்துறை, ஞானப்பிரகாச மாலை, நவமணி மாலை**, ஆகிய எட்டு நூல்கள் இயற்றியுள்ளார். பாடல்கள் எளிமையும், இனிமையும் பயப்பனவாய், பதி, பசு, பாசம் என்ற முப்பொருளுண்மையைத் தெளிய விளக்குவனவாய் உள்ளன.

**மதுரையில் குருஞான சம்பந்தர் :**

இளமைக் காலத்திலேயே தாயும் தந்தையுமாய் இவர்களை ஆட்கொண்டருளிய ஆலவாய்ச் சொக்கநாதப் பெருமான் இவர்களது திருவுருவத்தை அண்மைக் காலத்தில் தனது கோயிற் கோபுரக் குடவறையில் அதிகார நந்தி தேவர்க்குரிய இடத்தில் எழுந்தருளுவித்துக்கொண்டது திருவருட்சிறப்பாகும்.

இத் திருக்கோயில் திருப்பணிக்குத் தருமையாதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைசுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியருளிய பின்னர், 1963ஆம் ஆண்டில் நிகழ்ந்த பெருஞ்சாந்திவிழாவிற்கு எழுந்தருளிய போது அன்பர்களால் அவ்விடத்தில் சுதையினால் அமைக்கப் பெற்றிருந்த திருவுருவத்தைக் கண்டு அதனைச்

சிலாவுருவமாகச் செய்வித்துப் பிரதிஷ்டை செய்து, நாள் வழிபாடுகள் நிகழ ஏற்பாடுகள் செய்தருளினார்கள். இத் திருவுருவத்தை இன்றும் அன்பர்கள் பலரும் தரிசித்துப் பயனுற்று வருகின்றார்கள்.

## குமரகுருபரர்

ஸ்ரீவைகுண்டத்தில், சண்முகசிகாமணிக் கவிராயரின் தவக்குழந்தையாகத் தோன்றிய அடிகளார், ஐந்து வயது வரை ஊமையாயிருந்து பின் செந்தில் மேவிய கந்தன் அருளால் ஊமை நீங்கப்பெற்றார்கள். எல்லாவற்றையும் ஓதாமே உணர்ந்தார்கள். உள்ளத்துறவு பூண்டு இறைவன் எழுந்தருளி உள்ள எல்லாத் தலங்களையும் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பங்கொண்டார்கள். இல்லைத் துறந்து வருகிற அவர்கள், சமட்டிவிச்சாபுரமாகிய – துவாத சாந்தத் திருத்தலமாகிய – மதுரையம்பதியை அடைந்தார்கள். கண்ணுதல் கருணை வெள்ளத்து அழுந்தினார்கள். அங்கயற்கண்ணியின் அருளமுதத்தை வாரிஉண்டார்கள். அதனால், முந்துறக் கந்தனைப்பாடிய திருவாயிலிருந்து, மீனாட்சியம்மையைப் பற்றிய பிள்ளைத்தமிழ் பிறந்தது. பிள்ளைத்தமிழிலே, சுவாமிகள் அம்மையின் அருள்வெள்ளத்திலே தோய்ந்து தோய்ந்து, கருணை அமுதத்தைக் கடைந்து கடைந்து அநுபவ நவநீதத்தை அள்ளி வழங்குகிறார்கள்.

இத்தகைய பழுத்த இனிய தமிழ், காலங்கடந்த நரையாமுதிராக் கிழவனுடைய, மனைவியாகிய அகிலமெல்லாமீன்ற அன்னைக் கிழத்தியின் அகத்தையும் பிணித்துவிட்டது. “இவ்வன்பர், பண்டைப் பழப்பொருட்கும் பழம்பொருளாகிய நம்மை இளம்பிள்ளையாக வைத்து ஏத்தினார். அவர் காட்சி, மெய்க்காட்சியாக வேண்டும்” என்ற அருள் நோக்கம் கொண்டு, வாலையாய், பிள்ளைத்தமிழ் அரங்கேறும் அவைக்களத்திலே வந்து அரசன் மடிமீதிருந்து, தமிழ் முழுதுங் கேட்டு, **“தொடுக்குங் கடவுட் பழம் பாடல் தொடையின் பயனே!”** என்று தம்மை விளித்தவுடன் பாடற்பயனாக, தம்முடைய கழுத்தில் இருந்த முத்தாரத்தைக் கழற்றி, சுவாமிகளுக்கு அணிவித்துவிட்டு மறைந்தருளினார். அரசனான திருமலைநாயக்கன், நடந்ததை அறிந்து

நாயகியின் நல்லருளை வியந்தான். சுவாமிகளைத் தம்முடைய உயிர்த் துணையாக—உசாத் துணையாக நாட்டாட்சிக்கேற்ற நல்லறிவுத் துணையாக, ஆக்கிக்கொண்டான். சிவிகை முதலியன கொடுத்துச் சிறப்புப் பல செய்தான். சுவாமிகளும் அங்கேயே எழுந்தருளி இருந்து **மதுரைக் கலம்பகம், மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை** முதலிய நூல்களையும் அருளிச் செய்தார்கள்.

பின்பு இவர்கள் **தருமையாதீனத்து, நான்காவது குருமூர்த்திகளாக வீற்றிருந்தருளிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்பால் அருளுபதேசம் பெற்று அருள் நூல்கள் பலவற்றை ஆக்கினார்கள்.** மொகலாய மன்னனைத் தம் அறிவு விளக்கத்தாலும் அருட் பெருக்கத்தாலும் பிணித்து, அவன் வழங்கிய பொருளைக்கொண்டு அறநிலையங்கள் பலவற்றை ஆக்கினார்கள். காசி முதல் இராமேச்சுரம் வரையில் பசு புண்ணியமும், பதி புண்ணியமும் இடைவிடாது நடைபெற ஏற்பாடுகள் செய்வித்தார்கள். அவருடைய அறநிலையமே, **திருப்பனந்தாளில் காசி மடமாகத்** திகழ்ந்து வருகிறது.

## தலக்குறிப்புகள்

பாண்டிநாட்டுத் தலங்கள் பதினான்கு இவற்றுள் தலையாயது தொன்மையும், தனித்தன்மையும் வாய்ந்த தெய்வமணங்கமழும் மதுரையே! தமிழ்மொழி பிறந்து, தவழ்ந்து, தளிர்நடைபயின்று வளர்ந்த முச்சங்கங்கள் கூடிய இடமும் இத்திருத்தலமே! இறைவனே அரசனாயிருந்து ஆண்டதும், இறைவியே கன்னியாக இருந்து ஆட்சிபுரிந்ததும், அவர்களது இரண்டாவது மகன் முருகனே உக்கிரக்குமாரனாக மானுடப்பிறவி எடுத்து இங்கே பிறந்ததும், அவனிடத்திலே அரசாட்சியை ஒப்படைத்து ஆலவாயில் இறைவனும், இறைவியுமாய் எழுந்தருளியதும் எண்ணி இன்புறத்தக்கன. நினைத்தாலே முக்தி தரும் இத்திருத்தலத்தினைப் பற்றி நாம் அறிய பெரிதும் துணைநிற்பவை ஆதாரங்களே. இலக்கியங்கள், கல்வெட்டுகள், ஓவியங்கள், சிற்பங்கள் இவற்றிலே பயின்றுவரும் இத்தலம் பற்றிய குறிப்புகளைக் காண்போம்.

## இலக்கியங்கள்

பொய்யடிமை இல்லாத புலவர்கள் மதுரையைப் பற்றி நிறைய பாடியிருக்கிறார்கள். மதுரையைப் புலவர்கள் தம் மதிக் கோலால் அளந்து, சொல்ஏரால் வளப்படுத்தி, அறிவு நீர் பாய்ச்சி, கவிதைப்பயிர் தழையச் செய்தார்கள். அவர்கள் இட்டபயிர்தான் இரண்டாயிரம் ஆண்டுகளாகியுங்கூட இன்றைக்கும் இளமை நலம் துய்க்கும் வண்ணம் சிவபோகத்தையும் அறிவமுதத்தையும் அளித்து வருகிறது.

வடமொழியாளர்களால் பழமையான காவியங்கள் என்று போற்றப்படும் இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் பாண்டி நாட்டைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

### இராமாயணம்

"சீதையைத் தேடப்போகும் வானர வீரர்களிடம் சுக்ரீவன், தென்புலத்தில் கபாடபுரம் என்றொரு நகரம் உண்டென்றும், அதன் வாயிற்கதவுகள் பொன்னாலும், முத்தாலும் அழகு படுத்தப்பட்டிருக்கும் என்றும் கூறினான்" என்று வால்மீகி இராமாயணம் இயம்புகிறது.

(கபாடபுரம் கடல்கோளால் அழிந்துபட்ட; இரண்டாம் தமிழ்ச்சங்கம் கூட்டப்பெற்ற; தற்போதைய மதுரைக்கு முன்பு பாண்டித் தலைநகராக விளங்கிய நகரம்)

### மகாபாரதம்

"குமரியந்துறையிடச் சென்ற போது ஐவரில் அழகனான அருச்சுனன், வழியில் பாண்டிய அரசனின் மகளை மணந்து கொண்டான்" என மகாபாரதம் பகர்கின்றது.

### ஹாலாஸ்ய மஹாத்மியம்

இந்த இலக்கியமே பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தின் – முதல் நூல்

"வந்தே ஹாலாஸ்ய நகரீம் வந்தே ஹேமாப்ஜினீ மபி
வந்தே ஸுமீன நயனாம் வந்தே ஸுந்தர நாயகம்"

என்ற ஸ்லோகத்தை வியஸாசாரியார் இயற்றியுள்ளார். நான்கு வேதங்களையும் முறைப்படுத்தி, பதிநெென் புராணங்களையும் இயற்றி, ஸ்ரீ மஹாபாரதத்தையும் படைத்து நமது இந்து தர்மத்திற்குப் பெரும் தொண்டு செய்த வியாஸர் எந்தவொரு தனி நகரத்தையும் இப்படி வாழ்த்தி வணங்கியதில்லை. ஆனால் ஸ்ரீ ஸ்கந்த மகாபுராணத்தில் உள்ள ஹாலாஸ்ய மஹாத்மியத்தில் மதுரை நகருக்கு நமஸ்காரம் என்று வந்தித்துப் போற்றுகின்றார்.

## சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரப் பதிகம் மதுரை நகரினை ஐந்து இடங்களில் சுட்டுகிறது. புகார் காண்டத்தில் மதுரை நகரம் ஐந்துமுறை குறிக்கப்படுகிறது. சிலப்பதிகாரத்தின் இரண்டாவது காண்டம் மதுரைக் காண்டம் என்று பெயர் பெறுகிறது. இக்காண்டம்,

"நெடுஞ்செழியனோ டொருபரிசா
நோக்கிக் கிடந்த
மதுரைக்காண்டம் முற்றிற்று"

எனமுடிகிறது. இக்காண்டத்தில் மதுரை நகரம் பற்றிய குறிப்பு இருபத்தி மூன்று அடிகளில் காணப்படுகிறது. இவை தவிர மதுரைக் காண்டத்தில் நெடுஞ்செழியன் காலத்து மதுரையின் இயல்பு படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

மூன்றாவதாக உள்ள வஞ்சிக் காண்டத்தில் மதுரை பற்றிய குறிப்பு பதின்மூன்று அடிகளில் உள்ளது.

இளங்கோவடிகள் கண்ணகி முதலியோர் மதுரை வந்து சேரும் போது,

"புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை என்னும் பொய்யாக் குலக்கொடி"

என்று வையையைப் போற்றிப் பின்,

"மாதவத் தாட்டியொடு மரப்புணை போகித்
தேமலர் நறும்பொழில் தென்கரை எய்தி
வானவர் உறையு மதுரை வலங்கொள"

என்று அவர்கள் வையையாற்றை மரப்புணை (ஓடம்) மூலமாகக் கடந்து நகரை வலங்கொண்ட செய்தியைத் தருகிறார்.

**பரிபாடல்**

எட்டுத்தொகை நூல்களுள் 'ஓங்கு பரிபாடல்' என்று உயர்த்தி கூறப்படும் இவ்விலக்கியம் எழுபது பாடல்களைக் கொண்டது. நல்லந்துவனாரால் இயற்றப்பட்டது. இவற்றில் நமக்கு கிடைத்துள்ள பாடல்கள் இருபத்தி இரண்டு. தொல்காப்பிய உரை முதலியவற்றால் நமக்குக் கிடைத்திருப்பவை பதினொன்று, இந்த பதினோரு பாடல்களில் ஆறுபாடல்கள் மதுரையைப் பற்றிக் கூறுகின்றன.

பரிபாடலில் மதுரையின் நகரமைப்பு தாமரை மலரோடு ஒப்பிட்டு மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது.

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீரூர் ; பூவின்
இதழகத் தனைய தெருவம்; இதழகத்து
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்;
தாதின் அணையர் தண்டமிழ்க் குடிகள்'

திருமாலின் கொப்பூழில் தோன்றிய தாமரை மலரை ஒத்தது மதுரை நகர். தாமரையின் இதழ்களை ஒத்தது அதன் தெருக்கள். அவ்விதழ்களின் மையத்தில் உள்ள பொகுட்டினைப் போன்றது 'அண்ணல்

கோயில்’. அப்பொகுட்டிலே காணப்படும் மகரந்தத் தூளினைப் போன்றவர்கள் தண்மையான தமிழ்மொழி பேசும் மக்கள்.

மேலும் வஞ்சி, உறையூர் மக்களைப் போல் கோழி கூவும் ஒலிகேட்டு துயிலெழாமல் மறை ஒலி கேட்டு கண்விழிப்பர் மதுரை மக்கள் என்று கூறுவதன் மூலம் மதுரை நகரிலே எப்பொழுதும் மறைஒலி கேட்டுக் கொண்டே இருக்கும் என்பதனை உணர்த்துகின்றனர்.

ஒரு புலவர் தன் அறிவென்னும் தராசிலே மதுரையை ஒரு தட்டிலும் மதுரை அல்லாத உலகத்தை மற்றொரு தட்டிலும் வைத்தாராம். அருளும், பொருளும், மலரும், நலமும் நிறைந்த மதுரைத் தட்டு தாழ்ந்ததாம் இப்பாடலின் மூலம் மதுரையின் சிறப்பினை ஏத்திக் கூறுகின்றார்.

கொடுப்பவரைக் கொண்டாடி, கேட்டு வருபவரைக் கண்டு மனம் பூரிக்கும் வள்ளல்தன்மை கொண்டு வாழ்கின்ற மதுரை, திருப்பரங்குன்றத்து மக்களே வாழ்பவர்களாக கருதப்படுபவர். மற்றெல்லாரும் மறுமை இன்பம் பெற மாட்டார்கள் என்ற பொருள்படும் பாடலால் மதுரை நகர மக்களின் வள்ளல்தன்மை விளங்கும்.

“ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்கும்
சேய்மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார் மற்றையார்
போவாரார் புத்தே ளுலகு”.

“மதுரை திருமகளுக்கு இட்டதிலகம் போன்று விளங்கும்.”

“மதுரை பாண்டியனது வையை உள்ள வரையும் புகழ்பெறுமே
அல்லாமல் ஒருநாளும் பெருமை கெடாது.”

“கார்த்திகைப் பெண்டிர் காதில் தொங்குகின்ற குண்டலம் போலச் சிறப்போடு அழகாக விளங்குவதே அல்லாமல் பாண்டியன் இருக்கும் வரை

சொத்தையாய் போகுமோ?" இதுபோன்ற பொருள்படும் பாடல்களின் மூலம் பரிபாடல் மதுரை நகரினை சிறப்பித்துக் கூறுகின்றது.

**அகநானூறு**

எட்டுத் தொகையில் தலைசிறந்து விளங்கும் நூல்களுள் அகநானூறு குறிப்பிடத்தக்கது. 13 அடி முதல் 31 அடி வரை அமைந்த 400 அகப்பாடல்களின் தொகுப்பு,

பொன்னலாகிய வேப்பமாலையை அணிந்த பாண்டியர்க்கு வழிவழியாக உரிமையுடையது இம்மதுரை. புதிதாக மணந்த பெண்ணினது கூந்தலையும், நெற்றியையும் போலக் கடைத் தெருக்கள் பல்வேறு மணங்களும் கலந்து கமழுகின்றன. மதுரையில் திருவிழாக்கள் இல்லாத நாளே கிடையாது.

பாண்டியனது கயற்கொடியானது இடங்கள் தொறும் விளங்குகிறது. இம்மதுரை, போர்களில் வென்று அழியாப் புகழ்கொண்ட அரசனின் ஆட்சிக்குரியது. பலநாடுகளையும் வென்று தமதாக்கிக் கொண்ட பசும்பூண்பாண்டியனுக்குச் சொந்தமானது; பொன்மலிந்தது; புகழ் மலிந்தது; இசை மிக்கது; மலையையொத்த அரண்மனைகள் பலவற்றையும் உடையது என்று பல புலவர்கள் பேசுகின்றார்கள்.

"சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய அங்கண் மூதூர்"
"பொய்யா விழவின் கூடல்"
"கொடி நுடங்கு மறுகில் கூடல்"
"பாடுபெறு சிறப்பிற் கூடல்"
"பொன்மலி நெடுநகர்க் கூடல்"
"மாடமலி மறுகில் கூடல்"

**புறநானூறு**

எட்டுத் தொகை நூல்களின் வரிசையிலே அகநானூறுக்கு அடுத்து வருவது புறநானூறு. புறப்பாடல்கள் 400 கொண்ட தொகுப்பே இந்நூல்.

இந்நூலிலும் பல இடங்களில் மதுரையைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

தமிழால் மட்டும் பாண்டியர்க்குச் சிறப்பு வந்துவிடவில்லை. அதனுடன் மற்றொரு சிறப்பும் அவர்கட்கு உண்டு என்று புறநானூறு கூறுகின்றது. "நெல்லும் நீரும் பொதுவாக எல்லா மன்னர்க்கும் எளிமையுடையன. அவற்றையே தாமும் பெற்றுத் திகழ்தல் அத்துணை சிறப்பன்று என்று கருதிய பாண்டியர், யாவர்க்கும் பெறுதற்கரிய, பொதிய மலையிடத்தில் உண்டாகும் மணமுள்ள சந்தனத்தையும், தென்கடலில் திகழும் முத்தையும் பெற்று, வீறுகொண்டு விளங்குகின்றனர்; ஒலிக்கும் குரலையுடைய மூவகை முரசுகளுடன் அரசோச்சுகின்றனர்; தமிழ் பொருந்திய மதுரையில் அருள்பொருந்திய செங்கோலைத் தாங்கியுள்ளனர்."

"நெல்லு நீரு மெல்லார்க்கு மெளியவென
வரைய சாந்தமுள் திரைய முத்தமும்
இமிழ்குரன் முரச மூன்றுட னாளும்
தமிழ்கெழு கூடற் நன்கோல் வேந்தே!"

இப்பாடலிலே 'தமிழ்கெழு கூடல்' என்று மதுரை சிறப்பிக்கப்படுகிறது. மேலும் இந்நூலில் 'மாடமலி மதுரை', எனவும் 'வானத்தன்ன வளநகர்' எனவும் அடைமொழிகளால் இத்தலத்தின் சிறப்பு எடுத்துரைக்கப்படுகிறது.

**கலித்தொகை**

'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்ற அடிகளால் கலித்தொகையின் மேன்மையை உணரலாம். இந்நூலில் பல இடங்களில் மதுரையைப் பற்றிய குறிப்பும், வையை ஆற்றைப் பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கின்றது.

சிவந்த தலைக்கோலம் பொருந்திய மயில்போல் சிலவிடங்களில் சிவந்த மணலையுடைய பாடலால் புகழப்படுகின்ற வையையாற்றில் ஓடும்

விளக்கத்தையுடைய அறல் மணல் திருமகளின் மார்பில் உள்ள முத்துமாலை போல் நடுவே பிளந்து ஓடும்.

"தொய்ய(க)ம் தாழ்ந்த கதுப்புப் போல் துவர் மணல்
வையை வார் அவிர் அறல் இடைபோழும் பொழுதினான்"

கூற்றுவனப் போன்ற வேற்படையை உடைய வீரர் புகழ் வளரும் உயர்ந்த மதுரையிலே நெடியவெற்றிக் கொடியை கட்டும் படியாய் புகுந்தார்.

"மீளி வேற் தானையர் புகுதந்தார்
நீள் உயர் கூடல் நெடுங் கொடி எழவே"

இவ்வுலகத்தில் உள்ள சான்றோர் நாவில் உலவும் புகழ்கொண்ட மதுரை கூடல் எனப்பொருள் படும் "நிலன் நாவில் திரிதரூஉம் நீன் மாடக்கூடலார்" மதுரையின் வீதிகள் தூய்மையாக இருக்கும் எனப்பொருள்படும் "கை வாரூஉக் கெண்ட மதுரைப் பெரு முற்றம் போல்" "நான்மாடக் கூடல்" "மகளிரும் மைந்தரும்" போன்ற அடிகள் மதுரையின் மேன்மையை உணர்த்தி நிற்கின்றன.

மேலும் மதுரை மக்கள் புலவருடைய தெளிந்த அறிவுக் கடலிலிருந்து கடைந்தெடுக்கப்பட்டு, நாவின் வழியாகச் சொட்டுகின்ற சொல்லமுதத்தைப் புதிது புதிதாக உண்கின்ற பெரும்பேறு படைத்தவர்கள் என்று வியக்கின்றது கலித்தொகை.

## திருமுருகாற்றுப்படை

ஆற்றுப்படை நூல்களில் சிறந்த நூலாகக் கருதப்படும் இந்நூலை இயற்றியவர் மூன்றாம் தமிழ்ச் சங்கத்தின் தலைவர்; சிவபெருமானே நேரில் வந்தபொழுதும் அஞ்சாமல் நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்று முழங்கிய நக்கீரர். இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.

நக்கீரர் திருப்பரங்குன்றம் மதுரைக்கு மேற்கே இருக்கிறது என்பதைக் கூற வந்தபோது பாண்டியன் எல்லோரையும் வென்று வெற்றி

வீரனாக விளங்குவதால் மதுரை போரே இல்லாத வாயிலை உடையது; திருமகள் சிறிதும் அசைந்து கொடுக்காத அங்காடி வீதிகளை உடையது; மாடங்களை உடையது; பாண்டிய மன்னர்கள் தங்களுடைய வீரத்திலும், வெற்றியிலும் வைத்திருக்கின்ற பெருமதிப்பினால் தாங்களே ஆடவர் என்றும் மற்ற சேர, சோழ மன்னர்களெல்லாம் மகளிர் என்றும் எண்ணியவராய் அவர்கள் விளையாடுவதற்கு அரச கோபுரத்தின் இருபக்கத்திலும் தோரண கம்பங்கள் நிறுத்தி, அதிலே கயற்கொடியை ஏற்றி, அதன் பக்கத்திலே பந்து, கழங்கு, பாவை இவற்றைத் தொங்க விட்டிருக்கிற சிறப்பினை உடையது என்று கூறியுள்ளார்.

"செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரறு வாயில்"

**சிறுபாணாற்றுப்படை**

சங்க இலக்கியமான பத்துப்பாட்டு நூல்களில் ஆற்றுப்படை நூல்களில் மற்றொரு சிறந்த நூலான சிறுபாணாற்றுப்படையும் மதுரையைப் பற்றி சிறப்பித்துக் கூறுகிறது. இதனை இயற்றியவர் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்.

மதுரை சங்கத்தே தமிழ் ஆராய்ந்து, கண்கூடாக சங்கத்தின் சால்பையும், பாண்டியன் திறத்தையும், மதுரையின் மாண்பையும் அறிந்த நத்தத்தனார் கூறுவதாவது : "நீரைத் தனக்கு எல்லையாகவுடைய கொற்கை என்னும் ஊருக்கு அரசன் தெற்கிலே அமைந்துள்ள நிலத்தைக் காக்கும் தொழிலையுடையார் குடியில் உள்ளவன். பகைவர் நிலத்தை மாறுபாட்டால் கைக்கொண்ட பாண்டியன், முத்துமாலையையுடைய கொற்றக் குடையினையும், கண்ணிற்கு அழகு நிறைந்த கண்ணியினையும், விரைந்து செல்லும் தேரினையும் உடைய செழியன், தன்னிடத்துத் தோன்றிய மனமகிழ்ச்சி பெறுதற்கரிய முறைமையினையும் தமிழ் வீற்றிருந்த தெருவினையுமுடைய மதுரை!"

"தத்துநீர் வரைப்பிற் கொள்கைக் கோமான்
தென்புலங் காவலர் மருமா னென்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை"

மேலும் இந்நூலில் மதுரைப்பதியின் தெருக்களெல்லாம் தேனால் நனைந்து வழுக்குகின்றன; தமிழ் ஆங்கே நிலைபெற்றுள்ளது என்பன போன்ற செய்திகளையும் நயம்பட எடுத்துரைக்கின்றது.

## மதுரைக் காஞ்சி

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான மதுரைக் காஞ்சி ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் காலத்து மதுரையின் இயல்பை மாண்புற விளக்குவது. இயற்றியவர் புலவர் மாங்குடி மருதனார். மதுரையை ஆண்ட மன்னனுக்கு நிலையாமை என்னும் உண்மைப்பொருளை உணர்த்தி அதன்மூலம் தெய்வீக நெறியில் ஒழுகச் செய்யும் உயரிய நோக்கத்துடன் பாடப்பட்டது இந்நூல்.

மதுரை நகரத் தெருக்களைப் பற்றி இந்நூலில் கூறப்படுவதாவது; தெருக்கள் மிகவும் அகலமும், நீளமும் உடையன. ஆறுபோன்ற தெருக்களின் இருமருங்கிலும் கரைகள் போன்று மனைகள் அமைந்துள்ளன. இவற்றின் உள்ளே காற்றோட்டத்திற்கென சாளரங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. வீடுகள் உயர்ந்து தோன்றுவதால் காற்று அமரர் உலகிற்கும் சென்று ஒலிக்கின்றதாம்.

"வகைபெற வெழுந்து வான மூழ்கிச்
சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்
யாறுகிடந் தன்ன வகாண்டுந் தெரு"

மதுரை நகரில் அந்நாளில் 'எழு நாளந்தி விழா' ஒன்று ஏழுநாட்கள் கொண்டாடபட்டது. இவ்விழாவிற்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்து மக்கள் திரண்டு வருவர். அவகளுடைய ஆரவாரம் பெரிதாக இருக்கும் என்கிறார்.

"கழுநீர் கொண்ட வெழுநா ளந்தி
யாடு துவன்று விழவினா டார்த்தன்றே"

மதுரையின் வளத்திற்கு காரணமான வையையாற்றைப் பற்றியும் இந்நூல் உயர்த்திக் கூறுகின்றது. மரம் நெருங்கின சோலை; கொம்புகளிலே ஆண்குரங்குகளும் பெண் குரங்குகளும் விளையாடுகின்றன. மயில் ஆரவாரிக்கும் காடு. மணற்குன்றுகள்; அவற்றையடுத்து அழகிய பொழில்கள் இவற்றைச் சூழ்ந்து கரைகள் தோறும் தாதுக்கள் சூழ்ந்த கோங்கினுடைய பூவும் ஏனை மலர்களும் பரந்து, மாலையொழுகினாற் போல ஒடும் பெருநீர் நன்றாகி வருதலையுடையது வையையாறு.

"கலைதாய வுயர்சிமையத்து
மயிலகவு மலிபொங்கர்
மந்தி யாட மாவிசும் புகந்து
முழங்குகால் பொருத மரம்பயில் காவி
னியங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணற்
கான்பொழி றழீஇய அடைகரை தோறுள்
தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅயக்
கோகையி னொழுகும் விரிநீர் நல்வர
லவிரறல் வையை"

**கல்லாடம்**

'கல்லாடம் படித்தவருடன் மல்லாடாதே' என்ற பழமொழி கல்லாடத்தின் பொருட்செறிவை நமக்கு உணர்த்தும். இது மதுரையைப் பற்றி கோவைத் துறையால் அமைந்த 100 பாடல்களைக் கொண்டது. இதன் ஆசிரியர் கல்லாடர்.

இந்நூலில் மதுரை பொன், பூ முதலிய மங்கலங்களை முதலாகக் கொண்டு பெரும்புலவர் வாயில் இருந்து எழுந்த பாட்டைப்போல, உலகத்திற்காக மிக மிக இன்பம் பயக்கும் வையையாற் சூழப்பட்டது. வையை பலவுயிர்களையும் படைத்து எங்கும் பரப்புகின்ற பிரமனைப் போன்றது. காப்பதால் திருமாலையொத்தது. கரைக்கு அடங்கி அழித்தல் தொழிலைச் செய்தாலும், நீரைத்தரித்தலாலும் சிவபெருமானை ஒத்தது. மரங்களும், மணிகளும், சங்கங்களும் நிரம்பப் படைத்தமையால் இந்திரனையொத்தது. முக்தி வழிபாடு செய்யும் முனிவர் பெருமக்கள் நீராடி வேத மந்திரங்களைச் சொல்லி நீரையிறைத்தலால் அந்தணர்களையொத்தது. மீனக் கொடியையும், ஐந்திணை கூடிய அமுதத்தமிழையும், செல்வம் நீங்காத மதுரையையும் கூடியிருத்தலால் பாண்டிய மன்னனை ஒத்தது. நவமணிகளை எடுத்துப் பரப்பி விலை மதிப்பிடுவதால் வணிகனைப் போன்றுள்ளது. உழவுத்தொழிலும் விதையும், நாற்றும் தழைக்கச் செய்தலால் வேளாளர்களையொத்தது இவ்வாறு ஒன்றோடொன்று ஒப்புமைப்படுத்தி மதுரையின் சிறப்பையும் மேன்மையையும் எடுத்து இயம்புகிறது கல்லாடம்.

மதுரையும், சிவமும் உடலும் உயிரும் போன்று அமைவன என்பதை

"பெருநீர் வையை வளநீர்க் கூடல்
உடலுயிர் என்ன உறைதரு நாயகன்"

என்று விளக்குகிறது இந்நூல்.

### பெரியபுராணம்

சைவ சமயத்திற்கு பெருந்தொண்டாற்றிய சிவனடியார்களின் (64 பேர்) வரலாற்றைக் கூறுவதால் இந்நூல் 'திருத்தொண்டர் புராணம்' என்றும் அழைக்கப்படும். இந்நூலாசிரியர் மதுரையின் இயற்கையழகையும், தமிழ் வளர்த்த தன்மையையும், இங்கே வீற்றிருக்கும் சொக்கநாதர் புகழையும் பல இடங்களில் பாடிப்பரவுகின்றார்.

வாசம் விரிகின்ற சோலைகளால் சூழப்பட்டு, மின்பொலியும் வானத்தை அளக்கும்படி நீண்ட கொடிகள் சூழ்ந்த, பெரிய கோபுரங்கள் தோன்றுகின்ற ஊர் இது. இங்கே, எலும்பின் அணிகளையணிந்த சொக்கநாதர் இனிதாக விரும்பி வீற்றிருக்கிறார்.

"...... முருகலர் சோலைகள் சூழ்ந்து
மின்பொலி விசும்பை யளக்குநீள் கொடிசூழ்
வியனெடுங் கோபுரந் தோன்றும்
என்பணி யணிவா ரினிதமர்ந் தருளும்
திருவால வாயிது!"

மூன்று உலகங்களையும் விட உயர்ந்தது மதுரை. தமிழ் நூல்களில் விளங்க கூடிய உண்மைப் பொருளான செம்மைப் பொருளைத் தருவார் திருவாலவாயில் (மதுரையில்) வாழ்கின்ற எம்பெருமான் நம் பாவத்தைத் தீர்க்கக் கூடிய சிவபெருமான் தமிழ்ச்சங்கத்திலே இருந்திருக்கின்றார்.

"மும்மைப் புவனங்களின் மிக்கதன் றேஅம்மூதூர்
மெய்ம்மைப் பொருளாந் தமிழ்நூலின் விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளும் தருவார்திரு வாலவாயில்
எம்மைப் பவந்தீர்ப் பவர்சங்கம் இருந்த தென்றால்"

மேன்மை பொருந்திய இயல், இசை, நாடகம் என்று முத்தமிழும் தங்கியிருக்கும் அழகிய மூதூர்.

**திருவிளையாடற்புராணம்**

'மதுரை' என்ற திருத்தலத்தில் இறைவன் தன்னடியவர்களுக்கு அருளும் பொருட்டு அறுபத்தி நான்கு திருவிளையாடல்களை நிகழ்த்தி இருக்கின்றார். அதனைத் தொகுப்பாக எடுத்துரைக்கும் திருவிளையாடற்புராணம். புராண நூல்களிலேயே தலைசிறந்ததாகக் கருதப்படும் இந்நூலின் ஆசிரியர் பரஞ்சோதி முனிவர்.

பரஞ்சோதி முனிவர் காட்சிக்குப் பாண்டியநாடு ஓர் அழகிய இளம்பெண்ணாகத் தோற்றமளிக்கிறது. அந்த நாட்டு மகளுக்கு முகம் மதுரை. பரங்குன்றுங் கொடுங் குன்றுங்கொங்கைகள். திருச்சுழியல் கொப்பூர். வயிறு குற்றாலம் (குறு ஆலம்) செங்கை ஏடகம் மேனி பூவ(ண்) ணம். தோள் வேய்வனம் (மூங்கிற்காடு – நெல்வேலி) என்று அங்கங்களை விதந்தெடுத்துக் காட்டுகிறார்.

மதுரை மாநகரச் சிறப்பை மிகவும் நயம்பட உரைக்கிறார். அதாவது, 'பல்வகை வளமும் பெற்றுப் பாங்குடன் இலங்கும் பாண்டி நாட்டின் நடுவில் அமைந்துள்ள நகரமே மதுரையாகும். பாண்டி நாட்டைப் பல நலன்களும் பூண்ட நங்கை என்று கொண்டால் அந்நங்கையின் பெருமை பொருந்திய முகமாக மதுரையைக் கொள்ளலாம். இப்பெரிய நிலவுலகத்தை அழகிய மகளாக எண்ணினால், அவள் மார்பின்கண் இருந்து விளங்கும் ஒளியை உடைய பதக்கமாகப் பாண்டி நாட்டையும், அப்பதக்கத்தின் பக்கங்களில் பதித்த ஒளிமணிகளாகப் புறநகரங்களையும், அவ்வொளி மணிகளின் நடுவிடத்தே திகழும் தலைமையான பெரிய மணியாக மதுரை மாநகரத்தையும் கூறலாம்.

"வடுவின் மாநில மடந்தைமார் பிடைக்கிடந் திமைக்கப்
படுவி லாரமே பாண்டிநா டாரமேற் பக்கத்
திருவின் மாமணி யதன்புற நகரெலா மிவற்றுள்
நடுவி னாயக மாமணி மதுரைமா நகரம்."

"சிறந்த தண்டமிழ் ஆலவாய்" மதுரை. புடைநகர் இடைநகர் அகநகரென மூன்று பகுப்பினையுடையது. அகநகரிலே பரத்தையர் வீதி வேளாளர் வீதி, வணிகர் வீதி, அரசர் வீதி. மறையவர் வீதி, சைவர் வீதி இவைகள் முறையே ஒன்றற்கொன்று உள்ளாக அமைந்திருக்கின்றன. புண்ணியஞ்செய்கின்ற இடம் மண்ணுலகென்றும், அப்புண்ணியத்தின் பயனை அநுபவிக்கும் இடம் விண்ணுலகென்றும் பெரியோர்கள் சொல்வார்கள்; ஆனால் இரண்டையும் ஒருசேர நிகழ்த்தும் இடம் மதுரையே. மதுரைச் செல்வர்களுக்குப் பொழுது போக்கு அங்கயற்கண்ணியொடு கூடிய சொக்கலிங்கப் பெருமானை

மூன்றுபோதும் வழிபாடு செய்வதும், பூசை செய்வதும், திருவிளையாடல்களைக் கேட்பதும், சிந்திப்பதும் அடியவர்களுக்கு வழிபாடு செய்வதுமேயாகும் என்பன முதலிய பல மேன்மைகள் நகரப் படலத்தாலும், தலவிசேடப் படலத்தாலும் அறிவிக்கப்படுகின்றன.

**பிற இலக்கியங்கள்**

இன்னும் புராணமும் சிற்றிலக்கியங்களுமாக மதுரை யைப்பற்றிப் பல உள்ளன. அவற்றுள் சில

**திருவாலவாயுடையார் திருவிளையாடல் :**

இது செல்லி நகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பவரால் எழுதப் பெற்றது. ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்து மூன்று செய்யுள்களை யுடையது. இது வேம்பத்தூரார் திருவிளையாடல் எனவும் வழங்கும். இது ஒரு மொழிபெயர்ப்புநூல். இதன் முதல்நூல் உத்தரமகா புராணத்தின் ஒரு பகுதியாகிய **சாரசமுச்சயம்** என்பது. இந்நூலின் கவிப்போக்கு, பெரும்பாலும் சங்கநூற் செய்யுட்களைத் தழுவியது. திரு விளையாடல் முறைவைப்பில் இதற்கும் ஏனைய புராணங்கட்கும் மிகுதியும் வேறுபாடு உண்டு.

**கடம்பவன புராணம் :**

இது வீமநாத பண்டிதரால் இயற்றப்பட்டது. ஆயிரத்துத் தொண்ணூறு பாடல்களையுடையது. அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் தொகுத்து ஒரே படலத்திற் கூறுகிறது. இதன் முதல்நூல் **கதம்பவன புராணம்** என்னும் வடநூல். இது சிதம்பரம் வாமதேவ முருகபட்டாரகரால் அச்சிடப்பெற்றுள்ளது.

**சுந்தரபாண்டியம் :**

இது வாயிற்பதி அநதாரி என்பவரால் இயற்றப்பெற்றது.

**திருவிளையாடற்புராணம் :**

இது வேதாரண்யம் என்ற திருமறைக்காட்டில் சைவா சாரியர் மரபிலுதித்த **பரஞ்சோதி முனிவர்** என்பவரால் இயற்றப்பெற்றது. இதன்

முதனூல் **ஆலாசியமகாத்மியம்.** 3363 செய்யுட்களையுடையது. அன்புச்சுவை சொட்ட ஆக்கப்பட்டது. இதன் கவிப்போக்கு, தெள்ளிய ஆழ்ந்த கருத்துக்களால் தெய்வ அன்பு சிறக்க அமைந்துள்ளது.

**மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி :**

இது, அந்தாதித் தொடையால் பத்துப் பத்துப் பாட்டாக வெவ்வேறு சந்த அமைப்புடன் பாடப்பெற்றது.

மதுரை சொக்கேசர் அருள் தன்மையை கூறவந்த ஆசிரியர்

"கனியுங் கிழங்குங் கருக்காயும்
காற்றுஞ் சருகு மருந்தியிரு
பனியு மழையும் வெயிலுநின்று
படிவந்த திரிந்து புலனைந்தும்
முனியும் படிவீ ணருந்தவஞ்செய்
முனிகாள்! மதுரை புகுவீரேல்
இனியுங் களுக்கு மதுரேசர்
எல்லாப் பதமுந் தருவாரே".

என்ற அடிகளால் உணர்த்துகின்றார்.

'திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா' என்று ஒரு நூல் உள்ளது.

**திருவிளையாடற்பயகரமாலை :**

திருவிளையாடல் வரலாற்றையொட்டி எழுந்த ஒரு சிறுநூல், இதற்குப் பழைய உரை ஒன்று உண்டு. அது இன்னும் அச்சாக வில்லை.

**மதுரைக்கோவை :**

இது நிம்பை சங்கர நாரராயணரால் இயற்றப்பெற்றது. ஊர் வேம்பத்தூர். இவருடைய காலம் முதலியன நன்றாகத் தெரியவில்லை.

**சொக்கநாதவெண்பா; சொக்கநாதக்கலித்துறை :**

மதுரை சொக்கேசர் புகழ்பாடும் இவ்விரண்டு நூல்களும்

தருமையாதீனத்து ஆதி குருமூர்த்திகளாகிய ஸ்ரீகுருஞானசம்பந்தரால் இயற்றப்பெற்றன. அவர்களுடைய சிவாநுபவ முதிர்ச்சி செஞ்சொற் கவியின்பத்தால் தெளிவாகப் புலப்படுத்தப்பெற்றுள்ளது. சொக்கநாத வெண்பா 94 பாடல்களையுடையது. சொக்கநாதக் கலித்துறை 11 பாடல்களையுடையது.

**மதுரைக்கலம்பம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மீனாட்சியம்மைகுறம்**

குமரகுருபர சுவாமிகளால் இயற்றப்பெற்றவை. சுவாமிகள் இளமைப் பருவத்தே மதுரைக்கு வழிபடவந்த காலத்து, அம்மையின் அருட்பெருக்கால், பிள்ளைத்தமிழைப் பாடினார்கள். இவர்களுடைய தமிழ்வளம் தண் பொருநை ஒழுக்கைப்போலத் தடையின்றிச்செல்வது. இரட்டைமணிமாலையும், குறமும் இவர்கள் இயற்றியன அல்ல என்று கூறுவாருமுளர்.

**மதுரை மும்மணிக்கோவை :**

இது பலபட்டடைச் சொக்க நாதபிள்ளை என்பவரால் இயற்றப்பெற்றது. இவர் 200 ஆண்டுகட்குமுன் மதுரையில் இருந்தவர். இவருடைய தந்தையார் சொக்கநாதக் கவிராயர். இப்பாடல்கள் நல்ல நயமும் பொருளாழமும் உடையது. இப்பாடல்களில் பழமொழிகள் மிகவும் கையாளப் பட்டுள்ளன.

**மதுரைச் சொக்கநாதர் உலா :**

இது புராணத்திருமலைநாதர் என்பவரால் இயற்றப்பெற்றது. இந் நூலாசிரியர் காஞ்சிபுரம் ஞானப்பிரகாச மடத்துச் சிஷ்ய பரம்பரையைச் சார்ந்தவர். காலம் கி.பி. 1526 என்று தெரிகிறது.

**பாண்டிமண்டல சதகம் :**

இது பாண்டி மண்டலத்து வரலாறு முழுவதையும் அறிவிப்பது. மதுரை ஐயன் பெருமாள் என்பவரால் ஆக்கப்பெற்றது. 100 பாடல்களை உடையது.

**மதுரைத் திருப்பணிமாலை :**

இது மதுரைத் திருக்கோயில், கோபுரம், மண்டபம் முதலியவை யாரால் எப்பொழுது திருப்பணி செய்யப்பட்டது என்று அறிவிக்கின்றது. பெரும்பாலும் நாயக்கர் காலத்து அரசாட்சி முறைகளையே அறிவிக்கின்றது.

இன்னும் பிற்காலத்துச் சிற்றிலக்கியங்களாகத் திகழ்வன பலஉள. **சிவராசதானி** என்னும் தமிழ்த் தலைநகர மாகிய மதுரை, எந்தக்காலத்தும், எல்லாப் புலவர்களாலும் பாடப்படுவது ஒன்றேயாம்.

ஒரு புலவர் அங்கயற்கண்ணியை அடிவணங்கினேன் :

ஆதலால் எமன் வந்தால் ஊருக்கு அனுப்பிவிடுவேன் என்கிறார்.

"வண்டிட்ட கூந்தலும் வாரிட்ட கொங்கை வரைகளுங்கற்
கண்டிட்டசொல்லும் கயற்கண்ணி பாகமுங் கைதொழுதேன்
தண்டிட் டடிக்கு மறலிவந்தால் கள்ளையிட்டு நகைத்து
உண்டிட்டு வாசிறு பிள்ளாயென்று ஊருக்க னுப்புவனே"

என்பது அப்பாடல், சொக்கேசப்பெருமானைப் பார்த்து அவரே,

"துடியார்கரத்து மதுரேசரே யும்மைத் துள்ளியசேர்
கொடியானடித்ததுங் குற்றமன்றே கிழக்கோதையிவள்
அடியாளென் றேசுட்ட பிட்டையெல் லாமள்ளி யள்ளித்தின்று
வடியா நதியிற் கரைத்துவிட் டீரவன் வல்லிவினையே"

என்று நகைச்சுவைபடக் கூறுகிறார். இத்தகைய தனிப் பாடல்கள் பல உள்ளன.

இவைதவிர பல இலக்கியங்கள் மதுரையைப் பற்றிய குறிப்புகளை ஒருசில அடிகளில் பகர்கின்றன. அவையாவன,

"கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழ்"

– திருக்கோவை

"தண்பணை யுடுத்த தமிழ்ப்பெருங் கூடல்"

– பண்டார மும்மணிக் கோவை

"தடம்பணை யுடுத்த தண்டமிழ்க் கூடல்"

– மதுரைக் கலம்பகம்

"தானின் றுலகு தழையத் தழைந்த தமிழ் மதுரை"

– மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை

"தெய்வத் தமிழ்க்கூடல்"

– மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

"மைந்தரொடு ஊடு மகளிர் திமிர்ந்திட்ட
குங்கும ஈர்ஞ்சாந்தின் சேறிழுக்கி – எங்கும்
தடுமாறல் ஆகிய தன்மைத்தே தென்னன்
நெடுமாடக் கூடல் அகம்"

– முத்தொள்ளாயிரம்

"மாட மோங்கிய மல்லன் மூதூர்
ஆறுகிடந் தன்ன அகனெடுந் தெருவிற்"

– நெடுநல்வாடை

கடைச்சங்க கால முதற்கொண்டு இடைக்காலத்தில் வாழ்ந்த சம்பந்தரன்ன சமயக் குரவர்களாலும், பின்னர் குமரகுருபரர் போன்ற மெய்ஞானிகளாலும், அண்மைக் காலத்தே இருந்த அமரகவி பாரதியார் போன்றவர்களாலும், இன்றுவரை இம்மதுரையின் சிறப்பு, குன்றின் மேலிட்ட விளக்காய் இலங்கி வந்துள்ளது. இந்நகரைப் பற்றிய இலக்கியங்கள் அனைத்தையும் தொகுத்தல் என்பது நினைத்தற்கரியது.

# மதுரைக்கோயில் கல்வெட்டுகள்

*– கல்வெட்டு ஆய்வாளர், முனைவர். வேதாச்சலம்*

இந்தியாவில் அதிகமாகக் கல்வெட்டுகள் காணப்படும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. தமிழ்நாட்டில் முப்பதாயிரம் கல்வெட்டுகள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். இக்கல்வெட்டுகளில் பெரும்பகுதி கோயில்களிலேயே உள்ளன. காலத்தைக் காட்டும் கண்ணாடியாக விளங்கும் இவை தமிழ்நாட்டுக் கோயில்களின் தோற்றம், வளர்ச்சி, கட்டடக்கலை, சிற்பக்கலை, வழிபாடு, கோயில்நிர்வாகம், கோயில்சார்ந்த கலைகள், சமுதாயம், பண்பாடு நாகரிகம், பல்வேறு சமயங்களின் வரலாறு ஆகியவற்றை அறிவுதவும் ஆதாரங்களாகத் திகழ்கின்றன. இம்முறையில் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் கல்வெட்டுகளும் அக்கோயிலின் வரலாற்றை அறிய உதவுகின்றன.

மதுரையில் முக்கண்செல்வன் என்றழைக்கப்பட்ட சிவபெருமான்கோயில் 1800 ஆண்டுகளுக்கு முன்பு இருந்துள்ளதைப் புறநானூற்றுப் பாடல் மூலம் அறியமுடிகிறது. இதனைத் தொடர்ந்து பரிபாடல் போன்ற பண்டைய இலக்கியங்கள் மதுரைக்கோயில் குறித்து தெரிவிக்கின்றன. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மதுரைக்கு வந்த சம்பந்தர் அங்கயற்கண்ணியோடு அமர்ந்து விளங்கும் ஆலவாய் இறைவன் கோயில் பற்றி தமது மதுரைப் பதிகத்தில் குறிப்பிடுகின்றார். கபாலி என்றழைக்கப்பட்ட திருமதிலுடன் கூடிய கட்டடக்கோயிலாகத் திருவாலவாயுடையார் கோயில் திகழ்ந்தது என்றும் திருஞானசம்பந்தர் தெரிவிக்கின்றார். ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்னர் தொடர்ந்து முற்காலப்பாண்டியர், சோழர், இடைக்காலப்பாண்டியர், பிற்காலப்பாண்டியர், விசயநகரவேந்தர், வாணாதிராயர், மதுரைநாயக்கர், ஆங்கிலேயர் காலங்களில் பல்வேறு வளர்ச்சிகளை, இக்கோயில் பெற்று வந்திருக்கிறது. கல்வெட்டுகளைப் பொறுத்தவரை கி.பி. 12ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் தற்போது காணப்படுகின்றன. ஆனால் முன்புள்ள சோழர், முற்காலப்பாண்டியர் தமிழ் மற்றும் வட்டெழுத்துக்

கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படாதது வியப்பதாக உள்ளது. இதற்குப் பல காரணங்கள் இருக்க வேண்டும். காலவெள்ளத்தாலும் அரசியல் சமுதாய மாற்றங்களாலும் கல்வெட்டுப் பொறித்த கட்டடக் கற்கள் அழிவுக்குள்ளாகி இருக்கலாம். மதுரைநாயக்க மன்னர்கள் இக்கோயிலின் கருவறை முதலாக பல பகுதிகளை எடுத்துவிட்டு புதிய மண்டபங்களோடு விரிவுபடுத்திக் கட்டியபோது பழங்கல்வெட்டுகள் இடம் பெயர்ந்து மறைந்திருக்க வேண்டும். இக்கோயிலையும் சுற்றுப்புறத்தையும் நன்கு ஆய்வுசெய்தால் பழங்கல்வெட்டுகள் வெளிப்பட வாய்ப்புள்ளது.

## கல்வெட்டுகள்

மதுரையிலிருந்து ஆட்சிபுரிந்த பிற்காலப் பாண்டிய மன்னனான சடையவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி.1190–1216) காலத்திலிருந்து ஆங்கிலேயர் காலம் வரையிலான அறுபத்துநான்கு கல்வெட்டுகள் மத்திய அரசு தொல்லியல்துறையால் இதுவரை படியெடுக்கப்பட்டுள்ளன. காலமுறைப்படி இவற்றின் எண்ணிக்கை பின்வருமாறு அமைந்துள்ளது.

| | |
|---|---|
| 1.பிற்காலப்பாண்டியர்காலம் | – 44 கல்வெட்டுகள் |
| 2. விசயநகர மதுரைநாயக்கர்காலம் | – 19 கல்வெட்டுகள் |
| 3. ஆங்கிலேயர்காலம் | – 1 கல்வெட்டு |
| மொத்தம் | – 64 |

## கல்வெட்டு குறிப்பிடும் அரசர்கள்

பிற்காலப் பாண்டிய மன்னர்களில் முதலாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி.1194), முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1216–1244), இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்(கி.பி. 1238–1255), இரண்டாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் (1250–1276), முதலாம் குலசேகரபாண்டியன் (கி.பி. 1268–1318), மூன்றாம் சடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1315–1334), பராக்கிரமபாண்டியன் ஆகியோரது கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன. பாண்டியர் கல்வெட்டுகளில் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்துக் கல்வெட்டுகளே எண்ணிக்கையில் அதிகஅளவில் உள்ளன. இம்மன்னன்

காலத்தில் மதுரைக்கோயில் பல திருப்பணிகளைக் கண்டு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை இது காட்டுகிறது.

விசயநகர வேந்தர்களில் கிருஷ்ணதேவராயர் (கி.பி. 1509–1529) அச்சுததேவராயர் (கி.பி. 1529–1542), சதாசிவராயர் (கி.பி. 1542–1570) ஆகியோரின் கல்வெட்டுகள் இக்கோயில் உள்ளன.

மதுரைநாயக்க மன்னர்களில் வீரப்பநாயக்கர் (கி.பி. 1572–95) குமாரகிருஷ்ணப்பநாயக்கர் (கி.பி. 1595–1601), முத்துவீரப்பநாயக்கர் (கி.பி. 1609–23) திருமலைநாயக்கர் (கி.பி. 1623–1659) விஜயரங்க சொக்கநாதநாயக்கர் (கி.பி. 1706–32) ஆகியோரது கல்வெட்டுகள் உள்ளன. கி.பி 1842ல் பொறிக்கப்பட்ட பச்சையப்பமுதலியாரின் ஆங்கிலேயர் காலத்துக் கல்வெட்டு ஒன்றும் இக்கோயிலில் உள்ளது.

## அறக்கொடைகள்

கல்வெட்டுகள் கோயிலுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு பொருட்கொடைகள், நிலக்கொடைகள் பற்றிக் கூறுகின்றன. இவை கோயிலில் நடைபெறும் நாள்வழிபடு, திங்கள்வழிபாடு, ஆண்டுவழிபாடு, திருவிழக்கள் ஆகியவற்றின் செலவினங்களுக்காக அளிக்கப்பட்டவையாகும்.

## பிற்காலப்பாண்டியர்காலம்

### திருவிளக்குகள்

கோயிலில் இரவும் பகலும் புறவிருளை அகற்றத் திருவிளக்குகள் எரிப்பதற்காகத் தானங்கள் வழங்கப்பட்டுள்ளன. திருவாலவாயுடையாரின் கருவறை வெளிப்புற வாயிலில் இரண்டு நிலைவிளக்குள் வைத்து எரிப்பதற்காக சடையவர்மன் குலசேகரப்பாண்டியனின் 'அகப்பரிவார முதலி' என்றழைக்கப்பட்ட அதிகாரி ஒருவன் இருபது பொற்காசுளைத் தானமாகத் தந்துள்ளான்.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திலும் இதேபோன்று திருவிளக்கு எரிப்பதற்காகத் தானம் தரப்பட்டிருக்கிறது.

**சிறப்புப்பூசை – திருப்பதியம் பாடுதல்**

கோயிலில் நடைபெறும் சிறப்புப்பூசைகளின் போது இறைவன் முன்னர் திருப்பதியம் (தேவாரம்) பாடுவதற்குச் செண்டாடுவானான உத்தமபாண்டியப் பிச்சன் என்பவனுக்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அருளாளதேவனான வாணதிராயன் என்பவன் ஏற்படுத்திய சிறப்புச்சந்திக்கு வெண்பைக்குடி நாட்டு நம்பிதாயநல்லூர் என்ற ஊர் தானமாகத் தரப்பட்டுள்ளது. மார்கழித்திருநாளில் திருவெம்பாவை பாடுகின்ற பரதேசி கோவணவர் என்றழைக்கப்படுவர்களுக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருவாலவாயுடையார் திருவுலா வந்து திருக்காமகோட்டத்தில் (மீனாட்சியம்மன் சன்னதி) 'வாணாதிராயன் திருவாசல்' என்றழைக்கப்பட்ட தெற்குவாசலுக்கு வந்து நிற்கும்போது இறைவன் கேட்கும்படியாக அவ்விடத்தில் 'சதாரிப்பண்' பாடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மதுரைமாநகரில் திருவாலவாயுடையார் விறகுவெட்டியாக வந்து சேமநாதனின் இசைச்செருக்கு அழியும்படி பாணபத்திரனுக்காகப் பாடிய பாடலின் பண் சதாரிப்பன் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் கருநாடகமன்னன் போசளர் அரச மரபைச் சார்ந்த வீரசோமீசுவரன் பெயரால் அவன் பிறந்தநாளான ஐப்பசித் திங்கள் மகநட்சத்திரநாளில் அவனது பெயரால் திருவாலவாயுடையார்க்குச் சிறப்புச்சந்தி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்காகப் பலவூர்களிலிருந்து வரிநீக்கிய நிலங்கள் இறையிலியாகத் தரப்பட்டன.

**நிலக்கொடைகள்**

கருநிலக்குடி நாட்டிலுள்ள குண்டூரான குலசேகர மங்கலத்து நிலங்கள் ஆலவாய் இறைவன் மீது பூசுவதற்காகும் வாசனைத்தைல

செலவினங்களுக்காக அளிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று இறைவன் மேனியில் பூசும் சந்தனத்தைக் கொண்டு வந்து தருவதற்காக அண்டநாட்டிலுள்ள துருமூர் என்ற ஊரின் நிலங்களிலிருந்து வரியாக வந்த நான்கு பொற்காசுகள் தானமாகத் தரப்பட்டுள்ளன. கோயிலில் திருச்சின்னப்பணி செய்வதற்காகப் பணியாளர்களுக்கு இரண்டு பொற்காசுகள் வழங்கப்பட்டுள்ளன என்று பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

## அடுக்களைப் புறம்

கோயில் மடைப்பள்ளிக்கு அன்றாடம் ஆகும் செலவினங்களுக்காக அடுக்களைப்புறம் என்ற பெயரில் நிலங்கள் வரிநீக்கி அளிக்கப்பட்டுளஎன. மாதேவன் அழகிய சொக்கனார் என்பவனுக்கு முடித்தலைகொண்ட பாண்டியச் சதுர்வேதிமங்கலத்தினைச் சார்ந்த மாத்தூர்நிலங்கள் அடுக்களைப்புறம் என்ற பெயரில் தானமாகத் தரப்பட்டுள்ளன. அண்டநாட்டு, மருத்துவக்குடி என்ற ஊரைச் சார்ந்த திருநாட்டப்பெருமாள் என்ற பிராமணன் மடைப்பள்ளியில் அடுவானாகப் பணிசெய்வதற்கு இறையிலியாக பராந்தகப்பாண்டியச் சதுர்வேதிமங்கலம் என்ற ஊரிலிருந்து சில நிலங்கள் மானியமாகக் கொடுக்கப்பட்டன. இதேபோல் இராசந்தனான முனையதரையன் என்பவனுக்குப் பருத்திக்குடிநாட்டுக் கோடிக்காவல் நல்லூரில் அடுக்களைப்புறமாக நிலங்கள் தரப்பட்டுள்ளன. கோயிலில் பணிசெய்த பிற பணியாளர்களுக்கும் நிலக்கொடைகள் மானியமாக வழங்கியதைப் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் கூறுகின்றன.

## நந்தவனங்கள்

வழிபாட்டிற்காகும் பூக்களை அளிப்பதற்காக நந்தவனங்கள் தோற்றுவிப்பதற்கு நிலங்கள் தரப்பட்டதையும் பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

**கட்டுமானங்கள்**

சிற்றாலயம், மண்டபம், கோபுரம் போன்ற கோயில் கட்டுமானங்களைக் கட்டியது குறித்தும் பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் 'விரதம் முடித்த ஈஸ்வரமுடையார்' என்ற பெயரில் மதுரைக் கோயில் வளாகத்தில் கோயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அருளாளன் சேவகத்தேவனை வாணாதிராயன் நடராசருக்காக அதிரவீசியாடுவார் திருமண்டபம் (நடராசர் சன்னதி) ஒன்றை எடுப்பித்துள்ளான். இவனே திருவாலவாயுடையார் கோயிலைச் சுற்றித் திருநடைமாளிகையை எடுப்பித்துள்ளான். மேலும் மதுரைக்கோயில் திருத்தேரினைப் புதுப்பித்து எழுநிலைக்கோபுரத்தினையும் திருப்பணிசெய்து முடித்தான் இவ்வாணாதிராயன் இதற்காக இவன் ஆண்மர்நாட்டிலுள்ள சோழபாண்டிய நல்லூர் என்ற ஊரினைத் தானமாகத் தந்துள்ளான்.

**கோபுரங்கள்**

மதுரைக்கோயிலின் கிழக்குராஜ கோபுரம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு பல திருப்பணிகளைக் கண்டுள்ளது. நான்காம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1303–25) காலத்தில் இது திருப்பணிசெய்து திருத்திக்கட்டப்பட்டுள்ளது. இதனை உறுதிபடுத்தும் முறையில் கிழக்குக் கோபுரத்தின் உட்புறச் சுவரில் 'அவனிவேந்தராமன் திருக்கோபுரம்', 'சுந்தரபாண்டியன் திருக்கோபுரம்' என்று தெரிவிக்கும் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. மேற்கு ராஜகோபுரம் பராக்கிரம பாண்டியனால் (கி.பி. 1315–1334) கட்டப்பட்டது. இதைத் தெரிவிக்கும் அவன் புகழ்பாடும் பாடல் கல்வெட்டுகள் கோபுரத்தின் உட்புறச் சுவரில் காணப்படுகிறது.

**சைவமடங்கள் – அன்னதானம்**

மதுரைகோயிலைச் சூழ்ந்து பல சைவமடங்கள் இருந்ததையும் சில புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டதையும் பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவற்றை உருவாக்குவதற்கும்

இவற்றிலிருந்து அன்னதானம் வழங்குவதற்கும் தானங்கள் தரப்பட்டுளளன. மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் 'சுந்தரபாண்டியன் திருமடத்தில்' தபசியருக்கு உணவளிக்க நிலங்கள் தானமாகத் தரப்பட்டுள்ளன. மாறவர்மன் குலசேகரபாண்டியன் காலத்தில் இருந்த 'நரலோக சூரியன் திருமடத்தில்' மகேசுவரர்க்கு உணவளிப்பதற்காகப் பாகனூர்கூற்றத்தில் இருந்த நிலங்கள் தானமாகத் தரப்பட்டுளளன. மதுரையிலிருந்த சைவமடங்களில் சிறப்பு வாய்ந்த மடங்களில் ஒன்றாகத் 'திருஞானசம்பந்தன்மடம்' கல்வெட்டுகளில் குறிப்பிடப் படுகிறது. புவனேசுவீரன் மடம், தெற்கில்மடம், மானப்பெரியான் மடம், என்ற பெயர்களில் பல சைவமடங்கள் மதுரையில் இருந்திருக்கின்றன, புவனேசுவீரன் மடத்தில் ஆவணித் திருநாட்களின் போது ஒவ்வொரு நாளிலும் நூறுபேர் வீதம் பத்துநாட்கள் ஆயிரம் அடியார்க்கு அன்னதானம் வழங்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

திருவாலவாயுடையார் கோயில் பதியிலார் (தேவரடியாள்) சிவனைமுழுதுடையாள் என்பவர் சைவமடம் ஒன்றினை ஏற்படுத்தியதைப் பிற்காலப்பாண்டியர் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

**கோசாலைமடம்**

போசளமன்னன் வீரசோமேசுவரனால் நின்றியங்கியடுவார் என்ற பிச்சாமடத்துச் சந்தானம் கேட்டுக் கொண்டபடி 'கோசலைமடம்' ஒன்று அமைக்கப்பட்டது. இதற்காகும் செலவினங்களுக்காக திருவேடகத்திலும் பறப்புநாட்டுக் இடைக்குடியிலும் நிலங்கள் தானமாக தரப்பட்டன. இம்மடத்திற்கு முப்பது பசுமாடுகள் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அவற்றைக் கண்காணித்து பராமரிப்பதற்காக ஆண்டார்கள் வைராகிகள் என்றழைக்கப்பட்ட பணியாட்கள் பதினைந்து பேர்கள் நியமிக்கப்பட்டதைச் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு தெரிவிக்கிறது.

### வைகைக்கரையில் தீர்த்தத் திருவிழா

இளையான்குடியிலுள்ள முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் கல்வெட்டு ஒன்று மதுரைக்கோயில் குறித்துப் பல புதிய செய்திகளைத் தருகின்றன. இம்மன்னனின் அதிகாரியாக விளங்கிய இளையான்குடியைச் சார்ந்த கங்கைகொண்ட சூரியதேவன் வாணாதிராயன் காலிங்கராசன் என்பவன் திருவாலவாயுடைய நாயனார் குறிப்பிட்ட திருநாட்களில் வைகையாற்றில் தீர்த்தம் ஆடியருள வைகையாற்றங்கரையில் 'காலிங்கராயன்' என்ற தனது பெயரில் மண்டபம் ஒன்றைக் கட்டுவித்துள்ளான் என்று இளையான்குடி பெருமாள்கோயில் கல்வெட்டு தெரிவிக்கிறது. இவனே மதுரைக்கோயிலில் தனது பெயரால் சூரியதேவர் திருமேனியையும் ஈஸ்வரவுடையார் திருமேனியையும் செய்தளித்துள்ளான். இவரது மனைவியின் பெயரால் திருவுடை நாச்சியார் திருமேனியை செய்தளித்துள்ளான் என்று கல்வெட்டு கூறுகிறது.

### மூன்றாம் குலோத்துங்க சோழன் திருப்பணிகள்

சோழமன்னன் மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுகள் கி.பி. 1202–03 அளவில் மதுரையை வென்று மதுரையில் வீராபிசேகமும் விஜயாபிசேகமும் செய்து கொண்டதைத் தெரிவிக்கின்றன. அவனது வெற்றிச் சிறப்புக்களைத் தொகுத்துக்கூறும் மெய்க்கீர்த்திப் பாடல் கல்வெட்டுகள் மதுரைக்கோயிலில் அவன் செய்த திருப்பணிகளையும் எடுத்து கூறுகின்றன. இது மதுரைகோயில் குறித்து தெரிவிக்கும் பழங்காலச் கல்வெட்டுச் சான்றாகும். மதுரையில் குலோத்துங்க சோழன் திருவாலவாயுடையார் கோயிலைச் சுற்றித் தன்பெயரால் திருவீதியை அமைத்தான். சிறப்பு வழிபாடுகள் செய்து அதற்காகத் திருநாட்களையும் குறித்தான். முப்புரங்களையும் நெற்றிக்கண்ணால் எரித்த சொக்கர் திருவீதிவுலா வருவதற்கு ஏற்பாடு செய்தான். தன்னைப் பேரரசன் என்றும் கருதாமல் அத்திருவுலாவைத் வீதியில் நின்று கண்டு மகிழ்ந்தான். திருவாலவாயுடையார் கோயிலைப் பொன்மலை என்றும் சொல்லும் படியாக பொன்வேய்ந்தான் என்று பின்வருமாறு புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அவனது கல்வெட்டு தெரிவிக்கிறது.

**அறந்தரு திருவாலவாயில் அமர்ந்தவர்க்குத் தன்பேரால்**
**சிறந்தபெருந் திருவீதியும் திருநாளும் கண்டருளிப்**
**பொருப்புநெடுஞ் சிலையால் முப்புரமெரிந்த**
**சொக்கருக்குத்**
**திருப்பவனி கண்டருளித் திருவீதியில் சேவித்துத்**
**தென்மதுரைத் திருவாலவாய் பொன்மலையெனப்**
**பொன்வேய்ந்து**

ஆனால் இச்செய்தியைத் தெரிவிக்கும் கல்வெட்டுகள் மீனாட்சியம்மன் கோயிலில் காணமுடியவில்லை.

**விசயநகரவேந்தர், நாயக்கர் காலம்**

நாயக்கர்காலக் கல்வெட்டுகளில் இக்கோயில் சொக்கநாதகசுவாமிகோயில் என்று குறிப்பிடப்படுகிறது. அங்கயற்கண்ணியம்மைக்கும் மீனாட்சியம்மன் என்ற பெயர் இக்காலத்திலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது. நாயக்கர் காலத்தில் மதுரைகோயில் பெருவளர்ச்சிகண்டது. விசயநகர வேந்தர்களோடு இணைந்து மதுரைக்கோயிலை மிகப்பெரிய அளவில் நாயக்க மன்னர்கள் விரிவுபடுத்தினர். பல கோபுரங்களையும் மண்டபங்களையும் உருவாக்கி தானங்கள் பல அளித்துள்ளனர்.

**எழுகடல்**

கிருஷ்ண தேவராயரின் தர்மமாக அவரது அதிகாரியாக விளங்கிய சாளுவநரசநாயக்கர் என்பவன் மதுரையில் புதுமண்டபத்திற்குக் கிழக்கே எழுகடல் என்று அழைக்கப்படும் குளத்தினை கி.பி. **1516–ல்** தோற்றுவித்தான். இதற்குச் 'சப்தசாகரம்' என்று பெயரும் இட்டான் என்று கல்வெட்டு தெரிவிக்கின்றது.

**வீரப்பநாயக்கர் மண்டபம்**

மதுரைக்கோயிலில் சுவாமி சந்நிதியிலுள்ள கம்பத்தடி மண்டபத்தினை அடுத்துள்ள வீரபத்திரர், காளி, ஊர்த்துவதாண்டவர்

ஆகியோர் சிற்பங்கள் அடங்கிய பெருமண்டபத்தினை கி.பி. 1583ல் வீரப்பநாயக்கன் எடுப்பித்துள்ளான். இதனை அம்மண்டபத்து தூண் ஒன்றிலுள்ள தமிழ், தெலுங்கு மொழிகளில் அமைந்த கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

### சுவாமி சந்நிதிகோபுரம்

கம்பத்தடி மண்டபத்திற்குக் கிழக்கே அமைந்த கோபுரத்தினை அச்சுததேவராயர்க்குப் புண்ணியமாக விசுவப்பநாயக்கர், ஈசுரப்பநாயக்கர் போன்றோர்கள் சேர்ந்து எடுப்பித்துள்ளனர்.

### வழிபாட்டிற்குக் கொடைகள்

கோயில் வழிபாட்டிற்கும் கோயில் பணியாளர்களுக்கும் நாயக்கர் காலத்தில் மானியமாக பலவூர்கள் தானமாகத் தரப்பட்டிருக்கின்றன. விட்டலதேவ மகாராாசர்க்குப் புண்ணியமாகத் தென்களவழிநாட்டுக் கணக்கன்குடியைச் சார்ந்த பாடி ஏந்தல் என்ற ஊர் தானமாகத் தரப்பட்டுள்ளது.இதன் வருவாயிலிருந்து கோயிலுக்கு மலர்மாலைகள் வழங்கப்பட்டன. திருமலைநாயக்கருக்குப் புண்ணியமாக மார்கழித்திருநாள் கொண்டாட சில வரிகள் கோயிலுக்கு கொடுக்கப்பட்டன. நாயக்கர்காலத்தில் கோயிலில், ஸ்ரீபாதம்தாங்கிகளுக்கு ஊதியமாக பல ஊர்களின் வரிகள் பலமுறை தானமாக அளிக்கப்பட்டன. உத்திரமேரூர் மகிபாலகுலகாலச் சேரியைச் சார்ந்த நரசய்யர் என்பவரால் கிருஷ்ணதேவராயர் உபயமாக புனர்பூசநட்சத்திரத் தினத்தன்று திருவாலவாயுடையார் திருவீதியுலா எழுந்தருளுவதற்கு ஐநூறுபொன் தானமாகத் தரப்பட்டுள்ளது.

நாயக்கர் காலத்தில் வாழ்ந்த வெற்றிலை பயிரிடுவோர்க்கு விதித்த வரிகள் பற்றியும் அவர்கள் கடமை பற்றியும் தெரிவிக்கின்றது ஒரு கல்வெட்டு.

### பிறசெய்திகள்

மதுரையில் கி.பி. 1547–ல் ஞானகூத்தர் என்பவரின் தலைமையில் இயங்கிய மடத்திற்காக நிலம் விடப்பட்டுள்ளது.

மதுரைக்கோயிலில் கி.பி. 1710ல் விசயரங்க சொக்கநாதநாயக்கர் காலத்தில் தன்னுயிரைப்போக்கிக் கொண்ட நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுள்ளது. மதுரைக் கோயிலுக்குஉரிமையுடைய கோயில் நிலங்களிலிருந்து வழக்கத்திற்கு மாறாக அதிகவரிகளை வாங்கி அதிகாரிகள் சிலர் கோயில் குடிகளைத் துன்புறுத்திய செயலைக் கண்டித்து இது நடைபெற்றிருக்கிறது. மதுரைக்கோயிலில் பணியாளர் ஒருவர் கிழக்கு கோபுரத்தின் மீதேறி கீழே விழுந்து உயிர்துறந்தான் என்று நாயக்கர் காலக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.

## ஆங்கிலேயர் காலம்

ஆங்கிலேயர் காலத்தில் கி.பி. 1842ல் பொறிக்கப்பட்ட கிழக்கு ராஜகோபுரக் கல்வெட்டு ஒன்று நித்திய கட்டளைக்கும் கோயிலில் பழமையான சாத்திரங்களை (சட்டம்) சொல்லித் தருவதற்கும் ஆங்கிலம் பயில்விப்பதற்கும் ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டதைத் தெரிவிக்கிறது. பணிபுரிந்த ஆசிரியர்களுக்கு ஊதியம் காஞ்சிபுரம் வள்ளல் பச்சையப்ப முதலியாரால் வழங்கப்பட்ட ஒருலட்சம் பக்கோடா பணத்திலிருந்து வரும் வட்டியைக் கொண்டு அளிக்கப்பட்டிருக்கிறது என்று கல்வெட்டு கூறுகிறது.

## கல்வெட்டு

1. காஞ்சிபுரம் பச்சையப்பமுதலியா
2. ருடைய தர்மம் சகலருக்கும் பிர
3. சித்தமாகத் தெரியும் பொருட்டும்
4. நிரந்தரமான ஞாபகத்தின் பொரு
5. ட்டும் செய்யும் விளம்பரமாவது
6. இறந்துபோன புண்ணிய புருஷரா
7. கிய மேற்படி பச்சையப்பமுதலியாரவ
8. ர்களாலே வைக்கப்பட்டிருக்கும் லக்ஷ
9. ம் வராகனுக்க வரப்பட வட்டிப்ப
10. ணத்தில் நின்றும் மதுரையில் ஸ்ரீமீ
11. னாட்சி அம்மன் சன்னதியில் நித்திய

12. க் கட்டளைத் தர்ம விசாரணைக்க
13. ர்தர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் சென்னப
14. ட்டணத்திலிருக்கும் இந்து சபையாரவர்
15. களுடைய உத்தரவின்படி சாலிவாகன
16. சகாப்தம் 1764ம் ஹூத்துக்குச் ச
17. ரியான சுபகிருத ஹூமுதல் ஹூக–920
18. வராகன் செலவுள்ளதாக நடந்து வருகி
19. ன்றது ஷெ முதபதனம் கனம் பொருந்தி
20. ய சூப்ரீம் கோர்ட்டு அதிகாரிகளுடைய
21. உத்தரவின்படி சென்னபட் டணத்திலி
22. ருக்கும் ஜெனல்தி ரேசரியென்னும் கவர்
23. ன்மெண்டாருடை பொக்கிஷத்தில் வை
24. க்கப்பட்டிருக்கின்றது. ஷெ தர்மம் கிரமம்
25. ாமாக நடவாவிட்டால் தர்மத்தில் சிரந்தையு
26. ள்ளவர்கள் ஷெ சபையாரவர்களுக்குத்
27. தெரியப்படுத்த வேண்டுவது மெற்படி ல
28. க்ஷம் வராகன் போக மற்ற மிகுதி பணத்
29. துக்கு வரப்பட்ட வட்டியில் அனுகூலமா
30. கும் போது ஷெ இடத்தில் இந்து பிள்ளைகளும்
31. க்கு இந்ததேசத்தில் வழங்குகின்ற விவகா
32. ர சாத்திரங்கள் கற்பிக்கிறதற்கு மீ–க–கு
33. ய–வராகன் சம்பளத்தில் ஒரு பண்டித
34. ரையும் இங்கிலிஷ் பாஷை கற்பிக்கிறத
36. ற்கு ரு – வராகன் சம்பளத்தில் ஒரு உபாத
37. தியாயரையும் நியமித்து வித்தியாசா
38. லை மேற்படுத்தப்படும்

**முடிவுரை**

மதுரைக்கோயிலில் காணப்படும் எழுநூறு ஆண்டுகளைச் சார்ந்த கல்வெட்டுப் பொறிப்புகள் காலந்தோறும் அதன் நிலையையும் வளர்ச்சியை

ஓரளவு புரிந்துகொள்ள துணைபுரிகின்றன. இவற்றில் பெரும்பாலான கல்வெட்டுகளின் முழுமையான வாசகங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. இவை முழுமையாக வெளியிடப்படுமானால் இன்னும் பல அரிய செய்திகளை அறியவாய்ப்புள்ளது.

## துணைபுரிந்த சான்றுகள்


1. South Indian Inscriptions Volumes Nos. IV to VIII, XXII
2. Annual Reports on Indian Epigraphy, year 1890, 1908, 1915, 1937-38, 1941-42, 1943-44, 1955-56, 1961-62, 1962-63, 1963-64.
3. R. Sathianatha Ayer, History of Nayaks of Madurai, Madras 1924.
4. D. Devakunjari, Madurai through the Ages, SAHER, Madurai, 1985.
5. மதுரைக்கோயில் கும்பாபிசேகமலர்கள் 1963, 1974 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தவை.
6. வெ. வேதாசலம், பாண்டியநாட்டில் வாணாதிராயர்கள், மதுரை 1987
7. என். சேதுராமன், பாண்டியர் வரலாறு, கும்பகோணம், 1989.

# ஓவியங்கள் சிற்பங்கள்

'ஆடலும் பாடலும், சிற்பமும் சித்திரமும், கவிதையும் இசையும் கலந்தினிக்கும் நிலைக்களமாக மதுரை மாநகர் பொருந்திகோயில் இலங்கிற்று' என்பதே திருவிளையாடற் புராணம் எழுதியவர் கண்டது. மதுரை மீனாட்சியம்மன் கோவில் ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் உலகோர் கண்டு வியக்கும் வண்ணம் பேரழகு படைத்தவையாகவும், கலைநயம் கொண்டவையாகவும் அமைந்துள்ளன.

## ஓவியங்கள்

மதுரை மீனாட்சியம்மன் கோயில் ஓவியங்கள் யாவும் நாயக்கர் காலத்தைச் சேர்ந்தவை. பொற்றாமரைக்குளத்துக்கு அருகிலே அமைந்துள்ள ஊஞ்சல் மண்டபத்தின் விதானத்தில் மீனாட்சியின் திக் விஜயத்தையும், மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணத்தையும் ஓவியங்களாக தீட்டியிருக்கின்றனர்.

"எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவிய"

மாகிய மீனாட்சியின் திருக்கல்யாணக் காட்சியை சிற்பி கல்லிலே கவினுற வடித்துவிட்டான். ஆனால் ஓவியனுக்கு அது தீட்டமுடியாத ஒரு ஓவியமாகவே அமைந்து விட்டது. இந்தக் காட்சியில்தான் ராணி மங்கம்மாள் (கி.பி. 1869–1706) தளவாய் இராமய்யப்பர் (நரசப்பையர்) முதலியோர் திருக்கல்யாணத்தைக் கண்டு தரிசிப்பதாக ஊஞ்சல் மண்டப விதானத்தில் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

பொற்றாமரைக் குளத்தின் வடக்கு, கிழக்கு சுவர்களிலும், நாயக்கர் கால ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வோவியங்கள் மூலம் புராணத்

கதைகளை அறிவதோடு அக்கால மக்களின் ஆடைவகைகள், அணிகலன்கள் போன்றவை பற்றியும் அறிய முடிகிறது.

**சிற்பங்கள்**

அட்டசக்தி மண்டபத்தில் எட்டு தூண்களில் எட்டு வடிவங்கட்கான சக்திரூப சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முதலிப்பிள்ளை மண்டபத்தில் சிவபெருமானது பிட்சாடனர் வடிவம், தாருகாவன முனிவர்கள், மோகினி முதலியோர் உருவச் சிலைகள் அமைந்துள்ளன. சங்கிலி மண்டபத்தில் பஞ்சபாண்டவர் மற்றும் திரௌபதியின் உருவச் சிலைகள் உள்ளன. மேலும் சிவபெருமானின் 64 திருவிளையாடல்களைக் குறிக்கும் சிற்பங்கள் காணத்தகுந்தவை.

மீனாட்சியம்மன் கருவறைச் சுவர்கள் கலைக்கூடமாக அமைந்துள்ளன. 32 சிங்கங்கள், தேவகோட்டம், உச்சிக் கொடுங்கைகள் ஆகியவை நுட்ப வேலைப்பாடுகள் அமையப் பெற்றவை. முக்குறுணி விநாயகர் சிற்பம் ஒரே கல்லினாலான அற்புத சிற்பம்.

சுந்தரேசுவரர் கோயில் சிற்பங்களில் மிகச்சிறந்த படைப்புகள் ஊர்த்துவ தாண்டவர், காளி, அக்கினிவீரபத்திரர், அகோரவீரபத்திரர் சிற்பங்கள் மிகப்பெரியவை.

கம்பத்தடி மண்டப சிற்பங்கள் குறிப்பிட்டு சொல்லக் கூடிய சிறப்பு பெற்றவை. சிவபெருமானது 25 மூர்த்தங்கள் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. உலகப் பிரசித்திபெற்ற மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணக்கோல சிற்பம் அமைந்துள்ளது. மேலும் இம்மண்படத்தில் புராண நிகழ்ச்சிகள் பல கருங்கல்லில் வடித்துக் காட்டப்பட்டுள்ளன.

கொடிக்கம்பத்தின் முன் மண்டபத்தில் அமைந்துள்ள நந்தியின் சிலை ஒரே கல்லினால் ஆனது. கொடிக்கம்பத்தை அடுத்து சுவாமி சந்நிதி வாசலில் இருபுறங்களிலும் சதாசிவ மூர்த்தி, காயத்ரி இருவரின் அழகிய திருஉருவங்கள் உள்ளன. சைவ சமயக்குரவர் நால்வரின் உருவங்கள் தூண்களில் அமைக்கப்பெற்றுள்ளன. தூண்களின் அருகில் துவாரபாலகர் திருஉருவங்கள் மிகப்பெரியனவாக அமைக்கப்பட்டுள்ளன.

கருவறை சுவர்களில் உள்ள 32 சிங்கங்கள் கலை நேர்த்தி உடையவை. தேவகோட்டங்கள் மற்றும் 8 யானைகளின் சிற்ப உருவங்கள் காணத்தக்கவை. சுவாமி சந்நிதி முன் வெள்ளியம்பலத்தில் நடராசபெருமானின் உருவம் கல்லிலும் செம்பிலும் அமைந்துள்ளது.

ஆயிரங்கால் மண்டபம் ஒரு சிற்ப கலைக்கூடம் எனலாம். இங்கு 985 தூண்கள் உள்ளன. பல தூண்களில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இம்மண்டப வாயிலில் நரியைப் பரியாக்கிய சொக்கநாதர் உருவம் குதிரை மீது அமர்ந்திருப்பது போல் உள்ளது. இத்தூணின் மேற்புறம் ஒரு உடும்பு ஒரு சிறு கல்வளையத்தை வாயில் கவ்வி நிற்கும் சிற்பம் கலைநுட்பம் வாய்ந்தது.

மீனாட்சியம்மன் கோயிலில் உன்னதமான சிற்பங்கள் உள்ள இடம் மூன்று. அவை புதுமண்டபம், கம்பத்தடி மண்டபம், ஆயிரங்கால்மண்டபம் என்பன. புதுமண்டபத்தில் பிரம்மாண்டமான கலைநயம் மிக்க வியத்தக்க சிற்பங்கள் நிறைய உள்ளன.

மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டிருந்தாலும் பெரும்பான்மையான சிற்பங்கள் நாயக்கர் காலப் பாணியிலேயே அமைந்துள்ளன. சிற்ப அமைப்பைக் கொண்டு நாம் அவற்றின் காலத்தை அறிய முடியும். சிற்ப நுட்பத்தின் அறிவார்ந்த படைப்புக்களைக் கொண்ட ஆலயமாக இது அமைந்திருப்பதால்தான் இன்றளவும் உலகப் பிரசித்தி பெற்றதாக உள்ளது.

# நிர்வாகம்

இக்கோயிலின் நிர்வாகம் ஆதியில் தேவஸ்தானக் கமிட்டியின் மேற்பார்வையிலிருந்து வந்தது. பிறகு 1925இல் திட்டம் (scheme) ஏற்பட்டு, 1937இல் சென்னை எண்டோன்மெண்ட் போர்டின் நிர்வாகத்துக்கு வந்தது. 1951 முதல் சென்னை அறநிலைய பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) நேர்நிர்வாகத்திலிருந்து வருகிறது. அறநிலையத் துறையால் நியமிக்கப் பெற்ற இணை ஆணையர் / நிர்வாக அதிகாரியும், மற்றும் அறங்காவலர் குழுவும் கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள்.

# சொத்துக்களும் வருமானமும்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குக் கீழ்க்கண்டவாறு நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளன.

| | ஏக்கர் – செண்டு |
|---|---|
| நன்செய் விஸ்தீரணம் | 748 – 50 |
| புன்செய் விஸ்தீரணம் | 435 – 68 ½ |
| | 1184 – 18 ½ |

**திருக்கோயில் நிலங்கள் உள்ள கிராமங்கள் :**

**மதுரை மாவட்டம் :** பெரியகுளம், மன்னாடிமங்கலம், விளாம்பட்டி, மட்டபாரை, சோழவந்தான், தென்கரை சோழவந்தான்பேட்டை, சோளைகுறிச்சி, கீழமாத்தூர், தும்பச்சிபட்டி, போடிநாயக்கன்பட்டி, தாதம்பட்டி, சம்பைக்குளம், பொன்மேனி, சம்பந்தர் ஆலங்குளம், கள்ளந்திரி, பூவக்குடி, மீனாட்சிபுரம், சாமநத்தம், வில்லாபுரம், அவனியாபுரம், விளாங்குடி, ஆமூர், கருவேலம்பட்டி, வடபழஞ்சி, கூடல் செங்குளம், கொடிக்குளம், திருப்பரங்குன்றம், வடிவேல்கரை, மேலநெடுங்குளம், புலியூர்நத்தம், ஜோகில்பட்டி, கோதையிருப்பு, அனுப்பானடி, கொக்குளப்பி, வண்டியூர், நாயக்கன்பட்டி, செல்லூர், பழக்காபுதுப்பட்டி, வலையங்குளம், ஆஸ்டின்பட்டி, கோச்சடை.

**காமராசர் மாவட்டம் :** பாவாலி கிராமம், சீனியாபுரம் கிராமம்.

**இராமநாதபுரம் மாவட்டம் :** சம்சிகாபுரம், வத்திராயிருப்பு, பானகசேரி, தின்னானேரி, நெடுங்குளம், பாட்டம், பிரமனூர், குருந்தம்பட்டு, அயன்புளியங்குளம், தச்சனேந்தல்.

**திருச்சி மாவட்டம் :** மேலப்பகுதி, தோகைமலை, இக்கரைகோசி குறிச்சி, அபிஷேகபுரம்.

**திருநெல்வேலி மாவட்டம் :** அணியாபரண நல்லூர்.

# கோயிலின் வருட வருமானம்

**1417ம் பசலி 1-7-2007 ஜூலை முதல் 30-6-2008 ஜூன் முடிய**

| | | |
|---|---|---|
| 1. | சில்லறை குத்தகை வரவுகள் | ரூ. 80,49,256.00 |
| 2. | கட்டிடம், மனை, தற்காலிக வாடகைகள் வரவு | ரூ. 87,63,342.00 |
| 3. | உண்டியல் வருமானம் | ரூ.3,08,31,435.00 |
| 4. | உபய சாமான்கள், பொது விற்பனை (பரிவட்ட ஏலம்) | ரூ. 14,37,910.00 |
| 5. | அர்ச்சனை ஈவு மற்றும் பிராத்தனை காணிக்கை வரவு | ரூ. 37,60,240.00 |
| 6. | சிறப்பு விருந்தினர்கள் மகாமண்டபம் நுழைவு காணிக்கை | ரூ. 1,98,55,940.00 |
| 7. | அயல்நாட்டினர் நுழைவு கட்டணம் | ரூ. 21,25,850.00 |
| 8. | அரசு மானியம் (கிராண்டுகள்) தஸ்திக் மற்றம் பேரீஜ் வஜா | ரூ. 48,829.00 |
| 9. | சேமிப்பு பத்திரங்கள், வங்கி முதலீடுகள் மூலம் வட்டி வரவு | ரூ.2,00,39,937.00 |

10. கலைக்கூடம் வரவு ரூ. 32,40,511.00

12. பலதரப்பட்ட இதர லாபம் தரக்கூடிய வருமானம் ரூ. 6,36,48,577.00

12. படம் மற்றும் புத்தக விற்பனை மூலம் வரவு ரூ. 66,81,94.00

13. புகைப்பட அனுமதி மாலை விற்பனை மூலம் வரவு ரூ. 23,25,065.00

**திருவாபரணங்கள் :** இக்கோயிலின் திருவாபரணங்கள் மிகவும் விலைமிக்கவை. அவற்றின் இன்றைய மதிப்பு சுமார் 29,26,38,729.00 ரூபாய்க்கு மேல். இவை பாண்டியர்களாலும், நாயக்கர்களாலும், பிறமன்னர்களாலும் கொடுக்கப்பட்டன. இவைகளில் முக்கியமாக முதற்காலப்பாண்டிய மன்னனால் கொடுக்கப்பட்ட அழகிய தொங்கலணியும், (Pendant) திருமலை நாயக்கரால் தரப்பெற்ற இரத்தினங்களும், முத்துகளும் இழைத்த முடியணியும் (Head-dress), கிழக்கிந்தியக் கம்பெனியாரால் கொடுக்கப்பெற்ற 108 பவுன்களைக் கொண்ட பொன்வடமும், கலெக்டராக இருந்த ரோஸ்பீட்டர் (ரூரோஸ்பீட்டர்) என்பரால் தரப்பெற்ற தங்கத்தாலான அங்கவடிகளும் (Golden Stirrups) உள்ளன. ரூஸ்பீட்டர் மீனாட்சியம்மையிடம் மிகவும் பக்தி கொண்டவர். தன்னை ஒரு விபத்திலிருந்து காப்பாற்றியதற்காக மேற்படி நகையைக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. சிறப்பாக நளச்சக்கரவர்த்தியால் அருள்மிகு சுந்தரேசுவரருக்குக் கொடுக்கப்பட்ட ஓர் ஆபரணம் உள்ளது. இது இத்தலத்தின் பழமையை நன்கு விளக்கும். மேலும் மைசூர், திருவாங்கூர், நேபாளம் முதலிய மன்னர்களாலும், மற்றைய குறுநில மன்னர்களாலும் கொடுக்கப்பட்ட வேறு நகைகளும் உள்ளன. இவைகள் மிகவும் பத்திரமாய்ப் பாதுகாக்கப்படுகின்றன. வெள்ளி, தங்கத்தாலாகிய வாகனங்களும், சப்பரங்களும் உள்ளன.

# திருக்கோயில் கட்டண விபரங்கள்

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | வைர கீரீடம் சாத்துப்படி கட்டணம் | 5,000.00 |
| 2. | சந்தனக் காப்பு கட்டணம் அ/மி முக்குறுணி விநாயகர் (அ) அ/மி பத்ரகாளியம்மன் சந்நிதிகள் | 2,250.00 |
| 3. | சந்தனக் காப்பு கட்டணம் சுற்று கோயில் | 1,000.00 |
| 4. | அம்மன் / சுவாமி அபிஷேகம் | 1,300.00 |
| 5. | இதர சந்நிதிகள் அபிஷேக கட்டணம் | 1,000.00 |
| 6. | சுற்று கோயில் அபிஷேகம் | 550.00 |
| 7. | உபய தங்க ரத புறப்பாடு கட்டணம் | 1,501.00 |
| 8. | உபய திருக்கல்யாணம் அம்மன் / சுவாமி | 1,501.00 |
| 9. | சித்தர் பூக்கூடாரம் | 500.00 |
| 10. | முக்குறுணி விநாயகர் கொழுக்கட்டை | 10,000.00 |
| 11. | சேவை தேதி மாற்ற கட்டணம் | 25.00 |
| 12. | உபயவரவு | 10.00 |
| 13. | துலாபாரம் | 5.00 |
| 14. | ஜெபக்குடம் | 10.00 |
| 15. | மாவிளக்கு | 5.00 |
| 16. | அன்ன பிரசானம் | 5.00 |
| 17. | தர்ப்பணம் | 20.00 |
| 18. | சிறப்பு நுழைவு (விழா நாட்களில்) | 25.00 |
| 19. | தீபாராதனை | 25.00 |
| 20. | கல்யாணம் | 100.00 |
| 21. | புரோகிதம் | 30.00 |
| 22. | சகஸ்ரநாமம் | 25.00 |
| 23. | திரிசதை | 25.00 |
| 24. | ஐயப்பன் மாலை | 10.00 |
| 25. | உபய அபிஷேகம் | 10.00 |
| 26. | சிறப்பு நுழைவு | 20.00 |
| 27. | அர்ச்சனை | 5.00 |
| 28. | கல்யாணத் தாம்பூலம் | 50.00 |
| 29. | வீடியோ | 250.00 |

| | | |
|---|---|---|
| 30. | மொட்டை கோபுரமாலை | 50.00 |
| 31. | வெளிநாட்டினர் நுழைவு சீட்டு | 50.00 |
| 32. | கேமரா கட்டணம் | 50.00 |
| 33. | குங்குமம் | 5.00 |
| 34. | திருவிளக்கு பூஜை | 10.00 |
| 35. | கங்கை அபிடேகம் | 10.00 |
| 36. | சினிமாப்படச்சுருள் மற்றும் புதுக் கணக்கு சுவாமி, அம்மன் பாதத்தில் வைத்து எடுக்க | 250.00 |
| 37. | அம்மன் பூப்பாவாடை (புஷ்ப அங்கி) | 250.00 |
| 38. | மோட்சதீபம் | 50.00 |
| 39. | சுவாமி புறப்பாட்டின் போது மாலை சாத்தி தேங்காய் உடைத்து, கற்பூரம் காண்பிக்க | 5.00 |
| 40. | சுவாமி புறப்பாட்டில் வீதியில் சுவாமிக்கு சாத்தும் பரிவட்டம் ஒன்றுக்கு | 10.00 |
| 41. | நவசக்தி அர்ச்சனை, அம்மனுக்கு காணிக்கைக் கட்டணம் | 101.00 |
| 42. | இலட்சார்ச்சனை ஒன்று | 1000.00 |
| 43. | தீபாராதனை | 25.00 |
| 44. | திருக்கோயில் சந்தனம் | 1.00 |
| 45. | பொருள் பாதுகாப்பு | 2.00 |
| 46. | அன்னதானம் (வருடத்தில் ஒரு நாள் மட்டும்) | 40,000.00 |
| 47. | அன்னதானம் (ஒரு நாள் மட்டும்) | 4,000.00 |
| 48. | திருப்பணி நன்கொடை | 100.00 |

ஆயிரங்கால் மண்டபத்தில் அமைந்துள்ள ஆலய சிற்பங்கள், சிலைகள், கட்டிட அமைப்பு, பூஜைமுறைகள் ஆகமங்கள் முதலியவற்றை விளக்கும் நிரந்தர அருங்காட்சியகத்தைக் கண்டு களிக்க நுழைவுக் கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ. 5.00 சிறுவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 2.00

சரித்திர பிரசித்திபெற்ற மாரியம்மன் தெப்பக்குளத்தில் உள்ள மையமண்டபத்திற்கு உல்லாசமாக படகில் சென்று இயற்கை காட்சிகளைக் கண்டுகளித்துவர கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ. 25

பாதகாணிக்கை, விசேட அர்ச்சனையில் செய்யும் நாணயம், தங்கம், பொன் முதலியவை திருக்கோயிலைச் சேர்ந்தவை.

ரூ. 2001 செலுத்தி தீபாவளி, தை அமாவாசை தமிழ் வருடப்பிறப்பு, ஆகிய தினங்களில் அம்மனுக்கு வைரக்கீரிடமும் தங்கக்கவசமும் சாத்துப்படி செய்யலாம்.

இத்திருக்கோயில் நிதியிலிருந்து பெண்களுக்காக அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் மகளிர்மேல் நிலைப்பள்ளியும், கருணை இல்லமும் நடத்தப்படுகின்றது. ஏழை மாணவிகளுக்கு இலவச மதிய உணவு, புத்தகம், நோட்டுகள் முதலியன வழங்கப்படுகின்றன.

பக்தர்களும், மதுரைக்கு வரும் உல்லாசப் பிராயாணிகளும் தங்க நவீன வசதிகள் கொண்ட அறைகள் உள்ள பிர்லா விஷ்ரம் என்ற பயணிகள் தங்கும் விடுதி ஒன்று குறைந்த வாடகையில் திருக்கோயிலின் சார்பில் நடத்தப்படுகின்றது.

ரூ. 1501 செலுத்தினால் தங்கத்தேர் புறப்பாடும் ரூ. 1501 செலுத்தினால் உபய திருக்கல்யாணமும், உபயதாரர் குறிப்பிடும் தேதியில் (உற்சவ காலங்களைத் தவிர) நடத்தப்படும். ரூபாய். 5,000 செலுத்தினால், உபயதாரர்கள் குறிப்பிடும் தேதியில் உச்சிகால இலவச பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்படும்.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் எல்லா மூர்த்திகளுக்கும் மாலை, புஷ்பம் சாத்துப்படி செய்ய ரூ. 1,250 திருக்கோயில் மூலம் முதலீடு செய்யும் உபயதாரர்கள் விரும்பும் நட்சத்திரத்தன்று வருடத்தில் ஒரு நாள் புஷ்பம் சாத்துப்படி செய்து, சுவாமி, அம்பாளுக்கு அர்ச்சனை செய்து ஒவ்வொரு வருடமும் புஷபக் கட்டளை தாரருக்குப் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

இத்திருக்கோயில் வெளியீட்டுப் புத்தகங்களான திருவிளையாடற் புராணம், தலவரலாறு, இந்துமத இணைப்பு விளக்கம், மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ், அங்கயற்கண்ணி அந்தாதி, அங்கயற்கண்ணி அனுபூதி மற்றும் திருக்கோயில் நூல் விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்படுகின்றது. மற்றும் இத்திருக்கோயில் தயாரிப்பான நயம் மஞ்சள் குங்குமம் விற்பனை செய்யப்படுகிறது. மற்றும் உபகோயில்களின் தலவரலாறுகளும், புராணங்களும், சைவசமய நூல்களான இந்துமத இணைப்பு விளக்கம், சைவமும் வைணவமும் மற்றும் பிற நூல்கள் விற்பனை செய்யப்படுகிறது.

# திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி பாதுகாத்து அவ்வப்பொழுது ஆவண செய்ய வேண்டும். புதியதோர் கோயிலை அமைப்பதைப் பார்க்கிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும் என்பர். "புதிதுறப் பணிகள் வேறு புரிவதின் பழைய தொன்றைவிதியுளி புதுக்குவோர்க்கு மிகப்புண்ணியந்தான் எய்தும்" என்பது ஆன்றோர் வாக்கு.

"மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமா மிலிங்கமாதி நளினபுட்க ரணியாதி
சேதமுற்றிடின் முன்போல் செய்வர்க்குறு பலன்தான்
ஓதுமுன் செய்தோர் தம்மில் ஆயிரம் புனிதமோங்கும்"

– சிவபுண்ணியத் தெளிவு

இக்கோயிலில் அவ்வப்போது பலதிருப்பணிகள் நடந்து வந்திருக்கின்றன. ஆதியில் பாண்டியர்களாலும், நாயக்கர்களாலும் பிற செல்வர்களாலும் கோபுரங்கள், மண்டபங்கள் முதலியன திருப்பணி செய்யப்பட்டுள்ளன. "திருவாலவாயுடையார் கோயில் திருப்பணிமாலை" என்னும் நூலில் இக்கோயிலின் பல திருப்பணிகள் விவரிக்கப் பட்டிருக்கின்றன. திருப்பணி செய்தவர்களின் பெயர்களும் காலங்களும் குறிக்கப் பட்டிருக்கின்றன. அதன் சுருக்கம் இதனுடன் சேர்க்கப் பட்டுள்ளது. முக்கியமாகக் கோயிலின் நான்கு பெரிய கோபுரங்களில் கிழக்குக் கோபுரம் சுந்தரபாண்டியனாலும் தெற்கு ஒன்பது நிலைக் கோபுரம் சிராமலைச் செவ்வந்திசெட்டியாராலும், மேற்கு ஒன்பது நிலைக் கோபுரம் பராக்கிரம பாண்டியனாலும் வடக்கு ஒன்பது நிலைக் கோபுரம் கிருஷ்ணவீரப்ப நாயக்கராலும் கட்டப்பட்டனவாகச் சொல்லப்படுகிறது.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதரவால் திருக்கல்யாண மண்டபம், கம்பத்தடி மண்டபம் முதலியன அழகாக புதுப்பிக்கப் பெற்றுள்ளன. அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தார் 19ஆம் நூற்றாண்டில் மொட்டைக் கோபுரமாக இருந்த வடக்குக் கோபுரத்தை

முழுக் கோபுரமாகக் கட்டினர். ஆடி வீதிகளில் தளவரிசைக் கல் அமைத்தனர்.

திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இக்கோயிலில் பல திருப்பணிகளைச் செய்துள்ளார்கள். சுவாமி அம்மன் சந்நிதிகளில் சிவசிவ ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. பொற்றாமரைக்குளத்தில் ஒரு பொன் தாமரை மலர் மிதக்க விடப்பட்டுள்ளது. குளத்தின் தென்கரை மண்டபச் சுவர்களில் திருக்குறள் 1330 பாடல்களும் வெண்சலவைக்கற்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. அம்மன் கோயில் அறுகாற்பீட வாயிலின் இருபுறங்களிலும் மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் சலவைக் கற்களில் பதிக்கப்பட்டுள்ளன. சுவாமி கோயில் பிரகாரத்தில் கனகசபை மண்டபத்தில் திருநீற்றுப்பதிகம் வெண்சலவைக் கற்களில் எழுதப் பெற்றுள்ளது. கடம்ப மரத்துக்கு வெள்ளிக் கவசம் அணிவித்து அதனடியில் மதுரைக் கலம்பகப் பாடல் சலவைக் கல்லில் தீட்டப்பெற்றுள்ளது. இவைகள் காசிமடத்துத் திருப்பணிகள்.

மேலும், காசி மடத்துத் தலைவர் அவர்களின் ஆதரவில் சித்திரை, ஆவணி, தை, பங்குனி மாதங்களில் ஒவ்வொர் நாளில் மூலவருக்குச் சந்தனக் காப்பும், ஆடிக்கிருத்திகையில் மூர்த்திநாயனார் திருவிழாவும், தினந்தோறும் காலையிலும் மாலையிலும் ஓதுவார்களால் தேவார பாராயணமும், அருளாளர் குமரகுருபரசுவாமிகள் திருநாளில் திருமுறை விழாவும் திருவிளையாடற் புராணம், பெரியபுராணம், கந்தபுராணச் சொற்பொழிவுகளும் தனித்தனியே அமைத்த மூலநிதிகளைக் கொண்டு நடைபெற்று வருகின்றன.

தருமபுரம் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் திருவுள்ளப்படி "வாழ்க அந்தணர்" என்ற திருப்பதிகம் வெண்சலவைக் கற்களில் கனகசபை மண்டபத்தில் பதிக்கப்பெற்றுள்ளது.

சுவாமி கோயில் கோபுர வாயிலில் குன்றக்குடி ஆதீனகர்த்தர் அவர்களால் சேக்கிழார் பாடல்கள் சலவைக் கற்களில் பொறிக்கப்பெற்றுள்ளன.

அறநிலையத் துறை ஆணையர் திரு. **A. உத்தண்டராம பிள்ளை**, B.A., B.L., அவர்களின் பெருமுயற்சியால், மலேசியா அமைச்சர் **டத்தோ சாமுவேல்** அவர்களின் செலவில், பொற்றாமரைக் குளத்திற்கு இயந்திரக் குழாய்கள் மூலம் தண்ணீர் வரவும் போகவும் மற்றும் சுத்திகரிக்கவும் ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது. மேலும் மூர்த்திநாயனார் முதலிய தல அடியார்களைப் பிரதிட்டை செய்து அவர்களுக்குரிய திருநாட்களில் உற்சவ மூர்த்திகள் புறப்பாடும் நடத்தப் பெற்று வருகிறது. சந்நிதிகளின் அந்தந்த மூர்த்திகளுக்குரிய அஷ்டோத்தரங்கள் கரும்பலகைகளில் தமிழில் எழுதப்பெற்றுள்ளன. அஷ்டோத்தர வெளியீடுகளும் தமிழில் வெளியிடப் பெற்றுள்ளன.

பழனி திரு. முருகேச முதலியார் அவர்கள் அன்புடன் புதுக்கிய பள்ளியறைப் புதிய வெள்ளிப் பல்லக்குத் திருவுலா 9.12.57 மாலை 5 மணிக்கு அறநிலையப் பாதுகாப்பு மந்திரி திரு. M. பக்தவத்சலம், B.A., B.L., அவர்களால் தொடங்கி வைக்கபெற்றது. அன்றைய இரவில் பள்ளியறைப் பூஜையை அறநிலைய ஆணையர் அவர்கள் உடனிருந்து நடத்தி வைத்தார்கள்.

# திருப்பணி விவரம்

**(திருவாலவாயுடையார் திருப்பணி விவரம், திருப்பணிமாலை, சீதளப் புத்தகம் முதலியவற்றினின்றும் தொகுக்கப்பெற்றது.)**

| எண் | ஆதியில் கட்டியவர் | காலம் | கட்டப்பெற்றவை |
|---|---|---|---|
| 1 | குலசேகர பாண்டியன் | 1168–1175 | சுவாமிகோயில் அர்த்தமண்டபம்,<br>மணிமண்டபம், மகாமண்டபம்,<br>ஆறுகால்பீடம், சந்நிதிக்கோபுரம்,<br>மூலப்பிரகாரத்திருமதில், சூழப்பத்தி,<br>நாயகர்கோவில், சூரியாதி, சண்<br>டேசுர தேவதையர், பிரகாரத்திருமதில்,<br>அம்மன்கோயில்;<br>கோட்டையகழி, கோட்டைக்கு<br>வெளியில் கிழக்குத்திசையில்<br>ஐயனார்கோவில், தெற்கில்<br>சப்தமாதர்கோயில், விநாயகர்<br>கோயில்; மேற்கில் திருமால்கோயில்;<br>வடக்கில் காளிகோயில்; |

| | | | |
|---|---|---|---|
| | தேவேந்திரன் (இந்திரன்) | | சுவாமியினுடைய அஷ்டகஜ விமானம் |
| 2 | மாறவர்மன் சுந்தர பாண்டியன் | 1216–1238 | சுவாமிசந்நிதி ஒன்பதுநிலைக் கிழக்குக் கோபுரம், அம்மன்கோயில் சுந்தரபாண்டிய மண்டபம், சுவாமிகோயில் சுந்தரமாறன் திருமதில், மேல மாசி வீதியிலுள்ள இம்மையில் நன்மைதருவார்கோயில் |
| 3 | ஆனந்தத்தாண்டவ நம்பி | 1227–1228 | அம்மன் சந்நிதியிலுள்ள மூன்று நிலைக் கோபுரம் |
| 4 | விக்கிரமபாண்டியன் | 1253–1268 | எல்லாம் வல்ல சித்தர் கோயில் சொக்கர் அட்டாலை மண்டபம் |
| 5 | பராக்கிரமபாண்டியன் | 1315–1347 | மேற்காடிவீதி ஒன்பது நிலைக் கோபுரம் |
| 6 | வசுவப்பன் | 1372– கோபுரம் | சுவாமி சந்நிதி ஐந்து நிலைக் கிழக்குக் |
| 7 | மல்லப்பன் | 1374– | சுவாமிகோயில் இரண்டாம் பிரகார மேற்கு ஐந்து நிலைக் கோபுரம், அம்மன்கோயில் கொடிக்கம்பம் |
| 8 | மாவலிவாணாதிராயர் | 1452– | குலசேகரபாண்டியன் அமைத்த சுவாமி கோயில் ஆறுகால் பீடம், மகாமண்டபம் ஆகியவற்றின் திருப்பணி, சுவாமி சந்நிதியில் திருக்காவனப்பத்தி, அம்மன் சந்நிதியில் மகா மண்டபம், பள்ளியறை, முதற் பிரகாரம் முதலியன கட்டினார். |
| 9 | சின்னப்ப நாயக்கர் | 1526 | மடைப்பள்ளி அருகிலுள்ள சின்னீச்சுரர் கோயிலில் அகஅணைகள், புறஅணைகள், சனீசுவரர்க்கு அருகில் உள்ள மண்டபநாயகம் என்னும் நூற்றுக்கால் மண்டபம். |
| 10 | விசுவநாத நாயக்கர் | 1559–1563 | சுவாமி கோயில் தங்கக் கோபுரத்திற்குப் பொன்பூசித் திருப்பணி செய்தார். |
| 11 | சிராமலைச் செவந்தி மூர்த்திசெட்டி | 1559– | ஒன்பதுநிலைத் தெற்குக் கோபுரம், முக்குறுணி விநாயகர் முன்னுள்ள ஐந்து நிலைக் கோபுரம், சொக்கர் கோயில் சிகரத்திற்குப் பொற்குடம் முப்பத்திரண்டு, அம்மனுக்குப் பொன் விமானம், பிட்டுத்தோப்பில் திரு விளையாடல் மண்டபம். |
| 12 | செவ்வந்தி வேலப்பச் செட்டி | 1560– | வடக்காடி வீதியில் சுவாமிகோயில் ஐந்து நிலைக் கோபுரம். |
| 13 | பெருமாள் | 1562– | சுவாமிகோயில் நடுக்கோபுர மண்டபம், துவாரபாலகர், |

| | | | |
|---|---|---|---|
| | | | பொற்றாமரை வடபுற மண்டபமும் படிக்கட்டுகளும். |
| 14 | திருஅம்பலச்செட்டி | 1562– | அம்மன் சந்நிதி மூர்த்தி மண்டபம் (ஊஞ்சல் மண்டபம்) |
| 15 | செட்டியப்ப நாயக்கர் | 1563– | பொற்றாமரைக்குள மேற்குக்கரையில் மூர்த்தி மண்டபத்திற்கு முன் மண்டபம், அம்மன் கோயில் இரண்டாம் பிரகாரமும் சுற்று மண்டபமும். |
| 16 | செல்லப்பெண் மாணிக்கம் | 1563– | வன்னியடி நடராசர் மண்டபம், அன்னக்குழி மண்டபம். |
| 17 | கல்லூர்ச் செவ்வந்தி | 1564– | பொற்றாமரைக்குள மேற்குக் கரையில் செவ்வந்தீசுரர் கோயில். |
| 18 | திம்மப்ப நாயக்கர் | 1564– | புருஷாமிருக மண்டபம் (சங்கிலி மண்டபத்திற்குத் தெற்கு மண்டபம்) கண்டர கண்டன் குறடு. |
| 19 | திம்மு ராவுத்தர் | 1564– | எழுகடலின் தென்மேற்குக் கரை மண்டபம். |
| 20 | தீத்தியப்ப செட்டி | 1565– | சுவாமிசந்நிதியில் உட்பிரகார மேற்புற மண்டபம், அம்மன் சந்நிதி இரண்டாம் பிரகாரத் தென்புற மண்டபம். |
| 21 | கிருஷ்ணவீரப்ப நாயக்கர் | 1564–1572 | சுவாமிகோயில் கொடிக்கம்ப மண்டபம். இரண்டாம் பிரகாரச் சுற்றுமண்டபம். ஆடி வீதி வடக்கு ஒன்பதுநிலைக்கோபுரம். சம்பந்தர் கோயில் மண்டபம், வெள்ளியம்பலம், செல்வீச்சாரம், திருமடைப்பள்ளி, மூர்த்தி அம்மன் மண்டபம் (உற்சவர்), சுவாமி கோயில்கொடிக்கம்பத்து முன்னர் வீரப்பமண்டபம் |
| | | | மல்லப்பன் நட்ட அம்மன்கோயில் கொடிக்கம்பத்திற்குப் பொன் பூசினார். |
| | | | முத்தளக்கும் கோபுரத்திற்குச் செங்கற் படை, அம்மன்கோயில் இரண்டாம் பிரகாரத்தில் வடபுற, மேற்புற மண்டபங்கள். |
| 22 | காளத்தியப்ப முதலியார் | 1569– | அரியீச்சுரர் சந்நிதி, அம்மன் சந்நிதி ஏழு நிலைக் கோபுரம். |
| 23 | பட்டுத்திருமலை நாயக்கர் | 1569– | கங்காளநாதர் முன்னுள்ள மண்டபம் (சுவாமிகோயில் முதற்பிரகாரத்தில் வட புறம்) |

| | | | |
|---|---|---|---|
| 24 | அரியநாத முதலியார் | 1569– | சுவாமிகோயில் இரண்டாம்பிரகாரத் தென்வரிசையில் அறுபத்துமூவர் மண்டபம். அறச்சாலைமண்டபம் காளத்தீசுரம் கோயில், ஆயிரங்கால் மண்டபம், கீழமாசி வீதி அம்மன்தேர் மண்டபம். |
| 25 | வீரத்தும்மசி | 1570– | அம்மன்கோயில் இரண்டாம்பிரகார மேற்கு ஐந்து நிலைக் கோபுரம். |
| 26 | வீரப்பநாயக்கர் | 1572–1595 | சுவாமிகோயில் மூலத்தானக் சுற்குரடு, சுவாமிகோயில் கோபுரவாயிற்கதவு, சுவாமிசந்நிதி தென்புற வாயிற்படிக்கட்டு, வெள்ளியம்பல நடராசர் கோயில் தளவரிசை, திருப்பள்ளியறைப் படிகள், அம்மன்கோயில் தளவரிசை, சொக்கநாதர் மண்டபம். |
| 27 | குப்பையாண்டி | 1573– | பொற்றாமரைக்குளக் கிழக்கே மண்டபமும், திருமதிற் படிகளும். |
| 28 | கல்லூர்ச் சின்னச் செவ்வந்தி | 1574– | செவ்வந்தீசுவரச்சுற்றுமதில், சந்நிதி மண்டபம். |
| 29 | அப்பன் பிள்ளை | 1578– | பொற்றாமரைக்குளத் தென்மேற்கில் விசுவநாதர்கோயிலும், பொற்றாமரைகுள தென்புற மண்டபமும், படிகளும், திருமதிலும் |
| 30 | திருநோக்கழகியார் | 1584– | ஆடிவீதிப் பெரிய திருமதில்கள். |
| 31 | விருப்பணன் | 1588– | சுவாமிகோயில் இரண்டாம்பிரகாரத் திருநாண்மண்டபம் எனவழங்கும் நிருதி மூலைமண்டபம். |
| 32 | விசுவப்ப நாயக்கர் | 1600– | சுவாமிசந்நிதி கீழைக்கோபுரத் திற்கு வட மேற்கே விசுவீச்சுரம் எனும் கோயில் (தற்போதில்லை) |
| 33 | முத்துவீரப்ப நாயக்கர் | 1611– | சுவாமி கோயில் ஆயிரங்கால் மண்டபத்திற்குத் தென்புறம் கீழ் மேலாக உள்ள வீர வசந்த மண்டபம். |
| 34 | குஞ்சமழகிரி நாயக்கர் | 1611– | சுவாமி கோயில் முதற் பிரகாரத்தில் மேற் புறம். வடபுறம் தளவரிசை. |
| 35 | கடந்தை முதலியார் | 1613– | அம்மன் சந்நிதியில் முதலிப்பிள்ளை மண்டபம். |
| 36 | திருமலை நாயக்கர் | 1623–1659 | புதுமண்டபம், மாரியம்மன் தெப்பக்குளம், அம்மன் சுவாமி கொடிக்கம்பங்கட்குப் பொன் பூசினார், அம்மன், சுவாமி கோயில்களில் செப்பாற் செய்த துவாரபாலகர்களை அமைத்தார். சுவாமி சந்நிதியில் இராயகோபுரம் |

| | | | |
|---|---|---|---|
| | | | கட்டினார். கோயில் முழுதும் செப்பஞ்செய்து திருப்பணி செய்தார். |
| 37 | உருத்திராபதியம்மாள், தோளியம்மாள் | 1623–1659 | அம்மன்சந்நிதியில் அட்டசக்தி மண்டபம். |
| 38 | அபிசேகபண்டாரம் | 1623– | சுவாமி கோயில் இரண்டாவது பிரகாரத்தில் தெற்கு, வடக்கு, மேற்குப் பிரகார மண்டபங்கள், கிளிக் கூட்டு மண்டபம் (சங்கிலி மண்டபம்) |
| 39 | அச்சயராயன் | 1635– | அம்மன் சந்நிதியில் நகராமண்டபம் |
| 40 | பேச்சியக்காள் பிட்டுச்சொக்குப் பண்டாரம் மூலம் | 1658– | சுவாமிசந்நிதிக்கருகில் திருக்கல்யாண மண்டபத்திற்கு வடபுறமுள்ள இருபத்தெட்டுகால் மண்டபம் (பேச்சியக்காள் மண்டபம்) |
| 41 | இராணி மங்கம்மாள் | 1689–1706 | ஆடிவீதிச் சுற்று மண்டபங்கள். |
| 42 | விசயரெங்கசொக்க நாதநாயக்கர் | 1706–1732 | திருக்கல்யாணமண்டபம் பள்ளியறைக்கு முன்னுள்ள சிங்கார அறை. |
| 43 | சமுகம் மீனாட்சி நாயக்கர் | 1708– | அம்மன் சந்நிதியில் ஏழுநிலைக் கோபுரத்திற்கும் அட்டசக்தி மண்டபத்திற்கும் இடையிலுள்ள பெரிய மண்டபம். |
| 44 | தும்மச்சி நாயக்கர் | 1758– | ஆடிவீதி நிருதி மூலை மண்டபம். |
| 45 | ஆறுமுத்த முதலியார் | 1760– | ஆடிவீதி அக்கினி மூலை மண்டபம். |
| 46 | அருணாசல முதலியார் | 1768– | திருவாப்புடையார் கோயிலில் விக்கிரகங்கள் அமைத்துக் கும்பாபிடேகம் செய்தார். |
| 47 | வேங்கடேசுவர முதலியார் | 1772– | ஆடிவீதி ஈசானமூலை தட்டுச்சுற்றுப் பதினாறுகால் மண்டபம். |
| 48 | மருதப்பசேர்வை காரர் | – | சேர்வைகாரர் மண்டபம் (திருக் கல்யாண மண்டபத்திற்கெதிரில்) |
| 49 | சின்னியான் | – | கிளிக்கூட்டிற்கு வடபுறத்தில் மடைப் பள்ளிக்கு எதிரிலுள்ள மண்டபம். |
| 50 | செவ்வந்தியாண்டி செட்டியார் | – | எழுகடலுக்குத் தென்பால் மண்டபம். |
| 51 | நல்லபெண் | – | சுவாமிசந்நிதியில் வடக்கு முகமாகத் திருவாயிலின் உட்புறம் நந்தீசுரவர் பிரதிட்டை. |
| 52 | கம்பலராயர் | – | சுவாமிகோயில் முதற்பிரகாரத்தில் கருப்பக்கிருக விமானத்தோடு சேர்ந்த தட்சிணாமூர்த்தி மண்டபம். மாலடிகண்டறியாத சிவலிங்க |

| | | | |
|---|---|---|---|
| | | | மண்டபம், துர்க்கைமண்டபம் முதலியன. |
| 53 | கம்பலரசி | – | சுவாமிசந்நிதியில் நான்குகால் நந்தி மண்டபம். |
| 54 | சங்கரநாகரசன் | – | திருநோக்கழகியார் செய்த ஆடிவீதிச் சுற்று மதிலைப் புதுப்பித்தார். |
| 55 | கிருஷ்ணப்பநாயக்கர் | – | அம்மன் சந்நிதியில் குமாரருக்குக் கோயில் கட்டிப் பிரதிட்டை செய்தார். |
| 56 | இராமப்பநாயக்கர் | – | மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு வடமேற்கு மூலை பதினாறுகால் மண்டபம். |
| 57 | அனந்தாழ்வான் ஐயன் | 1795 | கீழமாசிவீதியில் சுவாமி தேர்நிலைமண்டபம் சுவாமி சந்நிதி பலிபீடம். |
| 58 | வீரராகவன் | – | முத்தளக்கும் கோபுரத்திற்கு வண்ணம் பூசினார். |
| 59 | நாகுச் செட்டியாரும் அவர் மாப்பிள்ளை பெத்தப்பசெட்டியாரும் | – | சுவாமி கோயில் இரண்டாவது பிரகாரச் சுற்றெல்லாம் தளவரிசை |
| 60 | பாப்பு செட்டியார் | – | அம்மன் தேர்நிலையம், அறுபத்து மூவருடன் ஐம்பத்தொரு சிவலிங்கமும் சுவாமி கோயிலின் முதற் பிரகாரத்து வடபுறத்தே அமைத்தார். |
| 61 | பாப்பெல்லப்பசெட்டி | – | அம்மன் கோயில் தளவரிசை. |
| 62 | நாரணப்பன் | – | ஆடிவீதியில் அக்கினி மூலை மண்டபம். |
| 63 | கோனேரி நாரணன் | – | வாகன அறை. |

## கும்பாபிஷேகங்கள்

அங்கயற்கண்ணியின் ஆலயத் தொன்மையை வரையிட்டுத் கூறுவது யாருக்கும் எளிதல்ல.

'திருவாலவாய் திருப்பணி மாலை' என்ற ஒரு நூல் சென்ற நூற்றாண்டிலே சேதுபதி வம்சத்தின் திருவிளக்காய் விளங்கிய பாண்டித்துரைத் தேவர் அவர்களால் செந்தமிழ் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. இந்த அரிய நூல் இன்று முழுமையா கிடைக்கவில்லை.

இந்த அரிய நூலும் மீனாட்சி கோயிலுள்ள கல்வெட்டுகளும் இன்னும் பிறவிடங்களில் காணும் செப்பேடுகளும் தான் இந்த ஆலயம் எழுந்த வரலாற்றை நமக்குத் தெரிவிக்கின்றன.

திருப்பணி மாலையில் பல யுகங்களுக்கு முன் தேவேந்திரன் விமானம் அமைத்தது முதல் பதினெட்டாம் நூற்றாண்டில் அழகிரி நாயக்கர் மண்டபம் அமைத்தது வரை சொல்லப்பட்டுள்ளது.

- திருப்பணிமாலையில் பெரிதும் பேசப்படுவது நாயக்கர் கால திருப்பணிகளே. கி.பி. 1481 விரோதிவருஷம் மீனாட்சி ஆலயத்திற்கு மட்டும் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கிறது.

- மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் சீதளப்புத்தகத்தில் உள்ள குறிப்புகளின்படி கி.பி. 1708ல் சர்வதாரி வருஷம் சித்திரை 31ஆம் தேதி சொக்கநாதருக்கு அஷ்ட பந்தன கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கிறது.

- கி.பி. 1877ஆம் ஆண்டு ஈஸ்வர வருஷம் தை மாதம் 27–ம் தேதி ஏழுகோயில் நகரத்தார்களால் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றுருக்கிறது.

- கி.பி. 1923ஆம் ஆண்டு ஜுலை மாதம் ருத்ரோத்காரி வருஷம் ஆணி மாதம் 17ம் தேதி கும்பாபிஷேகம் செய்யப்பெற்றிருக்கிறது.

- கி.பி. 1963ஆம் ஆண்டு ஜுன் 28ம் தேதி வெள்ளிக்கிழமையன்று மிக விரிவான கும்பாபிஷேகம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரியவர் முன்னிலையில் நடைபெற்றுள்ளது.

- கி.பி. 1974 லும் கி.பி. 1995 திலும் நடைபெற்ற கும்பாபிஷேகங்களுக்குப் பிறகு தற்பொழுது கி.பி. 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் (சர்வதாரி வருஷம் பங்குனி மாதம் 26ஆம் நாள் 8–4–2009ல் உத்திர நட்சத்திரத்தில் மிகச் சிறப்பான முறையில் விரிவான அஷ்டபந்தன சொர்ணபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது)

# 16. தலப்பதிகங்கள்
# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகங்கள்
## பதிகம் 1 திருவிருக்குக்குறள்

*பண் – குறிஞ்சி* *முதல் திருமுறை*

**திருச்சிற்றம்பலம்**

நீல மாமிடற், றால வாயிலான்
பால தாயினார், ஞால மாள்வரே. 1

ஞால மேழுமாம், ஆல வாயிலார்
சீல மேசொலீர், காலன் வீடவே. 2

ஆல நீழலார், ஆல வாயிலார்
கால காலனார், பால தாமினே. 3

அந்த மில்புகழ், எந்தை ஆலவாய்
பந்தி யார்கழல், சிந்தை செய்ம்மினே. 4

ஆடலேற்றினான், கூடல் ஆலவாய்
பாடி யேமனம், நாடி வாழ்மினே. 5

அண்ணல் ஆலவாய், நண்ணி னான்றனை
எண்ணி யேதொழத், திண்ணம் இன்பமே. 6

அம்பொன் ஆலவாய், நம்ப னார்கழல்
நம்பி வாழ்பவர், துன்பம் வீழுமே. 7

அரக்க னார்வலி, நெருக்கன் ஆலவாய்
உரைக்கு முள்ளத்தார்க்கு, இரக்க முண்மையே. 8

அருவன் ஆலவாய் மருவி னான்றனை
இருவர் ஏத்தநின், றுருவம் ஓங்குமே. 9

ஆரம் நாகமாம், சீரன் ஆலவாய்த்
தேர மண்செற்ற, வீரன் என்பரே. 10

அடிகள் ஆலவாய்ப், படிகொள் சம்பந்தன்
முடிவில் இன்தமிழ், செடிகள் நீக்குமே. 11

**திருச்சிற்றம்பலம்**

# பதிகம் 2 திருநீற்றுப் பதிகம்

***பண் – காந்தாரம்*** 2ஆம் திருமுறை

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருஆல வாயான் திருநீறே. 1

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு.
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 4

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே. 5

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. 6

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே. 8

மாலொ டயன்அறி யாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆல வாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே. 10

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடல்உற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

**திருச்சிற்றம்பலம்**

**பதிகம் 3** 3ஆம் திருமுறை

## பண் – கொல்லி

மானின் நேர்விழி மாத ராய்வழு
திக்கு மாபெருந் தேவிகேள்
பானல் வாய் ஒரு பாலன் ஈங்கிவன்

என்று நீபரி வெய்திடேல்
ஆனை மாமலை ஆதி யாய
இடங்க ளிற்பல அல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேன லேன்திரு

ஆல வாய் அரன் நிற்கவே. 1
எக்க ராம்அமண் கைய ருக்கெளி
யேனலேன் திரு ஆலவாய்ச்
சொக்கன் என்னு ளிருக்க வேதுளங்
கும்மு டித்தென்னன் முன்னிவை
தக்க சீர்ப்புக லிக்கு மன்தமிழ்
நாதன் ஞானசம் பந்தன்வாய்
ஒக்க வேஉரை செய்த பத்தும்
உரைப்ப வர்க்கிடர் இல்லையே. 11

திருச்சிற்றம்பலம்

**பதிகம் 4** 3ஆம் திருமுறை

## பண் – கௌசிகம்

காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடை யாயுரை செய்வனான்
வேட்டு வேள்விசெய் யாவமண் கையரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே. 1

செந்தெ னாமுர லுந்திரு வாலவாய்
மைந்த னேயென்று வல்லம ணாசறச்
சந்த மார்தமிழ் கேட்டமெய்ஞ் ஞானசம்
பந்தன் சொற்பக ரும்பழி நீங்கவே. 11

**பதிகம் 5** 3ஆம் திருமுறை

## பண் – கௌசிகம்

செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே. 1

அப்ப னாலவா யாதி யருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்த னுரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே. 11

**பதிகம் 6**

3ஆம் திருமுறை

**திருவிராகம்** ***பண் கௌசிகம்***

வீடலால வாயிலாய் விழுமியார்க ணின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே. 1

போயநீர் வளங்கொளும் பொருபுனற் புகலியான்
பாய கேள்வி ஞானசம் பந்தன் நல்ல பண்பினால்
ஆய சொல்லின் மாலைகொண் டாலவாயில் அண்ணலாய்
தீயதீர எண்ணு வார்கள் சிந்தையாவர் தேவரே. 11

**பதிகம் 7** **நாலடி மேல்வைப்பு**

3ஆம் திருமுறை

***பண் – பழம்பஞ்சுரம்***

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 1

கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
ஆடல் மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தஇப்

பாடல் வல்லவர் பாக்கிய வாளரே.

ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்

ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 11

திருச்சிற்றம்பலம்

## பதிகம் 8

3ஆம் திருமுறை

### திருவியமகம் *பண் – பழம்பஞ்சுரம்*

ஆல நீழல் உகந்த திருக்கையே
ஆன பாடல் உகந்த திருக்கையே
பாலி னேர்மொழி யாளொரு பங்கனே
பாதம் ஓதலர் சேர்புர பங்கனே
கோல நீறணி மேதகு பூதனே
கோதி லார்மனம் மேவிய பூதனே
ஆலம் நஞ்சமு துண்டக ளத்தனே
ஆல வாயுறை அண்டர்க ளத்தனே. 1

ஈன ஞானிகள் தம்மொடு விரகனே
ஏறு பல்பொருள் முத்தமிழ் விரகனே
ஆன காழியுள் ஞானசம் பந்தனே
ஆல வாயினில் மேயசம் பந்தனே
ஆன வானவர் வாயினு ளத்தனே
அன்ப ரானவர் வாயின ளத்தனே
நானு ரைத்தன செந்தமிழ் பத்துமே
வல்ல வர்க்கிவை நற்றமிழ் பத்துமே. 11

திருச்சிற்றம்பலம்

## பதிகம் 9

3ஆம் திருமுறை

### திருச்சிற்றம்பலம். *பண் – புறநீர்மை*

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்

பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே 1

பன்னலம் புணரும் பாண்டிமா தேவி
குலச்சிறை யெனும் இவர் பணியும்
அந்நலம் பெறுசீர் ஆலவாய் ஈசன்
திருவடி யாங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுள் ஞான
சம்பந்தன் செந்தமி ழிவைகொண்
டின்னலம் பாட வல்லவர் இமையோர்
ஏத்தவீற் றிருப்பவர் இனிதே. 11

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள்

**பதிகம் 10**

4ஆம் திருமுறை

**திருநேரிசை** ***பண் – கொல்லி***

வேதியா வேகீதா விண்ணவர் அண்ணா என்றென்
றோதியே மலர்கள் தூவி ஒருங்கிநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர் சடை மதியஞ் சூடும்
ஆதியே ஆலவாயில் அப்பனே யருள்செய்யாயே. 1

பொடிக்கொடு பூசிப் பொல்லாக் குரம்பையிற் புந்தி ஒன்றிப்
பிடித்துநின் தாள்கள் என்றும் பிதற்றிநான் இருக்கமாட்டேன்
எடுப்பன்என் றிலங்கைக் கோன்வந் தெடுத்தலும் இருபதுதோள்
அடர்த்தனே ஆல வாயில் அப்பனே அருள்செய்யாயே. 10

**திருச்சிற்றம்பலம்**

## திருத்தாண்டகம்

**பதிகம் 11** 6ஆம் திருமுறை

முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிருஞ் சடைமுடி மேல் முகிழ்வெண் திங்கள்

வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணாக் கோத்துத்
துளைத்தானைச் சுரசடுத்தால் துவள நீறாத்
தூமுத்த வெண்முறுவல் உமையோ டாடித்
திளைத்தானைத் தென்கூடல் திருஆ லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 1

தூர்த்தனைத் தோள்முடிபத் திறுத்தான் தன்னைத்,
தொல்நரம்பின் இன்னிசைகேட் டருள் செய்தானைப்
பார்த்தனைப் பணிகண்டு பரிந்தான் தன்னைப்,
பரிந்தவற்குப் பாசுபதம் ஈந்தான் தன்னை,
அத்தனை, அடியேனுக் கன்பன் தன்னை,
அளவிலாப் பல்லூழி கண்டு நின்ற
தீர்த்தனைத் தென்கூடல் திருஆலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 11

திருச்சிற்றம்பலம்

## திருக்கழுமலம்

**பதிகம் 12** 3ஆம் திருமுறை

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கியாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல ஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே ! 1

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோடு இருந்தஎம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன் செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய் விண்ணுலகு ஆள்வரே 12

திருச்சிற்றம்பலம்

## பொது

**பதிகம் 13** 3ஆம் திருமுறை

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்கதண் புனல் வேந்தனும் ஓங்குக

ஆழ்க தீயதெல்லாம் அரன்நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே 1

நல்லார்கள் சேர்புகலி ஞானசம்பந்தன் நல்ல
எல்லார் களும்பரவும் ஈசனை யேத்து பாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்லரன்றே ! 12

திருச்சிற்றம்பலம்

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
## திருவாசகம்

**பதிகம் 14** 8ஆம் திருமுறை

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்துகூலி கொண்டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும்
பெருந்துறையாய்!
அரிய பொருளே அவிநாசி யப்பாபாண்டி வெள்ளமே.
தெரிய அரிய பரஞ்சோதீ! செய்வதொன்றும் அறியேனே.

## திருக்கோவையார்

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்
பலத்தும்என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின்
ஆய்ந்தவொண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோ அன்றி
ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்(கு) என்கொ
லாம்புகுந் தெய்தியதே.

## பதினொராந் திருமுறை
### திருமுகப் பாசுரம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படி யெனப் பாவலர்க்
கொருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க!
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

## சிவபெருமான் திருவந்தாதி

தேரோன் கதிரென்னுஞ் செந்தழலால் வெந்தெழுபேய்த்
தேரோன் கதிரென்னுஞ் செய்பொருள்நீ – தேராதே
கூடற்கா வாலி குரைகழற்கா நன்னெஞ்சே!
கூடற்கா வாலிதரக் கூர்.
அமைவும் பிறப்பும் இறப்புமாம் மற்றும்
கமைவும் பரமான ஆதி–அமையுந்
திருவால வாய்சென்று சேராது மாக்கள்
திருவால வாய்சென்று சேர்.

## சமயகுரவர் குருபூசைத் திருநாட்கள்

சித்திரைச் சதயத்து அப்பர், சிறந்த வைகாசி மூலத்து,
அத்தரைப் பணி சம்பந்தர், ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாத வூரர், முதியநல் ஆடி தன்னில்
சுத்தமாம் சுவாதி நாளில் சுந்தரர் கைலை சேர்ந்தார்.

## திருநாவுக்கரசர்

அறப்பெரும் செல்வி பாகத்து
அண்ணல்அஞ் செழுத்தால் அஞ்சா

மறப்பெரும் செய்கை மாறா
வஞ்சகர் இட்ட நீல
நிறப்பெரும் கடலும் யார்க்கும்
நீந்துதற்கு அரிய ஏழு
பிறப்பெனும் கடலும் நீத்த
பிரானடி வணக்கம் செய்வாம்.

**— பரஞ்சோதிமுனிவர்.**

## சுந்தரர்

அரவக லல்கு லார்பால்
ஆசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதம்
சாற்றிய தலைவன் தன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான்
கழுதுகண் படுக்கும் பானாள்
இரவினில் தூது கொண்டோன்
இணையடி முடிமேல் வைப்பாம்.

**— பரஞ்சோதிமுனிவர்**

## மணிவாசகர்

எழுதரு மறைகள் தேறா
இறைவனை எல்லில் கங்குல்
பொழுதறு காலத்து என்றும்
பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமேல் ஏறத்
துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன்
அடியவர்க்கு அடிமை செய்வாம்.

**— பரஞ்சோதிமுனிவர்.**

## தருமையாதீனக் குருமுதல்வர்
## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய
## சொக்கநாத வெண்பா

ஆடரவஞ் சூழ்மதுரை அம்மானே அன்பருடன்
கூடவினை யாடிவருங் கோமானே – நீடுபுகழ்

மென்மேலும் எனதனக்கு மேவியிடப் பொல்லாத
என்மேல் வினைகெடுப்பா யே. 1

எல்லாமும் வல்லசித்தர் என்றக்கால் என்னுடைய
பொல்லாக் கருத்தகற்றப் போகாதோ—வல்லாடும்
பொங்கார வேணிப் புனிதா மதுரை நகர்ச்
சங்கரா சொக்கநா தா. 8

நித்தம் எழுந்தருளி நின்மலனே என்றனக்குப்
புத்தி மிகமிகவும் போதித்துக் – சித்தமயல்
போக்குவாய் இன்பசுக பூரணத்தி ரண்டறவே
ஆக்குவாய் சொக்கநா தா. 16

ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாம் எங்கும் முளைத்தலிங்கம் – பாலொளியாம்
மத்தனே கூடல் மதுரா புரிஉமையாள்
அத்தனே ஆலவா யா. 61

பேரன்பன் அல்லன் பிழைசெய்யான் தானல்லன்
ஓரன்பும் இல்லா உலுத்தனேன் – பேரன்பு
காட்டிஎனைக் காட்டியுனைக் காட்டியின்பத் தொட்டிலிலே
ஆட்டிவளர் சொக்கநா தா. 68

ஆறுதலை இல்லை அடியேனுக் கன்பாகத்
தேறுதலை சொல்வார் சிலர் இல்லை – வேறெனக்குத்
திக்காரும் இல்லை சிவனே பழிக்கஞ்சி
சொக்கேநின் தாளே துணை. 94

சொக்கநாதவெண்பா முற்றிற்று.

## சில பிரதிகளில் காணப்படும் பாடல்கள்

புண்டரிகத் தாளைப் புகழ்ந்து புகழ்ந்துதினம்
அண்டமரர் கொண்டிறைஞ்சும் ஆதியே—தொண்டுபடும்
நாயேனை யாண்டுகந்து நன்னெறிகள் காட்டுவித்த
தாயேநீ சொக்கநா தா. 1

தண்டுவரும் குண்டுவரும் தானைவரும் ஆனைவரும்
வண்டில்வரு மாடுவரு மாடுவரும்—மிண்டிப்
பெருங்கோட்டை யுஞ்சுமையும் பின்புவருங் கூடல்
அருங்கோட்டை வாசலிற்சென் றால். 7

## சொக்கநாதக் கலித்துறை

கண்ணுக் கினிய பொருளாகி யேயென் கரத்தில்வந்தாய்
விண்ணும் பரவிடும் அற்புத மேயென்ன விஞ்சையிதான்
மண்ணும் புகழ்ந்திட என்னையும் பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுரா புரிச்சொக்க நாயகனே. 1

அறிவைத் திருப்பிநின் பாதார விந்தம் அடையவல்ல
நெறியைக் கொடுத்து நிறுத்தினை யேநின்ம லாஇனிஎன்
பொறியைத் தவிர்த்துநின் ஆனந்த சாகர பூரணத்தைப்
பிறிவற் றிருக்கவைப் பாய்எனை ஆண்டருள் பிஞ்ஞகனே.
11

## மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

காலத்தொடுகற் பனைகடந்
கருவூ லத்துப் பழம்பாடல்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுள் மணியே! உயிரால
வாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தளிபழுத்த
மலர்க்கற் பகமே ! எழுதாச்சொல்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே ! உயிர்த்துணையாம்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியில்
துரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்தமுழு
முதலே! முத்தம் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்மும்
முலையாய் ! முத்தம் தருகவே

## க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

நாதன் விளையாட்(டு) அறுபத்து
    நாலு நடத்துந் தமிழ்மதுரை
நாலா யிரத்து நானூற்று
    நாற்பத் தொன்ப தருட்புலவர்
ஓதுந் தலைச்சங் கத்தினுக்கும்
    உயர்நா னூற்று நாற்பதுடன்
ஒன்ப தான தமிழ்ப்புலவர்
    ஒழியா இடைச்சங் கத்தினுக்கும்
வேத நிகர்நக் கீரர்முதல்
    விரிவா நாற்பத் தொன்பதுபேர்
மேவும் கடைச்சங் கத்தினுக்கும்
    விதிசொல் குருவாம் அகத்தியற்கும்
ஆதி குருவாம் ஆறுகுணத்(து)
    அமலா தாலோ தாலேலோ
ஆல வாய்வாழ் ஆறுமுகத்(து)
    ஐயா தாலோ தாலேலோ.

## மதுரைக் கலம்பகம்

தமரநீர்ப் புவன முழுதொருங் கின்றாள்
    தடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவும் தனிமுத லொருநீ
    சவுந்தர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
    கொண்டதும் தண்டமிழ் மதுரம்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனில்இக்

கொழிதமிழ்ப் பெருமையார் அறிவார்
பமரம்யாழ் மிழற்ற நறவுகொப் புளிக்கும்
    பனிமலர்க் குழலியர் பளிக்குப்
பானிலா முன்றில் தூநிலா முத்தின்
    பந்தரில் கண்ணிமை யாடா(து)
அமரர்நா டியரோ டம்மனை யாட
    ஐயநுண் ணுசுப்பள வலவென்(று)
அமரரும் மருளுந் தெளிதமிழ்க் கூடல்

அடலரா அலங்கல்வே ணியனே.
புழுகுநெய்ச் சொக்கர் அபிடேகச்
சொக்கர்கர்ப் பூரச்சொக்கர்
அழகிய சொக்கர் கடம்ப
வனச்சொக்கர் அங்கயற்கண்
தழுவிய சங்கத் தமிழ்ச்சொக்கர்
என்றென்று சந்ததம் நீ
பழகிய சொற்குப் பயன்தேர்ந்து
வா இங்(கு) என் பைங்கிளியே

## பரிபாடல்

உலகம் ஒருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலாக்கோலால் தூக்க--உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர். 1

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர்; பூவின்
இதழகத் தனைய தெருவம்; இகழகத்(து)
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்;
தாதின் அனையர் தண்தமிழ்க் குடிகள்;
தாதுண், பறவை அனையர் பரிசில் வாழ்நர்;
பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழா(து)எம் பேரூர் துயிலே 2

தண்தமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்
நின்று நிலைஇப் புகழ்பூத்தல் அல்லது
குன்றுதல் உண்டோ மதுரை கொடித்தேரான்
குன்றுமுண் டாகு மளவு. 3
செய்யாட் கிழைத்த திலகம்போல் சீர்க்கொப்ப

வையம் விளங்கிப் புகழ்பூத்தல் அல்லது
பொய்யாத லுண்டோ மதுரை புனைதேரான்
வையையுண் டாகு மளவு. 4

கார்த்திகை காதில் கனமகர குண்டலம்போல்
சீர்த்து விளங்கித் திருப்பூத்தல் அல்லது
கோத்தையுண் டாமோ மதுரை கொடித்தேரான்
வார்த்தையுண் டாகு மளவு. 5

ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்கும்
சேய்மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார் மற்றையார்
போவாரார் புத்தேள் உலகு. 6

## திருப்புகழ்

அலகில வுணரைக் கொன்ற தோளென
மலைதுளை உருவச்சென்ற வேலென
அழகிய கனகத் தண்டை சூழ்வன புண்டரீக
அடியென முடியிற் கொண்ட கூதளம்
எனவன சரியைக் கொண்ட மார்பென
அறுமுக மெனநெக் கென்ப லாமுரு கன்புறாதோ
கலகல கலெனக் கண்ட பேரொடு
சிலுகிடு சமயப் பங்க வாதிகள்
கதறிய வெகுசொற் பங்க மாகிய பொங்களாவும்
கலைகளு மொழியப் பஞ்ச பூதமு
மொழியுற மொழியிற் றுஞ்சு றாதன
கரணமு மொழியத் தந்த ஞானமி ருந்தவாறென்
இலகுக டலைகற் கண்டு தேனொடு
மிரதமு றுதினைப் பிண்டி பாகுடன்
இனிமையி னுகருற் றெம்பி ராளொருகொம்பினாலே.






செல்வம் ஆப்செட். சிவகங்கை.